ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ஸ்ரீவைஷ்ணவர்கள்

அவஶ்யம் அறியவேண்டும் அர்த்தங்களையும்,

அநுஷ்டாநங்களையும், பெண்களும் பேதைகளும்

எளிதாகவறிந்து உஜ்ஜீவிக்கும்படி

ஸ்ரீமந்நாதமுநிகள் துடக்கமானார்

அருளிச்செய்த

# வார்த்தாமாலை.

(முதற்பதிப்பு.)

சித்ரகூடம்-கந்தாடை-திருவேங்கடாசார்யர்,

அரசாணிபாலை-க-க்ர்ஷ்ணமாசார்யரோடு

பரிஶோதித்து

—:o:—


சென்னைநகர்:

மிமோரியல் அச்சுக்கூடத்தில்

பதிப்பித்தனர்.

1882ஸு ஜனவரிமீ

Registered Copy-right.



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

பின்பழகியபெருமாள்ஜீயர் சேர்த்தருளிய

# வார்த்தாமாலை.

## முதல் வார்த்தை.

ஒருவனுக்கு அறியவேண்டுவது, ஸ்வரூப புருஷார்த்தோபாயங்கள். இதுதான் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும் ஸம்ஸாரிகளுக்கும் வேணும். ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஸ்வஜ்ஞாந ப்ராபகஜ்ஞாந ப்ராப்யஜ்ஞாந மடியாக வருவதொன்று; ஸம்ஸாரிகளுக்கு அஜ்ஞாநாந்யதாஜ்ஞாந விபரீதஜ்ஞாநமடியாக வருவதொன்று. ஸம்ஸாரிகள், ஸ்வதேஹாத்மாபிமாநமே ஸ்வரூப மென்றும், தேஹாந்தாநுபவமே புருஷார்த்த மென்றும், ஸ்வதேஹவ்யாபாரமே தத்ஸாதநமென்று மிருப்பர்கள்; இது இவர்கள் நிஷ்டை. ஸ்ரீவைஷ்ணவர்கள். பகவச்சேஷத்வமே ஸ்வரூபமென்றும், பகவத் கைங்கர்யமே புருஷார்த்தமென்றும், இப்புருஷார்த்த ஸித்திக்கு தச்சரணாரவிந்தத்வயமே உபாயமென்று மிருப்பர்கள்; இது இவர்கள் நிஷ்டை. ஸ்வஸ்வரூபம் - அநந்யார்ஹம்; பரஸ்வரூபம் - மிதுநம்; விரோதிஸ்வரூபம் - அஹங்காரம்; உபாயஸ்வரூபம் - அவன் க்ருபை: பலஸ்வரூபம் - அவனுகந்த அந்தரங்கவ்ர்த்தி; மிதுநோத்பந்ந ஜ்ஞாநாநந்தம் - வடிவு; ப்ரீதி - ஸத்தை: போகத்திலே யந்வயம். இது ஆச்சான்பிள்ளைவார்த்தை.

## இரண்டாம் வார்த்தை.

நம்பிள்ளை அருளிச்செய்து கோஷ்டி குலைந்த வளவிலே, பின்பழகிய பெருமாள் ஜீயர் தெண்டனிட்டு, "இவ்வாத்மாவுக்கு ஸ்வரூபோபாயோபேயங்களெவை" என்று விண்ணப்பஞ்செய்ய' பிள்ளையும்:— "இச்சை ஸ்வரூபம்; இரக்கம் உபாயம்; இனிமை உபேயம்" என்றருளிச்செய்ய: 'அப்படியன்று நினைத்திருப்பது'; என்று விண்ணப்பஞ் செய்ய; "உமக்கென்ன சில பிள்ளைக்கிணறுண்டோ, நீர் எங்ஙனே நினைத்திருப்பது" என்றருளிச்செய்ய;

"தேவரீரருளிச்செய்தபடியே நினைத்திருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு அடிமையாயிருக்கை - ஸ்வரூபம்; அவர்களுடைய அபிமாநம் - அடியேனுக்கு உபாயம்; அவர்கள் முகமலர்த்தி - அடியேனுக்கு உபேயம், என்றிருப்பேன்" என்று விண்ணப்பஞ் செய்ய; பிள்ளையும் ப்ரியப்பட்டார்.

## மூன்றாம் வார்த்தை.

சித்துக்கு மூன்றுஸ்வபாவம்; ஈஶ்வரனுக்கு மூன்றுஸ்வபாவம்; அசித்துக்கு மூன்றுஸ்வபாவம். சித்துக்கு ஸ்வபாவம் - அநந்யார்ஹஶேஷத்வம், அநந்யஶரணத்வம், அநந்யபோக்யத்வம்; ஈஶ்வரனுக்குஸ்வபாவம் - ஸர்வஶேஷித்வம், ஸர்வரக்ஷகத்வம், பரமபோக்யத்வம்; அசித்துக்கு ஸ்வபாவம் - தன்னோடு சேர்ந்த சேதநனுக்கு, அஹங்கார மமகாரஜநகமாகையும், ஸ்வரக்ஷண ப்ரவ்ருத்தி ஜநகமாகையும், விஷயப்ராவண்யஜநக மாகையும் — அஹங்கார மமகாரம்கழிந்தவாறே இவன் அநந்யார்ஹனும்; இவன் அநந்யார்ஹனானவாறே அவன் ஸர்வஶேஷியாம்; ஸ்வரக்ஷண ப்ரவ்ருத்தி கழிந்தவாறே இவன் அநந்யஶரணனும்; இவன் அநந்யஶரணனானவாறே அவன் ஸர்வரக்ஷகனும்; விஷயப்ராவண்யம் கழிந்தவாறே இவன் அநந்ய போகனும்; இவன் அநந்யபோகனானவாறே அவன் பரமபோக்யனும்.

## நாலாம் வார்த்தை.

ப்ரக்ருதியினுடைய ஸ்வரூபம் ஜடம்; ஸ்வபாவம் கொண்டது குணமாயிருக்கும்; புருஷனுடைய ஸ்வரூபம் ஶேஷத்வம்; ஸ்வபாவம் ஸ்வரூபத்துக்கு அநுரூபமானவ்ருத்தி: ஈஶ்வரனுக்கு ஸ்வரூபம் ஶ்ரிய:பதித்வம்: ஸ்வபாவம் ரக்ஷகத்வம். ஆத்மாவினுடைய ஸ்வரூபம்-ஜ்ஞாதாவாய் ஜ்ஞாநமாய், ஜ்ஞேயமாயிருக்கும்; ஸ்வரூபம் ஜ்ஞாதாவாய், ஸ்வபாவம் ஜ்ஞாநமாய், ஸ்வவிபூதி ஜ்ஞேயமாயிருக்கும்; ஸ்வரூபம் ஜ்ஞாதாவாய், ஸ்வபாவம்ஜ்ஞாநமாய், பரமாத்மாவுடன் ஜீவாத்மாவுடனுள்ளவை ஜ்ஞேயமாயிருக்கும்; ஸ்வரூபம் "அஹம்" என்றிருக்கும்; "இதம்" என்னமாட்டாது. அறிகிறது தன்னையாகையாலே ஜ்ஞேயமாயிருக்கும்; அறிகிறான் தானாகையாலே ஜ்ஞாதாவாயிருக்கும்; அறிவு தானாகையாலே ஜ்ஞாநமுமாயிருக்கும்; அறிகிறவன் தானாகையாலே ஜ்ஞாதாவாம். இது என்னுடைய ஸ்வபாவமென்று தன்ஸ்வபாவத்தை அறியுமிடத்து ஸ்வபாவந்தானே "இதம்" என்கிற பரிகாமாகையாலே, ஸ்வபாவம் ஜ்ஞாநமுமாய் ஜ்ஞேயமுமாயிருக்கும்.

## அஞ்சாம் வார்த்தை.

அசித்துக்கு ஸ்வரூபம் ஶேஷத்வேஸதி ஜடத்வம்; ஸ்பாவம் ஸததபரிணாமித்வம்; ஆத்மாவுக்கு ஸ்வரூபம் ஜ்ஞாத்ருத்வேஸதி

ஶேஷத்வம்; ஸ்வபாவம் கைங்கர்யைகரஸத்வம்; ஈஶ்வரனுக்குஸ்வரூபம் ஜ்ஞாத்ருத்வேஸதி ஶேஷித்வம்; ஸ்வபாவம் ஸர்வரக்ஷகத்வம். = தத்வந்தான், ஜடமென்றும் அஜடமென்று மிரண்டு. ஜடந்தான், நிர்க்குணமென்றும் ஸகுணமென்று மிரண்டு; ஸகுணந்தான், த்ரிகுணமென்றும் ஏககுணமென்று மிரண்டு; த்ரிகுணந்தான், ப்ரக்ருதியென்றும் ப்ராக்ருதமென்று மிரண்டு. அஜடந்தான், ப்ரத்யக்கென்றும் பராக்கென்று மிரண்டு; ப்ரத்யக்குத்தான், ஆத்மாவென்றும் ஈஶ்வரனென்று மிரண்டு; பராக்குத்தான், ஜ்ஞாநமென்றும் ஜ்ஞேயமென்று மிரண்டு.

## ஆறாம் வார்த்தை.

ஸத்வரஜஸ்தமஸ்ஸுக்களாகிற மூன்றுகுணங்களும் ஒவ்வொன்று மூன்றுவகையா யிருக்கும். தாமஸ தாமஸம், தாமஸ ராஜஸம், தாமஸஸாத்விகம்; ராஜஸ தாமஸம், ராஜஸராஜஸம், ராஜஸ ஸாத்விகம்; ஸாத்விக தாமஸம், ஸாத்விக ராஜஸம், ஸாத்விக ஸாத்விகம் என்று. = இதில் தாமஸதாமஸம், நித்ரையைப்ரவர்த்திப்பிக்கும்; தாமஸராஜஸம், ஶோகத்தை ப்ரவர்த்திப்பிக்கும்; தாமஸ ஸாத்விகம், பரஹிம்ஸையிலே ப்ரவர்த்திப்பிக்கும். = ராஜஸதாமஸம், விஷயாந்தரங்களிலேமூட்டும்; ராஜஸராஜஸம், காம்யகர்மங்களிலே மூட்டும்; ராஜஸஸாத்விகம், பகவத்ஸ்தோத்ரத்திலே ப்ரவர்த்திப்பிக்கும். = ஸாத்விகதாமஸம், பகவந் மந்த்ரங்களிலே ப்ரவர்த்திப்பிக்கும்; ஸாத்விகராஜஸம், ப்ரக்ருத்யாத்மவிவேகங்களிலே ப்ரவர்த்திப்பிக்கும்; ஸாத்விக ஸாத்விகம், பகவத் ஸாக்ஷாத்காரத்திலே ப்ரவர்த்திப்பிக்கும்.

## ஏழாம் வார்த்தை.

தத்வத்ரயத்துக்கு, ஸ்வரூபமும், ஸ்வரூபநிரூபக தர்மமும், நிரூபிதஸ்வரூபவிஶேஷணமும், வ்யாபாரமும் என்று நாலு ப்ரகாரமாயிருக்கும்.=இதில் ஈஶ்வரஸ்வரூபம், ஸத்யமாய், ஜ்ஞாநமாய். அநந்தமாய், ஆநந்தமாய், அமலமாயிருக்கும். = ஸ்வரூப நிரூபகதர்மம், ஸத்யத்வம், ஜ்ஞாநத்வம், அநந்தத்வம், ஆநந்தத்வம், அமலத்வமாகிற இவை. = நிரூபிதஸ்வரூப விஶேஷணம், ஜ்ஞாநஶக்த்யாதி ஸமஸ்தகல்யாணகுணங்களும், குணவத்விஶேஷணமுமாய் குணப்ரகாஶகமுமான திவ்யமங்களவிக்ரஹங்களும்; இப்படி நிரூபிதமான வஸ்து தம்பதியாயிருக்கும். இத்தம்பதிக்கு உபயவிபூதியிலுள்ள சேதநாசேதநங்களும் ஶரீரதயா ஶேஷமாயிருக்கும். = வ்யாபாரமாவது, தன்னுடைய ஆநந்தத்துக்குப் போக்குவீடாகப் பண்ணும் ஸகலஜகத்ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களும், மோக்ஷப்ரதத்வமும். இப்படி ஸர்வதா ஸமாநாதிஶயத்தை யுடைத்தாயிருந்துள்ள தம்பதிகளை அந்யோந்ய மதிஶயகா

ராகச்சொல்லுகைக்குஹேது - ஸ்ரியஃபதித்வம், விஷ்ணுபத்நீத்வம், ஆகிற இவற்றாலே. எம்பெருமானிற் காட்டில் பிராட்டிக்கு அதிக வ்யாபாரம் - அதிகார ஸம்பத்தியும், புருஷகாரத்வமும்; எம்பெருமானுக்கு அதிகவ்யாபாரம் - தண்டகாத்வமும், உபாயத்வமும். = சேதநஸ்வரூபம், ஸத்யமாய், ஜ்ஞாநமாய், ஆநந்தமாய், அமலமாய், அணுவாயிருக்கும். = ஸ்வரூபநிரூபகதர்மம், ஸக்யத்வம், ஜ்ஞாநத்வம், ஆநந்தத்வம், அமலத்வம், அணுத்வமாகிறவிவை = நிரூபிதஸ்வரூப விஶேஷணம், ஶரீரவத் ஶேஷத்வமும். அநந்த ஜ்ஞாநாதி குணங்களும். வ்யாபாரம் - அநுபவஜநித ப்ரீதிகாரித கைங்கர்யம்.

அசித்ஸ்வரூபம் மூன்றுபடிப் பட்டிருக்கும். அதாவது - அப்ராக்ர்தம், ப்ராக்ர்தம், காலமென்று. இதில், அப்ராக்ர்தஸ்வரூபம் ஜ்ஞாநம்; ஸ்வரூபநிரூபகதர்மம் ஜ்ஞாநத்வம்; நிரூபிதஸ்வரூப விஶேஷணம் ஶரீரவத்ஶேஷத்வம்; வ்யாபாரம் - இச்சாநுகுணபரிணமம். ப்ராக்ர்தஸ்வரூபம் ஜடம்; ஸ்வரூபநிரூபககர்மம் ஜடத்வம்; நிரூபிதஸ்வரூப விஶேஷணம் - ஶரீரவக்ஶேஷத்வமும், குணத்ரயத்வமும், ஸததபரிணாமித்வமும்; வ்யாபாரம் - பத்தசேதநனுக்கு ஸ்வஸ்வரூப பரஸ்வரூபங்களை மறைக்கை. காலத்துக்கு ஸ்வரூபம், விபுவாய் ஜடமாயிருக்கும். ஸ்வரூபநிரூபகதர்மம் விபுவத் ஜடத்வங்கள். நிரூபிதஸ்வரூபவிஶேஷணம் ஶரீரவத்ஶேஷத்வமும் கலாகாஷ்டாதியான பரிணாமமும். வ்யாபாரம் ஸ்ர்ஷ்ட்யாதிகளுக்கு உபகாணமாயிருக்கும்.

## எட்டாம் வார்த்தை.

ஆத்மாவினுடைய தர்மிதர்மங்களின் ஸ்வரூபமும், ஸ்வரூபநிரூபகதர்மமும், நிரூபிதஸ்வரூபவிஶேஷணமும், வ்யாபாரமும், லக்ஷணமும், த்ரவ்யத்வமுமாகிற ப்ரகாரங்களை யுடைத்தாயிருக்கும். இதில் ஸ்வரூபம், ஸக்யமாய், ஜ்ஞாநமாய், ஆநந்தமாய், அமலமாயிருக்கும். = ஸ்வரூபநிரூபகதர்மம், ஸக்யத்வம், ஜ்ஞாநத்வம், ஆநந்தத்வம், அமலத்வமாகிறவிவை. = நிரூபிதஸ்வரூப விஶேஷணம் ஸ்வஸ்மை ஸ்வயம்ப்ரகாஶத்வம். அதாவது - தன்னைத் தானே யறிந்துகொண்டிருக்கை. அறிகிற கர்த்தாவும் தானேயாய், அறிவிக்கிற ஜ்ஞாநமும் தானேயாய், அறியப்படுகிற ஜ்ஞேயமும் தானேயாயிருக்கை. இப்படி தன்னைத்தானே அறிந்துகொண்டிருக்கிற அறிவுதான், "அஹம்" என்றிருக்கும்; "இதம்" என்றிராது. "இதம்" என்றிருக்கில் அப்போது வ்யதிரிக்தவிஷயத்தில் தர்ஶநமுண்டாம் அப்போது ஜ்ஞேயமாகத் தன்னை அறியமாட்டான். அக்காலே-ஜ்ஞேயமாகிற அறிவுமில்லையாம்; ஜ்ஞேயமாகிற அறிவு இல்லாமையாலே - ஜ்ஞாதர்த்வமில்லையாம்; இவை யில்லாமையா

லே - ஜ்ஞாநாஶ்ரயத்வமில்லையாம்; ஜ்ஞாநாஶ்ரயத்வ மில்லாமை யாலே - ஜ்ஞாநஹாநிபிறக்கும். இப்படியாகையாலே தன்னைத்தானே யறிகிற அறிவு அஹமர்த்தத்துக்கு விஷயமென்றதாய்த்து.= நிரூபிதஸ்வரூபவிஶேஷணம், அநந்த ஜ்ஞாநாதிகுணங்கள்; வ்யாபாரம், அபரிச்சிந்நமான ஸ்வரூபாநந்தாநுபவம்; லக்ஷணம், அணுத்வம், த்ரவ்யத்வம், குணநாமாஶ்ரயத்வம்; = தர்மத்துக்கு ஸ்வரூபம், ஸத்யமாய், ஜ்ஞாநமாய், அநந்தமாய், ஆநந்தமாய், அமலமாயிருக்கும். ஸ்வரூப நிரூபக தர்மம், ஸத்யத்வம், ஜ்ஞாநத்வம், அநந்தத்வம், ஆநந்தத்வமாகிற இவை. நிரூபிதஸ்வரூப விஶேஷணம், பரஸ்மை ஸ்வயம்ப்ரகாஶமுமாய். பரஸ்மைவிஷய ப்ரகாஶகமுமாயிருக்கை. இத்தால் - தன்னையும் வ்யதிரிக்தங்களையும் அறியாது என்றதாய்த்து. = நிரூபிதஸ்வரூபவிஶேஷணம் க்ரியாவிஶேஷங்கள். = வ்யாபாரம், ஆத்மாவுக்கு அவிச்சிந்நமான ஆகந்தத்தைவிளைக்கை. லக்ஷணம், விபுத்வம் த்ரவ்யத்வம் க்ரியாகுணங்களுக்கு ஆஶ்ரயமாயிருக்கை. ஆக, ஸ்வரூபம் ஸ்வஸ்மைஸ்வயம்ப்ரகாஶமா யிருக்கும்; ஸ்வபாவம் பரஸ்மை ஸ்வயம்ப்ரகாஶமுமாய் பரஸ்மைவிஷய ப்ரகாஶகமுமாயிருக்கும். அப்ராக்தஅசித்து பரஸ்மைஸ்வயம்ப்ரகாஶம். ப்ராக்ர்தாசித்விகாரமான கடபடாதிகள் அந்யாதீநப்ரகாஶம். அதாவது - பரஸ்மை பரப்ரகாஶகமாயிருக்கும் ஸ்வரூபத்துக்கு ஸ்வபாவத்தில் வாசி ஸ்வஸ்மைஆகையும், விஷயப்ரகாஶத்வ மில்லாமையாலும்; கடாதியில்வாசி ஸ்வஸ்மையும் ஸ்வயமும்; ஸ்வபாவத்துக்கு ஸ்வரூபத்தில்வாசி. பரஸ்மையும் விஷயப்ரகாஶத்வமும்; கடாதிகளில்வாசி ஸ்வஸ்மைஸ்வயமாகை, கடாதிக்கு ஸ்வரூபத்தில்வாசி பரஸ்மையும் பரப்ரகாஶமும்; ஸ்வபாவத்தில் வாசி பரப்ரகாஶமாகையும் விஷயப்ரகாஶத்வ மில்லாமையும். = ஸ்வரூபாநுபவத்தில் ஸ்வரூபத்திலே உத்கர்ஷம். ஸ்வவ்யதிரிக்தாநுபவத்தில் ஸ்வபாவத்திலே உத்கர்ஷம். தர்மிதர்மங்களினுடைய கூட்டரவில் ஸ்வரூபம விஶேஷணமாயிருக்கும. ஸ்வரூபநிரூபகதர்மம ஶேஷத்வம் நிரூபிதஸ்வரூப விசேஷணம்; ஶேஷத்வலாபம் இத்தலைக்கன்றிக்கே அத்தலைக்கேயாயிருக்கை. நிரூபிதஸ்வரூபவிஶேஷணம், கைங்கர்யைகாஸத்வம்; வ்யாபாரம் அவனுகப்புக்கண்டு தானுகக்கை; லக்ஷணம் அநந்யார்ஹத்வம். அதாவது - தத்ப்ரகாஶமென்றிருக்கை; த்ரவ்யத்வம் கைங்கர்யமாகிற குணத்துக்கு ஆஶ்ரயமாயிருக்கை. ஜ்ஞாநத்வமும் ஸ்வயம் ப்ரகாஶத்வமும் தர்மி தர்மங்களுக்கு ஸாதாரணம். தர்மத்றுக்கு விஷயித்வம் ஏற்றம்; தர்மிக்கு ப்ரத்யக்ஷத்வம் ஏற்றம். ஜ்ஞாநத்வமாவது - கஸ்யசித்ப்ரகாஶத்வம். அதாவது - தன்னுடைய வாசுவுமாம்; பிறருடைய வாசுவுமாம். வ்யவஹாராநுகுண்யத்தைப் பண்ணுகை. தன்னை விஷயீகரிப்பதொரு ஜ்ஞாநாந்தரத்தால் அபேக்ஷியாதே தானே

ப்ரகாஶிக்கை ஸ்வயம்ப்ரகாஶமாவது. தர்மத்துக்கு விஷயித்வமாவது - தன்னையொழிந்ததொன்றைக் காட்டுகை. தர்மிக்கு ப்ரத்யக்ஷமாவது - ஸ்வஸ்மை பாஸமாநத்வம். அதாவது - தானே தோற்றுகை. அதாவது - தன்ப்ரகாஶத்துக்குத் தானே பலியாயிருக்கை யென்றபடி. ஏதேனும் ஒருவஸ்துவுக்கு பலியென்கிற ஸாமாந்யாகாரத்தை தன் ப்ரகாஶத்துக்கு பலியென்று விஶேஷித்தவாறே, ப்ரத்யக்த்வமாம். தர்மத்துக்கு இவ்விஶேஷமில்லாத ஸாமாந்யத்வமும் இத்தோடே வ்யாப்தமான சேதநத்வமு மில்லை. இக்கர்ம தர்மிக ளிரண்டும் ஸ்வயம்ப்ரகாஶங்களாயிருந்தாலும் நித்யத்வாதி தர்மவிஶேஷ விஶிஷ்டங்க ளாகையாலே, ஜ்ஞாநாந்தர வேத்யங்களாம். தர்மபூத ஜ்ஞாநம் ஜ்ஞாநாந்தர வேத்யமாம்போது ப்ரஸாணபேதத்தாலே ஜ்ஞாநாந்தர வ்யபதேஶம். ஸம்ஸரிக்கைக்கு ஸ்வரூபயோக்யதை பரதந்த்ரசேதநத்வம். ஸஹகாரி காரணம் - அநாதியான ஆஜ்ஞாதிலங்கநமாகிற அபராதம்; ப்ரதாநகாரணம் - ஈஶ்வரனுடைய நிரங்குஶ ஸ்வாதந்த்ர்யம்; பரமப்ராப்யமான கைங்கர்யத்துக்கு ஸ்வரூபயோக்யதை ஶேஷத்வேஸதி சேதநத்வம்; ஸஹகாரிகாரணம் - பக்திப்ரபத்திகளாகிற அநுகூலவர்த்திகள்; ப்ரதாநகாரணம் - ஈஶ்வரனுடைய ஸஹஜ காருண்யம்.

## ஒன்பதாம் வார்த்தை.

சேதநன் ஒன்றை நினைக்கும்போது ஈஶ்வரன் திருவுள்ளத்திலே ஆறுப்ரகாரமான நினைவு கூடினபோதாய்த்து நினைக்கலாவது. அவையெவையென்னில்; - கர்த்ர்த்வம், காரயித்ர்த்வம், உதாஸீநத்வம், அநுமந்த்ர்த்வம், ஸஹகாரித்வம், பலப்ரதத்வம் ஆகிறவிவை. கர்த்ர்த்வமாவது - தான் முதல்நினைக்கை; காரயித்ர்த்வமாவது - அந்நினைவு இவனை நினைப்பிக்கை; உதாஸீநத்வமாவது - நினைப்பிக்குமிடத்தில் இவன் கர்மமடியாக நினைப்பிக்கை; அநுமந்த்ர்த்வமாவது - இவன் நினைக்குமிடத்தில் விலக்க வல்லனாயிருக்கச்செய்தே விலக்காதொழிகை; ஸஹகாரித்வமாவது - சேதநன் ஈஶ்வரனை யொழிய ஒரு ப்ரவ்ருத்தி நிவ்ருத்திக்கு க்ஷமனன்றிக்கே யிருக்கை; பலப்ரதத்வமாவது - இவை யித்தனையும் இவன் பண்ணின கர்மத்தினுடைய பலமாயிருக்கை.

## பத்தாம் வார்த்தை.

திருமலையில் ஜீயர் அருளிச்செய்யும் வார்த்தை;— அஹங்காரமாகிறது - ஒருசண்டாளன், மமதையாகிறது - அச்சண்டாளனுக்கு பார்யை; ராகத்வேஷங்களாகிறது - இவர்களுடைய ப்ரஜைகள்; இவ்வஹங்காரம் ஒன்றையுங் கொல்ல இவை யித்தனையும் நஶிக்கும். எங்ஙனேயென்னில்;— பதிவ்ரதையாகையாலே பார்யை

அநுமரணம் பண்ணும் ; மூலைகொடுப்பாரில்லாமையாலே ஶிஶுக்கள் நாக்குவற்றி நஶிக்கும்.

## பதினோராம் வார்த்தை.

அஹங்காரமாகிறது - ஒருஸர்ப்பம் ; மதையாகிறது - அதினுடைய உடல்; ராகத்வேஷங்கள் - இதினுடைய பற்கள் ; இப்பற்களை முறிக்கத்தீரும்.

## பன்னிரண்டாம் வார்த்தை.

ஸம்ஸாரிசேதநர் அவித்யையோடேகூடி யிருப்பார்கள் ; அவித்யையாவது - அஹங்கார மமகாரங்கள். இத்தாலே - ராகத்வேஷங்களுண்டாம். இத்தாலே - நாலுவகைப்பட்ட ஶரீரமுண்டாம்; ஶரீரமடியாக அஞ்சுவிஷயங்களிலும் ருசியுண்டாம்.

அவ்விஷயங்களை புஜிக்கைக்காக வழிகெட வர்த்திப்பார்கள். அதாவது - பொய்சொல்லியும், களவுகண்டும், பரஹிம்ஸை பண்ணியும், நீசரைஸேவித்தும் போருகை. இப்படி போருகிற சேதநனுக்கு எம்பெருமானுடைய ஸௌஹார்த்தகுணத்தாலே நினைவின்றிக்கே யிருக்க ஒருஸுக்ர்தம் விளையும்; அந்த ஸுக்ர்தமடியாக இவனிலும், இவனநர்த்தத்துக்கு நொந்துபோருகிற எம்பெருமான் குளிரக் கடாக்ஷித்தருளும்; ஆக, இத்தாலே - அவன்பக்கல் த்வேஷம் பண்ணத்தவிரும்; அத்தாலே - அவன்திருவுள்ளமுகக்கும்; அந்த உகப்பாலே- இவனுக்கு ஸத்வம் தலையெடுக்கும் ; அத்தாலே - நமக்கு நன்மை வேணுமென்று நினைத்திருக்கும்; அத்தாலே - ஸாத்விகரோடே ஸங்கதியுண்டாம் ; அத்தாலே - ஸதாசார்யனைக் கிட்டும்; அவன், தஞ்சமான அர்த்தங்களையுபதேஶிக்கும்.

அவையாவன;—காண்கின்ற வுடம்பொழிய வேறே யொருவன் நான் என்கிறவனென்றும், நான்றான் ஸ்வதந்த்ரனன்று - பரதந்த்ரனென்றும், பரதந்த்ரனுமிடத்து தேவதாந்தரங்களுக்கு பரதந்த்ரனன்று எம்பெருமானுக்கே பரதந்த்ரனென்றும், அதுக்கு எல்லை ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு பரதந்த்ரனாகை யென்றும், இதுக்கு பலம் எம்பெருமான்திருவடிகளிலே கைங்கர்யம் பண்ணுகை யென்றும், அதுக்குவிரோதி அஹங்கார மமகாரங்களும் ஶரீரஸம்பந்தமு மென்றும், அவைகழிகைக்கு உபாயம் அவன்திருவடிகளே யென்றும், இதெல்லாமறிகைக்கு ப்ரமாணம் ரஹஸ்யத்ரய மென்று மிவை.

அநந்தரம், இவ்வர்த்தங்களை யுபதேஶித்த ஆசார்யன் பக்கலிலே க்ர்தஜ்ஞனாய் ஸாத்விகரோடே ஸங்கதிபண்ணும் ; அநந்தரம், ஆசார்யகைங்கர்யமே யாத்ரையாய்ப்போரும். ஆசார்யகைங்கர்ய

மாவது - அநிஷ்டம் தவிர்கையும், இஷ்டம்செய்கையும். அவையிரண்டிலும்வைத்துக்கொண்டு அநிஷ்டம்தவிர்கையே ப்ரதாநம். அதவென்னெனில் ; இஷ்டம் செய்யாதபோது உபேக்ஷிக்குமளவேயுள்ளது. அநிஷ்டம் தவிராதபோது நேராக நிக்ரஹித்துக் கைவிடும் ; அவன் கைவிட்டவாறே ஈஶ்வரன் கைவிடும் ; பின்னைத் துணையாவது - பழய கர்மங்களும், யமபடரும் இவை யிரண்டுமறிவது-ஶாஸ்த்ரமுகத்தாலும் ஆசார்யன்நினைவாலும். இதுதான் பேற்றுக்கு ஸாதநமுமாய், கைங்கர்யமுமாய், ஸ்வரூபமுமாயிருக்கும். இவை ஸாதநமென்று நினைக்கக்கடவனல்லன் ; ஆசார்யனுக்கு ப்ரியமாக, பகவத்கைங்கர்யம், பாகவதகைங்கர்யம் பண்ணிக்கொண்டு போரக்கடவன் ; இப்படியிருக்கிற அதிகாரிக்கு ப்ராப்யஸித்தியுண்டாம். ஸ்வஸ்வரூபத்துக்கு ஸீமா - ததீயஶேஷத்வம் ; பரஸ்வரூபத்துக்கு ஸீமா - அர்ச்சாவதாரம் ; விரோதிஸ்வரூபத்துக்கு ஸீமா - அஹங்காரமமகாரங்கள்; உபாயஸ்வரூபத்துக்குஸீமா- பகவத்க்ருபை ; உபேயஸ்வரூபத்துக்குஸீமா - பகவந் முகோல்லாஸமென்று நம்பிள்ளை யருளிச்செய்வர்.

## பதின்மூன்றாம் வார்த்தை.

உபயவிபூதியும் ஈஶ்வரனுக்கு ஶேஷமாயிருக்கும்; இதிலிருக்குமவர்கள் - பத்தரும், நித்யரும், முக்தரும், பத்தர் இரண்டுபடி ; - முமுக்ஷுக்களும், ஸம்ஸாரிகளும். இவர்கள்தான் - அஹங்கார மமகாரம்கழிந்திருப்பாரும், அஹங்கார மமகாரங்களிலேயகப்பட்டோம் என்றிருப்பாரும், அஹங்கார மமகாரங்களோடு உடன்பட்டிருப்பாருமாயிருக்கும். இதில் கழிந்திருப்பார் - நித்யரும், முக்தரும் ; அகப்பட்டோமென்றிருப்பார் - முமுக்ஷுக்கள் ; உடன்பட்டிருப்பார் - நித்யஸம்ஸாரிகள். இதில் கழிந்திருப்பாரை எம்பெருமான் தன் இனிமைக்கு, விஷயமாக்கும் ; அகப்பட்டோம் என்றிருப்பாரைத் தன் இரக்கத்துக்கு விஷயமாக்கும் ; உடன்பட்டிருப்பாரைத்தன் லீலைக்கு விஷயமாக்கும் என்று முதலியாண்டான்.

## பதினான்காம் வார்த்தை.

ஆச்சான்பிள்ளை கோஷ்டியில், ஸ்ரீவைஷ்ணவர்கள் திரளவிருந்து, தஞ்சமாயிருப்பதொருவார்த்தை யருளிச்செய்யவேணும் என்ன; அருளிச்செய்தபடி,—நாம் லீலைக்கு விஷயமோ, இரக்கத்துக்கு விஷயமோ என்று விண்ணப்பஞ்செய்ய ; உடன்பட்டிருந்தோமாகில் லீலைக்கு விஷயமாகிறோம் ; அகப்பட்டோமென்றிருந்தோமாகில் இரக்கத்துக்கு விஷயமாகிறோம் என்றருளிச்செய்தார்.

## பதினைஞ்சாம் வார்த்தை.

ஸ்வஸ்வரூபம் - ஜ்ஞாநப்ரதானம் ; உபாயம் - வ்யவஸாய ப்ரதாநம் ; ப்ராப்யம் - அபேக்ஷாப்ரதாநம் ; விரோதி - அருசிப்ரதாநம் என்று முதலியாண்டா னருளிச்செய்வர்.

## பதினாறும் வார்த்தை.

அவன்.போக்தா; இவன்-போக்யம். வ்யாமோஹம் - உபாயம்; எதிர்வழிபெறுகை-உபேயம்; அவனுக்கு மிடறுபிடியாய்ப் போருவது - அந்யதாவிரோதி. அந்யதாவிரோதிதான் அஞ்சுபடி; - தேஹத்தை ஆத்மாவாக புத்திபண்ணுகையும், இதரதேவதைகளைபரத்வமாக புத்திபண்ணுகையும், இழிதொழில்களை உபாயமாக புத்திபண்ணுகையும், அவற்றாலே விஷயாந்தரங்களை போக்யமாக புத்திபண்ணுகையும், நின்ற சேதநரையெல்லாம் விரோதிகளாக புத்திபண்ணுகையும்.— ஸ்வரூபவிரோதி, உபாயவிரோதி, உபேயவிரோதி என்று மூன்று. தேஹாத்மாபிமாநம், அந்யசேஷத்வம், ஸ்வஸ்வாதந்த்ர்யம் இவை - ஸ்வரூபவிரோதி; ரக்ஷகாந்தரம். ஸாதநாந்தரம், ஸித்தோபாயத்தில் அவிஸ்வாஸம் இவை - உபாயவிரோதி; ஐஸ்வர்யகைவல்யம், ஸ்வாநுபவமான பகவத்கைங்கர்யம் இவை - உபேயவிரோதி.— ஸ்வரூபயாதாத்ம்யஜ்ஞாநம் பிறவாமையாலே - சாந்திபிறக்கிறதில்லை ; விரோதியாதாத்மயஜ்ஞானம் பிறவாமையாலே - அச்சம்பிறக்கிறதில்லை ; உபாய யாதாத்மயஜ்ஞாநம் பிறவாமையாலே - வ்யவஸாயம் பிறக்கிறதில்லை; போகயாதாத்ம்யஜ்ஞாநம் பிறவாமையாலே-த்வரை பிறக்கிறதில்லை-

## பதினேழாம் வார்த்தை.

எங்களாள்வான்ஸ்ரீபாதத்திலே அம்மங்கியம்மாள் சென்று தெண்டனிட்டு, அடியேனுக்கு தர்ஸநமிருக்கும்படி யருளிச்செய்யவேணுமென்று விண்ணப்பஞ்செய்ய ; எங்களாழ்வானும், தர்ஸநாந்தரிகளை நிரஸிக்கவோ, ஸ்வதர்ஸநஸ்தாபநம் பண்ணவோ, தர்ஸநமிருக்கும்படி கேட்கவோ என்றருளிச்செய்ய ; இவரும், தர்ஸநாந்தரிகளை நிரஸிக்கவும் ஸ்வதர்ஸநஸ்தாபநம் பண்ணவும் தேவரீர் எழுந்தருளியிருந்தீர் ; அடியேனுக்கு தர்ஸநமிருக்கும்படி யருளிச்செய்யவேணும் என்ன ; எங்களாழ்வான், அம்மங்கியம்மாளுக்கு அருளிச்செய்த ஸாரார்த்தசதுஷ்டயம்;—

எம்பெருமானார்திருவடிக்கீழே தஞ்சம் என்றிருக்கும் நம்பூர்வாசார்யர்கள், தங்களுக்குத் தஞ்சமாகவும் உத்தாரகமாகவும் போக்யமாகவும் அநுஸந்தித்தும் உபதேசித்தும் போருவது நாலிரண்டு அர்த்தமுண்டு. அவையாவன - ஸ்வரூபஜ்ஞ்ஞாநமென்றும், ஸ்வரூபயாதாத்ம்யஜ்ஞாநமென்றும், விரோதிஜ்ஞாநமென்றும், விரோதியாதாத்ம்யஜ்ஞாநமென்றும், பலஜ்ஞாநமென்றும், பலயாதாத்ம்ய ஜ்ஞாநமென்றும், உபாயஜ்ஞாநமென்றும், உபாயயாதாத்ம்ய ஜ்ஞாநமென்றும்.

இதில், ஸ்வரூபஜ்ஞானமாவது - ஜ்ஞாநாநந்தங்களும் புறவிதழ் என்னும்படி. பகவதநந்யார்ஹ ஶேஷத்வமே ஸ்வரூபமென்றிருக்கை.

ஸ்வரூபயாதாத்ம்யஜ்ஞாநமாவது - பகவத்ஶேஷத்வமும்புறவிதழென்னும்படி பாகவதஶேஷத்வமே ஸ்வரூபமென்றிருக்கை.

விரோதிஜ்ஞாநமாவது - பரமபாகவத விஶ்லேஷத்திலே நெஞ்சழியாக நினைவு.

விரோதியாதாத்ம்யஜ்ஞாநமாவது - வருந்தி ஒரு பாகவதனோடே ஸம்ஶ்லேஷிக்கத்துடங்கி, அவன்பக்கல் தோஷதர்ஶநம் பண்ணுகை.

பலஜ்ஞாநமாவது - ஒருபாகவதன் நியமனத்தை வெறுத்தல் * பொறுத்தல் செய்கையன்றிக்கே, விஷய ப்ரவணனுக்குபடுக்கைத்தலையில் விஷயபாருஷ்யம் போக்யமாமாப்போலேயாகிலும் போக்யமென்றிருக்கை.

பலயாதாத்ம்யஜ்ஞாநமாவது - ஆர்த்தப்ரபத்தியைப் பண்ணி அக்கரைப்பட வொருப்பட்டிருக்கச்செய்தே, மாதாபிதாக்களுங்கூட அநாதரிக்கும்படியான ஆர்த்தியையுடைய ஸ்ரீவைஷ்ணவர்களைக்கண்டால், அவர்களுடைய ரக்ஷணத்துக்கு உறுப்பாக இங்கேயிருக்கையிலே பொருப்படுகை.

உபாயஜ்ஞானமாவது - ஸம்பந்தஜ்ஞாநம். ஸம்பந்தஜ்ஞாநந்தான் - ஸம்பந்த ஜ்ஞாநமென்றும், ஸம்பந்த யாதாத்ம்யஜ்ஞாநமென்றும், ஸம்பந்த ஸ்வரூபஜ்ஞாநமென்றும், ஸம்பந்தஸ்வரூபயாதாத்ம்யஜ்ஞாநமென்றும் நாலுவகையாயிருக்கும்.

இதில் ஸம்பந்தஜ்ஞாநமாவது-அவனுடைய நிருபாதிக ஶேஷித்வத்தையும், தன்னுடைய நிருபாதிக ஶேஷத்வத்தையும் தெளியவறிகை.

ஸம்பந்தயாதாத்ம்ய ஜ்ஞானமாவது - அவனுடைய நிருபாதிக ஶரீரத்வத்தையும், தன்னுடைய நிருபாதிக ஶரீரத்வத்தையும் தெளியவறிகை.

ஸம்பந்த ஸ்வரூபஜ்ஞாநமாவது - அவனுடைய நிருபாதிக தர்மித்வத்தையும், தன்னுடைய நிருபாதிக தர்மத்வத்தையும் தெளியவறிகை.

ஸம்பந்த ஸ்வரூப யாதாத்ம்ய ஜ்ஞாநமாவது - தர்மி தர்மங்களினுடைய ஐக்யத்தைத் தெளியவறிகை. அதாவது - விஶிஷ்ட

* "பொறுத்தல்" என்றும் சிலஸ்ரீகோசங்கள்.

வேஷத்திலே அவனொருவனுமேயாய், தான் இல்லையென்னலாம்படி யிருக்கை.

உபாயயாதாத்ம்ய ஜ்ஞானமாவது - தந்நிஷ்டை. அதாவது - ஶேஷத்வத்தில் கர்த்ருத்வ நிவர்த்தியும், ஜ்ஞாதர்த்வத்தில் கர்த்ர்த்வ நிவர்த்தியும், கர்த்ர்த்வத்தில் கர்த்ர்த்வ நிவர்த்தியும். போக்த்ர்த்வத் தில் கர்த்ர்த்வ நிவ்ர்த்தியும் பிறக்கை.

ஶேஷத்வத்தில்கர்க்ருத்வமாவது - ராஜாஶ்ரயத்தையிட்டு ஜகத்தைப்பீடிக்கும்மந்த்ரிகளைப்போலே. பகவதாஸத்தியை யிட்டு ஸதாசாரத்தை நெகிழ்கை. அதாவது - ஶப்தாதிவிஷயஸ்பர்ஶத்தில் அச்சமும் பகவத்பாகவதகைங்கர்யவிஶ்லேஷத்தில் ஆர்த்தியும் விளையாதொழிகை; தந்நிவ்ர்த்தியாவது - ப்ராமாதிகமான விஷயத்திலே அச்சமும் ப்ராமாதிகமான கைங்கர்யவிஶ்லேஷத்தில் ஆர்த்தியும் விளைகை.

ஜ்ஞாதர்த்வத்தில் கர்க்ர்த்வமாவது - நாம் ஜ்ஞாதாவாகையாலேயன்றோ நம்மை அவன் அங்கீகரித்ததென்று தன் ஜ்ஞானத்தை யிட்டு யிறுமாக்கை; தந்நிவ்ர்த்தியாவது - கேஹாத்மாபிமானிகளிலும் கடையாய், அசிக்கல்பனாய், முதலழித்துக்கொண்டு அஸத்கல்பனைக் கிடங்கவென்னை, இரும்பைப் பொன்னாக்குவாரைப் போலே, கருந்தறையிலேபுகுந்து, ஆத்மஜ்ஞானத்தைப் பிரப்பித்து அங்கீகரிப்பதே! என்று க்ர்தஜ்ஞனாய்ப்போருகை.

கர்த்ர்த்வத்தில் கர்த்ர்த்வமாவது - நாம் நிஷித்தங்களை விட்டு விஹிதங்களைப் பற்றுகையாலேயன்றோ நம்மை அவனங்கீகரித்தானென்று தன்ப்ரவ்ர்த்தி நிவ்ர்த்தியையிட்டு இறுமாக்கை; தந்நிவ்ர்த்தியாவது - நம்வ்யாபாரங்கள் ஒன்றுமில்லை, மரப்பாவையை யாட்டுவாரைப்போலே, தானே நிஷித்தங்களினின்றும் விடுவித்து விஹிதங்களைப் பற்றுவித்தானென்றிருக்கை.

போக்த்ர்த்வத்தில்கர்த்ர்த்வமாவது - நாம் அவனுக்கு அடிமை செய்கிறோமென்றிருக்கை; தந்நிவ்ர்த்தியாவது - தன்கையாலே தன்மயிரைவகுத்தால் அந்யோந்யம் உபகாரஸ்ம்ர்தி பண்ணாதாப் போலே, அவயவபூதனான ஆத்மா அவயவியான எம்பெருமானுக்கு அடிமைசெய்கிறான் என்றிருக்கை. இவ்வர்த்தங்கள் ஓராசாரியன் அங்கீகரித்த முமுக்ஷுவுக்கு ஜ்ஞாதவ்யம்.

## பதினெட்டாம் வார்த்தை.

பரஸ்வரூபமிருக்கும்படியென்?,பரஸ்வரூபயாதாத்ம்ய மிருக்கும்படியென்?, ஸ்வஸ்வரூப மிருக்கும்படியென்?, ஸ்வஸ்வரூபயாதாத்ம்ய மிருக்கும்படியென்?, ஸ்வரூபாநுரூபமான பலஸ்வரூபமிருக்

கும்படியென்?, பலஸ்வரூபயாதாத்மய மிருக்கும்படியென்?, தத்வி ரோதி ஸ்வரூபமிருக்கும்படி யென்?, விரோதிஸ்வரூபயாதாத்ம்ய மிருக்கும்படியென்?, தந்நிவர்த்திக்கும் பலஸித்திக்கும் உபாயஸ்வ ரூபமிருக்கும்படியென்?, உபாயஸ்வரூபயாதாத்ம்ய மிருக்கும்படி யென்னென்னில்;—

பரஸ்வரூபம் - சேதநாசேதநாத்மகமான உபயவிபூதிக்கும் நிய ந்தாவாயிருக்கும் நியந்த்ருத்வம்; பரஸ்வரூப யாதாத்ம்யம் - "அது நமதுவிதிவகை" என்கிறபடியே அர்ச்சாவதார பர்யந்தமான ஆஶ்ரி தபாரதந்த்ர்யம்;

இனி, பரஸ்வரூப ப்ரதிஸம்பந்தியான ஸ்வஸ்வரூபமாவது - ப்ரக்ருதேஃ பரம், ஜ்ஞாநாநந்தலக்ஷணம், நித்யம், ஏகரூபம், ஜ்ஞாந குணகம், ஸ்வயம்ப்ரகாஶம், ஈஶ்வரஶேஷம், அநந்யார்ஹம், ஸ்வ ரக்ஷணத்தில் ப்ராப்தியில்லாத பாரதந்த்ர்யம்; இதினுடைய யாதா த்ம்யமாவது— "அருள்பெறுவாரடியார்தம்மடிய னேற்கு" என் றும், "அடிகளடியே நினையுமடியவர்கள்தம் அடியான்" என்றும், "மெய்ம்மையைமிகவுணர்ந்து" என்றுஞ் சொல்லுகிறபடியே ததீய ஶேஷத்வ பர்யந்தமாயிருக்கை;

இனி, ஸ்வரூபாநுரூபமான பலஸ்வரூபமாவது - பகவத்ஸ்வ ரூபரூபகுணாநுபவ ஜநிதப்ரீதிகாரித கைங்கர்யம்; இதினுடைய யாதாத்மய மிருக்கும்படி— "ப்ரஹர்ஷயிஷ்யாமி" "ப்ரஹர்ஷயிஷ்யாமி" என்கிறபடியே இந்தகைங்கர்ய ப்ரதிஸம்பந்தியான ஶேஷியினுடைய ஹர்ஷம்;

தத்விரோதி ஸ்வரூபமாவது - தேஹத்தில் ஆத்மபுத்தியும், தே ஹாநுபந்தியான பதார்த்தங்களில் மமதாபுத்தியும், தேஹாத்பரனன ஆத்மாவின்பக்கலிலே ஸ்வதந்த்ரபுத்திபண்ணுகையும்; இதினுடைய யாதாத்ம்யமாவது - ஸ்வரூபாநுபவமான கைங்கர்யாந்தர்க்கதமான அஹங்காரமமகாரங்கள்;

தந்நிவர்த்திக்கும் புருஷார்த்த ஸித்திக்கும் உபாயமாவது - ஸித்தஸ்வரூபனாய் ஸௌலப்யாதி குணவிஶிஷ்டனாயிருந்துள்ள ஈஶ் வரன்திருவடிகள்; இதினுடைய யாதாத்ம்யமாவது - அதிகாரிவிஶே ஷணத்தையும் ஸஹியாதபடியான ஸஹகாரி நைரபேக்ஷ்யம்.

## பத்தொன்பதாம் வார்த்தை.

போகவிரோதி - விஷயப்ராவண்யம்; ப்ராப்யவிரோதி மம தை; ஸாதநவிரோதி - அஜ்ஞாந கர்த்ருத்வம்; த்ரிவிதவிரோதிக் கும் காரணம் - அஹங்காரம்: கைங்கர்யவிரோதி - ஸ்வாதந்த்ர் யம்; ருசிவிரோதி - ஶப்தாதிகள்; ஸமாஶ்ரயணவிரோதி - தேவதாந்

தரம்; ஜ்ஞாநவிரோதி - அஜ்ஞானம்; சேஷத்வவிரோதி - தேவதாந்தரம்; ஶரணாகதிவிரோதி - உபாயாந்தரம்; ஸ்வரூபவிரோதி - பாகவதாபசாரம்; புருஷார்த்தவிரோதி - விஷயப்ராவண்யம் என்று பிள்ளையருளிச்செய்வர்.

## இருபதாம் வார்த்தை.

திருக்கோட்டியூர்நம்பி உடையவருக்கு அருளிச்செய்த வார்த்தை - ப்ரபந்நனுக்கு பரிஹார்யம் ஆறு; அவையாவன - ஆஶ்ரயணவிரோதி, ஶ்ரவணவிரோதி, அநுபவவிரோதி, ஸ்வரூபவிரோதி, பரத்வவிரோதி, ப்ராப்திவிரோதி என்று. இவற்றில், ஆஶ்ரயணவிரோதியாவது - அஹங்கார மமகாரங்களும், பலாபிஸந்தியும், புருஷகாரத்தை யிகழ்கையும், பேற்றில் ஸம்ஶயமும்; ஶ்ரவணவிரோதியாவது - தேவதாந்தர கதாவிஷயங்களிலே அவஶமாகச் செவிதாழ்க்கை; அநுபவவிரோதியாவது - போக த்ரவ்யங்கொண்டு புக்கு ஸ்நாநத்ரவ்யங் கொண்டு புறப்படுகிற விஷயாநுபவேச்சை; ஸ்வரூபவிரோதியாவது - பாரதந்த்ர்யத்தை இசையாதே ஸ்வதந்த்ரனாய்க் கைவிஞ்சுகை, பரத்வ விரோதியாவது - முற்றல் க்ஷேத்ரஜ்ஞரான ப்ரஹ்மருத்ராதிகளை ஈஶ்வரராக ப்ரமிக்கை; ப்ராப்திவிரோதியாவது-கேவலரோட்டைச் சேர்த்தி.

## இருபத்தோராம் வார்த்தை.

பகவதநுவர்த்தநத்துக்கு ப்ரதிபந்தகம் - ஶரீரம்; ஆசார்யாநுவர்த்தனத்துக்கு ப்ரதிபந்தகம் - புத்ரமித்ராதிகள்; ஸ்ரீவைஷ்ணவர்களநுவர்த்தநத்துக்கு ப்ரதிபந்தகம் - இதரஸஹவாஸம்; உபாயாத்யவஸாயத்துக்கு ப்ரதிபந்தகம் - அர்த்தப்ராவண்யம்; உபேயருசிக்குப்ரதிபந்தகம்-விஷயப்ராவண்யம். இவற்றுக்கு ஒன்றுக்கு ஒன்றிலே தாத்பர்யம் என்று திருநகரிப் பிள்ளை வார்த்தை.

திருநகரிப்பிள்ளை:—

ஸ்வரூபவிரோதியாவது -ஸ்வரக்ஷணம், ஸ்வஸ்வாதந்த்ர்யம்; அந்யஶேஷத்வம், தேஹாத்மாபிமாநம், மமதை என்கிறவிவை; அவன் ரக்ஷகனாகையாலே - ஸ்வரக்ஷணத்தில் ப்ராப்தியில்லை; அவன் ஶேஷியாகையாலே - ஸ்வஸ்வாதந்த்ர்யத்தில் ப்ராப்தியில்லை; அவன் பரத்பரனாகையாலே- அந்யஶேஷத்வத்தில் ப்ராப்தியில்லை; அவன் ஜ்ஞாநாநந்தியாகையாலே - தேஹாத்மாபிமாநத்தில் ப்ராப்தியில்லை; ஈஶ்வரவிபூதியாகையாலே-மமதையில்ப்ராப்தியில்லை;

உபாயவிரோதியாவது - ஸாதநாந்தரம், ஸ்வயோக்யதை, அர்த்தம், அதிகாரி விஶேஷணம், அபிமதம். அதாவது - ஸரீரவத்ஶேஷமாகையாலே - ஸாதநாந்தரங்களில் ப்ராப்தியில்லை; பத்தாத்மாவாகையாலே ஸ்வயோக்யதைக்கு ப்ராப்தியில்லை; அசேதநமாகை

யாலே அர்த்தம், இஷ்டாநிஷ்டங்கள் அறிகைக்கு யோக்யதை இல்லாமையாலே - ஸாதனத்தில் ப்ராப்தியில்லை; அதிகாரிவிஶேஷணம் சைதந்ய கார்யமாகையாலே - ஸாதநத்தில் ப்ராப்தியில்லை; வித்த ஸாதநம் ஸஹாயாந்தரத்தை ஸஹியாமையாலே இவனபிமதத்துக்கு ஸாதனத்தில் ப்ராப்தியில்லை.

ப்ராப்தி விரோதியாவது - தேஹத்தில் போக்யபுத்தியும், தேஹத்தைப்பற்றிவருமவற்றில் புருஷார்த்தபுத்தியும், ஸ்வர்க்கைஸ்வர்யத்தில் புருஷார்த்தபுத்தியும், ப்ரஹ்மலோக ப்ராப்தியில் புருஷார்த்த புத்தியும், கைவல்யத்தில் புருஷார்த்தபுத்தியும், அதாவது - தேஹம் ஸ்வபாவதுர்க்கந்த மாகையாலே புருஷார்த்தமாக மாட்டாது; தேஹத்தைப்பற்றி வருமவை தனக்கல்லாமையாலே - புருஷார்த்த மாக மாட்டாது; ஸ்வர்க்கைஸ்வர்யம் "[illegible]" "க்ஷீணே புண்யே மர்த்யலோகம் விஶந்தி" என்கையாலே - புருஷார்த்த மாக மாட்டாது; ப்ரஹ்மலோகப்ராப்தியும் க்ஷுத்பிபாஸையாலே இஹலோகத்திலேவந்து ஸ்வமாம்ஸபக்ஷணம்பண்ணிப்போருமென்று சொல்லுகையாலே - ஸுகமாகமாட்டாது; கைவல்யமும் விதவாலங்காரம் போலே ஸ்வாநுபவமாகையாலும் சிற்றின்பமாகையாலும் - புருஷார்த்தமாகமாட்டாது; அல்பமன்றியிலே, அஸ்திரமன்றியிலே, அபோக்யமன்றியிலே அப்ராப்யமன்றியிலேயிருக்குமதிறே - ஸ்வரூப ப்ரயுக்தமான புருஷார்த்தமாவது.

## இருபத்திரண்டாம் வார்த்தை.

ஶரீரம் - ஜடமாயிருக்கும்; ஆத்மா - ஜ்ஞாநமயமாயிருக்கும்: துக்காத்மகமாயிருக்கும்; ஆநந்தமயமா யிருக்கும்: அழுக்காயிருக்கும்; நிர்மலமா யிருக்கும்: அழியுமதாயிருக்கும்; நித்யமாயிருக்கும்: பரிணாமியாயிருக்கும்; ஏகரூபமாயிருக்கும்: விபுவாயிருக்கும்; அணுவாயிருக்கும்: இருளாயிருக்கும்; ஒளியாயிருக்கும்; க்ஷமையாயிருக்கும்: அஶுத்தமாயிருக்கும்; ஶுத்தமாயிருக்கும்.

ஈஶ்வரன், ரக்ஷகனாயிருக்கும்; ஶேஷியாயிருக்கும்; காரணமாயிருக்கும்; ஶரீரியாயிருக்கும்; தாரகனாயிருக்கும்; வ்யாபகனாயிருக்கும்; நியந்தாவாயிருக்கும்; ஸ்வதந்த்ரனாயிருக்கும்; ஶரண்யனாயிருக்கும்; ஸேவ்யனாயிருக்கும்; பலசொல்லியென்? நாயகனாயிருக்கும்.

ஆத்மா, ரக்ஷ்யமாயிருக்கும்; ஶேஷமாயிருக்கும்; கார்யமாயிருக்கும்; ஶரீரமாயிருக்கும்; தார்யமாயிருக்கும்; வ்யப்யனா

யிருக்கும் ; நியாம்யனுயிருக்கும் ; பாதந்த்ரனுயிருக்கும் ; ஶரணு கதனுயிருக்கும் ; ஶேஷகனுயிருக்கும்; பலசொல்லி பென்? அடியனுயிருக்கும்.

## இருபத்துமூன்ரும் வார்த்தை.

கரணங்களை ஆத்மாவென்பார் ; இந்த்ரியங்களை ஆத்மாவென்பார்; மநஸ்ஸை ஆத்மாவென்பார்; ப்ராணனை ஆத்மாவென்பார் ; இவை தனித்தனியே ஆத்மாவென்பார் ; இதினுடைய ஸமுதாயம் ஆத்மாவென்பார் ; ப்ரக்ருதியை ஆத்மாவென்பார் ; இதுக்கு வேறுபட்டிருக்கும் ஆத்மா என்று கொள்ளச்செய்தேயும் ஜடம் ஆத்மாவென்பார்; க்ஷணிகம் ஆத்மாவென்பார்; ஜ்ஞாநம் ஆத்மாவென்பார்; விபு ஆத்மாவென்பார் ; ஆத்மா அநித்யமென்பார் ; ஏகாத்மாவென்பார் ; பரிணுமி ஆத்மாவென்பார் ; ஸ்வதந்த்ரம் ஆத்மாவென்பார்.

பாரதந்த்ர்யம் கொள்ளாநிற்கச் செய்தேயும், கர்மத்துக்கு பாதந்த்ரனென்பார் ; மாதாபிதாக்களுக்கு பாதந்த்ரனென்பார் ; பித்ருக்களுக்கு பாதந்த்ரனென்பார் ; க்ரஹங்களுக்கு பாதந்த்ரன் என்பார் ; அக்நிக்கு பாதந்த்ரனென்பார் ; இந்த்ரனுக்கு பாதந்த்ரனென்பார் ; ப்ரஹ்மாவுக்கு பாதந்த்ரனென்பார் ; ருத்ரனுக்கு பாதந்த்ரனென்பார் ; ஏகாயந எம்பெருமானுக்கு பாதந்த்ரனென்பார் ; இப்படி பஹுப்ரகாரங்களினுலே விப்ரதிபத்தி பண்ணுவர்கள்.

இவை விப்ரதிபத்தியாகிறபடி எங்ஙனே யென்னில்;—காலும் கையும் போனுலும் இருக்கக்காண்கையாலே - கரணங்கள் ஆத்மாவாகமாட்டாது; கண்ணும்செவியும் கெட்டாலும் இருக்கக் காண்கையாலே - இந்த்ரியங்கள் ஆத்மாவாகமாட்டாது ; மநஸ்ஸு ஜடமாகையாலே - ஆத்மா வாகமாட்டாது ; ப்ராணன் வாயுவிஶேஷமாகையாலே - ஆத்மாவாகமாட்டாது ; ஒரு கரணத்துக்கு வந்த க்லேஶத்தாலே மற்றக்கரணங்களும் க்லேஶிக்கக் காண்கையாலே- தனித்தனியே ஆத்மாவாக மாட்டாது ;

இவற்றினுடைய ஸமுதாயமான ஶரீரம் ஆத்மா வாகமாட்டாது. எங்ஙனே யென்னில்;—என்னுடைய கால் என்னுடைய கை ; எனக்கு ஶரீரம் விதேயமாய்த்து என்கையாலும், மாதாபிதாக்கள் செத்த வநந்தரம் காண்கிற ஶரீரத்தில் ஒன்றும் முகம் மாறிப் போகாமேகிடக்க, அப்பா! எங்குப்போனுய், அம்மா! எங்குப்போனுய் என்று முன்னுள் ஆதரித்துப்போந்த ஶரீரந்தன்னை, அரைநாழிகை அகத்தில்கிடக்கவும் பொருதே "ஶவம்" என்று பேரிட்டு, தர்ஶித்ததோஷத்துக்கு நெய்யும் நெருப்புங்

கொண்டு குளிக்கையாலும், அஜ்ஞருங்கூட ஶவ ஶரீரத்தில் ஆத்மபுத்தி பண்ணுமையாலே - ஶரீரம் ஆத்மாவாக மாட்டாது; இவனிருந்தபோது ஜ்ஞாநம் நடையாடுகையாலே - ஜடம் ஆத்மாவாகமாட்டாது; முன்புசெய்த கார்யம்சொல்லுகையாலே - க்ஷணிகம் ஆத்மாவாக மாட்டாது; நான் இத்தைச் செய்யாநின்றேனென்கையாலே - ஜ்ஞாநம் ஆத்மாவாகமாட்டாது; ஆத்மா ஶரீரத்தில் நின்றும் புறப்பட்டுப் போம்போது சுற்றிலிருந்தார்க்குத் தெரியாமையாலே - விபு ஆத்மாவாகமாட்டாது; போன ஜந்மம் சில தர்மங்களைச் செய்கையாலே இஜ்ஜந்மம் ஸுகமா யிருந்தோம், இஜ்ஜந்மமும் சில ஸுக்ர்தங்களைச் செய்தால் வருகிற ஜந்மமும் ஸுகமாயிருக்கலாமென்று செய்யக் காண்கையாலும், ஶரீரத்தைவிட்டுப்போய் ஸ்வர்க்காத்யநுபவம் பண்ணுவதாக ஜ்யோதிஷ்டோமாதி ஸாதநத்திலே இழிகையாலும், ஆத்மா அநித்யமாக மாட்டாது; ஒரு சேதநன் ஸுகிக்க, ஒரு சேதநன் து:கிக்க, ஒரு சேதநன் நலிய, ஒரு சேதநன் நலிவுபடக் காண்கையாலும், ஏகாத்மா வாகமாட்டாது; பிறந்தவன்று சாகிற ப்ரஜையினுடைய ஆத்மாவோடு நூருவயஸ்ஸுப்புக்கு சாகிறவனுடைய ஆத்மாவோடு வாசியறக் கண்ணுக்குத் தெரியாமையாலே, பரிணாமி ஆத்மாவாகமாட்டாது; தனக்கு அநிஷ்டமான து:கத்தைப் போக்கிக்கொள்ளமாட்டாமையாலும், இஷ்டமான ஸுகத்தை அழைத்துக்கொள்ளமாட்டாமையாலும், தான்செய்கிறேன் என்ற கார்யத்தை செய்து தலைக்கட்டமாட்டாமையாலும், ஸ்வதந்த்ரம் ஆத்மாவாகமாட்டாது.

கர்மத்துக்கு பாதந்த்ரனுக மாட்டான் - அது அசேதநமாகையாலே; இவனுடைய ஆபந்நிவாரணம்பண்ண மாட்டாமையாலே - மாதா பிதாக்களுக்கு பாதந்த்ர னுகமாட்டான்; ரக்ஷகத்வமில்லாமையாலே - பித்ர்க்களுக்கு பாதந்த்ர னுகமாட்டான்; இப்படியாகையாலே - க்ரஹங்களுக்கு பாதந்த்ர னுகமாட்டான்; அசித்தாகையாலும், தன்னைப்பிறர் ரக்ஷிக்கவேண்டுகையாலும், அஸ்வாமியாகையாலும், அக்நிக்கு பாதந்திர னுகமாட்டான்; ஶாபோபஹதனுகையாலும், தன்னுடைய ராஜ்யத்தை பிறர்கையிலே பறிகொடுத்து க்லேஶிக்கையாலும் - இந்த்ரனுக்கு பாதந்த்ரனுகமாட்டான்; மதுகைடபர்கையிலே வேதத்தைப் பறிகொடுக்கையாலும், ருத்ரனாலே நலியப்படுகையாலும் - ப்ரஹ்மாவுக்கு பாதந்த்ரனுகமாட்டான்; தான் அபிமாநித்த பாணனைக்காட்டிக் கொடுத்துத் தன்னைக் கொண்டு நெகிழ † நிற்கையாலும், ப்ரஹ்மஶிரஸ்ஸு தன்கையிலே யொட்டிக்கிடக்க ஸர்வேஶ்வரன் பக்கலிலே சென்று "என் ஆபத்தைப் போக்கியருளவேணும்" என்று

† "நழுவ" என்றும் பாடம்.

§ நோக்கிக் கொள்ளுகை யாலும் - ருத்ரனுக்கு பரதந்த்ரனாக மாட்டான்; "திருமாலே நானு முனக்குப் பழவடியேன்" என்கை யாலே - ஏகாயக எம்பெருமானுக்கு பாதந்த்ரனாகமாட்டான்; இனி, இவ்வாத்மாவுக்கு நிலைநின்றஶேஷத்வம், "நின் திருவெட் டெழுத்துங் கற்று நானுற்றதும் உன்னடியார்க் கடிமை" என்கை யாலே - ததிய ஶேஷத்வமேயாகக் கடவது.

## இருபத்துநான்காம் வார்த்தை.

தத்வத்ரயம்; அதில் ஆத்மதத்வத்ரயம்; அதில் பத்தாத்மாக் கள் த்ரயம்; அதில் ஶேஷத்வ ஜ்ஞாநமுடையார் த்ரயம்; அதில் பகவத் ஶேஷத்வ ஜ்ஞாநமுடையார் த்ரயம்; ஆத்மப்ராப்தி காமர் த்ரயம்; அதில் ப்ரபந்நாதிகாரிகள் த்ரயம்.

## இருபத்தஞ்சாம் வார்த்தை.

ரக்ஷகத்வத்தை யழித்தான்; ஶேஷத்வத்தை யழித்தான்; பாத்வத்தை யழித்தான்; விக்ரஹத்தை அழித்தான்; அருளை யழித்தான்; அடியாரை யழித்தான்; விபூதியை யழித்தான்; பந்த த்தை யழித்தான்; வ்ர்த்தியை யழித்தான்; தன்னை ஶரீரியாக ப்ரதிபத்திபண்ணி அநர்த்தப்படுதல் தன்னை ஶரீரமாக ப்ரதிபத்தி பண்ணி உஜ்ஜீவித்தல் செய்யு மத்தனையென்று பிள்ளையருளிச் செய்தார்.

## இருபத்தாறும் வார்த்தை.

பௌருஷத்தை யேறிட்டுக்கொள்ளுகை – பாரதந்த்ரயத்தை யழிக்கை; வ்யாபாரத்தை யேறிட்டுக் கொள்ளுகை - வ்யவஸாயத் தையழிக்கை; விஷயாந்தரங்களிலே யக்வயிக்கை-வ்ர்த்தியை யழி க்கை என்று அச்சான்பிள்ளை.

## இருபத்தேழாம் வார்த்தை.

ஜ்ஞாநம் ஜ்ஞாநத்தை விநியோகங்கொள்ளும்படி யென்னெ ன்னில்;—இவன் கரணத்வாரா விநியோகப்படும்; அவன் விக்ரஹ த்வாரா விநியோகம் கொள்ளும். ஜ்ஞாநம் ஜ்ஞாநத்துக்கு ஶே ஷமானபடி யென்னென்னில்;— யாதொன்றினுடைய ஸ்வரூப ஸ்திதிப்ரவ்ர்த்திநிவ்ர்த்தி யாதொன்றிலேகிடக்கிறது அது ஶேஷி யாகத்தட்டில்லை. இப்படியிருக்கிற ஜ்ஞாநத்தை அவித்யை மூடின படி யெங்ஙனே யென்னில்;—ஜ்ஞாநாஶ்ரயமாகையாலே கல்லுக் கலங்காதே நீர் கலங்குமித்தனையிறே; ஜ்ஞாநத்ரவ்யமிறே எப்போ து மொக்கக் கலங்கியல்லது இராதே. அப்ராப்தத்திலே கலங்கு தல்-ப்ராப்தத்திலே கலங்குதலிறே. ஸ்தூலத்தில் ஸூக்ஷ்ம மிருக் கும்படி யெங்ஙனே யென்னில்;— ஜ்ஞாநேந்த்ரியங்களிலே வ்யா

---

§ 'போக்கி" என்றும் பாடம்.

பித்திருக்கும் ஸ்தூலம் கழியும்போது "వాయుర్గన్ధానివ" "வாயுர்க் கந்தாநிவ" என்கிறபடியே, வாயு கந்தத்தைக் கொய்துகொண்டு போமாப்போலே, இந்த்ரியங்கள் ஸாரவத்தையாம். அருசி, அவிஸ்வாஸ மடியாகப்புகும். ஸ்தூலம் விட்டபோதே ஸூக்ஷ்மம் விடாதொழிவானென்னென்னில்;— ப்ராக்ருததேஶத்திலே அப்ராக்ருத ஶரீர மில்லாமையாலே இது யாதொரு தேஶத்திலே விட்டது, அது அப்ராக்ருத தேஶமாமித்தனை. இது கமநஸாதநமாகையாலும், போகிற வழியிலுள்ள தேவஜாதிகள் ஸத்கரித்து ஸ்வரூபம் பெறுகைக்கும், ஸூக்ஷ்மம் விட்டால் பன்னிரண்டு கோடி ஆதித்யர்களை அழலைக்கழற்றி ஒளியைத் தேக்கினாப்போலே தேஜஸ்ஸூபுற வெள்ளப்பட்டால் தேவதேஶங்களிலுள்ளார் எதிர் நின்று கிஞ்சித்கரித்து ஸ்வரூபம்பெற வொண்ணாமையாலே, இன்னம் ராஜமஹிஷி அந்தஃபுரத்துக்குப் போகும்போது தட்டுப்பாயிட்டுப் போகை ஸ்வரூபமிறே. அப்போது தேவஜாதிகளும் "இடர் கெட வெம்மைப் போந்தளியாய்" என்னும், "நீணகர் நீளெரி வைத்தருளாய்" என்றும் சொல்லி, கருமம்தலைக்கட்டினால், எதிரம்பு கோக்கும் அஸத்துக்களாகையாலே, இப்படிப்பட்ட ஹேயர் கண் படாமல் போய் வைகுந்தத் திருவாசலிலே யிழிந்து தட்டுப்பாய் வாங்குமித்தனை. அதாவது - விரஜையிலே இழியுமித்தனை. திரை வாங்கினால் * மதிமுகமடந்தையர் முகத்திலே விழிக்குமித்தனை. "శతం మాలాహస్తాః" "ஶதம்மாலாஹஸ்தாஃ" என்று ஸ்ரீவைகுண்டநாதனை ஒப்பிக்கக்கடவ அப்ஸரஸ்ஸூக்கள் இவனை ஒப்பிக்க வைத்தால் அவர்கள் முகத்திலேயிறே இவன் விழிப்பது. ஸ்வரூபமிருக்கும்படி ஜ்ஞாநமாயிருக்கும் அவனுகப்பிலே பிறக்கையாலேயிறே. அதாவது - அவனுடைய ஜ்ஞாநாநந்தத்திலே இவன் ஸத்தை கிடக்கை. அவனுகப்பிலே பிறக்கையாலேயிறே யிவனை "தண்ணீர் தண்ணீர்" என்னப் பண்ணுகிறது.

## இருபத்தெட்டாம் வார்த்தை.

¶ ரக்ஷ்யரக்ஷக ஸம்பந்தம், பிதா புத்ர ஸம்பந்தம், ஶேஷ ஶேஷி ஸம்பந்தம், பர்த்ர்பார்யா ஸம்பந்தம், ஜ்ஞாத்ர்ஜ்ஞேய ஸம்பந்தம், ஸ்வஸ்வாமி ஸம்பந்தம், ஶரீரஶரீரி ஸம்பந்தம், ஆதாரதேய ஸம்பந்தம், போக்த்ர்போக்ய ஸம்பந்தம்.

## இருபத்தொன்பதாம்வார்த்தை.

ப்ரணவத்தில், சதுர்த்தியாலே - ஶேஷத்வத்தைச்சொல்லி, அகாரத்தாலே - ஶேஷத்வப்ரதிஸம்பந்தியைச் சொல்லி, மகாரத்தாலே - ஶேஷத்வத்துக்கு ஆஶ்ரயஞ்சொல்லி, அவதாரணத்தாலே - ஶேஷத்வத்தினுடைய அநந்யார்ஹத்வம் சொல்லுகையாலே ஸ்வரூபம்

¶ இதின் விவரணத்தை "நவவிதஸம்பந்தம்" என்னும் ரஹஸ்யத்தில் பரக்கக்காணலாம்.

சொல்லிற்று ;= அகாரத்தாலே - ரக்ஷகனைச்சொல்லி, மகாரத்தாலே - ரக்ஷ்ய வஸ்துவைச் சொல்லி, சதுர்த்தியாலே - ரக்ஷ்ய ரக்ஷக பாவத்துக்கு வேண்டும் உறவு சொல்லி, அவதாரணத்தாலே- ரக்ஷ்ய ரக்ஷகங்களினுடைய லக்ஷ்யலக்ஷணஞ் சொல்லுகையாலே உபாயம்சொல்லிற்று ; = அகாரத்தாலே - ப்ராப்ய வஸ்துவைச் சொல்லி, மகாரத்தாலே - ப்ராப்தாவைச் சொல்லி, சதுர்த்தியாலே- ப்ராப்திபலமான கைங்கர்யத்தைச் சொல்லி, அவதாரணத்தாலே - கைங்கர்ய ப்ரகாரத்தைச் சொல்லுகையாலே ப்ராப்யம் சொல்லிற்று;=ப்ரணவத்தாலே - ஆத்மஸ்வரூபஞ்சொல்லிற்று; நாராயண பதத்தாலே - பரமாத்ம ஸ்வரூபஞ் சொல்லிற்று ; சதுர்த்தியாலே- புருஷார்த்த ஸ்வரூபஞ் சொல்லிற்று ; " ம: " என்கிறவித்தாலே - விரோதி ஸ்வரூபம் சொல்லிற்று ; " நம: " என்கிறவித்தாலே - உபாய ஸ்வரூபம் சொல்லிற்று ; ஆகையாலே ஸகலவேதாந்த ப்ரதிபாத்யமான அர்த்த பஞ்சகஞ் சொல்லிற்று.

## முப்பதாம் வார்த்தை.

ஆஶ்ரயியான ஶேஷத்வத்தைப்ரதமத்திலேசொல்லி, ஆஶ்ரயமான ஜ்ஞாநாநந்தலக்ஷண வஸ்துவைப் பின்பு சொல்லுகைக்கு ஹேது வென்னென்னில் ; அஹமர்த்தத்துக்கு ஜ்ஞாநாநந்தங்களிலுங் காட்டில் ப்ரதாந நிரூபகம் ஶேஷத்வமென்னுமிடந்தோற்றுகைக்காகவும், தாஸ்யாஸத்தில் இழிய வொட்டாத ஆத்மாநுபவமாத்ரத்திலே பர்யவஸிப்பதொரு அந்தராய முண்டாகையாலே தத்பரி ஹாரார்த்தமாகவும், நெருப்பிலேபுக்குச் சிலர் வேவாரைக்கண்டால், அவர்களை யின்னாரென்று பாராதே பற்றியெரிகிற நெருப்பை யவிக்கையிலே யத்நம் பண்ணுவாரோபாதி, அதாஹ்யமான ஆத்மவஸ்துவை அநாதிகாலம்பற்றி தஹித்துப்போருகிற ஸ்வ ஸ்வாதந்த்ர்யத்தை யகற்றுவிக்கையிலே தாத்பர்யமாகையாலும், புஷ்பத்துக்கு ஶ்லாக்யதை பரிமளத்தாலே யாகிறவோபாதி ஸ்வரூபத்துக்கு முபாதேயத்வம் இஸ்ஸ்வபாவ விஶேஷத்தாலே யாகையாலும், இவ்வோ ப்ராதாந்யத்தைப் பற்ற ப்ரதமத்திலே ஶேஷத்வத்தை உபாதாநம் பண்ணிற்று.

## முப்பத்தோராம் வார்த்தை.

இவ்வாத்மாவுக்கு எம்பெருமான் கட்டின மங்கல்யஸூத்ரம் திருமந்த்ரம் என்று பிள்ளைதிருநறையூரரையர் அருளிச்செய்வர்.

## முப்பத்திரண்டாம் வார்த்தை.

ஸம்ஸாரவர்த்தகமாயிருக்கும் தாலிக்கயிறு பதினாறிழையாய் இரண்டுசரடாயிருக்கும் ; கைங்கர்யவர்த்தகமான மங்கல்யஸூத்ரம் எட்டிழையாய் மூன்று சரடா யிருக்கும். = ஸ்வரூபத்தின்

உணர்த்தியைப்பற்றி யிருப்பது ஒரு சாடும், ஸ்வரக்ஷணத்தில் அஶக்தியைப் பற்றியிருப்பது ஒருசாடும், ஸ்வரூபத்தின் உணர்த்தியாலும் ஸ்வரக்ஷணத்தில் அஶக்தியாலும் பலித்த ஈஶ்வரனை நாம் பேணுகையை வெளியிட்டிருப்பது ஒருசாடுமா யிருக்கும்.

## முப்பத்துமூன்றும் வார்த்தை.

ஶேஷத்வஜ்ஞாந மில்லாதார்க்கு ப்ரணவத்தில் அந்வயமில்லை; தேஹாத்மாபிமாநிகளுக்கு மநஸ்ஸில் அந்வயமில்லை; கைங்கர்ய ருசியில்லாதார்க்கு நாராயணபதத்தில் அந்வயமில்லை.

ஶேஷத்வ ஜ்ஞாநமிருக்கும்படியை இளையபெருமாள் ஆசரித்துக்காட்டினார். எங்ஙனேயென்னில்;—பெருமாள் "நில்" என்றபிராட்டியை முன்னிட்டுக்கொண்டு பெருமாள் ஸ்வாதந்த்ர்யத்தையழித்து பெருமாளுக்கும் பிராட்டிக்கும் அடிமைசெய்கையாலும், எல்லை நிலத்திலே பிராட்டியைப் பிரிந்து பத்துமாஸம் ஆறியிருந்த பெருமாள், இளையபெருமாளைப்பிரிந்து பகல் அமுதுசெய்யாதே "நான் உன்னையன்றியிலேன்கண்டாய்" என்று பின்றுடர்ந்த இளையபெருமாளை, "நீயென்னையன்றியிலை" என்று பின்துடரும் படியா யிருக்கையாலும்;

ஸ்வரக்ஷணத்தில் அந்வயமில்லாத அத்யந்த பாரதந்த்ர்யத்தை ஸ்ரீபரதாழ்வான் ஆசரித்துக்காட்டினார். எங்ஙனே யென்னில்;— "என்மகன் மோவாயெழவேணும்" என்று கைகேயியாகிற காளராத்ரியினுடைய பாபப்பட்டோலையைச் சுட்டு "నమున్ధరా యోనచమాతురస్య దోషోనరాజ్ఞోనచరాఘవస్య । మత్పాపమేవాత్రనిమిత్తమాసీత్ వనప్రవేశేరఘునన్దనస్య" "நமந்தராயாநசமாதுரஸ்ய தோஷோநராஜ்ஞோநசராகவஸ்ய மத்பாபமேவாத்ர நிமித்தமாஸீத் வநப்ரவேஶேரகுநந்தநஸ்ய", "విలలాపసభామధ్యే జగర్హేచపురోహితమ్" "விலலாபஸபாமத்யே ஜகர்ஹேச புரோஹிதம்" "రాజ్యఞ్చాహఞ్చరామస్య ధర్మంవక్తుమిహార్హసి" "ராஜ்யஞ்சாஹஞ்சராமஸ்ய தர்மம்வக்துமிஹார்ஹஸி" புனைந்த ஜடையும், உடுத்தமரவுரியும், புழுதியார்ந்தவடிவும், தளர்ந்தநடையுமாய், ஸ்வரூபஹாநியை விளைப்பித்து பிணந்தின்னியிருந்த தேஶத்தைவிட்டு, "எனக்கு" என்ற கைகேயி வயிற்றில்பிறப்பு பின்னேதள்ள, பெருமாளருள் முன்னேநடத்த, ஒருநடையிலே ஒன்பதுநடை நடந்து, எழுந்தருளியிருந்த சித்ரகூடத்திலேசென்று, வருத்ததிருவடிகளைப்பெற்று விடைகொண்டு, பின்பு அவத்யம்விளைக்கும் படைவீட்டிற் புகாதே புறப்படைவீட்டிலே * రామాగమనకాఙ్క్షీ — ராமாகமநகாங்க்ஷியோடே பதினாலாட்டைநாள் இருந்தபடியாலும்;

ஈஶ்வரனைப் பேணுகையை ஸ்ரீமத்ருக்நாழ்வான் ஆசரித்துக் காட்டினார். எங்ஙனேயென்னில்;- பெருமாளல்லதறியாத ஸ்ரீபரதாழ்வானை யல்லதறியாதே பெருமாளுகப்பின் எல்லை நிலத்திலே அடிமைசெய்கையாலும்;

இம்மூன்று அர்த்தத்தையும் பிராட்டி ஆசரித்துக்காட்டினாள். எங்ஙனேயென்னில்;- கைகேயிவரவ்யாஜத்தாலே பெருமாள் வநத்துக்கு எழுந்தருளுகிறபோது பிரியாதே பின்தொடர்ந்த உணர்த்தியாலும், பெருமாளைப் பிரிந்து தனியிருந்த வன்று தனியிருப்பு மறத் தான் துரும்பு நறுக்காத ஸ்வரக்ஷணத்தில் அஶக்தியாலும், பரிகாரமாய் வந்த திருவடிவாலிலே கொளுத்தின நெருப்பை "𑌶𑍀𑌤𑍋𑌭𑌵" "ஶீதோபவ" என்று அவித்து ஈஶ்வரனைப் பேணுகையாலும்;

இவ்வர்த்தத்தை பரமாசார்யரான நம்மாழ்வாரும் ஆசரித்துக் காட்டினார். எங்ஙனேயென்னில்;—"கண்கள்சிவந்து," "கருமாணிக்கமலை," "நெடுமாற்கடிமை" என்று மூன்று திருவாய்மொழியிலே.

## முப்பத்துநான்காம் வார்த்தை.

ஈஶ்வர ஶேஷபூதனென்றும், அந்யஶேஷத்வ நிவர்த்தனென்றும், தத்விலக்ஷண லக்ஷணநிரூபகனென்றும், அஹங்கார நிவர்த்தனென்றும், தத்ஸம்பந்த யுக்தனென்றும், கிங்கரஸ்வபாவனென்றும் தன்னை அநுஸந்திப்பது.

## முப்பத்தஞ்சாம் வார்த்தை.

ப்ரமாணப்ரமேய ப்ரமாதாக்களைச் சேரவநுஸந்திக்கும்படி:— ஆத்மாவுக்குஸ்ரூபம் - அநந்யார்ஹ ஶேஷத்வம்; ஏதத்ப்ரகாஶகம் - ப்ரணவம்; அநந்யார்ஹ ஶேஷத்வப்ரதிஸம்பந்தி - பெருமாள் பொருந்தவிட்ட திருவடிகள்.= ஆத்மாவுக்குஸ்வரூபம் - அநந்யஶரணத்வம்; ஏதத்ப்ரகாஶகம் - நமஸ்ஸு; அநந்யஶரணத்வப்ரதிஸம்பந்தி - பெருமாள் அமைத்த திருக்கை.= ஆத்மாவுக்கு ஸ்வரூபம் - அநந்யபோகத்வம்; ஏதத்ப்ரகாஶகம் - நாராயணபதம்; அநந்யபோகப்ரதிஸம்பந்தி - பெருமாள் திருமுறுவல். = இதுக்குக் கருத்து - தானறிகை, சைதந்யமறுகை, ஸாதநாந்தரமறுகை. அதாவது - வேறுகை, வ்யாபாராந்தரமறுகை, விஷயாந்தரமறுகை.

## முப்பத்தாறும் வார்த்தை.

திருமந்த்ரம் ஸ்வரூபஞ் சொல்லுகிறதென்று திருக்குருகைப்பிரான்பிள்ளான் அநுசந்தித் தருளுவர்; திருமந்தரம் ப்ராப்யம் சொல்லுகிறது என்று பிள்ளைதிருநறையூரரையர் அநுஸந்தித் தருளுவர்; இவ்வாத்மாவினுடைய அநந்யார்ஹத்வம் சொல்லுகிறதென்று நஞ்சீயரநுஸந்தித்தருளுவர்; இவ்வாத்மாவினுடைய

பாரதந்த்ர்யம்சொல்லுகிறதென்று எம்பார் அநுஸந்தித்தருளுவர்; திருமந்த்ரம் மூன்றுபதத்தாலும் - ஜ்ஞாந வைராக்கிய பக்திகளை வெளியிடுகிறதென்று * முதலியார் அநுஸந்தித் தருளுவர் ; திருமந்த்ரம் மூன்று பதத்தாலும் — அபிஜந வித்யா வ்ருத்தங்களை வெளியிடுகிறதென்று ஆளவந்தார் அநுஸந்தித்தருளுவர் ; திருமந்த்ரம் அர்த்த பஞ்சகத்தையும் சொல்லுகிறதென்று நம்பிள்ளை அநுஸந்தித்தருளுவர்; பாணிக்ரஹணமும் உடன்மணநீரும் சதுர்த்திகலவியும் சொல்லுகிறதென்று பிள்ளை யுறங்காவில்லிதாஸர் அநுஸந்தித்தருளுவர் ; ஸ்வரூபத்தில் உணர்த்தியையும், ஸ்வாசக்ஷணத்தில் அஶக்தியையும், எம்பெருமானைப் பேணுகையையுஞ் சொல்லுகிறதென்று முதலியாண்டான் அநுஸந்தித்தருளுவர்.

## முப்பத்தேழாம் வார்த்தை

ப்ரக்ருதே: பரத்வம், ப்ரக்ருதே: பரனுடைய ஶேஷத்வம், ஶேஷத்வத்தினுடைய அநந்யார்ஹதை, ஶேஷபூதனுடைய அஹங்காரமமகாரநிவ்ருத்தி, நிவ்ருத்தமான ஸ்வரூபத்தினுடைய பாரதந்த்ர்யம், பாரதந்த்ர்யபராகாஷ்டையான ததீயஶேஷத்வம், பரதந்த்ரனுக்கு அநுரூபமான உபாயம், உபாயபலமானகைங்கர்யம், கைங்கர்யப்ரதிஸம்பந்தியையும் சொல்லுகிறது திருமந்த்ரம்.

## முப்பத்தெட்டாம் வார்த்தை.

நஞ்சியரானவேதாந்திகளுக்கு பெரியபட்டர் ஏகாந்தத்திலே பணித்த பரமரஹஸ்யம்;—திருமந்த்ரஜ்ஞாநம் பிறந்தாலும் இங்கே யிருக்கிறவனாகையாலே ஸ்வரூபத்தோடே சேராததுரித பரம்பரைகள் வந்து மேலிட்டால், திருமந்த்ரத்தில் பதங்களினர்த்தங்களை அநுஸந்தித்து பரிஹரித்து மீளுவான்.

எங்ஙனே யென்னில் ;—பஹு விரோதி பீஜமான ஸ்வாதந்த்ர்யம் மேலிட்டால், பகவத் பாதந்த்ர ரல்லோமோ, நமக்கு ஸ்வாதந்த்ர்யங் கடவதோ என்று, அகாரார்த்தத்தை அநுஸந்தித்து மீளுவான்;

அஸேவ்யஸேவைகள் வந்து மேலிட்டால், நாம் அந்யர்க்கு ஶேஷமோ, பகவதநந்யார்ஹஶேஷபூதரல்லோமோ வென்று உகாரார்த்தத்தை அநுஸந்தித்து மீளுவான்.

ஶரீரத்திலே கார்ஶ்யஸ்தூலாதிகள் மேலிட்டால், நாம் ஜ்ஞாநாநந்தஸ்வரூபரல்லோமோ, நித்யரல்லோமோ, ஏகரூபரல்லோமோ, நாம் ஸ்வயம்ப்ரகாஶமனறோ வென்று, மகாரார்த்தத்தை அநுஸந்தித்து மீளுவான்;

நமக்கு ஒருபுருஷார்த்தம் ஸம்பாதிக்கவேண்டாவோவென்று ஸாதநாநுஷ்டாநம் பண்ணத்தேடினால், ஸ்வாசக்ஷணத்தில் ப்ராப்தி

* முதலியார்-நாதமுனிகள்.

யில்லாத பகவத்பரதந்த்ரரால்லோமோ, ஸ்வதந்த்ரனன்றோ ரக்ஷணத்துக்குக் கடவன் என்று, நமஸ்ஸிலர்த்தத்தை அநுஸந்தித்து மீளுவான்;

தனக்கு உபகாரமாக எழுந்தருளி யிருக்கிற அர்ச்சாவதாரத்திலே சிலகுறைவந்து பிறந்து கண்ணுக்குவிஷயமானால், சேதனனுடைய இழவுக்கு ஈஸ்வரன் * ஆர்த்தம்பவதிதுக்கித - ப்ரஸம்பவதிதுக்கிதனுமாப்போலே. ஈஸ்வரனுடைய இழவுக்கு துக்கிதனாகாதபோது நாராயணபதத்தோடு உறவு போட்கனென்று அநுஸந்தித்து பரவ்யூஹ விபவாதிகளெங்கு முள்ள குறைகள்தீர்ந்தவிடமன்றோ, ஒன்றுலொருகுறை வற்ற விடமன்றோ, அநுபாவ்யமெல்லாம் நாரஸப்தாந்தர்க்கதமன்றோ வென்று, நாராயணபதத்தை யநுஸந்தித்து மீளுவான்;

ஸ்வரூபத்தோடு சேராத இதரபரிமாற்றங்கள் மேலிட்டால், ஸ்வரூபாநுரூபமான வ்ருத்தி கைங்கர்யமன்றோ என்று சதுர்த்தியிலர்த்தத்தை யநுஸந்தித்து மீளுவான்;

இப்படி பரிஹரித்துக்கொள்ளாதபோது பிறர்க்கு உபதேஸிக்கிறதுக்கும் இதில் தனக்குப் பிறந்த ஜ்ஞானத்துக்கும் என்ன ப்ரயோஜனமுண்டென்று அநுஸந்திப்பான்;

ஸ்வபௌருஷத்தாலே தன் கார்யம் தான் நிர்வஹிப்பதாக நினைத்தானாகில், அகாரார்த்தத்தை அநுஸந்தித்து மீளுவான்; அந்யரை ரக்ஷகராக நினைத்தானாகில், உகாரார்த்தத்தை அநுஸந்தித்து மீளுவான்; ஸாதநத்திலே தனக்கந்வயமுண்டென்றும் ஸ்ரீவைஷ்ணவ ஸமபுத்தி பண்ணினானாகில், நமஸ்ஸப்தார்த்தத்தை அநுஸந்தித்து மீளுவான்; ஈஸ்வர விபூதிபூதரோடே தனக்கு ராக த்வேஷம் நடையாடிற்றாகில், நாரஸப்தார்த்தத்தை அநுஸந்தித்து மீளுவான்;

ஔபாதிக பந்துக்கள்பக்கலிலே பந்துதாப்ரதிபத்தி பண்ணினானாகில், அயநஸப்தார்த்தத்தை அநுஸந்தித்து மீளுவான்; புத்ர பஸ்வந்நாதி தொடக்கமாக ஸ்வர்க்கைஸ்வர்யம் நடுவாக கைவல்யம் முடிவாக வுண்டானவற்றில் புருஷார்த்தபுத்தி பிறந்ததாகில், சதுர்த்தியில் அர்த்தத்தை யநுஸந்தித்து மீளுவான்.

## முப்பத்தொன்பதாம் வார்த்தை.

ஸ்த்ரீ ஸூத்ராதிகளுக்கு திருமந்த்ர பாடத்தில் அதிகாரமில்லை, அர்த்தத்திலே அதிகாரமுள்ளது என்று நம்பிள்ளை யருளிச்செய்ய; அதர்ப்தரைப் போலே, திருக்குருகூர்தாஸர் இருந்தவாறே, இவர்க்கு புருஷார்த்த ஸித்திக்குறுப்பான அர்த்தத்தில் அதிகாரமுண்டாகில் அப்ரயோஜகமான பாடத்தில் அதிகாரமில்லை; ஆகவித்தால் - இவனுக்கு வருவதென் என்றருளிச் செய்தார்.

## நாற்பதாம் வார்த்தை.

திருமந்த்ரத்தாலே - ரக்ஷகத்வ ப்ரதிஸம்பந்திபூர்வகமான ரக்ஷ்யத்வம் சொல்லி, அந்யஶேஷத்வ நிவர்த்தி பூர்வகமான அநந்யார்ஹ ஶேஷத்வம் சொல்லி, அசேதந வ்யாவர்த்தி பூர்வகமான சேதந வைலக்ஷண்யம் சொல்லி, அஹங்காரமமகாரநிவர்த்தி பூர்வகமான ஸ்வரூப பாரதந்த்ர்யத்தினுடைய எல்லைசொல்லி, ஔபாதிகநிவர்த்தி பூர்வகமான நிருபாதிக பந்துத்வஞ் சொல்லி, அபுருஷார்த்த நிவர்த்தி பூர்வகமான புருஷார்த்தஸ்வரூபஞ்சொல்லித் தலைகட்டுகிறது.

விஶேஷ ப்ரதாநம் - ஆஶ்ரயணம்; விஶேஷ்ய ப்ரதாநம் - உபாயம்; உபயப்ரதாநம்-உபேயம்.=ரக்ஷகனாய் ஶேஷியாயிருக்கு மிருப்பை யுணருகை : ஈஶ்வர ஸ்வரூபம்; ரக்ஷ்யமாய் ஶேஷமாயிருக்குமிருப்பை யுணருகை - ஆத்மஸ்வரூபம்; ரக்ஷகத்வஸ்வாமித்வங்கள் வ்யவஸ்திதமானாப்போலே ஸ்ரீயபதித்வமும் வ்யவஸ்திதம்; ஸ்வவ்யதிரிக்தஸமஸ்தபதார்த்தங்களும் பகவதபிமாநத்திலே கிடக்கிறது; புறம்புள்ளார் இப்படி சொல்லாநிற்கச்செய்தே தாங்கள் அபிமாநியாநிர்பர்கள்.

தாய்மடியிலே கிடந்து உறங்குகிற ப்ரஜை ஸ்வப்நத்திலே புலியின் கையிலே யகப்பட்டுக்கூப்பிடுமாப்போலே - தன்னை யுணர்ந்த தஶை; கண்ணை விழித்துத் தாய்முகத்தைப்பார்த்து நிர்ப்பரனாயிருக்குமாப்போலே - எம்பெருமானை யுணர்ந்த தஶை; உபாயதஶையில் எம்பெருமானாலே எம்பெருமானைப் பெறுமித்தனை யொழிய, தந்தாம் நன்மைகொண்டு பெறநினையார் - ஸ்வரூபஜ்ஞாநமுடையார்.

இந்த ஸ்வாதந்த்ர்யம் தலையெடுத்தால் அகாரத்துக்கு அர்ஹனல்லன்; ஒருவனுடைய வ்ருத்தத்தை யிட்டாதல் ஜந்மத்தையிட்டாதல் தண்ணியதாக நினைக்கில் மகாரத்துக்கு அர்ஹனல்லன்; பிறர் தனக்கு ரக்ஷகரென்றிருந்தானாகில் உகாரத்துக்கு அர்ஹனல்லன்; தனக்குத்தான் ரக்ஷகனென்று நினைத்தபோது நமஸ்ஸுக்கு அர்ஹனல்லன்; தன் கார்யத்துக்குத் தான் கடவனென்று நினைத்தபோது நாராயணபதத்துக்கு அர்ஹனல்லன்; செய்ததொருகைங்கர்யத்தைத் தானுகத்தல் பிறருகத்தல்செய்யில் சதுர்த்திக்கு அர்ஹனல்லன்; இவ்வர்த்தம் ஒரு அதிகாரியறிந்து தவிர்ந்தபோது திருமந்த்ரார்த்தம் கைப்புகுந்ததாகக்கடவது; அல்லாதபோது திருமந்த்ரத்தோட்டை ஸம்பந்தம் ஸந்தேஹமாமித்தனை யென்று பட்ட ரருளிச்செய்தார்,

## நாற்பத்தோராம் வார்த்தை.

ஸ்வஸ்வாதந்த்ர்யம் மேலிட்டதாகில், ப்ரணவத்தில் ப்ரதமபதார்த்தத்தை அநுஸந்திப்பான்; இதரர்பக்கல் ஶேஷித்வ ப்ரதிபத்தி

நடையாடிற்றாகில், உகாரார்த்தத்தை அநுஸந்திப்பான்; "தேவோ ஹம்" என்றிருந்தானாகில், மகாரார்த்தத்தை அநுஸந்திப்பான்; ஸ்வ ரக்ஷண விஷயத்தில் சுழைந்தானாகில், நமஶ்ஶப்தார்த்தத்தை அநுஸந்திப்பான்; ஈஶ்வர விபூதிகளோடே "காறு காறு" என்றானாகில் நாராஶப்தார்த்தத்தை அநுஸந்திப்பான்; ஶப்தாதி விஷயங்களிலே போக்யபுத்தி பிறந்ததாகில் ஆயஶப்தார்த்தத்தை அநுஸந்திப்பான்.

## நாற்பத்திரண்டாம் வார்த்தை.

ப்ரமாணம் - பதத்ரயாத்மகமா யிருக்கும்; ப்ரமேயம் - பர்வ த்ரயாத்மகமாயிருக்கும்; அதிகாரி - ஆகாரத்ரயாத்மகமா யிருக்கும். ப்ரமாணம் பதத்ரயாத்மகமாகையாவது - ப்ரதமபதம், மத்யமபதம், த்ருதீயபதம். ப்ரமேயம் பதத்ரயாத்மக மாகையாவது - பொருந்த விட்ட திருவடிகளும், அஞ்சலென்ற திருக்கையும், சிவந்த திருமுக மண்டலமும், அதிகாரி ஆகாரத்ரயாத்மகமாகையாவது - அநந்யார் ஹஶேஷ பூதனாய், அநந்யஶரணனாய் அநந்யபோக்யனாயிருக்கை.= ப்ரதமபதம் அநந்யார்ஹ ஶேஷத்வப்ரகாஶகம்; பொருந்தவிட்ட திருவடிகள் அநந்யார்ஹதைக்கு ப்ரதிஸம்பந்தியாயிருக்கும்; மத்யமபதம் அநந்யஶரணத்வ ப்ரகாஶகமாயிருக்கும்; அஞ்சலென்ற திருக்கை அநந்யஶரணத்வத்துக்கு ப்ரதிஸம்பந்திபா யிருக்கும்; த்ருதீயபதம் அநந்யபோக்யத்வப்ரகாஶகமாயிருக்கும்; சிவந்ததிருமுக மண்டலம் அநந்யபோக்யத்வ ப்ரதிஸம்பந்தியாயிருக்கும் என்று ஆச்சான்பிள்ளை யருளிச்செய்வர்.

## நாற்பத்துமூன்றாம் வார்த்தை.

வாத்ஸல்யாதிகுண விஶிஷ்டவஸ்து - ஆஶ்ரயணீயம்; ஜ்ஞாந ஶக்த்யாதிகுணவிஶிஷ்டவஸ்து - உபாயம்; ஸமஸ்த கல்யாணகுண விஶிஷ்டவஸ்து - போக்யம்; ஆஶ்ரயணீயப்ரதிஸம்பந்தி - ஒருமிதுநம்; ஶேஷத்வப்ரதிஸம்பந்தி - ஒருமிதுநம்; கைங்கர்ய ப்ரதிஸம்பந்தி - ஒருமிதுநம். ப்ரமாணம் - "நாளுநந் திருவுடையடிகள்தம் நலங்கழல்வணங்கி" என்றும், "திருமாலே நானுமுனக்குப் பழவடியேன்" என்றும், "அடிமைசெய்வார் திருமாலுக்கு" என்றும்.

## நாற்பத்துநான்காம் வார்த்தை.

ஸர்வரக்ஷகத்வமும், ஸர்வஸ்மாத்பரத்வமும், ஶ்ரிய:பதித்வமும், ஸர்வஶேஷித்வமும், ஸர்வஜ்ஞத்வமும், ஸர்வஶக்தித்வமும், ஸமஸ்த கல்யாணகுணாத்மகத்வமும், இவை - அகாரார்த்தங்கள்; அந்யஶேஷத்வ நிவ்ருத்தியும், அநந்யார்ஹ ஶேஷத்வமும் - உகாரார்த்தம்; ஜ்ஞாநாநந்தலக்ஷணத்வமும், ஜ்ஞாநகுணகத்வமும், ஏகரூபத்வமும் ஸ்வயம்ப்ரகாஶத்வமும்; இவை - மகாரார்த்தம்; ஸ்வஸ்வாதந்த்ர்ய நிவ்ருத்தியும், ஸ்வரூபாநுரூபமான உபாயமும், உபாயத்துக்கு

எல்லைநிலமான அத்யந்தபாரதந்த்ர்யமும், பாரதந்த்ர்ய பராகாஷ்டையான ததீயசேஷத்வமும், இவை-நமஶ்ஶப்தார்த்தம்; சேதநாசேதநங்களினுடைய நித்யத்வமும், ஸூக்ஷ்மத்வமும், அஸங்க்யாதத்வமும்; இவை-நாரஶப்தார்த்தம்; ஸர்வவிதபந்துத்வமும், உபயவிபூதிநாதத்வமும், ஆதாரத்வமும், காரணத்வமும், நியந்த்ருத்வமும், இவை-அயநஶப்தார்த்தம்; நித்யகைங்கர்யம் - சதுர்த்யர்த்தம்.

## நாற்பத்தஞ்சாம் வார்த்தை.

ஸ்வரூபம் ஸ்வரூபாந்தரத்தைப்பொறுது; ஸாதநம் ஸாதநாந்தரத்தைப்பொறுது; ப்ராப்யம் ப்ரயோஜநாந்தரத்தைப் பொறுது.

## நாற்பத்தாறாம் வார்த்தை.

பட்டரும் ஸ்ரீவைஷ்ணவர்களுமாகத் திருவீதியிலே எழுந்தருளியிருக்கச் செய்தே விளையாடிக்கொண்டு வருகிற பிள்ளைகளைப்பார்த்து "பிள்ளைகாள்! திருமந்த்ரத்திலே பிறந்தாப்போலே உங்களுக்கு இத்தனை செருக்கென்" என்றருளிச்செய்தார்.

## நாற்பத்தேழாம் வார்த்தை.

திருக்குருகைப்பிரான்பிள்ளானருளிச்செய்த வார்த்தை;—ப்ரணவத்தில்மத்யமாக்ஷரத்தை ஶிக்ஷித்துவைத்து ராஜத்வாரங்களிலே நுழையாநின்றார்கள்; மத்யமபதத்தை ஶிக்ஷித்துவைத்தும் இவை வேலிக்குப் பிணங்கிநின்றார்கள்; த்ருதீயபதத்தை ஶிக்ஷித்துவைத்தும் தாம் தாம்போக்தாக்களாகா நின்றார்கள்.

## நாற்பத்தெட்டாம் வார்த்தை.

ஆச்சான்பிள்ளையை ஒரு ஸ்ரீவைஷ்ணவர் "பாரதந்த்ர்யமிருக்கும்படி யென்?" என்று கேட்க;—ஸ்வஶக்தி நிவ்ருத்தி பூர்வகமாக ஸர்வஶக்தியை அண்டைகொண்டு உபாயத்தில் கந்தல் அற்று உபேயத்தில் த்வரை விஞ்சியிருக்கை-பாரதந்த்ர்யம் என்றருளிச்செய்தார்,

## நாற்பத்தொன்பதாம் வார்த்தை.

பொன்னைப் புடமிடப் புடமிட உருச்சிறுகி ஒளிவிஞ்சி மாற்று எழுமாப்போலே, ஸங்கோசமற்று ஜ்ஞாநவிகாஸமுண்டானவாறே நாச்சிமாருடனே ஸாம்யஞ் சொல்லலாயிறே யிருப்பது இவ்வாத்மாவுக்கு என்று திருக்கோட்டியூர்நம்பி யருளிசசெய்வர்.

## ஐம்பதாம் வார்த்தை.

அழுக்கடைந்த மாணிக்கத்தை நேர்சாணையிலே யேறிட்டுக் கடைந்தால் பளபளக்கை வடிவா யிருக்குமாப்போலே, அஜ்ஞனான சேதநனுக்கு, திரோதாந நிவர்த்தியிலே அடியேனென்கை வடிவாயிருக்கும் என்று முதலியாண்டான்.

## ஐம்பத்தோராம் வார்த்தை.

அஹங்காரமாகிற வாள்பைத்துடைத்தால் ஆத்மாவுக்கு அழியாதபேர் அடியான் என்றிறே என்று வடக்குத்திருவீதிப்பிள்ளை.

## ஐம்பத்திரண்டாம் வார்த்தை.

உத்பத்தியையும், உடைமையையும், உடைமைக்குண்டானவூற்றத்தையும், உடைமைக்கு உடைமையில்லாமையையும், உத்பத்தியானவுடையவனுடைய வுயர்நிலையையும், உடைமைக்கும் உடையவனுக்குமுண்டான வுறவையும் சொல்லுகிறது- திருமந்த்ரம்,—கர்மத்தையும், கர்மத்தில் களையறுப்பையும், கண்ணனையும் கண்ணன் கருத்தையும், கதியையும், பற்றும்படியையும், பரனையும், பற்றுமவனையும், பாபத்தையும், பாபத்தில் பற்றறுகையையுஞ் சொல்லுகிறது - சரமஶ்லோகம்.—பெரிய பிராட்டியாரையும், பெருமாளையும், இவர்களுக்குப் பிரிவில்லாமையையும், பெருமாளுடைய பொருளையும், அருள் சுரக்குந் திருவடியையும், திருவடிகள் சாரும்படியையும், அரணுந் திருவடிகளை அடையும்படியையும், அடைந்தா ரநுபவத்தையும், அருளுடையவனுச்சத்தையும், அநுபவத்தில் உகப்பையும், அநுபவத்தில் அழுக்கறுக்கையையும் சொல்லுகிறது - த்வயம்.

திருமந்த்ரத்தாலே-திருவபிஷேகத்தை யநுஸந்திப்பான்; சரமஶ்லோகத்தாலே: திருமார்பில் நாச்சிமாரோட்டைச் சேர்த்தியை யநுஸந்திப்பான்; த்வயத்தாலே - திருவடிகளை யநுஸந்திப்பான்.

## ஐம்பத்துமூன்றாம் வார்த்தை.

அர்த்த பஞ்சகமும் ரஹஸ்யத்ரயத்தில் சொல்லுகிறபடி யெங்ஙனே யென்னில்;—திருமந்த்ரத்தில் நாராயணபதத்தாலே - பரமாத்மஸ்வரூபஞ் சொல்லிற்று; ப்ரணவத்தாலே-ஆத்மஸ்வரூபஞ் சொல்லிற்று; சதுர்த்தியாலே - புருஷார்த்த ஸ்வரூபஞ் சொல்லிற்று; "நம:" என்று - உபாய ஸ்வரூபஞ் சொல்லிற்று; நமஶ்ஶப்தத்தில் ஷஷ்ட்யந்தமான மகாரத்தாலே - விரோதிஸ்வரூபம் சொல்லிற்று;

சரமஶ்லோகத்தில், "மாம். அஹம்" என்கிற பதங்களாலே-பரமாத்மஸ்வரூபம் சொல்லிற்று; "வ்ரஜ" என்கிற மத்யமனாலும், "த்வா, மாஶுச:" என்கிற பதங்களாலும் - ஸ்வஸ்வரூபம் சொல்லிற்று; "సర్వపాపేభ్యో మోక్షయిష్యామి" "ஸர்வபாபேப்யோமோக்ஷயிஷ்யாமி" என்கையாலே-அநிஷ்டநிவர்த்தி பூர்வகமான புருஷார்த்தம் சொல்லிற்று; "ஸர்வபாபேப்ய:"என்று-விரோதிஸ்வரூபம் சொல்லிற்று; * ஏகபதத்தாலே-உபாயஸ்வரூபம் சொல்லிற்று;

த்வயத்தில் ஸவிஶேஷணமான நாராயணபதத்தாலே - பரஸ்வரூபம் சொல்லிற்று; "ப்ரபத்யே" என்கிற உத்தமனாலே - ஆத்மஸ்வரூபம் சொல்லிற்று; சதுர்த்தி நமஸ்ஸுக்களாலே - புருஷார்த்த

ஸ்வரூபம் சொல்லிற்று; நமஸ்ஸப்தத்தில் மகாரத்தாலே - விரோதி ஸ்வரூபம் சொல்லிற்று; ஸரணஸப்தத்திலே - உபாயஸ்வரூபம் சொல்லிற்று.

ஸ்வரூபஞ் சொல்லுகிறது - திருமந்த்ரம்; ஸ்வரூபாநுரூபமான உபாயத்தை விதிக்கிறது - சரமஸ்லோகம்; இவை யிரண்டர்த்தத்தி லும் ருசியுடையவனுடைய அநுஸந்தாந ப்ரகாரம் - த்வயம்; ஸாஸ் த்ரருசி பரிக்ருஹீதம் - திருமந்த்ரம்; ஸரண்யருசி பரிக்ருஹீதம் - சரம ஸ்லோகம்; ஆசார்யருசி பரிக்ருஹீதம் - த்வயம்;

ஆத்மயாதாத்ம்ய ப்ரதிபாதந பரம் - திருமந்த்ரம்; உபாயயாதாத் ம்யப்ரதிபாதந பரம் - சரமஸ்லோகம்; உபேயயாதாத்ம்ய ப்ரதிபாதந பரம் - த்வயம்;

ப்ராப்யப்ரதாநம் - திருமந்த்ரம்; ப்ராபகப்ரதாநம் - சரமஸ்லோ கம்; புருஷகாரப்ரதாநம் - த்வயம்;

## ஐம்பத்துநாலாம் வார்த்தை.

ஆசார்யாங்கீகாரமுடையவனுக்கு ஆசார்யன் இரங்கித் திருமந் த்ரத்திலுபதேசித்த அர்த்தத்தை பதஸஃ அநுஸந்திக்கும்படி சொல் லுகிறது; - ஈஸ்வரஸேஷபூதன், அந்யஸேஷத்வ நிவர்த்தன், வில க்ஷணநிரூபகன், ததீயபாரதந்த்ரன், தத்ஸம்பந்தயுக்தன், கிங்கரஸ்வ பாவன் என்று தன்னையநுஸந்திப்பது. இத்தால் சொல்லிற்றாய்த்து;- ரக்ஷகத்வ ப்ரதிஸம்பந்தி பூர்வகமான ரக்ஷ்யத்வஞ்சொல்லி, அந்ய ஸேஷத்வ ப்ரதிஸம்பந்தி நிவர்த்தி பூர்வகமான அநந்யார்ஹத்வஞ் சொல்லி, அசேதந வ்யாவ்ர்த்தி பூர்வகமான சேதநவைலக்ஷண்யஞ் சொல்லி, ஸ்வாதந்த்ர்ய நிவர்த்தி பூர்வகமான பாரதந்த்ர்யத்தினு டைய எல்லைசொல்லி, ஸோபாதிக பந்துநிவர்த்தி பூர்வகமான நிரு பாதிக ஸம்பந்தஞ் சொல்லி, அபுருஷார்த்த நிவர்த்தி பூர்வகமான புருஷார்த்த ப்ரகாரம் சொல்லித் தலைக்கட்டுகிறது.

## ஐம்பத்தஞ்சாம் வார்த்தை.

நிருபாதிக தேவதா பரமாத்மா; நிருபாதிக ஹவிராத்மா; ஜீவா த்மாக்கள் ஜீவாத்மாவுக்குச் செய்வதுண்டோ;

நிருபாதிக மந்த்ரம் - ப்ரணவம்; நிருபாதிகயாகம்- ஆத்மயாகம்; "దేవతాముద్దిశ్యద్రవ్యత్యాగో యాగః" "தேவதாமுத்திஸ்ய த்ரவ்யத்யாகோ யாகஃ."

## ஐம்பத்தாறும் வார்த்தை.

திருநகரிப்பிள்ளை;—ப்ரதமபதத்தில் - ஈஸ்வரனுடையஸர்வரக்ஷ கத்வமும், ஸர்வஸேஷித்வமும், ஜகத்காரணத்வமும், ஸ்ரீய:பதித்வ மும் சொல்லுகிறது; எங்ஙனே யென்னில்; - "ஆள்கின்றானாழி யான்" என்றும், "நல்கித்தான் காத்தளிக்கும் பொழிலேழும்" என்

றும் "பொழிலேழுங் காவல்பூண்ட புகழானாய்" என்றும், "மூவுலகும் காவலோன்" என்றுஞ் சொல்லுகையாலே - ஸர்வரக்ஷகத்வஞ் சொல்லிற்று;

"நெடியோய்க் கல்லது மடியதோவுலகு" என்றும், "உலகம் மூன்றுடன் வணங்க" என்றும், "மூவுலகுந் தொழுதேத்தும் சீரடியான்" என்றும், "யாவரும் வந்தடிவணங்க அரங்கநகர் துயின்றவன்" என்றும், இத்யாதிகளாலே - ஸர்வஶேஷித்வஞ் சொல்லிற்று;

"நாவிக்கமல முதற்கிழங்கே" என்றும், "தானும் சிவனும் பிரமனுமாகிப் பணைத்த தனிமுதல்" என்றும், "தேவருலகோடுயிர் படைத்தான்" என்றும், "நன்மைப் புனல்பண்ணி நான்முகனைப் பண்ணி" என்றும், இத்யாதிகளாலே- ஜகத்காரணத்வஞ்சொல்லிற்று;

"திருநாரணன்" என்றும், "திருமகள் சேர்மார்பன்" என்றும், "திருமால்" என்றும், "இத்யாதிகளாலே - ஸ்ரீயஃபதித்வஞ் சொல்லிற்று;

தாதர்த்யத்தாலே "பொருளல்லாத வென்னைப்பொருளாக்கி யடிமை கொண்டாய்" என்றும், "இன்றென்னைப் பொருளாக்கி" என்றும், "நாட்டினு யென்னை யுனக்கு முன்தொண்டாக" என்றும், "அடியேன் பிறந்தேன்" என்றும், இத்யாதிகளாலே - ஶேஷத்வம் உதித்தபடி சொல்லிற்று;

த்விதீயபதத்தாலே - ஆத்மாவினுடைய ஶேஷத்வாந்தர நிவர்த்தி பூர்வகமான அநந்யார்ஹ ஶேஷத்வத்தையும், ஈஶ்வரனுடைய அநந்யார்ஹ ஶேஷித்வத்தையும் சொல்லிற்று; எங்ஙனேயென்னில்;— "மற்றாரும் பற்றிலேன் ஆகலால் நின்னடைந்தேன்" என்றும், "தாழ்ச்சி மற்றெங்குந் தவிர்ந்து நின் தாளிணைக்கீழ் வாழ்ச்சி" என்றும் "மற்றோர் தெய்வமெண்ணேன் உன்னை யென்மனத்து வைத்து" என்றும் இத்யாதிகளாலே - அந்யஶேஷத்வ நிவர்த்தி பூர்வகமான அநந்யார்ஹ ஶேஷத்வஞ்சொல்லிற்று;

"பேசநின்ற சிவனுக்கும் பிரமன்றனக்கும் பிறர்க்கும் நாயகனவன்" என்றும், "வானவர் தம்மையாளுமவன்" என்றும், "நான்முகனும் இந்திரனும் மற்றையமரரும் எல்லாம்" என்றும், "தாமோதரனுருவாகிய சிவற்கும் திசைமுகற்கும் ஆமோ தரமறிய" என்றும், இத்யாதிகளாலே - ஈஶ்வரனுடைய அநந்யார்ஹ ஶேஷித்வஞ் சொல்லிற்று.

த்ருதீய பதத்தாலே - ஆத்மாவினுடைய ஜ்ஞாநாநந்தத்வமும், ஜ்ஞாந குணகத்வமும், ப்ரக்ருதேஃ பரத்வமும், நித்யத்வமும் சொல்லுகிறது;

எங்ஙனே யென்னில்; - "என்மதிக்கு விண்ணெல்லாம் உண்டோவிலை" என்றும், "ஒண்டாமரையாள்கேள்வ னொருவனையே

நோக்கு முணர்வு" என்றும், "யாதானு மோராக்கையிற் புக்கு" என்றும், "நின்றவொன்றை யுணர்ந்தேனுக்கு" என்றும், இத்யாதிகளாலே ஆத்மாவினுடைய ப்ரக்ருதேர்ப்ரத்வஞ் சொல்லிற்று;

ஆக, ப்ரதம பதம் சொல்லிற்றாய்த்து.

மத்யமபதத்தாலே-ஆத்மாவினுடைய ஸாதநாந்தர நிவர்த்தியும், ஸ்ரீரவத்ஸேஷத்வமும், ததீயஸேஷத்வமும், பாரதந்த்ரனுக்கு அநுரூபமான ஈஸ்வரனுடைய உபாயமும் சொல்லுகிறது;

எங்ஙனேயென்னில்; — "வந்தெய்துமாறறியேன்" என்றும், "நோற்றநோன்பிலேன் நுண்ணறிவிலேன்" என்றும், "விரும்பி நின்றேத்தமாட்டேன் விதியிலேன் மதியொன்றில்லை" என்றும், "உன்னைக்காணும் மார்க்கமொன்றறியமாட்டா மனிசரில் துரிசனாய்மூர்க்கனேன்" என்றும், இத்யாதிகளாலே - ஸாதநாந்தர நிவர்த்தி சொல்லிற்று;

"உம்முயிர் வீடுடையான்" என்றும், "அடியேனுள்ளான்" என்றும், "ஆவியையரங்கமாலை" என்றும், "என்னுடைவாணாள்" என்றும், இத்யாதிகளாலே - ஸ்ரீரவத்ஸேஷத்வஞ் சொல்லிற்று;

"பயிலுந்திருவுடையார் யவரேலும்" என்றும், "எம்மையாளும் பரமர்" என்றும், "பணியுமவர் கண்டீர் எம்மையாளுடைநாதர்" என்றும், "தாள்தொழுவார்காணும் என்தலைமேலார்" என்றும், "கொண்டாடும் நெஞ்சுடையா ரவரெங்கள் குலதெய்வம்" என்றும், இத்யாதிகளாலே - ததீயஸேஷத்வஞ் சொல்லிற்று;

"கணக்கில்கீர்த்தி வெள்ளக்கதிர்ஞாந மூர்த்தியினாய்" என்றும், "செய்ய சூழ்சுடர்ஞாநமாய்" என்றும், "மழுங்காத ஞாநமே படையாக" என்றும், "துக்கமில் ஞாநச்சுடரொளிமூர்த்தி" என்றும், இத்யாதிகளாலே - ஸர்வஜ்ஞத்வஞ் சொல்லிற்று;

"ஆளும்பணியு மடியேனைக்கொண்டான்" என்றும், "ஆட்கொள்ளவல்லான்" என்றும், "மருவித்தொழும்மநமே தந்தாய் வல்லை காண்" என்றும், "அருளி அடிக்கீழிருத்தும்" என்றும், இத்யாதிகளாலே - ஸர்வஸக்தித்வஞ் சொல்லிற்று;

"எல்லாவுலகுமுடைய வொருமூர்த்தி" என்றும், "தேவிமாராவார் திருமகள் பூமியேவ மற்றமராட் செய்வார் மேவியவுலகம் மூன்றவை யாட்சி" என்றும், "பொங்கோதஞ்சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் அங்காதுஞ் சோராமே யாள்கிறவெம்பெருமான்" என்றும், "அடங்கெழில் சம்பத்தடங்கக்கண்டீச னடங்கெழிலஃது" என்றும், இத்யாதிகளாலே-அவாப்த ஸமஸ்த காமத்வஞ் சொல்லிற்று;

"எந்நாளெம்பெருமானுன்றனுக்கடியோம்" என்றும், "உற்றெண்ணிலதுவுமற்றங்கவன்றன்னது" என்றும், "நெஞ்சமும் தம்மதே

சிந்தித்தேற்று" என்றும், "உயிர்களெல்லா வுலகுமுடையவன்" என்றும், இத்யாதிகளாலே - நிருபாதிக ஶேஷித்வஞ் சொல்லிற்று; ஆக இவற்றாலே - ஈஶ்வரனுடைய உபாயஞ் சொல்லிற்று;

நாரஶப்தத்தாலே - சேதநாசேதநங்களுடைய நித்யஸமூஹங்களைச்சொல்லிற்று; "நிற்கின்றதெல்லாம்" என்கையாலே.

அயநஶப்தத்தாலே - ஈஶ்வரனுடைய ஸர்வஸ்வாமித்வமும், ஸர்வவிதபந்துத்வமும், ஸர்வாதாரத்வமும், ஸர்வவித நியந்த்ர்த்வமும் சொல்லிற்று;

எங்ஙனே யென்னில்; - "யவையும் யவருந் தன்னுள்ளே யாகியு மாக்கியும் காக்கும்" என்றும், "தன்னுளனைத்துலகும் நிற்க நெறிமையால் தானு மவற்றுள்நிற்கும் பிரான்" என்றும், "அடியேனுள்ளானுடலுள்ளான் அண்டத்தகத்தான் புறத்துள்ளான்" என்றும், "நானுன்னையன்றிலேன்கண்டாய் நாரணனே நீயென்னையன்றியிலை" என்றும் இத்யாதிகளாலே - ஸர்வஸ்வாமித்வம் சொல்லிற்று;

"சேலேய்கண்ணியரும் பெருஞ்செல்வமும் நன்மக்களும் மேலாத் தாய்தந்தையு மவர்" என்றும், "தாயாய்த்தந்தையாய் மக்களாய் மற்றுமாய் முற்றுமாய்" என்றும், "எம்பிரானெந்தை யென்னுடைச்சுற்றம் எனக்கரசு என்னுடைவாணாள்" என்றும், "தஞ்சமாகிய தந்தைதாயோடு தானுமாய் அவையல்லனாய்" என்றும், இத்யாதிகளாலே - ஸர்வவிதபந்துத்வம் சொல்லிற்று;

"ஆவிக்கோர் பற்றுக்கொம்பு நின்னலாலறிகின்றிலேன்" என்றும், "உன்னைவிட்டு - எங்ஙனே தரிக்கேன்" என்றும், "நாட்டினான் தெய்வமெங்கும்" என்றும், "நிறுத்தினான் தெய்வங்களாக அத்தெய்வநாயகன் தானே" என்றும், இத்யாதிகளாலே-ஸர்வாதாரத்வம் சொல்லிற்று;

"செய்யேல் தீவினையென்றருள்செய்யும் என்கைபார் சக்கரக் கண்ணபிரான்" என்றும், "நீ யோகிகளைப்படையென்று நிறைநான்முகனைப் படைத்தவன்" என்றும், "செருக்குவார்கள் தீகுணங்கள் தீர்த்த தேவதேவன்" என்றும், "அடிக்கீழமர்ந்து புகுந்தடியீர் வாழ்மினென்றென்றருள்கொடுக்கும்" என்றும், இத்யாதிகளாலே - ஸர்வநியந்த்ர்த்வம் சொல்லிற்று;

இனி சதுர்த்தியாலே - சேதநருடைய தேஶகாலாவஸ்தாப்ரகாரோசித வ்ர்த்யபேக்ஷை சொல்லுகிறது, எங்ஙனே யென்னில்;- "உள்ளவுலகளவும் யானுமுளனாவனென்கொலோ" என்றும், "ஒழிவில் காலமெல்லா முடனாய்மன்னி" என்றும், "பள்ளிகொள்ளுமிடத்தடிகொட்டிட" என்றும், "உருவார் சக்கரஞ் சங்கு சுமந்து இங்கும்மோடு ஒருபாடுழல்வான் ஓரடியானுமுளன்" என்றும்,

"சென்றால் குடையாம்" என்றும், "மற்றை நங்காமங்கள் மாற்று" என்றும், "அடிமை செய்யவேண்டு நாம்" என்றும், "கூவிப்பணி கொள்ளாய்" என்றும், "நல்கியாளென்னைக் கொண்டருளே" என்றும், இத்யாதிகளாலே - வ்ருத்யபேக்ஷை சொல்லித் தலைக்கட்டுகிறது.

"விடையேழன் றடர்த்த" என்கிற பாட்டைப்ரணவார்த்தமாக அநுஸந்திப்பது; "யானே" என்கிற பாட்டை - மத்யமபதார்த்தமாக அநுஸந்திப்பது; "எம்பிரானெந்தை" என்கிற பாட்டை - த்ருதீய பதார்த்தமாக அநுஸந்திப்பது; "ஒழிவில்காலமெல்லாம்" என்கிற பாட்டை-சதுர்த்யர்த்தமாக அநுஸந்திப்பது. "అకారార్థో విష్ణుర్జగదుదయ రక్షాప్రళయకృన్ మకారార్థో జీవస్తదుపకరణం వైష్ణవమిదమ్ ఉకారోఽనన్యార్హం నియమయతి సమ్బన్ధమనయోః త్రయీసారస్త్ర్యాత్మా ప్రణవ ఇమమర్థం సమదిశత్" "அகாரார்த்தோ விஷ்ணுர்ஜகதுதயரக்ஷாப்ரளயக்ருந் மகாரார்த்தோ ஜீவஸ்ததுபகரணம் வைஷ்ணவமிதம்। உகாரோநந்யார்ஹம் நியமயதி ஸம்பந்தமநயோஸ்த்ரயீஸாரஸ்த்ர்யாத்மா ப்ரணவ இமமர்த்தம்ஸமதிஶத்."

## ஐம்பத்தேழாம் வார்த்தை.

பிராட்டியை ஈஶ்வரனோடு ஸமானையென்பாரையும், சேதநரோடு ஸமானையென்பாரையும் வ்யாவர்த்திக்கிறது - "ஸ்ரீ" என்கிற ஶப்தத்தாலே; ஆஶ்ரயணீயம் ஒருமிதுநமன்றென்பாரை வ்யாவர்த்திக்கிறது - மதுப்பாலே; நிர்க்குணனென்பாரை வ்யாவர்த்திக்கிறது- நாராயணபதத்தாலே; நிர்விக்ரஹனென்பாரை வ்யாவர்த்திக்கிறது- "சரணௌ" என்கிற பதத்தாலே; உபாயாந்தர நிஷ்டரை வ்யாவர்த்திக்கிறது - "ஶரணம்" என்கிற பதத்தாலே; உபாயஸ்வீகாரத்தை உபாயமென்பாரை வ்யாவர்த்திக்கிறது - "ப்ரபத்யே" என்கிற பதத்தாலே; ப்ராப்யம் ஒருமிதுநம் என்பாரை வ்யாவர்த்திக்கிறது - "ஸ்ரீமதே" என்கிற பதத்தாலே; த்ரிமூர்த்திஸாம்யத்தையை வ்யாவர்த்திக்கிறது - நாராயணபதத்தாலே; கைங்கர்யம் புருஷார்த்தமன்றென்பாரை வ்யாவர்த்திக்கிறது - சதுர்த்தியாலே; கைங்கர்யம் ஸ்வப்ரயோஜநமென்பாரை வ்யாவர்த்திக்கிறது - நமஸ்ஸாலே.

## ஐம்பத்தெட்டாம் வார்த்தை.

படல் கொட்டையப்பிள்ளைவார்த்தை;—பூர்வகண்டம் - அநந்யகதித்வஞ் சொல்லுகிறது; உத்தரகண்டம் - அநந்யப்ரயோஜநத்வம் சொல்லுகிறது; பூர்வகண்டம் - பகவத்க்ருபைக்கு வர்த்தகம்; உத்தரகண்டம் - பகவத்ப்ரீதிக்கு வர்த்தகம்; அநிஷ்ட நிவ்ருத்தியும் இஷ்டப்ராப்தியுமிருவர்க்கும் ஒன்றுபோலே காணும்; பூர்வகண்டம்- அசித்வ்யாவ்ருத்தி; உத்தரகண்டம் - ஈஶ்வரவ்யாவ்ருத்தி; "நானடியேன்" என்று நம் பூர்வாசார்யர்கள் ரஹஸ்யத்ரயத்தையும் தங்களுக்குத் தஞ்சமென்று நினைத்துக்கொண்டு போராநிற்கச் செய்தேயும் ஆசார்யருசி பரிக்ருஹீதமாகையாலே, த்வயத்தை மிகவும் ஆதரித்துப் போரு

வர்கள்; இதினுடைய அருமையையும் பெருமையையும் சீர்மையை யும் பாராதே, வந்தபடி வரச்சொல்லார்கள் நம் பூர்வாசார்யர்கள் என்று, அதிகாரி துர்லபத்தாலே-இதினுடைய அருமைசொல்லிற்று; கர்மஜ்ஞான பக்தி நிவ்ருத்தி பூர்வகமாகையாலே - இதினுடைய பெருமை சொல்லிற்று; ரஹஸ்யத்ரயத்தில் வ்யாவ்ருத்தி யுண்டாகை யாலே - சீர்மை சொல்லிற்று.

## ஐம்பத்தொன்பதாம் வார்த்தை.

த்வயத்தில் அர்த்தம் உபாயாந்தரங்களைப் பொறுது; ஶப்தம் ஸாதநாந்தரங்களைப் பொறுது. ப்ரபத்தியை ஸக்ருத்தென்பர் ஆழ்வான்; ஸதா என்பர் முதலியாண்டான்; ஸக்ருத்தேவ என்பர்பட்டர்; பக்திபிற்காட்டில் ப்ரபத்திக்கு வாசி; - அதிக்ருதாதிகாரம் ஸர்வாதிகாரமாகையும், ஸாத்யம் ஸித்தமாகையும், கர்மாவஸாநம் ஶரீராவஸாநமாகையும், அந்திமஸ்ம்ருதியும் அவனதேயாகையும். ஆசார்யன் முன்னிலையாக எம்பெருமான் திருவடிகளிலே பண்ணினப்ரபத்தியாகையாலே. பூர்வகண்டத்திலர்த்தம் பலாந்தரங்களுக்கும் பலப்ரதமாகையாலே, "இவன் நம்மையுபாயமாகப்பற்றி ப்ரயோஜநாந்தரங்களைக் கொண்டுபோகிறுனுகாதே" என்று ஈஶ்வரஹ்ருதயம் கடல் கலங்கினாப்போலே கலங்கும்; உத்தரகண்டத்தாலே - உன்னையே உபாயமாகப்பற்றி ப்ரயோஜநாந்தரங்களைக்கொண்டு போவானொருவனல்லனென்று ஈஶ்வரன் "மாஶுச:" என்று - சேதநன் கண்ணநீரைத் துடைத்தாப்போலே, சேதநனும் ஈஶ்வரனை "மாஶுச:" என்கிறுன்

ப்ரக்ருதி - விசேஷணம்; விக்ருதி-அநுபவம்; ஏதத்விக்ருதி-வ்ருத்திவிஶேஷணம்; ப்க்ருதயந்தரமும், விக்ருத்யந்தரமும்-ஆத்மநாஶம்.

## அறுபதாம் வார்த்தை.

வருணன் விஷயத்தில் பெருமாள் பண்ணின ப்ரபத்தி பலியாதொழிந்தது - ஶரணாகதியின் சீர்மையை அறியும் ஶரணாகதனல்லாமையாலே. பெருமாள் வருணனை ஶரணம் புகுகிறபோது ப்ராங்முகத்வாதி நியமஸஹிதரானபடியாலே, ஶரணாகதராவார்க்கெல்லாம் நியமாபேக்ஷை யுண்டோ என்று வேல்வெட்டி நாராயணப்பிள்ளை நம்பிள்ளையைக் கேட்க; ஶரணாகதிக்கு நியமாபேக்ஷை யுண்டாய்ச் செய்தாரல்லர், இக்ஷ்வாகுக்கள் ஏதேனுமொன்று செய்யிலும் நியமத்தோடல்லது செய்யமாட்டாத வாஸநையாலே செய்தார் என்றருளிச் செய்தார்.

## அறுபத்தோராம் வார்த்தை.

ஸ்ரீபரதாழ்வான் பெருமாளை வந்து ஶரணம் புக்கது பலியாதொழிவானென்னென்ன; பலித்தது என்று நம்பிள்ளை யருளிச் செய்தார்.

எங்ஙனேயென்னில்; இவன்றான் பீதனாய்வந்து ஶரணம்புக்கது, பரதனுக்குராஜ்யமென்கிற ஸ்வரூபவிருத்தமானஸ்வஸ்வாதந்த்ர்யத்தைக் கழிக்கைக்கன்றோ, திருவடிநிலையாழ்வார்களைக் கொடுத்து தத்பாரதந்த்ரனாய்ப் போயிரு என்ற போதே, அந்தபயநிவர்த்தி பிறந்தது. அதுக்கு ப்ரமாணம்; - "ఆరురోహరథంహృష్టః శత్రుఘ్నస్సహితోబలీ" "ஆருரோஹரதம்ஹர்ஷ்டஃ ஶத்ருக்நஸ்ஸஹிதோபலீ" என்று இவன் மீளவேணுமென்று ப்ரார்த்தித்தது செய்யாதொழிந்தது;- "ఋషయో ప్యాగమన్ సర్వే వధాయాసురరక్షసామ్" "ரிஷயோப்யாகமந்ஸர்வே வதாயாஸுரரக்ஷஸாம்" என்று - ஶரணாகதரான ரிஷிகளுடைய ரக்ஷணார்த்தமாக, இவன் மீண்டெழுந்தருளவேணும் என்றத்தைமறுத்து எழுந்தருளினார். என்போலவென்னில்; விருந்தினராய் வந்தவர்களுடைய தர்ப்த்யர்த்தமாக க்ரஹவானானவன் பார்யைக்கும் தனக்கும் பக்வமான சோற்றையிட்டு இருவரும் பட்டினிகிடக்குமாப்போலே, அவனுக்கு ஸ்வவிஶ்லேஷத்திலுங் காட்டில் தமக்கு பரதவிஶ்லேஷம் துஸ்ஸஹமாயிருக்க ஸ்ரீதண்டகாரண்ய வாஸிகளான ரிஷிகளுடைய தர்ப்த்யர்த்தமாக மறுத்து எழுந்தருளினார்.

## அறுபத்திரண்டாம் வார்த்தை.

மழலைக்கூற்றத்து நாராயணப்பிள்ளை, த்ர்ஷ்டார்த்தமாகப்பண்ணின ப்ரபத்தி பலிக்கக்காண்கிறிலோம், இதுபோலேயோ அத்ர்ஷ்டார்த்தமும் என்று நம்பிள்ளையைக்கேட்க; முதல் பண்ணின ப்ரபத்தியை நிரூபியாமல்காண் இது சொல்லிற்று, த்வததநுபவ விரோதியானவற்றை யெல்லாம்போக்கித் த்வததநுபவத்தைத்தர வேணுமென்று ப்ரபத்திபண்ணி, தத்விருத்த ப்ரபத்தியைப் பண்ணினால் இவனுக்கு ஹிதத்தை எம்பெருமான் செய்தருளுகையாலே பலிக்குமோ; ஆனால் "వరదయతి హవస్తువాంఛామ్యహమ్" "வரதயதிஹவஸ்துவாஞ்சாம்யஹம்" இத்யாதியே ப்ரமாணமென்றருளிச்செய்தார்.

## அறுபத்துமூன்றாம் வார்த்தை.

நஞ்சீயர் சரமதஶையிலே, குட்டக்குடியிளையாழ்வார், த்வயத்தை அநுஸந்தித்தாலாகாதோ வென்ன; "உனக்கு அநுஸந்திக்க வேண்டாதே எனக்கு இப்போதுவேண்டுகிறதென்? நடையாடித்திரிவார்க்கு வேண்டாதே கிடப்பார்க்கு வேண்டியோவிருப்பது" என்றருளிச்செய்தார்.

## அறுபத்துநாலாம் வார்த்தை.

காகத்தினுடைய விஷயீகாரஸமயத்தில் - "తత స్తస్యాక్షికాకస్య హినస్తిస్మసతక్షిణమ్" "ததஸ்தஸ்யாக்ஷிகாகஸ்ய ஹிநஸ்திஸ்மஸதக்ஷிணம்." என்றபடியாலே - ஶரணாகதனானாலும் முன்புண்டான கர்மங்கள் அநுபாவ்யங்களோ வென்னில்; இதுபண்ணின குற்றத்துக்குத்தக்க

தண்டம்பண்ணிற்று, தன்திருவடிகளிலே பண்ணின மஹாபராத் தாலே ஸர்வலோகபரித்யக்தமான காகத்தை வெறுமன் பொறுத்து விட்டால் பொறுத்தமைக்கடையாளம் தெரியாதிறே, ஆகையாலே தாம் பொறுத்தமைக்கடையாளம் பண்ணிவிட்டாரித்தனை; அதுதா னும் திருமேனியில் ப்ரஹ்மாஸ்த்ரத்துக்கு இடங்கொடுத்த வோபா தியாக நினைத்துச் செய்தாரித்தனை. ஒருகண்ணால் இரண்டு கண்ணுங் கொள்ளக்கடவ கார்யங்கொள்ளும் ஜாதியாகையாலும், ஆத்மஸத்தை யைக் காட்டினாலும் பொறுதபடியால் அவ்வபராதத்தைப் பண்ணின காகத்துக்கு இது தண்டமாகப் போராமையாலும், பொறுத்தமைக் கடையாளம் வேண்டுகையாலும், இங்ஙனே யொருகண்ணழிவுகண் டாரித்தனைபோக்கி, தண்டமன்றென்று நம்பிள்ளைபருளிச்செய்வர்.

## அறுபத்தைந்தாம் வார்த்தை.

ப்ரபந்நனுக்குப்ரபத்திவசநம்பலகாலும் வர்த்திக்கவேணுமோ, ஒருக்கால் அமையாதோ என்று கேட்க, பிள்ளையருளிச் செய்கிறார்;- ப்ரபத்தவ்யனுக்கோ, ப்ரபத்தாவுக்கோ, நீர் ஆர்க்குக் கேட்கிறது? பின்பு, ப்ரபத்தவ்யனுக்கு இவனொருக்கால் உச்சரித்து அமையும், ப்ரபத்தாவானவன் ப்ராப்யத்ர்ஷ்ணையாலே அதினுடைய ஸித்தியள வுஞ் செல்ல ஆவர்த்திக்கை தவிரான். அது என்போலவென்றால்;- பிபாஸிதனானவன் ஒருக்கால் "தண்ணீர்" என்றதுவே கொண்டு வார்க்கிறவன் வார்க்கக்கடவனாயிருக்க, பிபாஸாதிஶயத்தாலே தண் ணீரளவுஞ்செல்ல "தண்ணீர் தண்ணீர்" என்று ஆவர்த்திக்குமாப் போலே, பலகால் ஆவர்த்திக்குமது விதிப்ரயுக்தமாய் வரக்கடவ தன்று, ப்ராப்யத்ர்ஷ்ணாதிஶயத்தாலே ராகப்ரயுக்தமாய் வரக்கடவ தது என்றருளிச்செய்தார்.

## அறுபத்தாறாம் வார்த்தை.

எண்ணாயிரத்துத் திருவாய்க்குலத்தாழ்வான், ப்ரபத்தி புத் திபூர்வகமாகப் பண்ணின அபசாரத்துக்கு ப்ராயஶ்சித்தமாமோ என்று நஞ்சீயரைக்கேட்க; ப்ரபத்திப்ரபாவத்தைப்பார்த்தால் புத்தி பூர்வத்துக்கும் ப்ராயஶ்சித்தமாம், ஜ்ஞாநம் பிறந்தபின்பு புத்தி பூர் வகம்கூடாது, ப்ராமாதிகத்துக்கு அநுதாபமுண்டு, பயப்படவேண் டா என்றருளிச் செய்தார்.

## அறுபத்தேழாம் வார்த்தை.

பற்றிற்றெல்லாம் பற்றி அவனையும் பற்றுகை பக்தி; விடுவதெல் லாம் விட்டுத் தன்னையும் விடுகை ப்ரபத்தி.

## அறுபத்தெட்டாம் வார்த்தை.

கண்ணியனூர் சிறியாச்சான், எம்பாரைத் தெண்டனிட்டுத் திருவுள்ளத்தில் தஞ்சமாக நினைத்திருக்குமத்தை எனக்கு அவஶ்யம்

அருளிச்செய்யவேணும் என்ன; தாஸரதி எம்பெருமானார் ஸ்ரீபாதத்வயமொழியத் தஞ்சமா யிருப்பதில்லை என்றருளிச்செய்தார்.

## அறுபத்தொன்பதாம் வார்த்தை.

பின்பழகியபெருமாள்ஜீயர், சில வைஷ்ணவர்களைக்காட்டி, த்வயத்தில்பூர்வகண்டத்துக்கும் உத்தரகண்டத்துக்கும் வார்த்தை அருளிச்செய்யவேணும் என்றுவிண்ணப்பஞ்செய்ய;பிள்ளையருளிச்செய்தபடி;—பெருமாளும் பெரிய பிராட்டியாரும் அபிமதங்களை முடிப்பாரென்றிருக்கை. அபிமதங்கள்தானவையென்னில்;பெருமாளும் பிராட்டியுமாயிருக்கிற விருப்பிலே எல்லாவடிமையுஞ் செய்யவேணுமென்றிருக்கையும், அடிமைக்கு விரோதி கழியவேணுமென்றிருக்கையும்—என்றருளிச்செய்தபடி நினைத்திருக்கிறார்கள். ஸ்ரீபாதத்திலவர்கள் நினைத்திருப்பதேதென்று ஜீயர்கேட்க; இம்மஹோபகாரத்தைப்பண்ணினவனென்று நினைத்திருப்பது, பின்னையும் ஜீயர், புருஷகாரமாயிருக்கிற, இவன் "அகலகில்லேன்" என்று ஆழங்காற்படாநிற்க புருஷகார பூதையாகிறபடி எங்ஙனேயென்னில்; * அல்லிமலர்கள் போசமயக்குக்களாயும் நிற்குமம்மான் நிற்கச்செய்தேயும் ஜகந்நிர்வாஹமும் சொல்லுகிறதில்லையோ; "பார்வண்ண மடமங்கை பத்தர்பித்தர்பனிமலர்மேல்பாவைக்கு" என்றும் ஜகந்நிர்வாஹமும் சொல்லுகிற தில்லையோவென்றருளிச்செய்தார்.

## எழுபதாம் வார்த்தை.

நம்பியை, கோவர்த்தநதாஸர், அர்ஜுநனைப்போலேயாகிலும் யோக்யதை வேண்டாவோ வென்ன க்ஷத்ரியத்வாதிகளும் வேணுமோவென்றார்;அதிகாரிக்கு* அபராதாநாமாலயத்வமும், ஆர்த்தியும், ஆகிஞ்சந்யமும், அநந்யகதித்வமும், ஸ்வஜ்ஞாநமும், ஸ்வரூப ப்ரகாஶமும் வேணும் பூர்வாபராதம் பொறுக்கைக்கு புருஷகாரம் வேணும்; காலநியதி பாராமைக்கு * மதுப்பு வேணும்; புருஷகாரந்தான் ஜீவிக்கைக்கு ஶீலாதிகுணங்கள்வேணும்; அதுதான் கார்யகரமாகைக்கு ஜ்ஞாநஶக்த்யாதிகுணங்கள் வேணும்; ஸம்ஸாரிகளுக்கு ருசிஜநகமுமாய், முமுக்ஷுக்களுக்கு ஶுபாஶ்ரயமுமாம், முக்தர்க்கு போக்யமுமாகைக்கு விலக்ஷணவிக்ரஹம் வேணும்; உபாய ஸௌகுமார்யத்துக்கு நைரபேக்ஷ்யம் வேணும்; அதுதான் பலத்தோடே வ்யாபகமாகைக்கு ஸ்வீகாரம்வேணும்; கீழ் புருஷகாரமானுப் போலே மேலும் ப்ராப்யபூதையாகவேணும்; கீழ் உபாயபூதனைப் போலே மேலும் ப்ராப்யபூதனாகவேணும்; ஶேஷத்வத்தளவே யன்றிக்கே ஶேஷவ்ருத்தியும் வேணும்; ஸ்வஸ்வாதந்த்ர்ய நிவ்ருத்தியன்றிக்கே ஸ்வபோக்யத்வநிவ்ருத்தியும் வேணும்.

## எழுபத்தோராம் வார்த்தை.

வங்கிப்புறத்து நம்பி, யதிவர சூடாமணிதாஸர்க்கு, ஒரு ஸர்வ ஶக்தியை ஒரு அஶக்தன் பெறும்போது, தானும் பிறரும் தஞ்ச மன்று, ஆசார்யனநுக்ரஹ பூர்வகமாக த்வயத்தில் அர்த்தத்தை யநு ஸந்தித்து பிழைத்தல், நித்யஸம்ஸாரியாய் முடித்தல் செய்யுமதுக்கு மேற்பட்டதில்லை என்றருளிச்செய்தார்.

## எழுபத்திரண்டாம் வார்த்தை.

எம்பெருமானார், பெரியநம்பி ஸ்ரீபாதத்திலே சென்று, "ப்ரபத்தியென்" என்று விண்ணப்பஞ்செய்ய; கனிப்பழம் காம்பற்றுப்போலே யிருக்குமென்ன; இன்னமும் ஸந்தேஹம் செல்லாநின்றதென்று விண்ணப்பஞ்செய்ய; ஆகில் இவ்வர்த்தத்தை திருக்கோட்டியூர் நம்பி ஸ்ரீபாதத்திலே கேளும் என்ன; இவரும் அங்கேசென்று விண்ணப்பஞ்செய்ய; அவரும் "ஸக்ர்தேவ" என்றருளிச்செய்ய; இன்னமும் ஸந்தேஹம் செல்லாநின்றது என்று விண்ணப்பஞ்செய்ய ஆகில் இவ்வர்த்தத்தைத் திருமாலையாண்டான் ஸ்ரீபாதத்திலே கேளும் என்ன; இவருமங்கேசென்று விண்ணப்பஞ்செய்ய; அவரும் இத்தனை பிசகுகைக்குண்டோ ஒருரேகைமாத்ரமென்ன; இன்னமும் ஸந்தேஹம் செல்லாநின்றதென்று விண்ணப்பஞ்செய்ய; ஆகில் இவ்வர்த்தத்தை ஆழ்வார் திருவரங்கப்பெருமாளரையர் ஸ்ரீபாதத்திலே கேளும் என்ன; இவரும் அங்கேசென்று விண்ணப்பஞ்செய்ய; அவரும் ததீயபர்யந்தமாகக்காணீர் என்றருளிச்செய்தார்.

## எழுபத்துமூன்றாம் வார்த்தை.

ஸ்வீகாரத்தில் உபாயபுத்தியும் பேற்றில் ஸம்ஶயமுங் காண் ஒருவனுக்கு மோக்ஷவிரோதி. ஸாபராதிகளான ஸம்ஸாரிகளுக்கு, ஸர்வஸ்வாமியான எம்பெருமானைப் பற்றுமிடத்து, தன் அபராத பரம்பரைகளைப் பார்த்துப் பிற்காலியாதே பின்பற்றுகைக்கு புருஷகாரபூதையான பிராட்டியைச் சொல்லுகிறது - "ஸ்ரீ" என்கிற பதத்தாலே; இப்படி புருஷகாரபூதையான பிராட்டி அவனோடே சேர விருப்பது ஒருதேஶகாலங்களிலேயோ வென்னில்; ப்ரபாப்ரபாவான்களைப்போலே பிரியாத நித்யயோகங்களைச் சொல்லுகிறது - மதுப்பு; இப்புருஷகாரமும் மிகைஎன்னும்படியாய் இவள்தானே குறை சொல்லிலும், "செய்தாரேல் நன்றுசெய்தார்" என்று பரிந்து நோக்கும் வாத்ஸல்யாதிகுணஞ் சொல்லுகிறது - நாராயணபதத்தாலே; ஆஶ்ரிதரைக் கைவிடாத ஸௌலப்யஞ் சொல்லுகிறது - "சரணௌ" என்கிற பதத்தாலே, அநிஷ்ட நிவர்த்திக்கும் இஷ்டப்ராப்திக்கும் தப்பாத வுபாயமென்கிறது-"ஶரணம்" என்கிற பதத்தாலே, அவன் திருவடிகளிலே இத்தனை நன்மையுண்டாயிருக்க, இந்நாள் இவரையிழந்தது தன் பற்றாமையிறே, அக்குறைகள்தீரப் பற்றும்பற்றுகையைச்

சொல்லுகிறது."ப்ரபத்யே" என்கிறபதத்தாலே; இப்படி பூர்வகண்டஞ் சொல்லி நின்றது.

மேல் உத்தரகண்டம் சொல்லுகிறது;—உதில் மதுப்பாலே இவனோடே கூடியிருக்கிற இவளும் உத்தேஸ்யை யாகையாலே நாம் ஏதேனுமொரு கிஞ்சித்காரஞ்செய்யிலும். அவனோடே கூடியிருந்து ஒன்றுபத்தாக்கி அவன் திருவுள்ளத்தை யுகப்பிக்குமாகைபாலே அவனோடே கூடியிருந்துள்ளவளென்கிறது - "ஸ்ரீமதே" என்கிற பதத்தாலே; நம்மோடு நித்யமுக்தரோடு வாசியற எல்லாரையும் ஸமமாகரக்ஷிக்கும் ஸ்வாமித்வம் சொல்லுகிறது - நாராயணபதத்தாலே; இப்படி ஸ்வாமியான வெம்பெருமான் திருவடிகளிலே ஸர்வ தேஶ ஸர்வகால ஸர்வாவஸ்தோசிதமான ஸர்வவித கைங்கர்யங்களையும் பண்ணவேணுமென்று ப்ரார்திக்கும்படியைச் சொல்லுகிறது - சதுர்த்தியாலே; இப்படியிருந்துள்ள வடிமைசெய்யுமிடத்து அவனுகந்த உகப்பொழிய தானுகந்தவுகப்பைத் தவிரச் சொல்லுகிறது - "நம:" என்கிறபதத்தாலே.

## எழுபத்துநாலாம் வார்த்தை.

நாய்ச்சிமாரை ஈஶ்வரனிற் காட்டில் குறையச்சொல்லுமிடமும், ஒக்கச்சொல்லுமிடமும், ஏழச்சொல்லுமிடமுமாயிருக்கும். இது க்குப்ரமாணங்கள் ;— இவன் ப்ரபத்திபண்ணும்படியைச் சொல்லுமிடத்தில் - இவள் ஸ்வரூபஞ் சொல்லுகிறதென்றும். ஒக்கச்சொல்லுகிறவிடத்தில் - ஐக்யஞ்சொல்லுகிறதென்றும், ஏழச்சொல்லுமிடத்தில் - ஸௌலப்யஞ் சொல்லுகிறதென்றும். ப்ரபத்திபண்ணக்கடவன்.

## எழுபத்தைந்தாம் வார்த்தை.

பிள்ளை, நஞ்சீயர் ஸ்ரீபாதத்திலே ஸ்ரீபாஷ்யம் வாசியாநிற்கச் செய்கை, திருப்போனகம் சமைந்தது என்றவாறே, சொக்கத்தேவரைத் திருவாராதநம் பண்ணிவாரும் என்றருளிச்செய்ய ; அடியேன் திருவாராதநத்தை அறிந்தேனோஎன்று விண்ணப்பஞ்செய்ய; நானே சாலக்ராமமறிந்திருக்கிறேன், த்வயத்தைக்கொண்டு திருவடி விளக்கி அமுதுசெய்யப் பண்ணமாட்டீரோ என்றருளிச்செய்தார்.

## எழுபத்தாறும் வார்த்தை.

உகந்தருளின விடங்கள் பலவிடமாய் திருப்போனகம் படைப்பது ஒன்றேயானால் அமுதுசெய்ய பண்ணும்படி யென்னென்று பிள்ளை பிள்ளைக்கு விண்ணப்பஞ்செய்ய ; த்வயத்தில் பூர்வோத்தரகண்டங்க ளிரண்டுக்கும் நடுவே "ஸர்வமங்கள விக்ரஹாய" என்கிற விஶேஷணஸஹிதமாக உச்சரித்து அமுதுசெய்தருளப்பண்ணுவது என்றருளிச்செய்தார்.

ஏழுபத்தேழாம் வார்த்தை

இவ்வாத்மாவுக்குப் பெரியபிராட்டியார் ப்ரியத்தைபண்ணியருளும், எம்பெருமான் ஹிதத்தைப்பண்ணியருளும், ப்ரியஹிதங்களிரண்டும் சேரஜீவிக்கிறபடியெங்ஙனேயென்னில்; ஆச்ரிதவிஷயத்திலும் அநாச்ரிதவிஷயத்திலும்:—ஆச்ரிதர்பக்கல் இவள்பண்ணியருளும் ப்ரியத்துக்கு ஆச்ரிதர்பெரும்பிழைகள்பாராதே பெரியபிராட்டியார் திருவுள்ளத்தைப் பின்செல்லும்; இவ்விடம்-இவளுடைய ப்ரியகார்யமானவாத்ஸல்யம்ஜீவித்தபடி. அநாச்ரிதர்பக்கல் ஹிதம்செய்யும்போது இவற்றினுடையப்ராக்ர்தியின் பொல்லாங்காலே இவை நம்மையிழவாநின்றனவென்று, ப்ரஜைகளுடைய க்ரந்தியையறுப்பாரைப்போலே இவளிசைவோடேகூடி, ஹிதத்தைச்செய்தருளும்; இவ்விடம்-இவனுடைய ஹிதகார்யமான ஸ்வாதந்த்ர்யம்ஜீவித்தபடி. ஆகையால் ஆச்ரிதர்பக்கல்ப்ரியமும் அநாச்ரிதர்பக்கல் ஹிதமும் இருவர்திருவுள்ளத்துக்கும் சேருகிறது

எழுபத்தெட்டாம் வார்த்தை.

ப்ராயஸ் சித்தவ்யாவர்த்தி, உபாயாந்தரவ்யாவர்த்தி, உபேயவ்யாவர்த்தி, அதிகாரிவ்யாவர்த்தி, ப்ராப்யாந்தரவ்யாவர்த்தி, தேவதாந்தரவ்யாவர்த்தி, போகாந்தரவ்யாவர்த்தி, ஸ்வபோகவ்யாவர்த்தி.

எழிபத்தொன்பதாம் வார்த்தை.

பட்டர் ஒருவர்க்கு ஹிதமருளிச்செய்கிறபோது, நஞ்சீயர், "பிராட்டிமுன்னிலையாகப்பற்றுகிறவிதுக்கு ப்ரயோஜநமென்" என்றுகேட்க; இவள்ஸந்நிதியாலே மிகவும்ஸாபராதியானகாகம் தலைகொண்டுதப்பிற்று; அத்தனைக்கு அபராதமின்றியிலேயிருக்க இவள்சந்நிதியில்லாமையாலே ராவணன் தலையறுப்புண்டான்: இளையபெருமாள் பிராட்டிமுன்னிலையாகப் பெருமாள் திருவடிகளைப்பற்றி, தம்மை "நில்" என்ற ஸங்கல்பத்தையுமழித்துப் பெருமாளையும்பெற்றுவிட்டார்; மற்றும் ஸ்ரீவிபீஷணாழ்வான், ஸ்ரீகுஹப்பெருமாள்தொடக்கமானார் பிராட்டிமுன்னிலையாகப் பெற்றாராய்த்து.

எண்பதாம் வார்த்தை.

"𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍍" "ஸ்ரீமத்" என்கிறபதத்தாலே-திருமார்பில்நாய்ச்சியாரோடே அநுஸந்திக்கிறார் "𑌶𑍍𑌰𑍀𑌮𑌨𑍍𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌚𑌰𑌣𑍌𑌶𑌰𑌣𑌂𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇" "ஸ்ரீமந்நாராயணசரணௌஶரணம்ப்ரபத்யே" என்கிறபதங்களாலே-திருவடிகளையநுஸந்திக்கிறார்; "𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇𑌨𑌾𑌰𑌾𑌯𑌣" "ஸ்ரீமதேநாராயண" என்கிற பதத்தாலே - அருகிருந்தநாய்ச்சிமாரோடே இட்டதனிமாலையையும், கவித்த திருவபிஷேகத்தையும் சிவந்ததிருமுகமண்டலத்தையும் அநுசந்திக்கிறார்; "𑌆𑌯, 𑌨𑌮𑌃" "ஆய, நம:" என்கிற பதங்களாலே - கைங்கர்யத்தை அநுஸந்திக்கிறார்.

எண்பத்தோராம் வார்த்தை.

வஸ்துமாங் வஸ்துவைமுன்னிட்டுக் கொண்டிருக்கும்; வஸ்து விநியோகத்தைமுன்னிட்டுக்கொண்டிருக்கும்; விநியோகம் போகத்தை முன்னிட்டுக்கொண்டிருக்கும்; போகம் அபிமதத்தைமுன்னிட்டுக்கொண்டிருக்கும்; அபிமதம் அநுகுணத்தை முன்னிட்டுக்கொண்டிருக்கும்; அநுகுணம் பரனுக்குப்பாங்காயிருக்கும்.

எண்பத்திரண்டாம் வார்க்தை.

பட்டர், ஜீயருக்குத்வயத்தினர்த்தத்தை அருளிச்செய்தருளி, இதில் உத்தரார்த்தமநுஸந்திக்கலாவது பரமபதத்தைச் சென்றாலாயிருக்கும்; இங்கே இவ்வர்த்தமநுஸந்தித்தவன்ஜீவன்முக்தனென்றளிச்செய்தார்.

எண்பத்துமூன்றாம் வார்த்தை.

வ்யாக்ரஸிம்ஹங்களோபாதி உபாயவேஷம், யூதபதியானமத்தகஜம் போலே உபேயவேஷம் என்று திருக்கோட்டியூர்நம்பி அருளிச்செய்வர்; வ்யாமோஹம் உபாயம்; முகமலர்த்தி உபேயமென்று எம்பாரருளிச்செய்வர்.

எண்பத்துநாலாம் வார்த்தை.

திருக்கோட்டியூர்நம்பி பெரியமுதலியாரைப்பார்த்து, உபாயாம்சத்தில் தஞ்சமாக நினைத்திருப்பதென்னென்று விண்ணப்பம்செய்ய; இது நெடுங்காலம் ஸ்வரூபநிரூபணம்பண்ணப்பெற்றுவைத்து உபாயநிரூபணமேபண்ணத்தேடுவதே! என்று விஷண்ணராயருள; ஆகில் உபாயம்வேண்டாவோவென்று விண்ணப்பம்செய்ய; அபிரூபையான ஸ்த்ரீ அழுகை மட்டிக்கமட்டிக்க, அபிரூபனாய் ஐச்வர்யவானுமான புருஷன் அந்தரங்கமாக ஆழங்கால்படுமாப்போலே, அஜ்ஞனானசேதநன் அழுக்கறுக்க அழுக்கறுக்க அவ்வீச்வரன்திருவுள்ளம் அத்யாஸந்நமாய்ப்போருங்காணுமென்றருளிச்செய்தார்,

எண்பத்தஞ்சாம் வார்த்தை.

தேவகிப்பிராட்டியாரருளிச்செய்தவார்த்தை; - ஸ்வரூபஜ்ஞன் ஸ்வயம்ஸ்வரூபநிரூபணம்பண்ணினால் ததநுரூபமான ப்ரதாநாநுபவவிசேஷத்தை அநுபவாந்தரத்துக்கு உறுப்பாக்குகையும் அநுபயுக்தம், உக்தார்த்தச்ரவணம்பண்ணினவனுக்கு உபாயாந்தரத்யாகம் உடம்போடே கூடாது.

எண்பத்தாறாம் வார்த்தை.

பொன்னாய்ச்சியார் கூரத்தாண்டாளுக்கு ப்ரஸாதித்தவார்த்தை;— ஸ்வரூபஜ்ஞன் ஸ்வயம்ஸ்வரூபநிரூபணம்பண்ணவே ஸ்வரூபாநுரூபமான உபாயோபேயாதிகள் உடபந்நமாய்ப்போருங்காணும் என்றருளிச்செய்தார்.

## எண்பத்தேழாம் வார்த்தை.

ப்ரபந்நனுகையாவது - அநிஷ்டநிவர்த்தியும் இஷ்டப்ராப்தியும் நமக்கு எம்பெருமான் பண்ணித்தந்தருளும் என்று த்வயாநுஸந்தாநமுகத்தாலே ஒருக்கால்விச்வஸித்திருக்கை ; ப்ரபத்திநிஷ்டையாவது - ப்ரபத்திப்ரகாரமும் ப்ரபத்திப்ரபாவமும் நெஞ்சிலேபடுகை ; ப்ரபத்திப்ரகாரம் நெஞ்சிலே படுகையாவது - ப்ரபத்தாவினுடைய கர்த்யமான ப்ரபதநத்தைப்ராபகமென்று நினையாதொழிகையும், ப்ரவ்ருத்திநிவ்ருத்திகள்ஸ்வாதீநமென்றிராதொழிகையும் ; ப்ரபத்திப்ரபாவம் நெஞ்சிலே படுகையாவது - ப்ரபத்திபண்ணினவனுடைய ப்ரக்ருதியில் ப்ராக்ருதநிரூபணம்பண்ணுதொழிகை. ப்ரக்ருத்யாத்மவிவேகமுடையவனுனல்ப்ரபந்நனை ப்ரபாவத்தையிட்டுக்காணுதேப்ரக்ருதியையிட்டுக்கண்டானுகில் பழையப்ராக்ருதனுயே விடுமென்றுநம்பிள்ளையருளிச்செய்வர்.

## எண்பத்தெட்டாம் வார்த்தை.

பட்டர் ஸ்ரீபாதத்தில் ஸம்பந்தமுடையாரொரு ஸோமயாஜியரான ஸ்ரீவைஷ்ணவர், எனக்குத்திருவாராதநக்ரமத்தை யருளிச்செய்யவேணுமென்ன, பட்டரும் இவர்க்கு உடைவருடைய நித்யப்ரகாரத்தை அருளிச்செய்ய ; அவரும் அதுகொண்டுநெடுநாள் திருவாராதநம் பண்ணிப்போரச்செய்தே, ஒன்றிரண்டுநாள் பட்டர்திருவாராதநத்திலே ஸேவித்திருந்தார். அங்கு, தமக்கருளிச்செய்தவையொன்றுங் கண்டிலர் ; அவர்திருவாராதநம் பண்ணியருளினபடி ;—தாம் திருமஞ்சநம் பண்ணிச்சேலைசாத்தித்திருநாமம்சாத்தி அமுதுசெய்யத்தளிகைவைத்தவளவிலே, தெற்காழ்வாரை யெழுந்தருளிவித்துக்கொண்டு வாருங்கோளென்று தமக்குப்படைத்ததிருப்போனகத்தையும் தண்ணீரமுதையும் அமுதுசெய்யப்பண்ணிப்ரஸாதப்பட்டருளினுர் ;இத்தைக்கண்டு அந்த ஸ்ரீவைஷ்ணவர், எனக்கருளிச்செய்தபடியொன்று, தேவரீர் இப்படிசெய்தருளிற்று, இதுக்கடியென்னென்று ஆர்த்தியோடே கேட்க ; ஸகலவேதசாஸ்த்ரங்களையும அராய்ந்தவிடத்து உமக்கு அப்படியல்லது சொல்லலாவதில்லையாயிருந்தது, என்னைநிரூபித்தவிடத்து இப்படியொழியச்செய்கைக்கு ஒருசெயல் கண்டிலேனென்றருளிச்செய்தார்.

## எண்பத்தொன்பதாம் வார்த்தை.

மருதூர்நம்பி தம்முடைய அந்திமதசையிலே பணித்தவார்த்தை;- மூன்று ஜந்மம் திருவடிகளிலே அபராதம்பண்ணின சிசுபாலன் திருவடிகளைப்பெற்றுன் ; அநாதிகாலம்திருவடிகளிலே அபராதம்பண்ணினநான்பெறுதிருக்கைவழக்கோவென்று அழ, அப்போதே பரமபதத்தேறவெழுந்தருளினுர்.

## தொண்ணூராம் வார்த்தை.

நம்பிள்ளை அப்பிள்ளைபிள்ளைக்கருளிச்செய்தபடி ; - ஸ்ரீவைஷ்ணவன் சரீரஸம்பந்தமான ஐச்வர்யாதிகளை எம்பெருமான்பக்கலிலே அபேக்ஷிக்கும்போது மூன்று தோஷம்ப்ரஸங்கிக்கும்; அவையாவன-ஸித்தியாத அம்சத்தில் ஸங்கித்தனைகையும், தன்ஸ்வரூபத்துக்குச்சேராத வற்றைச் சேர்க்கத்தேடுகையும், பரஸ்வரூபஸமாதாநத்துக்கு ஸமாதி பங்கம்பண்ணுகையும். இதில் ஸித்தியாதவம்சத்தில் ஸங்கித்தனைகையாவது-கிடையாத அம்சத்துக்காசைப்படுகை. ஸர்வபலப்ரதனான வெம்பெருமான்பக்கலிலும் கிடையாதிருப்பதுண்டோவென்னில் ; உண்டு ; - அதிகாரானுகுணமாக ப்ரபதநம்பண்ணுதவை சிலவுண்டாக ; “యస్యానుగ్రహమిచ్ఛామి తస్య విత్తం హరామ్యహమ్” “யஸ்யானுக்ரஹமிச்சாமி தஸயவித்தம் ஹராம்யஹம்” இத்யாதிப்ரமாணங்கள் சொல்லுகையாலே. இவ்விடத்தில் இவ்வதிகாரி ஆரென்னில் ? ஸதாசார்யவரணம் பண்ணின ஸதாசாரவாந். இவனுக்கு இதுலபியாமைக்கடி இவன் ஆசார்யவரணம் பண்ணுகிறபோது பண்ணின ப்ரபதநத்துக்கு விருத்தமாகையாலே.=தன்ஸ்வரூபத்துக்குச்சேராத அம்சத்தைச் சேர்க்கத்தேடுகையாவது-ராஜபுத்ரன், புளிந்தபுத்ரன் குடிக்கும்கூழுக்கு ஆசைபடுமாப்போலே, அப்ராக்ர்தானுபவாந்வயிபாகைக்கீடான ஆகாரங்கள்லபித்தசேதநன் ப்ராக்ர்தானுபவாந்வயிபாகை.=பரஸ்வரூபஸமாதாநத்துக்கு ஸமாதிபங்கம்பண்ணுகையாவது - நெடுநாளிழந்துபோன சேதநனை இன்றுநேராகக்கிட்டப்பெறுவதே! என்றுக்ர்தார்த்தனாயிருக்கிற ஈச்வரன்ஹர்தயத்தை வ்யாகுலாச்ரயமாக்குகை. இதுக்கு உதாஹரணம்;- பார்யைபர்த்தாஸங்கித்தனானிறேயென்ன, புருஷாந்தரஸம்ஸாக்கேச்சை நடையாடாநின்றதென்றால், அவனே தெடிக்கொடுக்கிறானல்லன், தன்னுடையபாதிவ்ர்த்யமும்குலையும், அவன்நெஞ்சும்வ்யாகுலமாம் என்றருளிச்செய்தார்.

## தொண்ணூற்றோராம் வார்த்தை.

சிறியாண்டான், தம்முடைய அந்திமதசையிலே பணித்தவார்த்தை;- திருவேங்கடமுடையான், தன்ஸ்வரூபத்தைமறந்து என்ஸ்வரூபத்தை நினைத்தானாகில் பழையநரகங்களொழிய வேறேயெனக்கொருநரகம் ஸ்ர்ஷ்டிக்கவேணும், அன்றிக்கே, என்ஸ்வரூபத்தைமறந்து தன்ஸ்வரூபத்தையுணர்ந்தானாகில் பழையதிருநாடுபோராது, எனக்கென்ன ஒருதிருநாடு ஸ்ர்ஷ்டிக்கவேணும்.

## தொண்ணூற்றிரண்டாம் வார்த்தை.

பட்டினிப்பெருமாளென்றொருவரை எம்பெருமானார் நாவில் பத்திலகண்டருளினால், “பெருமாளே!” என்றருளிச்செய்ய, இவரும் “ஜீய!

ஜீய! என்பர்; இவரும் அற்றைக்கு க்ருதார்த்தரானேனென்றருளிச்செய்வர்; இவரும்நாலுமூன்றுநாள் திருமுடிக்குறையிலே அநுஸந்தித்துக்கொண்டிருப்பர்: ஒருநாள்ராத்திரி கள்ளர் களவுகண்டுபோகாநிற்கச்செய்தே இவரைக்கண்டு, இங்கே ஓராள் இருந்ததென்று அவர்களிலே ஒருவன் சொல்ல, அது அங்கேபண்டேயிருப்பதொன்று, இம்மரம் பிறர்க்குச்சொல்லில்காண் அவன் நம்மைச்சொல்லுவதென்று மற்றுள்ளார்க்குச்சொல்ல இத்தை எம்பெருமானார்கேட்டு நின்றருளிச்செய்தார்.

தொண்ணூற்றுமூன்றாம் வார்த்தை.

அத்ருஷ்டத்தை த்ருஷ்டமாகவநுஸந்தித்தும் த்ருஷ்டத்தை அத்ருஷ்டமாகவநுஸந்தித்தபோதுமிறே இவன்முமுக்ஷுவாவதென்று பட்டரருளிச்செய்தார்.

தொண்ணூற்றுநாலாம் வார்த்தை.

திருக்கோட்டியூர்நம்பி அந்திமதசையிலே, "திருவுள்ளககருத்தேது" என்று முதலிகள்கேட்க; சக்கிரவர்த்திருமகனுர் திருவுள்ளக்கருத்தைஒரு பக்ஷிபுண்படுத்திற்றென்றார்.

தொண்ணூற்றஞ்சாம் வார்த்தை.

அத்துழாய், பெரியநம்பி ஆபத்தசையிலே நாம்இங்குநின்றும் கோயிலேறப்போனுமேலாவென்ன ; நாம் அங்கேபோய்ப்ரக்ருதியைவிட்டால், நாட்டில் ஸ்ரீவைஷ்ணவர்கள் திருவடிச்சாரும்போது "நம்பியகப்படக் கோயிலேறப்போக வேண்டிற்றில்லையோ" என்று பயப்படார்களோவென்றருளிச்செய்தார்.

தொண்ணூற்றாறாம் வார்த்தை.

ஸ்வஸ்வாதந்த்ர்யம்பீஜபூதமானஸம்ஸாரத்தில் அருசியும், ஸ்வபாரதந்த்ர்யமூலமான உசிதகைங்கர்யத்திலேருசியும், தன்னுடையஜ்ஞாநாநுஷ்டாநங்களில் ப்ராவண்யபுத்தியும், இதுக்கடியானமுமுக்ஷுக்களோட்டை ஸஹவாஸத்தில்கர்த்தவ்யபுத்தியும், இதினுடையவிபாகதசையான நித்யமுக்தர் பரமபதத்திலுத்தேஶ்யபுத்தியும்இவைப்ரபந்நநிஷ்டை;=ஸ்வரூபம் ஒருமிதுநமென்றிருக்கையும், ஸ்வரூபாநுரூபமான புருஷார்த்தம் மிதுநவிஷயத்தில் பண்ணும்கைங்கர்யமென்றிருக்கையும்,ஸ்வரூபவிரோதி ஸ்வாதந்த்ர்யமென்றிருக்கையும் இவை பரமைகாந்திநிஷ்டை. :=இவையிரண்டு வார்த்தையும் ஆட்கொண்டவில்லிஜீயர் அருளிச்செய்தவை.

தொண்ணூற்றேழாம் வார்த்தை.

ப்ராப்யாந்தரங்களிலே கைவைத்தானாகில் சாஸ்த்ரம்சிலுகிடும்; ஸாதநாந்தரங்களிலே கைவைத்தானாகில் பாரதந்த்ர்யம் சிலுகிடும் ஸித்தோபாயஸ்வீகாரத்திலே கைவைத்தானாகில் ஸ்வரூபம் சிலுகிடும்;

### தொண்ணூற்றெட்டாம் வார்த்தை.

பிள்ளை திருநறையூரரையரும் நம்பி திருவழுதிவளநாடுதாஸரும், வேம்பு முற்றமுற்றக்கைக்குமாப்போல, இவ்வாத்மாவும் ஒருநாளைக்கொருநாள் விஷயாந்தரங்களிலே மண்டாநின்றது, இதுக்குபகவத்ப்ராப்திகூடுமோவென்றுபட்டரைக்கேட்க ; சரீரவியோகஸமயத்திலேயாகிலும் இச்சரீரத்திலுபேக்ஷையைப்பிறப்பிக்கையாலும், ஸ்ரீமாலாகாரர்க்குத்தன்வடிவழகைக்காட்டினாப்போலே இவனுக்கும் வடிவழகைக்காட்டுகையாலும், அதுகூடுமென்றருளிச்செய்தார் ; இதுக்குப்ரமாணம்;- “[illegible]” “நகலுபாகவதாயமவிஷயம்கஶ்சந்தி”.

### தொண்ணூற்றொன்பதாம் வார்த்தை.

ஸம்ஸாரபீதியும், ப்ராப்யருசியும், ஆகிஞ்சந்யமும், அநந்யகதித்வமும் ஸ்வதோஷஜ்ஞாநமும், ஸ்வரூபப்ரகாஶமும், ஸ்வரூபஜ்ஞாநமும் இவையிறே அதிகாரிக்கு ஸ்வரூபம்; ஸ்வரூபஜ்ஞன் ஸ்வரூபநிரூபணம்பண்ணுகையாவது - ஸ்வதஸ்ஸர்வஜ்ஞன்பக்கலுண்டான நித்யகைங்கரியாந்விஸ்சாவிஶேஷ ப்ரதிபத்திநிவ்ர்த்தி.

### நூறாம் வார்த்தை.

உபாஸகன் ஈஸ்வரனை புஜிபிக்கவேணுமென்று நினைத்திருக்கும்; ப்ரபந்நரை ஈஸ்வரன்புசிபிக்கவேணுமென்று நினைத்திருக்கும்.

### நூற்றொராம் வார்த்தை.

அவித்யாந்தர்ப்பூதனான சேதநனுக்கு அநுபாவ்யமான போகம்அவித்யாநிவர்த்திபூர்வகமான அநுபவேச்சையுடையவனுக்கு அநுபாதேயம் ; -அநுபாதேயபோகஸித்திக்குக் காரணமான கர்மகாரணம் த்ரிவிதம் ;- அதில்சிறிது சிரகாலத்தோடேகூட அவித்யாநிவ்ர்த்தியைப் பிறப்பிக்கக்கடவதாயிருக்கும் ; அல்லாதவை அவித்யாவர்த்தகங்களாயிருக்கும்.

### நூற்றிரண்டாம் வார்த்தை.

எம்பார்வார்த்தை ;-ஸ்வரூபஜ்ஞன், ஸ்வயம் ஸ்வரூப நிரூபணம் பண்ணுமதிலும் ஸ்வயம்ஸ்வதோஷதர்சநம்பண்ணுகை ஸ்வஸாமர்த்யம். ஸ்வரூபஜ்ஞன் ஸ்வயம் ஸ்வரூபநிரூபணம்பண்ணினால் ஸ்வதஸ்ஸர்வஜ்ஞனுக்குங்கூடக்கூடாதபடியான ஸ்வபாவமுண்டாயிருக்கும்;-புருஷனுக்கு பும்ஸ்த்வ நிவ்ர்த்திபூர்வகமான புருஷார்த்தநிரூபணம் பண்ணுமதிலும் புருஷதேஹ நிரூபணம்பண்ணுகையேபுருஷார்த்தம்; ஸ்வரூபஜ்ஞனுக்கு அவித்யாஸம்பந்த நிவ்ர்த்திபூர்வகமான அப்ராக்ர்ததேசவிஶேஷத்திலும் அவித்யாஸம்பந்தத்தில் ஆர்த்தி அத்யந்தாபேக்ஷிதம். ஸ்வரூபவைசத்யதசையாவது - பரஸ்வரூபவிஷயத்தில் ஸ்வீகாரப்ரதிபத்தி ப்ரவர்த்திநிவ்ர்த்தியில் அவ்யவஸிதனாய்ப்போருகை ஸ்வரூபஜ்ஞனுக்கு ஸ்தூலதேஹாந

தர நிவ்ர்த்திபூர்வகமாக ஸ்வதேஹபரிக்ரஹேச்சாதி சயமும் தேஹபோக்யதையும் ஸதர்சம் ; ஸ்வஸ்வரூபவிஷய ஜ்ஞானபூர்த்திநிஷ்டையாவது- பரஸ்வரூபவிஷயதர்சநாதிப்ரகார ப்ரதிபத்திப்ரவ்ர்த்திநிவ்ர்த்திபூர்வகமாக பரஸ்வரூபத்தில் ஆர்த்தி விஶேஷப்ரதிபத்திநிவிர்த்தி விஶேஷநிஷ்டை; ஸ்வரூபயாதாத்ம்யஜ்ஞாநமாவது - பரஸ்வரூபவைஸ்த்யஸ்மரண பூர்வகமாக பரஸ்வரூபவிஷய வ்யதிரிக்தவிஷய கைங்கர்யருசிநிவிர்த்திபிறக்கை; —ஸ்வகதஜ்ஞாநம் - ஸ்வரூபம் ; பரகதஜ்ஞாநம் - உபாயம்;—இதரபலபோக்த்ர்த்வப்ரதிபத்தி நிவர்த்திபூர்வகமான ஸம்யக்பலபோக்த்ர்த்வப்ரதிபத்தி விஶேஷநிஷ்டனானவன், ஸர்வோத்க்ர்ஷ்டஜாதனுமாய் ஸாவவிஜாதீயனுமாய் ஸர்வோபாயநிவ்ர்த்திபூர்வகமான ஸித்தோபாயாநந்தரகதனானவன், ஸஜாதீயத்வப்ரதிபத்தியும் ஸஜாதீயத்வவ்யாவ்ர்த்திவிஶேஷநிஷ்டையுமுண்டென்று புத்திபண்ணிக்கொண்டு போரக்கடவன் : இவ்வார்த்தையால் அஞ்சர்த்தம் ப்ரதிபாதிக்கப்படுகிறது;-இதரவிஷயராகநிவ்ர்த்தியும், விஹிதவிஷயராகப்ரவ்ர்த்தியும்., இதரோபாயத்யாகமும், ஸித்தோபாயஸ்வீகாரமும், ஹிதபரன்பக்கல்யதாப்ரதிபத்தியும்.

## நூற்றுமூன்றாம் வார்த்தை.

நஞ்சீயர் சரமதசையில் அருளிச்செய்தவார்த்தை ; - ஸ்வவிஷயமான வ்யாதி ஸாந்த்யர்த்தமான ப்ரபதநமும் ஸ்வரூபஹாநி ; இதுதான்பாரதந்த்ர்யத்துக்குதூஷணம்; பரவிஷயவ்யாதிசாந்த்யர்த்தமான ஸாங்கப்ரபதநமும் ஸ்வரூபஹாநி; இது. ஈஸ்வரனுடைய பரரக்ஷண விஷயமான ஸர்வஜ்ஞத்வாதிகளுக்குதூஷணம்.

## நூற்றுநாலாம் வார்த்தை.

அநந்தாழ்வான், நஞ்சீயரைக்கண்டு, இதுவென்ஜீயா ? ஸுகுமாரராயிருக்கிறநீர் வேர்த்தபோதுநீராடி பசித்தபோது அமுதுசெய்து பட்டரைசேவித்திருந்தால் ஸங்கஸித்துவந்திலீரென்று உம்மைபரமபதத்தினின்றும் தள்ளுவாருண்டோ, இனியென்னென்றுபார்த்து, மந்த்ராந்தரங்களையடையவிட்டு திருமந்த்ரத்திலேபிறந்து த்வயத்திலேவளர்ந்து த்வயைகநிஷ்டராவீரென்றுவாழ்த்தி பின்னையருளிச்செய்தவார்த்தை;-த்ர்ஷ்டத்திலுள்ளதெல்லாம் பட்டருக்காக்கினோம், அத்ர்ஷ்டத்துக்குக்கடவார்பட்டரென்று இருப்பதோரிருப்புண்டு, அதுபூர்வதசையிலும் அநர்த்தாயவாமென்றுபார்த்து;த்ர்ஷ்டத்துக்குக்கடவார் பெருமாள், அத்ர்ஷ்டத்துக்குக்கடவார் பட்டரென்றிரும்: த்ர்ஷ்டாத்ர்ஷ்டங்களிரண்டுக்கும் ஆசார்யன்கடவனென்று இருந்தால்வருவதேதென்னில் ; த்ர்ஷ்டத்தில் கர்மாதீநமாகவேதேனும் சுருங்குண்டாகில் ஆசார்யனைவெறுத்தபோது பெருமாளைக்கொண்டு தீர்த்துக்கொள்ள வொண்ணாது, பெருமாளைவெறுத்தானாகில் ஆசார்யனைக்கொண்டு தீர்த்துக்கொள்ளலாம்.

நூற்றஞ்சாம் வார்த்தை.

எம்பெருமானார், தம்முடைய ஸ்ரீபாதத்திலே ஆச்ரயித்ததொரு ஸ்ரீவைஷ்ணவருடையபிள்ளைக்கு ஏகாயநரோட்டை ஸம்ஸர்க்கமுண்டாக, நம்மோடுஸம்பந்தமுடையவன் வ்யபிசரித்து அநர்த்தப்படவொண்ணாதென்று, பெருமாள்திருவடிகளிலே எழுந்தருளியிருக்கச்செய்தே அவனையங்கே ஸங்க்ரஹிதனாக, வாராய்! உனக்குப்ரமாணங்களால் காட்டலாம்படி ஜ்ஞாநபௌஷ்கல்யமில்லை, நான்வேதாந்தங்களிலறுதியிட்டிருக்கும்பொருள்;-" இவ்வாத்மாவுக்குத்தஞ்சமாயிருக்குமர்த்தம் த்வயமல்லதில்லை" யென்று பெருமாள்திருவடிகளில் சடகோபனையெடுத்து ஸத்யம்பண்ணிக்கொடுத்தருளினார்; அவரும் அன்றுதொடங்கித்வயநிஷ்டரானார்.

நூற்றாறாம் வார்த்தை.

பட்டர் " த்வயத்தினர்த்தத்தை புத்திபண்ணி சப்தாந்தரத்தாலே இவ்வர்த்தத்தை யநுஸந்திக்கவொண்ணாதோ " என்று உடையவருக்கு விண்ணப்பஞ்செய்ய; அதுக்குக்குறையில்லை, ஆகிலும் இப்பாசுரத்துக்கு சுரக்குமர்த்தம்வேறொருபாசுரத்துக்குச்சுரவாதே என்று அருளிச்செய்தார்.

நூற்றேழாம் வார்த்தை.

நம்மாசார்யர்கள் திருமந்த்ரத்திலும் சரமச்லோகத்திலும் அர்த்தத்தையொளித்துப்போருவர்கள், த்வயத்தில் சப்தமேதொடங்கி ஒளித்துப்போருவர்கள், திருமந்த்ரம் ஆசார்யவாக்யம் ; த்வயம் சிஷ்யவாக்யம். த்வயத்தில் பூர்வகண்டத்தி லர்த்தத்தை யநுஸந்தித்தால், ரக்ஷணார்த்தமாக விலங்கிக்கிடந்த துரும்பெடுத்துப்பொகட ப்ராப்தியில்லை ; உத்தரகண்டத்திலர்த்தத்தை யநுஸந்தித்தால் துலைசோரநிற்கைக்கு அவஸரமில்லை; மடலெடுத்துக்கொண்டு புறப்படுமித்தனை.

நூற்றெட்டாம் வார்த்தை.

பகவச்சரணாரவிந்த சரணாகதனாய் ஜ்ஞாநிநாம் அக்ரேஸரனாய் விலக்ஷணாதிகாரியான ப்ரபந்நனுக்கு உபாயத்தில்ப்ரவர்த்தி ஸ்வரூபவிரோதி உபேயத்தில்நிவர்த்திருசிவிரோதி, உபாயத்தில்ப்ரவர்த்தி ஸ்வஸ்பஹாநி; உபேயத்தில்ப்ரவர்த்தி ருசிவிரோதி ; இவ்விரண்டர்த்தத்துக்குமிதர்சநபூதர் ஸ்வரக்ஷணக்ஷமையாயிருக்கச்செய்தே ஸ்வஸ்வரூபபாரதந்த்ர்யத்தையநுஸந்தித்து, அசோகவநிகையில் எழுந்தருளியிருந்த பிராட்டியும் ; பெருமாள் "நில்" என்னச்செய்தேயும் தம்முடையசெல்லாமையைக்காட்டி அவருடையவார்த்தையை யதிக்ரமித்துக்காட்டிலேதுடரந்தடிமைசெய்த இளையபெருமாளும் ; ஸம்ஸாரஸம்பந்தமற்றுத்திருநாட்டிலே போயிருக்குமளவும் த்வயத்திலகண்டத்திலர்த்தத்தையுங்கொண்டு ப்ரப

நனென்வன் காலக்ஷேபம்பண்ணும்படி பெரியபிராட்டியாரை பின்செல்லும் ஸ்வபாவனைகையாலே இவள்புருஷகாரமாகக்கொண்டு ஆச்ரயிக்கிற நம்பெரும்பிழைகள் பாராதானுமாய் ஆச்ரயிப்பார்க்கு மிகவுமெளியனான நாராயணனுடைய திருவடிகளையிரண்டையும், எனக்கு அத்யந்தம் அநிஷ்டமாய் அநாதியாக இன்றளவும்வர வடிம்பிட்டுவிருகிற ஸம்ஸாரத்தை வாஸனையோடேபோக்கி எனக்கிஷ்டதமமாய் நிரதிசயாநந்தாவஹமாய், அநந்தமாய் அபுனராவர்த்தி லக்ஷணமான மோக்ஷத்தைப் பெறுகைக்கு அவ்யவஹிதஸாதனமாகப் பற்றிநின்றேன், பெரியபிராட்டியாரோடே கூட ஸர்வஸ்வாமியான நாராயணன் திருவடிகளிலேஸர்வதேசஸர்வகாலஸர்வாவஸ்தோசிதமானஸகலசேஷவர்த்திகளையும் பண்ணப்பெறுவேனாகவும், அதுக்குவிரோதியான அஹங்காரங்கள் தவிருவதாகவும். இதினுடையவநுக்ரமணமிருக்கும்படி ;-ஸாபராதனான ஸம்ஸாரிசேதநனுக்கு ஸர்வஜ்ஞனானஸர்வேச்வரனைக்கிட்டுமிடத்தில் இவனுடையவபராதம் அவன் திருவுள்ளத்தில் படாதபடி அழகாலும் குணங்களாலும் அவனைத்துவக்கி இவனைத்திருவடிகளிலேசேரவிடுகைக்குக்கண்ணழிவற்ற புருஷகாரமான பிராட்டிஸ்வரூபம்சொல்லி, மதுப்பாலே-இவளுக்கு அவனை பிரியஸம்பாவனையில்லாத மஹாஸம்பத்தான நியத்யோகஞ்சொல்லி, நாராயணபதத்தாலே--இவள்புருஷகாரமும் மிகையாம்படி அவன் அச்ரிதவிஷயத்தில்பண்ணும் வாத்ஸல்யாதிகுணயோகஞ்சொல்லி, "சரணௌ" என்கிறபதத்தாலே - இவன்குற்றங்களையிட்டுக் கைவிடுமென்று வரையாதேமேல்விழுந்து ஸ்வீகரிக்கும் திருவடிகளினுடைய சேர்த்தியழகைச்சொல்லி, "ஶரணம்" என்கிறபதத்தாலே--அவைதான் இவனுக்கு அநிஷ்டநிவர்த்திக்கும் இஷ்டப்ராப்திக்கும் ஸாதநமென்னுமிடஞ்சொல்லி, "ப்பத்யே" என்கிற வர்த்தமானந்தாலே--சேதனன் நெடுங்காலம்பண்ணின ப்ராதிகூல்யம்தவிர்ந்து இன்று இசைந்துபற்றுகிற பற்றைச்சொல்லி, உத்தரகண்டத்தில் ஶ்ரீமத் பதத்தாலே உபேயத்திலும் பிராட்டி புருஷகாரபூதையுமாய் ஸ்வாமிநியுமாய்க்கொண்டு அவனோடே நித்யவாசம் பண்ணுசிறபடிசொல்லி, நாராயணபதத்தாலே - அவனுடைய ஸர்வஸ்வாமித்வஞ்சொல்லி, "ஆய" என்கிறசதுர்த்தியாலே--இவ்விருவருமான சேர்த்தியிலே இப்ரபந்நனான சேதநன் ஸ்வரூபாநுரூபமான வர்த்திவிசேஷத்தைப்ப்ரார்த்தித்து, அத்யாஹார்யமான ஸ்வசப்தத்தாலே பெற்றபடி சொல்லி, நமஸ்ஸாலே-அடிமைசெய்யுமிடத்து அவனுகந்தவுகப்புக்கண்டுகக்குமதொழிய த்தன்னுகப்புத்தவிர்ந்தபடிசொல்லித் தலைகட்டுகிறது.

### நூற்றொன்பதாம் வார்த்தை.

உபாயத்தை நிலையிட்டவர்கள் பிராட்டியும் த்ரௌபதையும் திருக்கண்ணமங்கையாண்டானும்; உபேயத்தை நிலையிட்டவர்கள் இளையபெருமாளும், பெரியவுடையாரும், சிந்தையந்தியும், பிள்ளை திருநறையூரரையரும் :—"శీతోభవ" "சீதோபவ" என்னும் சக்தியோடே தன்னுடையதனியிருப்பைமாற்றவல்லவள் பெருமாளுடையஸ்வரூபத்துக்குக் கொற்றையாமென்று துரும்புநறுக்காதிருந்தபடியாலும், லஜ்ஜையில்லாத கோஷ்டியிலே லஜ்ஜையையுடையவள், அவன் கையிலே தன்லஜ்ஜையைப் பொகட்டிருந்தபடியாலும், தம்பரபரப்பைமாற்றி வகுத்தவன்வாசலிலே யொதுங்கினபடியாலும், உபாயத்துக்கு ஸீமாபூமிஇவர்கள்;=நில்லென்ன, "కురుష్వమామనుచరమ్" "குருஷ்வமாமநுசரம்" என்கிறபடியாலும், "అహం సర్వంకరిష్యామి" "அஹம்ஸர்வம்கரிஷ்யாமி" என்கிறபடியாலும், "క్రియతామితియాంవద" "க்ரியதாமிதியாம்வத" என்கையாலும், "లక్ష్మణోనకతాంగతిః" "லக்ஷ்மணோநகதாம்கதி:" என்னும்படியான ப்ராப்தியாலும் "సహజకైంకర్యవిధయః" "ஸஹஜகைங்கர்யவி தய:" என்கிறவர்த்தம் கைப்பட்டது அவர்க்கேயாகையாலும், பெரியவுடையாரும் பிள்ளை திருநறையூரரையரும் வகுத்தவிஷயத்தைப்பிரிந்து தந்தாமுடையவுடம்பைப்பேணாமையாலும் சிந்தயந்தி வகுத்தவிஷயத்தைக்கண்டமாத்ரத்திலே விரோதியானவுடம்பை விட்டுநிற்கையாலும், உபேயாநுபவத்துக்கு ஸீமாபூமிஇவர்கள்.

### நூற்றுப்பத்தாம் வார்த்தை.

ஆச்சி, ஆச்சானுக்கு பகவச்சேஷமாய் அநாதிகாலம் எம்பெருமானோட்டைஸம்பந்தத்தையறுத்துக்கொண்ட ஜந்துவுக்கு எம்பெருமான் திருவடிகளிலேபிணைத்துப் பிழைப்பிக்க பிர்ராட்டி யுளளென்றிரும் எனறருளிச்செய்தார்.

### நூற்றுப்பதினோராம் வார்த்தை.

விட்டுப்பற்றித்தேறியிருக்கை அதிகாரிக்ர்த்யம்; விடுவித்துப்பற்றுவித்து விலக்கடியற்றுக்கை உபாயக்ர்த்யம் என்று வடக்குத் திருவீதிப்பிள்ளை.

### நூற்றுப்பன்னிரண்டாம் வார்த்தை.

உபாயத்தில் அத்யவஸாயமாவது--சங்காத்ர்யநிவிர்த்தி பூர்வகமாக அத்யவஸிக்கை. சங்காத்ரயமாவது ஸ்வக்ர்ததோஷதர்சநம், உத்தேச்யதுர்லபத்வம், உபாயபல்குத்வம், இம்மூன்றுசங்கையும், ஸர்வஜ்ஞத்வம், ஸர்வசக்தித்வம், பரமகாருணிகத்வம், பரமௌதார்யத்வம், ஆச்ரிதவத்

ஸலத்வம், அசரண்யசரண்யத்வம்,அநாலோசிதவிசேஷாஉசேஷலோகசரண்யத்வம், நிருபாதிகஸர்வஸ்வாமித்வம், ச்ரிய:பதித்வம், நாராயணத்வமாகிற இப்பத்துகுணங்களையும் அநுஸந்திக்க விவர்த்தமாம். எங்ஙனேயென்னில், - ஆச்ரிதவாத்ஸல்யத்தையநுஸந்திக்க ஸ்வக்ர்ததோஷதர்சநத்தாலேவருகிறசங்கைகழியும். ஸர்வக்யத்வ ஸர்வசக்தித்வ பரமகாருணிகத்வ பரமௌதார்யத்வமாகிற நாலுகுணங்களையும் அநுசந்திக்க உத்தேச்யதுர்பத்தால்வருகிற சங்கைகழியும். அசரண்யசரண்யத்வம் அநாலோசிதவிசேஷாஉசேஷ லோகசரண்யத்வமாகிற இவையிரண்டையுமநுஸந்திக்க உபாயபல்குத்வத்தால் வருகிற சங்கைகழியும். மேல் மூன்றுகுணமும் மூன்றுக்கும் பொது எங்ஙனேயென்னில் ,-ச்ரிய:பதித்வத்தை அநுஸந்திக்கதோஷங்கண்டஞ்சவேண்டா. நிருபாதிகஸர்வஸ்வாமித்வத்தையநுஸந்திக்க உத்தேச்யதுர்லபத்வங்கண்டஞ்சவேண்டா, நாராயணத்வத்தையநுஸந்திக்க உபாயபல்குத்வங் கண்டஞ்சவேண்டா-

இக்குணங்கள் "மாம்" என்றபதத்திலே அநுஸந்தேயங்கள். எங்ஙனேயென்னில், உன்னிற்காட்டில் உன்காரியம் அறிவேனுமாய், உன்னிலும் உன்காரியஞ்செய்கைக்கு க்ஷமனுமாய், உன்னிலும் உன்காரியஞ்செய்கைக்கு க்ஷமனுமாய், உன்னிலும் உன்காரியத்துக்கு நேர்ந்திருப்பேனுமாய், உன்காரியஞ்செய்யுமிடத்தில் என்றுஞ்செய்வேனுமாய், உன்குற்றங்காணாதிருப்பேனுமாய், உன்குற்றம் போக்யமாயிருப்பேனுமாய், உனக்குப்பற்றில்லாதவன்று பற்றாயிருப்பேனுமாய், உன்தரம்பார்த்திருப்பேனுமாய், உன்னிலும் உன்காரியஞ்செய்கைக்குப்ராப்தனுமாய், உனக்கும் எனக்கும் தாரகையான ஸர்வேச்வரிக்காகவே உன்காரியஞ்செய்வேனுமாய், நீரிலே நெருப்பெழுந்தாப்போலே இவள் குற்றங்காட்டிலும் விடவொண்ணாத குடல்துடக்கையுமுடையேனுமாயிருக்கிற என்னையென்றபடி.

## நூற்றுப்பதின்மூன்றாம் வார்த்தை.

த்யாகவிசிஷ்டம்ஸ்வீகாரம் ; ஸ்வீகாரவிசிஷ்டம் அதிகாரம் ; குணவிசிஷ்டம் உபாயம் ; லக்ஷ்மீவிசிஷ்டம் உபேயம்.

## நூற்றுப்பதினான்காம் வார்த்தை.

நம்பி ஸ்ரீகோவர்த்தநதாஸர், அர்ஜுநன் ப்ரச்நம்பண்ண, ஸர்வஜ்ஞனுமாய், ஸர்வசக்தியுமாயிருக்கிறவன் "பண்டுபோல்சொல்லமாட்டேனென்றதென்" என்று கூரத்தாழ்வானைக்கேட்க ; த்ரௌபதிகுழல்முடித்தபின்புபண்டுபோலே அவன்வாய்புறப்படுமோ வென்றுதிருவுள்ளக்கருத்து என்றருளிச்செய்தார்.

### நூற்றும்பதினைந்தாம் வார்த்தை.

பிள்ளையுறங்காவில்லிதாஸர்வார்த்தை ;--நாராயணனுக்கு நைரந்தர்யவேஷம் ; நம்பக்கல் தம்பேற்றுக்கு "நம:" என்றதவர்களை, "வானவர் நாட்டையும் நீகண்டுகொள்" என்னும்மடியாபிருப்பதொரு ஔதார்யவிசேஷம் நாரவஸ்துவுக்குநைரந்தர்யம்வேஷம்;-நாராயணனே நமக்கேபறைதருவான்" என்று--பேற்றுக்கு நிர்ப்பரனாய்ப்போருகையும் தத்ப்ரதிபந்தகமானபாபத்தில் ஆர்த்தனாய்ப்போருகையும்.

### நூற்றுப்பதினாறும் வார்த்தை.

எம்பெருமானாரருளிச்சேய்தவார்த்தை;ஸ்-வஸ்வரூபவைசத்யதசையாவது-பரஸ்வஸ்மவிஷயத்தில் ஸ்வீகாரத்யாகப்ரகாரப்ரதிபக்தி நிவர்த்தியில் வ்யவஸ்திதனாய்ப்போருகை. விட்டுப்பற்றவென்றருளிச்செய்வர் ஆழ்வான்; பற்றிவிடவென்றருளிச்செய்வர் முதலியாண்டான்; பிச்சுத்தெளிந்து கண்விழிக்கையென்று ஆண்டான்.

### நூற்றுப்பதினேழாம் வார்த்தை.

எம்பார்வார்த்தை;-ஸ்வீக்ர்தோபாயபூதனாகையாவது -- ஸ்வீக்ர்தபூதனாகை. அதாவது-ஸ்வகதஸ்வீகாரதில் உபாயபுத்தியைத்யஜித்து பரகதஸ்வீகாரத்துக்கு விஷயமாய்விடுகை. அதாவது -- ஸ்வார்த்தப்ரவ்ர்த்தியையும ஸ்வப்ரவ்ர்த்தியையும்விட்டு பரார்த்தப்ரவ்ர்த்தியிலும் பரப்ரவ்ர்த்தியிலும் மங்வயிக்கை. உனக்கென்று நிவர்த்திக்கையைவிட்டு எனக்கென்ன நான்ப்ரவ்ர்த்திக்கவென்று உள்ளே புகுரென்று ஈஸ்வரன்வாக்யம்.

### நூற்றுப்பதினெட்டாம் வார்த்தை.

நடாதூரம்மாள், பிள்ளையெங்களாழ்வார் ஸ்ரீமாதத்திதேசரமச்லோகார்த்தம்கேளாநிற்கச்செய்தே, பிள்ளை, "𑌸𑌰𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑌾𑌨𑍍 𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌜𑍍𑌯" "ஸர்வதர்மாந்பரித்யஜ்ய" என்றருளிச்செய்ய; அம்மாள் இதொரு ஈஸ்வரஸ்வாதந்த்ர்யமிருந்தபடியென்னென்ன; பிள்ளையும், நீர் இப்படிசொல்லுவானென், அதிகாரிக்கு விடச்சொல்லிலன்றோ நீர் இப்படி சொல்லவேண்டுவது, அதிகாரிக்கு சேராதத்தையன்றோவிடச்சொல்லிற்று. ஆகையால் ஈஸ்வரஸ்வாதந்த்ர்யமன்றுகாணும் இது, அதிகாரிக்குஸ்வரூபஹானியாகையாலேகாண் இத்தைவிடச்சொல்லிற்றென்றருளிச்செய்தார்.

### நூற்றுப்பத்தொன்பதாம் வார்த்தை

ஆச்சான் பிள்ளைவார்த்தை;--ஒரு ஸ்ரீவைஷ்ணவர், விடுகை உபாயமோ பற்றுகைஉபாயமோவென்றுகேட்க ; விடுகையுமுபாயமன்று, பற்றுகையும் உபாயமன்று, விடுவித்துப்பற்றுவிக்கிறவனேயுபாயமென்றருளிச்செய்தார்.

நூற்றிருபதாம் வார்த்தை.

ஆச்சான்பிள்ளையை ஒருஸ்ரீவைஷ்ணவர் ஸ்வரூபாநுரூபமான ப்ராப்யமோ, ப்ராப்யாநுரூபமான ஸ்வரூபமோவென்றுகேட்க ;" முமுக்ஷுதசையில் ஸ்வரூபாநுரூபமான ப்ராப்யம், முக்ததசையில் ப்ராப்யாநுரூபமான ஸ்வரூபம், என்றருளிச்செய்தார் " என்று திருநகரிப்பிள்ளையருளிச்செய்தார்

நூற்றிருபத்தோராம் வார்த்தை.

ஒருஸ்ரீவைஷ்ணவர் ஸம்ஸாரத்தினுடைய பொல்லாங்கையும் மந்த்ரங்களினுடையபன்மையையுங்கண்டு பிள்ளைக்கு விண்ணப்பஞ்செய்ய; ஆகையாலன்றோ தானே உபாயமாகவேண்டுவதென்றருளிச்செய்தார்.

நூற்றிருபத்திரண்டாம் வார்த்தை.

அப்பிள்ளைபிள்ளைக்கு, பட்டர், பெரியபெருமாள் கண்வளருகிறபடி புத்திபண்ணிநீரேயென்றருளிச்செய்தவார்த்தை;- வைஷ்ணவன் கர்மங்களினுடைய கனத்தைப்பார்த்து பயப்பட, மடித்ததிருக்கையில் திருவிரல்கள் உன்னை ரட்சிக்கைக்கு கவித்த முடியன்றோவென்று தொட்டுக்காட்டுகின்றனன் ; திருவடிகளிலே நேரேபோகட்டதிருக்கை ப்ரஜையினுடையநாவிலே முலைக்கண்களை நெருடிக்கொடுக்கும் மாதாவைப்போலதிருவடிகள் புகலிடமென்று காட்டுகிறதென்று அருளிச்செய்தார்.

நூற்றிருபத்துமூன்றாம் வார்த்தை.

எம்பெருமான் உபாயமாமிடத்தில் விஷயஸாபேக்ஷனுமாய் வ்யாபாரநிரபேக்ஷனுமாயிருக்குமென்று ஆச்சான்பிள்ளையருளிச்செய்வர்.

நூற்றிருபத்துநாலாம் வார்த்தை.

விக்ரமசோழன்திருவீதியிலே திருவரங்கச் செல்வரெழுந்தருளாநின்றால், பிள்ளையுறங்காவில்லிதாஸர் நாள்தோறும், ஆயுதம் எடாமல்ஸேவிப்பர் ; அருளாளப்பெருமாளெம்பெருமானார், பிள்ளாய்! உம்முடைய ஆயுதம் என்று விநியோகப்படுவதென்றுகேட்க; உம்முடைய அஞ்ஜலிபவித்திரம் திவிநியோகப்படுமன்று அடியேனுடைய ஆயுதம்விநியோகப்படுமென்றார்.

நூற்றிருபத்தஞ்சாம் வார்த்தை.

ப்ரபந்நாதிகாறக்கு கார்யமொன்றாயிருக்கமூன்று அவஸ்தைக்கூடிக்காரியமாகவேணும்: அவையாவன -- ஆச்ரயணாதிகாரம், பலாதிகாரம், போகாதிகாரம். இவற்றுக்குவேஷம் ஆகிஞ்சந்யமும், அநந்யகதித்வமும், அத்யவஸாயமும். பரபக்தி பரஜ்ஞாநபரமபக்தி இவற்றுக்கு

விஷயம்--சீலாதிகுணவிஸிஷ்டனுமாய், ஜ்ஞாநசக்த்யாதிகுணவிஶிஷ்டனுமாய், ஆநந்தாதிகுணவிஶிஷ்டனுமாயிருந்துள்ளச்ரிய:பதி ; இவன் தன் ஆகிஞ்சந்யத்தையும் அநந்யகதித்வத்தையும் முன்னிட்டு, ஆச்ரயணோபேக்ஷைபண்ண; அவனும் தன்சீலாதிகுணங்களை முன்னிட்டு ஆச்ரயணீயனும், இவன் அத்யவஸாயத்தைமுன்னிட்டு பலாபேக்ஷைபண்ண அவன் ஆநந்தாதிகுணங்களை முன்னிட்டுபோக்தாவாம்.

### நூற்றிருபத்தாறும் வார்த்தை.

சோமாசியாண்டான் அருளிச்செய்த வார்த்தை -பகவத்ப்ரவ்ர்த்திவிரோதி ஸ்வப்ரவ்ர்த்தி, ப்ரவ்ர்த்தி நிவ்ர்த்திப்ரபத்தி. பக்தியுமுபாயமன்று, ப்ரபத்தியுமுபாயமன்று, ப்ரபத்தவ்யனே உபாயம்.

### நூற்றிருபத்தேழாம் வார்த்தை.

சிறியாச்சான் கலங்குகைக்கு யோக்யதையுண்டாயிருக்கச்செய்தே தெளிந்திருப்பர்; அடியேன் யோக்யதையில்லாமையினாலே தெளிந்திருப்பது என்று ஜீயரருளிச்செய்தார்.

### நூற்றிருபத்தெட்டாம் வார்த்தை.

அமுதனார், சிறியாச்சானை, உம்முடைய வநுஷ்டாநமிருக்கும்படியிது, நாங்களென்செய்யக் கடவோமென்ன ; என்னநுஷ்டானத்துக்கு ஒருபலமுண்டாகிலன்றோ உம்முடைய அநநுஷ்டானத்துக்கு ஒருப்ரத்யவாயமுண்டாவது; வெறும்புடவைதோயாமல்கெடும், பட்டுபுடவை தோய்க்கக்கெடும் என்றீர் என்றருளிச்யெய்தார்; ஆசார்யர்களில் சிலர், உம்முடைய அநுஷ்டாநமிருககும்படியிது, நாங்கள் என்னசெய்யக்கடவோமென்ன , என்படியும் உங்கள்படியுங்கொண்டு காரியமென், '𑌏𑌤𑌤𑍍𑌵𑍍𑌰𑌤𑌂𑌮𑌮'' "ஏதத்வ்ரதம்மம" என்றருளிச்செய்தயடியேயன்றோவென்றருளிச்செய்தார்.

### நூற்றிருபத்தொன்பதாம் வார்த்தை.

ப்ரந்நனுக்கு புத்திபூர்வாபசாரம் குருகுகைக்குவழியில்லை, ப்ரமாதத்தாலேபுகுந்ததாகில் ஜ்ஞாநமும் ஆநுதாபமும் ஒருதலையாக அபுத்திபூர்வமாமித்தனை, அநுதாபம்பிறந்ததில்லையாகில் ஜ்ஞாநம்பிறந்ததில்லையாகக் கடவதென்று ஜீயரருளிச்செய்தார்.

### நூற்றுமுப்பதாம் வார்த்தை.

நம்பிள்ளை, நஞ்சீயரை, இதரோபாயங்களுக்கு ப்ரமாணங்களும் பஹுளமாய் அநுஷ்டானங்களும் பகுளமாயிருக்க இதுக்குப்ரமாணமும் சுருங்கி அநுஷ்டாதாக்களும் சுருங்கியிராநின்றது, இதுக்கடியென்னென்றுகேட்க ; நான்னினைத்திருக்குமதுக்கு அவ்வருகு உமக்கு வேண்டுவெ

தோன்றுண்டோ, இருதிர் கூடிஓராற்றிலேயிழிந்துபோகாநின்றால் முந்தி னவன் முந்தாதவன் கையைபிடிக்கும்போது இதுக்கொரு ப்ரமாணாபே க்ஷையுண்டோ; வேண்டில் ப்ரமாணங்களாலுமொருகுறையில்லை ;- இனி ப்ரமாணங்கள்காணவேணுமென்று நினைத்திரேன், இருந்ததேகுடியாக ஸம்ஸாரிகளாய் நாலத்திரண்டு உத்தமாதிகாரிகளாயிருந்தால் அவர்களுக் கொரு உத்கர்ஷதையும் அவர்களுக்கொரு அபகர்ஷதையுமுண்டோ ; ஸ்வரூபப்ராப்த்தமென்னு மித்தனையொழிய; "[Grantha]" "ஸ்வ ர்ககாமோயஜேத" என்கிறபடியேஸ்வர்க்க பலத்தையநுபவிக்கஸாதந மாக சாஸ்த்ரஞ்சொல்லாநிற்கச்செய்தேயும் ஓரூரில் ஒருவனையேயஜித் தானென்னாநின்றது, இதுக்கோ உமக்கு ஆள்பற்றப்புகுகிறது என்றருளிச் செய்ய, பிள்ளையும் க்ர்த்தார்த்தரானார்.

## நூற்றுமுப்பத்தோராம் வார்த்தை.

பட்டர் திருவணையாட வெழுந்தருளாநிற்க, பாதிரிக்கொடியிலே போதுவைகிவந்து ஒருவேடனகத்திலேபுக, அவன் தானிருந்த ஆஸநத் தையும் வாங்கிப்பொகட்டு ஒரு கட்டலையுங்கொடுக்க, அதிலே எழுந்தரு ளியிருந்து ;- இவன் நம்முடைய வைபவத்தையறிந்து செய்தானல்லன், க்யாதிபரனாய்ச்செய்தானல்லன் நம்மாலேயுபக்ர்தனாய்ச் செய்தானல்லன் தன்னுடைய க்ர்ஹத்திலே புகுந்தோமென்கிற அபிமானமிறேயிவன் இது செய்யவேண்டிற்று. ஈஸ்வரன் தன்னபிமாநத்திலெ யொதிங்கினாரை என் னினைத்திருக்கிறானோ வென்றநுஸந்தித்தருளி, ஐயோ ! இற்றைக்கு விசேஷமென்னென்றுகேட்டருள; நாயன்றே காட்டிலேவேட்டைக்குப் போனேன், அங்கே யொருமுசல்குட்டியைப்பிடித்தேன், அதினுடைய தாயானது பின்னேமுடிகிவந்து ஒரு எரிவளியானவாறேமுன்னேவந்து கும்பிட்டுக்கொண்டுகிடந்தது ; எனக்கு அத்தைக்கண்டு வயஸநமாய்க் குட்டியைவிட்டேன் என்றான் ; இதைக்கேட்டு இது சேதனுக்கில்லாத லொன்று, பரமசேதநனுக்குள்ளதொன்று," [Grantha]" "மாமே கம்ஶரணம்வ்ரஜ" என்று இம்முசலுக்குபதேஶித்தாரில்லை; "[Grantha] [Grantha]—அரி:ப்ராணாம்பரித்யஜ்யரக்ஷிதவ்ய:க்ர்தாத்ம கா" என்றுவேடனுக்குபதேசித்தாரில்லை, அவ்யவதாநேஶரணாகதிபலித் ததே இதொருப்ரமாணப்ரஸித்தியென் என்று அருளிச்செய்தார்.

## நூற்றுமுப்பத்திரண்டாம் வார்த்தை.

எம்பெருமானார், புழுவன்காலத்திலே வெள்ளைசாத்தி மேல்நாட் டுக்கெழுந்தருள ; அங்கேநம்பெருமாள் ப்ரஸாதங்கொண்டு காணவந்த அம்மங்கி அம்மாளுக்கு உடையவர் ஒருருத்வயத்தையருளிச்செய்தார். பார்ச்வஸ்தர் இதுவென் ஜீயா அங்கீகரித்தருளிற்றேயென்ன ;

இத்தனைதூரம் பெருமாள்ப்ரஸாதங்கொண்டுவந்த இவர்க்குத்வ்யமொழியப்ரத்யுபகாரமுண்டோவென்று அருளிச்செய்தார்.

## நூற்றுமுப்பத்துமூன்றாம் வார்த்தை

இதரோபாயங்களிற் காட்டில்ப்ரபத்திக்குவாசிபத்து ;--இதரோபாயங்கள் அதிக்ர்தாதிகாரமாகை, விதிபரதந்திரனாய்ச்செல்கை, ப்ராப்தகர்மாவஸாநத்திலேபலமாகை, அந்திமஸ்ம்ர்திவேணுமென்கை, அசேதநமாகை, ஸாத்யமாகை, பலங்கூடவேணுமென்கை, பலப்ராப்திக்கு ஈச்வனையபேக்ஷிக்கை, ஸ்வரூபவிரோதியாகை, ப்ராப்யத்துக்கு விஸத்ர்சமாகை, இது ஸர்வாதிகாரமாகை, ஆசார்யருசிபரிக்ரஹமாகை; தேஹாவஸாநத்திலே பலமாகை ; அந்திமஸ்ம்ர்திநிரபேக்ஷமாகை ; பரமசேதநமாகை, ஸித்தோபாயமாகை, ஸஹாயாந்தரநிரபேக்ஷமாகை ; ஒன்றாகை, ஸ்வரூபத்தோடுசேருகை, ப்ராப்யத்துக்கு ஸத்ர்சமாகை.

## நூற்றுமுப்பத்துநாலாம் வார்த்தை.

கர்மம்கைங்கர்யமாயிருக்கும் ; ஜ்ஞாநம் ஸ்வரூபமாயிருக்கும் ; பக்திபோகமாயிருக்கும், ப்ராப்யம்தாரகமாயிருக்கும், உக்தி காலக்ஷேபமாயிருக்கும்,=உபாயத்தில் அநுஷ்டானம் ஸக்ர்த் , இதிலத்யவஸாயம்யாவச்சரீரபாதம், உபாயத்தில்ருசியாவதாத்மபாவி, ஒரொன்றிலநுக்தமாய் அவச்யம் ஜ்ஞாதவ்யங்களான அர்த்தவிசேஷத்களுக்கு விவரணமாகையாலே ரஹஸ்யத்ரயமு மொருவனுக்கு ஜ்ஞாதவ்யமாகக்கடவது.=எத்தைஎது விவரிக்கிறதென்னில்,- ஸவிபக்திகமான ஆரத்தை உகாரமகாராக்ஷரத்வயமும் விவரிக்கிறது, அவ்வக்ஷரத்வயத்தையும் மந்த்ரசேஷபதத்வயமும் விவரிக்கிறது, அப்பதத்வயத்தையும், த்வயத்தில் வாக்யத்தையும்விவரிக்கிறது. அவ்வாக்யத்வயத்தையும் ச்லோகத்திலர்த்தத்வயமும் விவரிக்கிறது, அதில் அகாரத்தை அக்ஷரத்வயத்தில் ப்ரதமாக்ஷரம் விவரிக்கிறது, விபக்தியை மகாராக்ஷரம் விவரிக்கிறது, இதில்ப்ரதமாக்ஷரத்தை ப்ரதமபதம்விவரிக்கிறது, அநந்தராக்ஷரத்தை அநந்தரபதம்விவரிக்கிறது, ப்ரதமபதத்தை ப்ரதமவாக்யம்விவரிக்கிறதுஅநந்தரபதத்தை ஆநந்தரவாக்யம்விவரிக்கிறது, இதில் பூர்வவாக்யத்தை பூர்வார்த்தம்விவரிக்கிறது, உத்தரவாக்யத்தை உத்தரார்த்தம்விவரிக்கிறது.

இதில்சேஷத்வப்ரய்ஸம்பந்தியைச்சொல்லுகிற அசார்த்துக்கு அநந்யசேஷத்வவாசகமான உகாரம் விவரணமாகிறபடியென்னென்னில் ;- அகாரவாச்யனுடையசேஷித்வம் ஆச்ரயாந்தரங்களிலும் கிடக்குமோ, அநந்யஸாதாரணமாயிருக்குமோ என்று ஸந்திக்தமானால், அதினுடைய அநந்யசாதாரணத்வப்ரகாசகமாகையாலே, உகாரம் அகாரவிவரணமாகிறது. எங்ஙனேயென்னில் , - உகாரத்தில் சொல்லுகிறசதேநனு

டைய வநந்யார்ஹ ஶேஷத்வம் ஸித்திப்பது - அதுக்கு ப்ரதிஸம்பந்தியான சேஷித்வம் ஓரிடத்திலே யிளைப்பாறில். அங்ஙனன்றியிலே அநேகம் சேஷிகளாகில் அநந்யார்ஹசேஷத்வம் ஸித்தியாது; அந்யராயிருப்பார் சில சேஷிகளுண்டாகில் அந்யசேஷத்வம் ஸித்திப்பதொழிய வநந்யார்ஹசேஷத்வம் ஸித்தியாதே: ஆகையாலே அகாரவாச்யனுடைய ஸமாப்யதிகதாரித்ர்யத்தைச் சொல்லிற்றாயிற்று. சதுர்த்தியிற்சொல்லுகிற சேஷத்வத்துக்கு ஆச்ரயவிசேஷப்ரகாசகமாய்க்கொண்டு விவரணமாகிறது மகாரம்; நிராச்ரயமான தர்மத்துக்கு ஸ்திதியில்லையே; பகவத்வ்யதிரிக்தனைத் தன்னோடு பிறரோடு வாசியற அந்யராகச் சொல்லி அவர்களுக்கு அநந்யார்ஹன் இச்சேதநனென்கிறது-உகாரம்;இதில் கழியுண்கிற தேவதாந்தராதி மாத்ரத்தாலே அந்யசப்தத்துக்கு பூர்த்தியில்லாமையாலே அவ்வந்யசப்தத்தி லந்விதமான தன்னையும் கழித்து அநந்யார்ஹதையைப் பூரிக்கிற முகத்தாலே உகாரவிவரணமாகிறது நமஸ்ஸப்தம். [illegible] - என்கிறபடியே ஸ்வரக்ஷணத்தில் ப்ராப்தியில்லாத அத்யந்தபாரதந்த்ர்யத்தைச் சொல்லுகிறது-நமஸ்ஸப்தத்திலே யிறே. ஆகையாலே உகாரவிவரணமாகிறது நமஸ்ஸப்தம். சேஷத்வத்துக்கு ஆச்ரயவிசேஷ ப்ரகாசகமான மகாரவாச்யனுடைய சேஷத்வபூர்த்தி ப்ரகாசிப்பது,"[illegible]" "அகிஞ்சித்கரஸ்யசேஷத்வாநுபபத்தி:" என்கிறபடியே கிஞ்சித்காரத்தாலே யாதல் ஆகையாலே, கிஞ்சித்கார ப்ரகாசகமாய்க்கொண்டு மகாரவிவரணமாகிறது - நாராயணபதம்; அத்யந்தபாரதந்த்ர்யப்ரயுக்தமாய் வருகிற வுபாயவிசேஷத்தினுடைய ஸ்வரூபமென்ன, இதிலிழிகைக்கு ஏகாந்தமான துறையென்ன,அவ்வுபாயவிஷயமாகச்செய்யவேண்டு மம்சமென்ன, இவற்றை ப்ரகாசிப்பிக்கையாலே * நமஸ்ஸப்தவிவரணமாகிறது - த்வயத்தில் பூர்வவாக்யம்; கைங்கர்யப்ரதிஸம்பந்தி ஒரு மிதுநமென்னு மிடத்தையும் அதுக்குக் களையான அம்சத்தையுங் கழித்துத் தருகையாலே நாராயணசப்தத்துக்கு விவரணமாகிறது - உத்தரவாக்யம்; அவ்வுபாயஸ்வீகாரம் ஸாதநாந்தர நிவர்த்தி பூர்வகமாகையாலே தத்ப்ரகாசகமாய்க்கொண்டு பூர்வவாக்யத்துக்கு விவரணமாகிறது-பூர்வார்த்தம்; உத்தரவாக்யத்தில் சொன்ன ப்ராப்யஸித்தி விரோதிநிவர்த்தி பூர்வகமாகக்கடவதென்று விவரிக்கிறது - உத்தரார்த்தம்; ஸர்வாதிகாரமாயும் அதிக்ர்தாதிகாரமாயும் ஆசார்யருசி பரிக்ர்ஹீதமாயு மிருந்துள்ள வாக்யத்வயத்தில் பூர்வவாக்யம் ப்ராபகமாயும் உத்தரவாக்யம் ப்ராப்யமாயுமிருந்ததே யாகிலும் பூர்வவாக்யம் பதத்ரயாத்மகமாயும் அர்த்தத்ரயாத்மகமாயுமிருக்கும். இதில்- "[illegible]" என்கிறப்ரதேசம்புருஷகாரம்;

அ

"𑌶𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇" என்கிறபதம் அதிகாரிக்ர்த்யம்; நடுவு "𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌚𑌰𑌣𑍌" என்கிற பதம் உபாயம்; உபாயம் புருஷகாரஸாபேக்ஷமாயும் அதிகாரிஸாபேக்ஷமாயு மிருக்கும்; பலத்தில்வந்தால் அந்யநிரபேக்ஷமாயிருக்கும்: உத்தரவாக்யமும் பதத்ரயாத்மகமாயிருக்கும்; இதில் "ஆய" என்கிறவிடம் - கைங்கர்யத்தைச்சொல்லுகிறது; இதுக்குக்கீழ் கைங்கர்யப்ரதிஸம்பந்தியைச் சொல்லுகிறது; மேலில்பதம் கைங்கர்யத்தில் களையைச்சொல்லுகிறது.

## நூற்றுமுப்பத்தஞ்சாம்வார்த்தை.

நம்மாசார்யர்கள், திருமந்த்ரத்தையும் சரமச்லோகத்தையும் த்வயத்திலே யநுஸந்திக்கும்படி; - இதுதான் உபாயோபேயமிரண்டையுஞ் சொல்லுகையாலே த்வயமென்கிறது. திருமந்த்ரத்தில் உபேயப்ராதாந்யேந சொல்லுகிற வர்த்தத்தையும், சரமச்லோகத்தில் உபாயப்ராதாந்யேந சொல்லுகிறவர்த்தத்தையும் இதில் பூர்வவாக்யத்தாலும் உத்தரவாக்யத்தாலுஞ் சொல்லுகிறது. எங்ஙனே யென்னில்; – அகாரத்தில் ஸ்வரூபாநுபந்தித்வத்தால் சொல்லுகிற லக்ஷ்மீஸம்பந்தத்தையும், நாராயணபதத்திலே பிராட்டிக்கும் அந்தர்ப்பாவமுண்டாகையாலே அவ்வழியாலே வருகிற லக்ஷ்மீஸம்பந்தத்தையும், த்வயத்தில் உத்தரவாக்யத்தில் "𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇" என்கிறபதத்தாலே சொல்லுகிறது. அகாரத்திலே சொல்லுகிற ஸர்வரக்ஷகத்வத்தையும், இதின் விவரணமான நாராயணசப்தார்த்தத்தையும், உத்தரவாக்யத்தில் நாராயணபதத்தாலே சொல்லுகிறது. அகாரத்திற்சொல்லுகிற தாதர்த்த்யத்தையும், மகாரத்திற்சொல்லுகிற ஜீவஸ்வரூபத்தையும், அவதாரணத்தாலே சொல்லுகிற அந்யசேஷத்வ நிவ்ர்த்தியையும், இதின் விவரணமான நமஸ்ஸில் சொல்லுகிற அத்யந்தபாரதந்த்ர்யத்தையும், தத்ப்ரவ்ர்த்தியையும் ப்ரார்த்திக்கிற சதுர்த்தியர்த்தத்தையும், உத்தரவாக்யத்தில் சதுர்த்தியாலே சொல்லுகிறது; திருமந்த்ரத்தில்நமஸ்ஸப்தார்த்தமான அஹங்காரமமகார நிவ்ர்த்தியை உத்தரவாக்யத்தில் நமஸ்ஸாலே சொல்லுகிறது; ஆக, திருமந்த்ரம் த்வயத்திலுத்தரவாக்யத்திலே யந்வயித்தது.

இனி சரமச்லோகம் பூர்வவாக்யத்திலே அந்வயிக்கும்படிசொல்லுகிறது; - "𑌮𑌾𑌂" "மாம்" என்கிறபதத்தில் ஸ்வரூபாநுபந்தித்வத்தாலே சொல்லுகிற லக்ஷ்மீஸம்பந்தத்தையும், "𑌅𑌹𑌂" "அஹம்" என்கிறவிடத்தில் ஸ்வரூபாநுபந்தித்வத்தாலே சொல்லுகிற லக்ஷ்மீஸம்பந்தத்தையும், த்வயத்தில் பூர்வவாக்யத்தில் * 𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍍 - ஸ்ரீமத்பதத்தாலே சொல்லுகிறது; "𑌮𑌾𑌂" "மாம்" என்கிறபதத்தில் ஸௌலப்யத்தையும், "𑌅𑌹𑌂" "அஹம்" என்கிற

பதத்திற் சொல்லுகிற ஸ்வாமித்வத்தையும் இதில் நாராயணபதத்தாலே சொல்லுகிறது; "మామ్" என்கிற பதத்திற்சொல்லுகிற ஸேநாதூளியும், சிறுச்சதங்கையும், தாங்கினவுழவுகோலும், பிடித்த சிறுவாய்க்கயிறும், நீட்டின திருவடிகளுமாய்நிற்கிற விக்ரஹத்தை, த்வயத்தில், "శరణం" "சரணௌ" என்கிறபதத்தாலே சொல்லுகிறது; * ఏక - ஏகசப்தத்தாற்சொல்லுகிற அவதாரணார்த்தத்தையும், * శరణ சப்தார்த்தத்தையும், "సర్వపాపేభ్యో మోక్షయిష్యామి మాశుచః" "ஸர்வபாபேப்யோமோக்ஷயிஷ்யாமி" என்கிற விரோதி நிவ்ர்த்தியையும், த்வயத்தில் * శరణ சப்தத்தாலே சொல்லுகிறது; "వ్రజ" "வ்ரஜ" என்கிறவிடத்தி லர்த்தத்தையும், "సర్వధర్మాన్ పరిత్యజ్య" "ஸர்வதர்மாந்பரித்யஜ்ய" என்கிற அர்த்தத்தையும், "త్వా" "த்வா" என்கிறவிடத்திற் சொல்லுகிற வதிகாரியையும், "ప్రపద్యే" என்கிற க்ரியாபதத்தாலே சொல்லுகிறது. தர்மத்யாகமங்கேயுண்டோவென்னில்; - உபாயஸ்வீகாரம் உபாயாந்தர நிவ்ர்த்திபூர்வகமாகவல்லது நில்லாமையாலே ஸ்வீகாரஞ் சொன்னவிடத்திலே த்யாகஞ்சொல்லிற்றாயிற்று. ஆக, சரமச்லோகம் த்வயத்தில் பூர்வவாக்யத்திலே யந்வயித்தது; ஆக திருமந்த்ரத்திலும் சரமச்லோகத்திலும் சொல்லுகிற வர்த்தம் த்வயத்திலே சேர அநுஸந்திக்கும்படி சொல்லிற்று; சரமச்லோகத்தாலே பூர்வகண்டத்தை விசதீகரிக்கிறது; திருமந்த்ரத்தாலே உத்தரகண்டத்தை விசதீகரிக்கிறது;- "మామ్, అహమ్" என்கிறபதங்களில் லக்ஷ்மீஸம்பந்தத்தை பூர்வகண்டத்தில் ஸ்ரீமத்பதத்தாலே சொல்லுகிறது; "మామ్, అహమ్" என்கிறபதங்களில் ஸௌசீல்யஸர்வஜ்ஞத்வாதிகளை த்வயத்தில் பூர்வகண்டத்தில் நாராயணபதத்தாலே சொல்லுகிறது; "మామ్" என்கிறபதத்தில் விக்ரஹத்தையும், "ఏకమ్" என்கிறபதத்தில்- அர்த்ததஃ வந்த அவதாரணத்தையும், "శరణం" என்கிறபதங்களி னர்த்தங்களையும், "ప్రపద్యే" என்கிறபதத்தாலே சொல்லுகிறது; சரமச்லோகத்தில் - శరణ சப்தத்தி லர்த்தத்தை இங்குத்தை శరణ சப்தத்தாலேசொல்லுகிறது; "సర్వధర్మాన్, పరిత్యజ్య, వ్రజ, త్వా, సర్వపాపేభ్యో మోక్షయిష్యామి, మాశుచః" என்கிறபதங்களி னர்த்தங்களை "ప్రపద్యే" என்கிற பதத்தாலே சொல்லுகிறது; அகாரத்தில் ஸ்வரூபாநுபந்தியான லக்ஷ்மீஸம்பந்தத்தையும், நாராயணபதத்தில்நாரசப்தத்தில்லக்ஷ்மீஸம்பந்தத்தையும், உத்தரகண்டத்தில் "శ్రీమతే" என்கிறபதத்தாலே சொல்லுகிறது; அகாரத்தினர்த்தத்தையும், நாராயணசப்தத்தினர்த்தத்தையும், இங்குத்தை நாராயணசப்தத்திற் சொல்லுகிறது; அகாரத்தில் சதுர்த்தியையும், உத்தரபத்தில் சதுர்த்தியையும், ப்ரணவத்தில் மகாரத்தையும், உத்தரகண்டத்தில் சதுர்த்தியாலே

சொல்லுகிறது; ப்ரணவத்தில் மத்யமாக்ஷரத்தையும், நமஸ்ஸிலர்த்தத்தையும், உத்தரகண்டத்தில் நமஸ்ஸாலே சொல்லுகிறது.

நூற்றுமுப்பத்தாறும்வார்த்தை.

மத்ஸ்யத்தினுடைய வாகாரமெல்லாம் ஜலமாயிருக்கிறாப்போலே ஸ்ரீமானுடைய வடிவித்தனையும் ஸ்ரீமயமா யிருக்குமென்று பெரியமுதலியாரருளிச்செய்வர்; ஆசார்யன்ப்ரமாதாவென்றும், அர்ச்சாவதாரம் ப்ரமேயமென்றும், த்வயம்ப்ரமாணமென்றும் அருளிச்செய்வர் உய்யக்கொண்டார்; ஸம்ஸாரவிஷதஷ்டனுக்கு ரஸாயநமாயிருக்குமென் றருளிச்செய்வர் மணக்கால்நம்பி; அதநனுக்கு மஹாநிதிபோலே என்றருளிச்செய்வர் பெரியமுதலியார்; க்ஷுதார்த்தனுக்கு அம்ர்தபாநம்போலே யென்றருளிச்செய்வர் திருமாலையாண்டான்; ஸ்தநந்தயப்ரஜைக்கு ஸ்தந்யம்போலே யென்றருளிச்செய்வர் திருக்கோட்டியூர்நம்பி; பதிவ்ரதைக்கு மங்கல்யஸூத்ரம்போலே யென்றருளிச்செய்வர் பெரியநம்பி; ராஜகுலத்துக்கு முடியும் மாலையும்போலே இப்ரபந்நனுக்கு த்வயோச்சாரணமென்றருளிச்செய்வர் ஸ்ரீபாஷ்யகாரர்; ஸம்ஸாரத்தில் இவ்வுபாயவிசேஷம் விலங்கைவிட்டவன்தலையிலே முடியைவைத்தாப்போலே யென்றருளிச்செய்வர் எம்பார்; ராஜகுமாரனுக்கு கர்ப்பூரநிகரம்போலே ப்ரபந்நனுக்கு ப்ரபத்தியைவிடில் நாக்குவற்றுமென்றருளிச்செய்வர் நம்பிள்ளை; எலுமிச்சம் பழங்கொடுத்து ராஜ்யம்பெறுவாரைப்போலேயென்று பணிப்பர் திருக்குருகைப்பிரான் பிள்ளான்; குருபரம்பரையை யொழிந்த ப்ரபத்தியும் ஸாதநாந்தரத்தோ டொக்குமென்றருளிச்செய்வர் முதலியாண்டான்; அந்தன்கையிலே சிந்தாமணிவந்தாப்போலே யென்றருளிச்செய்வர் பிள்ளையுறங்காவில்லிதாஸர்.

நூற்றுமுப்பத்தேழாம்வார்த்தை.

ப்ரதமபதத்தில் பாணிக்ரஹணம், மத்யமபதத்தாலே உடைமணநீர்; த்ர்தீயபதத்தாலே * சதுர்த்திபடுக்கையுமாயிருக்கும்.

நூற்றுமுப்பத்தெட்டாம்வார்த்தை.

க்ஷேத்ரஜ்ஞக்ர்த்யமான வரம்பையிட்டுக்கொடுக்கிறது ப்ரதமபதம்; இடைஞ்சல்வாராமல் களைபறித்துக்கொடுக்கிறது மத்யமபதம்; விளைந்து ஸ்வாமிபோகங்கொடுக்கிறது த்ர்தீயபதம்.

நூற்றுமுப்பத்தொன்பதாம்வார்த்தை.

திருமந்த்ரத்துக்கு தாத்பர்யார்த்த மேது, வாக்யார்த்தமேது, ப்ரதாநார்த்தமேது, அநுஸந்தாநமேதென்னில்; தாத்பர்யார்த்தம் ஸகலவேதசாஸ்த்ர ருசிபரிக்ர்ஹீதம் ; வாக்யார்த்தம்

---

* இவ்விடத்துக்குச்சரியான பாடத்தை கோசாந்தரங்களில் கண்டுகொள்வது.

ப்ராப்யஸ்வரூபநிரூபகம்; ப்ரதாநார்த்தம் ஆத்மஸ்வரூபநிரூபகம்; அநுஸந்தாநம் ஸம்பந்தாநுஸந்தாநம். த்வயத்துக்கு தாத்பர்யார்த்தம் ஏது, வாக்யார்த்தமேது, ப்ரதாநார்த்தமேது, அநுஸந்தாநமேதென்னில்; - தாத்பர்யார்த்தம் ஆசார்யருசிபரிக்ர்ஹீதம்; வாக்யார்த்தம் ப்ராப்யப்ராபக ஸ்வரூபநிரூபணம்; ப்ரதாநார்த்தம் மிதுநகைங்கர்யப்ராதாந்யம்; அநுஸந்தாநம் – ஸ்வதோஷாநுஸந்தாநம். சரமச்லோகத்துக்கு தாத்பர்யார்த்தமேது, வாக்யார்த்தமேது, ப்ரதாநார்த்தமேது, அநுஸந்தாநமேதென்னில்; – தாத்பர்யார்த்தம் சரண்யருசிபரிக்ர்ஹீதம்; வாக்யார்த்தம் ப்ராபகஸ்வரூபநிரூபணம்; ப்ரதாநார்த்தம் ஈச்வரஸ்வரூபநிரூபணம்; அநுஸந்தாநம் ஸௌலப்யம்.

### நூற்றுநாற்பதாம்வார்த்தை.

ஆச்ரயணஞ்சொல்லி, ஆச்ரயிதாவைச்சொல்லி, ஆச்ரயணீயன் வேஷஞ்சொல்லி, அப்ர்தக்ஸ்திதித்யோதநித்யயோகஞ்சொல்லி, தஸ்மிந்நேவபராதிசயஞ்சொல்லி, ப்ரபாப்ரபாவதோரிவசேஷ சேஷித்வஞ்சொல்லி, ஸதாபூர்த்திசொல்லி, ஆக லக்ஷ்மீவிசிஷ்டன் ப்ரபத்தவ்யனென்னு மிடஞ்சொல்லி, சிதசித்ஸ்வரூபஞ்சொல்லி, உபயமும் பரனுக்கு சரீரத்வாராசேஷமென்று சொல்லி, தேஹவத் தேஹிநாநாத்வஞ்சொல்லி, தேஹிநோர்ஜ்ஞாநதைகாகாரதயாஸமமொன்று சொல்லி, ஆகையாலே ஸ்வபாவைச்யஞ் சேரச்சொல்லி, ஸ்வரூபைக்யத்தை நிஷேதித்து பஞ்சாவஸ்த்தையிலும் ஸங்கிச்ர்ஷ்டாவஸ்த்தாவஸ்த்திதத்திலே ப்ரபத்தியென்றுசொல்லி, ஆத்மநாம் பரஸ்யசப்ராப்தி சொல்லி, குணகுணிபேதஞ் சொல்லி, * கல்யாணகுணகதாநத்வஞ் சொல்லி, ஹேயகுண நிஷேதஞ் சொல்லி, ஷட்விம்சகத்வஞ்சொல்லி, புருஷகாரநிரபேக்ஷமாம்படியான வாத்ஸல்யாதிகுணங்கள் சொல்லி, நித்யத்வஞ் சொல்லி, ததப்ராக்ர்த த்ரவ்யாச்ரயமென்றுசொல்லி, பரபூர்த்திசொல்லி, ஸந்நிதி சொல்லி, வடிவழகு சொல்லி, ஸர்வ ஸாமாநாதிகரண்யஞ் சொல்லி, ஸௌலப்யஞ்சொல்லி, ப்ரபத்தாவாரென்றுசொல்லி, ப்ரபத்தவ்யன் நானென்றுசொல்லி, அநந்யப்ரத்வோபாயஞ்சொல்லி, ஆஸ்மை யென்று சொல்லி, அஸ்மா னென்று சொல்லி, அஸ்யவென்று சொல்லி, அஸ்மிந் என்றுசொல்லி, ப்ராப்யஞ்சொல்லி, ப்ராபகஞ்சொல்லி, கத்யர்த்தத்வாரா புத்த்யர்த்தஞ்சொல்லி, மாநஸப்ரபத்தியினுடைய முக்யதைசொல்லி, ஸப்ரகார சரணாகதி யுபாயமென்றுசொல்லி, ஸப்ரகாரலக்ஷ்மீஸஹசரமான வஸ்துவினுடைய வுபாயத்வஞ்சொல்லி, பரவிசேஷணங்களுடைய ப்ராப்யமென்றுசொல்லி, விசேஷ்யப்ரதிபத்தியிலும் விசேஷணப்ரதிபத்தி பரஸ்யப்ரீதிஜநகமென்று சொல்லி, ஸப்ரகார

நாராயணனுக்கென்றுசொல்லி, ஏவம்விதனுக்கே அஹமர்த்தபூதனான நான், ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்த்தோசித ஸர்வவித கைங்கர்யத்தையும் பண்ணுகிறேனென்று - ப்ரத்யகாத்மநः பலஞ்சொல்லி, ப்ரபத்தியி லுபாயபுத்தி யுபசாரஸித்தை என்றுசொல்லி, பரனேபரமோபாயமென்றுசொல்லி,ப்ரபத்தி உபாயமென்றுசொல்லி, இவை உபாயமாம்போது பரஸாபேக்ஷமென்றுசொல்லி, நிரபேக்ஷோபாயம் அவனேயென்றுசொல்லி,அதஏவ உபாயாநவத்யதை சொல்லி, ஒன்றுக்கே உபாயோபேயத்வகாரணவத்வம்கடிக்குமென்று தயாக்ஷாந்த்யாதிகுணங்களிலே ஸங்நிஹிதனுக்குஉபாயத்வஞ்சொல்லி, தேசவிசேஷநிலயனுச்கு உபேயத்வஞ்சொல்லி, உபயவிபூதியு மவன்தாயிருக்க ஒருவிபூதியில் நின்று மொருவிபூதிக்குப் போகைமோக்ஷ மென்பானேனென்னில் - அது மஹாநஸஸ்தாந போகஸ்த்தாநஸ்தித பர்த்ர் பார்யாஸம்யோகந்யாயமென்றுசொல்லி, அவனே ப்ராபகனுனால் உபாயவிதாநநத்வாரா தான் ப்ராப்தியென்பானேனென்னில் - மஹாநஸத்திலே புஜிக்கும்போது பழையவேஷமேபோக்யம், போக்யஸ்த்தாநத்திலே புஜிக்கும்போது உடுத்தபுடைவையையவிழ்த்துபுஜிக்கவேண்டுமென்றுசொல்லி, ரத்நஸ்வீகாரம்பண்ணும்போது ருஷிகையில்நின்றும் வாங்கி மஞ்சூஷாந்தரத்திலே யிடவேண்டுமென்று சொல்லி, த்ரிவித ப்ரபந்நனுக்கும் தேஹபாதஸமநந்தரம் பரமபுருஷார்த்தலக்ஷண மோக்ஷஞ்சொல்லி, மற்றையிருவருக்கும் விளம்ப பலஞ்சொல்லி, ராஜா அக்ர்தாபரணங்கள் தன்னதானபோது எடுத்துப் பூணுமத்தனையென்று சொல்லி, இச்சாப்ரவர்த்தகத்வஞ்சொல்லி, அல்லாதபோது ஈச்வரத்வந்தானில்லையென்னு மிடஞ்சொல்லி, இத்தலையில் கைம்முதலறுகை அவன் கடாக்ஷத்துக் கடியென்றுசொல்லி, இத்தலையில் விச்வாஸம்பிறக்கையாவது - அருளவனுடைய க்ருபைக்கே க்ருபைபிறப்பது துதிக்கையமுந்திறலென்று சொல்லி, கர்மாநுபவம் அவனுடைய சிக்ஷையென்றுசொல்லி, சிக்ஷிதனானவாறே பித்ர்ப்ரஸாதம் பிறக்குமாப்போலே “ధాతుప్రసాదాత్” (தாதுப்ரஸாதாத்) என்கிற பேறுசொல்லித் தலைக்கட்டுகிறது - ப்ரபத்திவாக்யத்தால்.

நூற்றுநாற்பத்தோராம்வார்த்தை.

நம்மாசார்யர்கள் திருமந்த்ரத்தை விசதமாக அநுஸந்திக்கும்படி த்வயம். இது த்வயமென்று திருநாமமாக வேண்டிற்று - உபாயோபேய வாசகமான வாக்யத்வயத்தை யுடைத்தாகையாலே; இதில் பூர்வவாக்யம் உபாயபரமாயிருக்கும்; உத்தரவாக்யம் உபேயபரமா யிருக்கும்; பூர்வவாக்யம் மூன்று பதமாயிருக்கும்; உத்தரவாக்யம் மூன்றுபாதமாயிருக்கும்; ஸ்ரீமந் நாராயண சரணௌ என்றும், சரணம் என்றும், ப்ரபத்யே

என்றும், ஸ்ரீமதே, என்றும், நாராயணாய என்றும், நம:, என்றும்; இதில் ஸ்ரீ, என்கிற திருநாமம், "ச்ரிஞ், ஸேவாயாம்" என்கிற தாதுவிலே யாகையாலே, ச்ரயதே, ஸ்ரீயதே, இதி ஸ்ரீ: என்கிற வ்யுத்பத்தித்வயத்தாலே - ஸேவிக்கும், ஸேவிக்கப்படுமென்கிறது. இவ்வர்த்தம் ஸாபேக்ஷமாகையாலே, யாரை யாராலே என்னவேண்டிவரும், அவைதான் அவளுக்கு ஸ்வரூபாநுரூபமாயிறே யிருப்பது. எங்ஙனே யென்னில்;- *ஸர்வபூதாநாம் ஈஸ்வரியாகையாலே, த்ரிவிதசேதநராலும் ஸேவிக்கப்படும்; விஷ்ணுபத்நியாகையாலே, தான் அவனை ஸேவிக்குமென்கிறது; ஆகையாலே தன்னையொழிந்த ஸகலாத்மாக்களுடைய ஸ்வரூபஸ்தித்யாதிகள் தன்னுடையகடாக்ஷாதீநமாயிருக்கும்; தன்னுடைய ஸ்வரூபஸ்தித்யாதிகள், அவனுடைய கடாக்ஷாதீநமாயிருக்கும். ஆகையாலே தன்னையொழிந்தார்க்குத் தான் ஸ்வாமிநியாய் அவனுக்கு பரதந்த்ரையாயிருக்கையே இவளுக்கு ஸ்வரூபமென்னுமிடம் சொல்லுகிறது. இதுதான், வ்யுத்பத்தி ஸித்தமேயன்று, பரமார்த்தஸித்தமும். இப்படி வ்யுத்பத்தித்வயத்தாலும், உபயஸம்பந்தஞ் சொல்லுகிறது: இதுதான் புருஷகாரத்திலே நோக்காயிருக்கும். புருஷகாரஞ்செய்கைக்கு இத்தலையில் பந்தமும், அது வாய்க்கைக்கு அத்தலையில் ஸம்பந்தமுஞ் சொல்லுகையாலே, வரிக்குமவனை, இவனைக் கைக்கொண்டளீரென்னும் பிராட்டி, கைக்கொண்டருளுகையாவதென் என்னுமேயவன், ஆபிமுக்யம் பண்ணினனென்னுமே இவள், ஆகில் அபராதஞ்செய்யப் பார்த்தபடி யென்னென்னுமே அவன், அதுவென் இனி என்னுமே யிவள், அதுவென்னென்றதுக்குப்பொருளென்னென்னுமேயவன், பொருளைக்கேளீர் திருவடி திருவநந்தாழ்வானுபாதி உம்மை யநுபவிக்கைக்குஇட்டுப் பிறந்துவைத்து உம்முடைய பக்கல்விமுகனாய், ஶப்தாதிவிஷயப்ரவணனாய் தன்கார்யமானஜநநாதிகளிலே புக்கு அநாதிகாலம் க்லேசப்பட்டுப்போராநிற்க, உம்முடைய பாக்யத்தாலே இற்றைய்ளவும் ஸித்தியாத ஆபிமுக்யம், இன்று ஒருபடி ஸித்தித்தால் அபராதத்தை உம்முடைய க்ர்பைக்கு விஷயமாக்கி உம்முடைய ஶீலாதிகுணங்களையே கிட்டுக்கைக் குறுப்பாக்கும் யோக்யதை சொல்லுகிறது. எம்பெருமான்பக்கல் யோக்யதையிறே உபாயவரணம்பண்ணுகிறது. இப்படி வரணீயஸ்வரூபத்தில் புருஷகார பாவத்துக்கு அநுஷ்டாநமுண்டோவென்னில், ச்ருணோதீதி ஸ்ரீ:, என்றும், ச்ராவயதீதி ஸ்ரீ:, என்னு மிவ்விரண்டாலும்-ஸ்வரூபத்தில் அநுஷ்டாந முண்டென்கிறது. ச்ருணோதி என்கிறது- கேட்குமென்றபடி. கேட்கிற தென்னென்னில்; - ஆச்ரயிக்கவிழிகிற அதிகாரி தன்னுடைய அபராதங்களையும், எம்பெருமானு

டைய ஸ்வாதந்த்ர்யத்தையும் அநுஸந்தித்து அவனைக் கிட்டுகை யென்பதொன்றில்லை யாகாதேயென்றுஇவன்பிற்காலித்தல், நீ பிற்காலிக்கிறதென் உனக்கு ஆபிமுக்யமன்றோ வேண்டுவது, அபராதங்களைப் பொறுப்பிக்கைக்கு நானிருந்தேன், நீ அஞ்சாதேஎன்று சொல்லுகை;ச்ராவமதி என்கிறது - கேட்பிக்குமென்றபடி. அதாவது-இவனுடைய அபராதங்களைக் கணக்கிட்டுநீர் இப்படிதள்ளிக் கதவடைத்தால் இவனுக்கு வேறொருபுகலுண்டோ, உமக்கும் இவனுக்கும் உண்டான ஸம்பந்த விசேஷத்தைப் பார்த்தால், (உறவேல் நமக்கிங்கொழிக்கவொழியாது) என்கிறபடியே குடநீர் வழித்தாலும் போகாததொன்றன்றோ, ஸ்வம்மான விவனை லபிக்கை ஸ்வாமியான உம்முடைய பேறுயன்றோ விருப்பதென்று.

## நூற்றுநாற்பத்திரண்டாம்வார்த்தை.

விஷயம் - ஆத்மா; விஷயீ - ஈஸ்வரன்;விஷயஸூத்திகர்த்தா- ஆசார்யன்; விஷயாநுபவவர்த்தகைபிராட்டி; விஷயாநுபவஸஹாயபூதர்-ஸ்ரீவைஷ்ணவர்கள்.

## நூற்றுநாற்பத்துமூன்றாம்வார்த்தை.

அதிகாரிக்ர்த்ம், ஆசார்ய க்ர்த்யம், புருஷகார க்ர்த்யம், உபாய க்ர்த்யம், என்று நாலு. இதில்,அதிகாரி க்ர்த்யமாவது,-ஆசார்யசுச்ரூஷையும், க்ர்தஜ்ஞதையும், உபாயத்தில் அத்வஸாயமும்; உபாய க்ர்த்யமாவது, - விரோதிநிவர்த்தகத்வமும், ப்ராப்யஸித்திகரத்வமும்; புருஷகாரக்ர்த்யமாவது, - அபராதக்ஷாமகத்வமும், கைங்கர்ய வ்ர்த்தகத்வமும்; ஆசார்ய க்ர்த்யமாவது,-அஜ்ஞாதஜ்ஞாபநமும், ருசிப்ரவர்த்தகத்வமும்;

## நூற்றுநாற்பத்துநாலாம்வார்த்தை.

எம்பெருமான் ஜகத்தை ஸ்ர்ஷ்டிக்கிறத்துக்கு ப்ரயோஜநம் சேதநருக்கு மோக்ஷத்தில் இச்சைபிறக்கை;அவதாரங்களுக்கு ப்ரயோஜநம் - மோக்ஷப்ரதாநம் பண்ணுகை; மோக்ஷப்ரதாநம் பண்ணுவது ஜ்ஞாநப்ரதாநம்பண்ணினால்; ஜ்ஞாநப்ரதாநம் பண்ணுவது ஆசார்யோபதேசமுகத்தாலே;ஆசார்யன் இருவருக்குமுபகாரகன். எங்ஙனேயென்னில்; - சேதநனுக்கு சேஷியையுபகரித்தான், சேஷிக்கு சேதநனையுபகரித்தான். இப்படியிருக்கிற வாசார்யனுக்கு ப்ரத்யுபகாரம் பண்ணலாவது - விபூதிசதுஷ்டயமும் ஈச்வரத்வயமு முண்டாகில். ஆசார்யனாவான் - அர்த்தகாமங்களில் நசையறுத்து பகவத்பாகவத விஷயங்களிலே மிகவும் நசையுண்டாக்குமவன்.

நூற்றுநாற்பத்தஞ்சாம்வார்த்தை.

நான் ஒருநூலில் வைத்துச் சொல்லென்றால் சொல்லும் நூலில் மாலைகள் ஒருமுமுக்ஷுவுக்கு பாவநமுமாய் போக்யமுமாயிருக்குமென்று ஆச்சான்பிள்ளைவார்த்தை.

நூற்றுநாற்பத்தாறாம்வார்த்தை.

ஆச்சான்பிள்ளைசிறியதாயார் பெரியபிள்ளையையும் ஆச்சான்பிள்ளையையும் ஸேவித்துப்போருகிறகாலத்திலேஇவள் சோகார்த்தையாக; ஆச்சான்பிள்ளை, நீசோகிக்கிறதென்னென்ன; அநாதிகாலம் பாபவாஸனைகளாலே ஜந்மாதிகளிலே ஈச்வரன் இன்னம் என்னைத்தள்ளப்புகுகிறானோவென்று பயப்பட்டுநின்றேனென்ன; கெடுவாய்!இது ஆர்கேடென்றிருந்தாய், உனக்கு ஸ்ர்ஷ்டிக்கவேண்டுமோ, அவதரிக்கவேண்டுமோ; (பிறப்பில்பல்பிறவிப்பெருமான்) என்றும், (பொருளென்றிவ்வுலகம்படைத்தவன்) என்றும், (సమ్భవామియుగేయుగే) (ஸம்பவாமியுகேயுகே) என்றும் - ஒருவனைப்பிடிக்க வூரைவளையுமாப்போலே * அகிலஜகத்ஸ்வாமியாயிற்று-அஸ்மத்ஸ்வாமியாகைக்கன்றோ என்றருளிச்செய்தார்.

நூற்றுநாற்பத்தேழாம்வார்த்தை.

ஜ்ஞாநப்ரதன் ஆசார்யன், ஜ்ஞாநவர்த்தகர் ஸ்ரீவைஷ்ணவர்கள், ஜ்ஞாநவிஷயம் எம்பெருமான், ஜ்ஞாநபலம் கைங்கர்யம், பலத்தினினிமை பாகவதகைங்கர்யம். ஶிஷ்யனுக்கு ஆசார்யனுடைய ஸுப்ரஸாதம் அப்ரஸாதமாகவும்,அப்ரஸாதம் ஸுப்ரஸாதமாகவும் வேணும்.

நூற்றுநாற்பத்தெட்டாம்வார்த்தை.

ஆசார்ய விஷயத்தில் க்ர்தஜ்ஞதை, விஸ்வாஸம், ப்ரேமம், விஶ்லேஷபீருவாகை, ஸம்ஶ்லேஷ விஷயம், மங்களாஶாஸநம், கதிசிந்தனை அநுபவேச்சை, இவையித்தனையுமுடையவன் ஆத்மஜ்ஞாநமுடையவனாகிறான்.

நூற்றுநாற்பத்தொன்பதாம்வார்த்தை.

அர்த்தப்ரவணனுக்கு பந்துவுமில்லை, குருவுமில்லை; விஷயப்ரவணனுக்கு லஜ்ஜையுமில்லை,பயமுமில்லை; க்ஷுத்துநலிந்தவனுக்கு விவேகமும் இல்லை, நியதியுமில்லை; ஜ்ஞாநிக்கு நித்ரையுமில்லை, ஸுகமுமில்லை.

நூற்றைம்பதாம்வார்த்தை.

திருக்கச்சிநம்பி ஸ்ரீபாதத்திலே ஒரு ஸ்ரீவைஷ்ணவர் ஆஶ்ரயித்து அடியேனை அங்கீகரித்தருளவேணுமென்ன; நம்பி, பெருமாளுக்கு விண்ணப்பஞ்செய்ய, பெருமாளும், நம்மை அவனுக்குச்

சொல்லுமென்ன, நம்பியும் பெருமாள் ப்ரபத்தியை அருளிச்செய்ய, ஸ்ரீவைஷ்ணவரும், க்ர்தார்த்தராய் க்ஷணகாலமும் நம்பியைப் பிரியாதே ஸேவிக்க, இவருடைய ப்ராக்ர்திபந்துக்கள் இதுகண்டு பொறுக்கமாட்டாமல் இவரைப்பிரித்துக்கொண்டுபோய் ப்ராயஸ்சித்தம்பண்ணவேணுமென்ன, இவரும் ஆகில், அநந்தஸரஸ்ஸில் தீர்த்தமாடி வாராநின்றேனென்று போந்து, நம்பிஸ்ரீபாதத்திலே தண்டனிட்டு நிற்க, நீர் போகாவிட்டதென் அவர்கள்பொல்லாங்கு சொல்லாமே யென்ன, அத்தனையோ அடியேனுக்கு என்று ஸோகம் பொறுக்கமாட்டாமல், ஸோகார்த்தராய் பரமபதத்திற்கு எழுந்தருளினார்.

### நூற்றைம்பத்தோராம்வார்த்தை.

அநந்தாழ்வான் எச்சானுக்கு அருளிச்செய்தவார்த்தை; இவ்வாத்மாவாகிற பெண்பிள்ளையை, ஆசார்யனாகிறபிதா, எம்பெருமானாகிற வரனுக்கு, குருபரம்பரையாகிற புருஷகாரத்தை முன்னிட்டு, த்வயமாகிற மந்த்ரத்தைச்சொல்லி, உதகம்பண்ணிக்கொடுத்தான்.

### நூற்றைம்பத்திரண்டாம்வார்த்தை.

ஆச்சான்பிள்ளை ஸ்ரீபாதத்திலே, ஒரு ஸ்ரீவைஷ்ணவர், அஹங்காராதிகள் நடையாடிக்கொண்டுபோருகிற அடியேனுக்கு அக்கரைப்பட வழியுண்டோவென்று கேட்க அருளிச்செய்த வார்த்தை;-போக்தாவானவன், போக்யபதார்த்தத்தை குலங்கொண்டே ஸ்வீகரித்துவைத்து, போககாலம் வந்தவாறே குலங்கறுத்து மணியை புஜிக்குமாப்போலே, ஆசார்யவரணம்பண்ணி சரணாகதனாயிருப்பானொரு அதிகாரிக்கு அஹங்காராதிகள் நடையாடிற்றாகிலும் கைவிடாதேஸ்வீகரித்து, (தீர்ந்தவடியவர்தம்மைத் திருத்திப்பணிகொள்ளவல்ல) என்கிறபடியே இவனுடைய அஹங்காராதிகளாகிற சேற்றைக்கழுவிப் பொகட்டு போக்யமானவஸ்துவை, போக்தாவான எம்பெருமான்தானே புஜிக்குமென்று நினைத்திரீர் என்றருளிச்செய்தார்.

### நூற்றைம்பத்துமூன்றாம்வார்த்தை.

எங்களாழ்வான்; - ஆசார்யனாவான் அஹங்காரத்தை விட்டு அழிச்சாட்டத்தைவிட்டு அலமாப்பைவிட்டு அகாரார்த்தமான அந்தர்யாமிக்கேயற்று அர்ச்சாவதாரத்தை ஆச்ரயித்து ஆநந்தியாகப்போருமவன்; அல்லாதான், ஒருவனுக்குக் குடிமகனாய் லோககுருவாயிருக்க லோகத்துக்கடைய குடிமகனாகாநின்றான்.

### நூற்றைம்பத்துநாலாம்வார்த்தை.

நாராயணனைப்பற்றி நாடுபெறலாயிருக்க நாரங்களைப்பற்றி நரகவாஸிகளாகாநின்றார்கள், எம்பெருமானைப்பற்றி ஏற்றம்பெறலாயிருக்க ஏழைகளைப்பற்றி எளிவரவுபடாநின்றார்கள், ஸ்ரீவைஷ்ணவர்களைப்பற்றிச் சீர்மைபெறலாயிருக்க சில்வானரைப்பற்றிச் சீர்கேடாகாநின்றார்கள், ஆசார்யனைப்பற்றி அம்ர்தபாநம் பண்ணலாயிருக்க அஜ்ஞரைப்பற்றி அநர்த்தப்படாநின்றார்கள், மந்த்ரத்தைப்பற்றி மாசறுக்கலாயிருக்க மமதையைப்பற்றி மறியாநின்றார்கள்;நியந்தாவான ஆசார்யன் ஸந்நிதியிலே வர்த்தித்தல் நியமவானான் ஶிஷ்யன் ஸந்நிதியிலே வர்த்தித்தல்செய்யிலல்லது நியதனுக்கு வழியில்லை. (௧௫)

### நூற்றைம்பத்தஞ்சாம்வார்த்தை.

தான் வைஷ்ணவனாய் அத்தால் தனக்குத் தன்னாசார்யனிற் குறைந்திருப்பானொரு ஶிஷ்யனில்லை;உத்தேஶ்ய ப்ரதிபத்திதுல்யமாகையாலே. ஆகிறபடி யென்னென்னில்;-என்னுடைய அஜ்ஞாநத்தையும்,அஶக்தியையும்,அநநுஷ்டாநத்தையும் பாராதேயென்னை விஷயீகரித்து அத்தலைக் காக்கினவனன்றோவென்று ஶிஷ்யன் உத்தேஶ்ய ப்ரதிபத்திபண்ணிக்கொண்டுபோரக்கடவன்; ஆசார்யனும், என்னுடைய அஜ்ஞாநத்தையும், அஶக்தியையும், அநநுஷ்டாநத்தையும் பாராதே, விஷயப்ரவணன் மரப்பாவைகாணிலும் ஆலிங்கநம் பண்ணுமாப்போலே, என்பக்கலிலே யுட்பட பரதந்த்ரனாய்க் கொண்டுபோருகிறானன்றோ, பகவத்விஷயத்திலே தனக்குண்டான ஆதராதிஶய மிருந்தபடி யென்னென்று உத்தேஶ்யப்ரதிபத்தி பண்ணிக்கொண்டு போரக்கடவன்.

### நூற்றைம்பத்தாறாம்வார்த்தை.

ஆசார்யனருளிச்செய்யும்வார்த்தையை ஆப்தமென்றுஆதரித்தார்க்கு அந்தஃகரணம் விதேயமாம், அந்தஃகரணம் விதேயமானவாறே அந்தர்யாமி ப்ரஸந்நனும், அந்தர்யாமி ப்ரஸந்நனானவாறே அந்தஃப்ரகாசமும் அந்தஸ்ஸுகமும் உண்டாம், இவையிரண்டுமுண்டானவாறே அந்தர்த்தோஷமும் அந்தர்த்துஃகமும் கழியும், இவை கழிகிறவளவன்றிக்கே அந்தமில்லாத ஆநந்தமுமுண்டாம்.

### நூற்றைம்பத்தேழாம்வார்த்தை.

ஶத்ருக்களுக்குக் கரையவேண்டா, ஸ்வாமியுமாய், ச்ரியஃபதியுமானவனுடைமையாகையாலே.

நூற்றைம்பத்தெட்டாம்வார்த்தை.

ஆசார்யன் மூன்றாலே உத்தேஸ்யன்;-ஜ்ஞாநப்ரதன், அநுஷ்டாநப்ரதன், உபாயப்ரதன் என்று; ஸ்ரீவைஷ்ணவர்களும் மூன்றாலே உத்தேஸ்யர்; - உபாயத்துக்குமுற்பாடர்; உபேயத்துக்கெல்லைநிலமாய் இருந்தநாளைக்கு உசாத்துணையென்று; பிராட்டியும்மூன்றாலே உத்தேஸ்யை;-புருஷகாரபூதை, கைங்கர்யவர்த்தகை, நித்யப்ராப்யை என்று; ஈஸ்வரன் மூன்றாலே உத்தேஸ்யன்;-ருசிஜநகன், மோக்ஷப்ரதன், உபாயபூதன் என்று;

நூற்றைம்பத்தொன்பதாம்வார்த்தை.

ஸ்வபாவாந்யதாஜ்ஞாநம், ஸ்வரூபாந்யதாஜ்ஞாநம், இவை, விபரீதஜ்ஞாநம்; இவன் ஆத்மப்ரதாநம்பண்ணினுப்போலே இருப்பதொன்றிறே இவன் ஜ்ஞாநப்ரதாநம்பண்ணினபடி.

நூற்றறுபதாம்வார்த்தை.

ஈஸ்வரனாகிற கர்ஷகன், சேதநனாகிற* திருப்பள்ளித்தாங்கன்றை ஶேஷத்வஜ்ஞாநமாகிற க்ஷேத்ரத்திலே ஊன்றி, ததீயாபராதமும் விபரீதஜ்ஞாநமுமாகிற புழுக்கடியாமல் நோக்கி, கைங்கர்யாநுவர்த்தநமாகிற மடையாலே ஆசார்யனருளாகிற நீர்பாய்ச்சி, அஹங்கார மமகாரமாகிற களைமண்டாமே, பகவத் விஷயமாகிற களைக்கொட்டாலே சேற்றையெடுத்து விபரீதாங்கீகாரமாகிற மாடும், ஶப்தாதிவிஷயமாகிற பேய்க்காற்றும் புகுராமே, ப்ரபந்நத்வமாகிற வேலியையிட்டு, ஸ்ரீவைஷ்ணவர்களாகிற வர்ஷத்தையுண்டாக்கித்தளிரு முறியும்மொட்டும் செலுந்துமாய் அதின் ஒளிமொட்டெடுத்துக்கட்டினமாலையிறே பரமேகாந்தி.

நூற்றறுபத்தோராம்வார்த்தை.

பரமசேதநனாகிற பசியன், ஆசார்யமுகத்தாலே அவகாதனாய் சேதநனாகிற சிறுநெல் பொறுக்கி, வேதாந்தமாகிற உரலிலே உபதேசமாகிற உலக்கையாலே, ச்ரவணமாகிற தலைத்துகைதுகைத்து, உடம்பாகிறவுமிகழித்து, நாமமாகிறவடுக்கலிட்டு, நிதித்யாஸநமாகிறசுளகாலே விவேகமாகிற கொழிகொழித்து, அஹங்காரமமகாரமாகிறவடிக்கழித்து, அந்யஶேஷத்வ ஸ்வஸ்வாதந்த்ர்யமாகிற நுணிக்கொழித்து, ருசிவாஸனையாகிறதவிடறக்குத்தி, ஶேஷத்வஜ்ஞாநமாகிறவெளுப்பையுண்டாக்கி, அத்யவஸாயமாகிற அரிக்குஞ்சட்டியிலே ப்ரபத்தியாகிறநீரைவார்த்து, ஸாதநாந்தரமாகிற தவிடறக்கழுவி, ப்ரயோஜநாந்தரமாகிற கல்லற வரித்து, பரபக்தி

---

* திருப்பள்ளித்தாங்கன்று - விரா என்று ஸம்ப்ரதாயார்த்தம்.

யாகிற பானையிலே பரஜ்ஞாநமாகிற உலைகட்டி, அநுபவமாகிற அடுப்பிலே விஶ்லேஷமாகிற நெருப்பையிட்டு, இருவினையாகிற விறகை மடுத்து, த்வரையாகிற ஊத்தூதி, ஆர்த்தியாகிற,கொதி கொதித்து, பரமபக்தியாகிற பொங்கிறைதே ஸூக்ஷ்ம ஶரீரமாகிற கரிக்கலத்தோடே ஸுஷும்நையாகிய வாசலிலே புறப்பட்டு அர்ச்சிராதியாகிறபடியொழுங்காலே * மாகவைகுந்தமாகிற மச்சிலேறி, அப்ராக்ர்தமாகிற பொற்கலத்தோடே (அஹமந்நம்) என்கிறசோற்றையிட்டு, (அஹமன்னாத: - அஹமந்நாத:.) என்று புஜியா நிற்கும்; இவை யிரண்டும் முதலியாண்டா னருளிச்செய்தவார்த்தை.

நூற்றறுபத்திரண்டாம்வார்த்தை.

கலங்குகிறதும், கலக்குகிறதும், கலங்கிக்கிடக்கிறதும், தெளிகிறவனும், தெளிவிக்கிறவனும், தெளிந்திருக்கிறவனும்; கலங்குகிறான்சேதநன்; கலக்குகிறது அசித்து; கலங்கிக்கிடக்கிறான் ஸம்ஸாரி: தெளிகிறான் சேதநன்; தெளிவிக்கிறான் ஆசார்யன்; தெளிந்திருக்கிறான் ஈச்வரன்: ஆகையாலே கலங்குகிற தன்னையும், கலக்குகிற அசித்தையும், தெளிவிக்கிற ஆசார்யனையும், தெளிந்த ஈஶ்வரனையும், அறியவேணும்.

நூற்றறுபத்துமூன்றாம்வார்த்தை.

நஞ்சீயர், பரமபதத்துக்கு எழுந்தருளுகிற காலத்திலே, தெற்காழ்வார் பட்டர், ஜீயர்ஸ்ரீபாதத்திலே யெழுந்தருளி உமக்குச் செய்யவேண்டுவ தென்னென்று கேட்டருள, ஜீயர், "பெருமாள் ஸர்வஸ்வதாநம்பண்ண அநுபவிக்கவேண்டி யிராநின்றது" என்று விண்ணப்பஞ்செய்ய;பட்டரும் இத்தைத்திருமலைதந்த பெருமாளுக்கு அருளிச்செய்ய; அவரும் பெருமாளுக்கு விண்ணப்பஞ்செய்ய; பெருமாளும் புறப்பட்டருளி, சேலையைக்களைந்தருளி ஜீயரை அநுபவிப்பித்தருள; ஜீயரும் அநுபவித்து, பிள்ளைதொடக்கமான முதலிகளைக்குறித்து, "பெருமாள் எனக்கு ஸர்வஸ்வதாநம்பண்ணியருளினார், நானும் ஸர்வஸ்வதாநம்பண்ணக்கடவதாக ஒருப்பட்டேன்,அபேக்ஷையுடையாருடையபடியே அபேக்ஷித்துக்கொள்ளுங்கோள் என்று அருளிச்செய்ய; பிள்ளையும் அடியேனுக்குத்தஞ்சமாக வொருவார்த்தை யருளிச்செய்யவேணுமென்று விண்ணப்பஞ்செய்ய; மணக்கோலத்தே முளைதெளிப்பாரைப்போலே இப்போது தஞ்சமான வொருவார்த்தையுண்டோ கேட்பதென்று பிள்ளையும் அருளிச்செய்தவார்த்தை;—

ஆத்மவிநியோகம் ஈஶ்வரனென்றிராதே, ஈஶ்வர விநியோகம் ஆத்மாவென்றிரும் - என்றருளிச்செய்ய; இவர்திருவுள்ளம்

ப்ரஸங்கமாகாமையாலே, பேசாதேநிற்க; உம்முடைய நினைவேது சொல்லிக்காணீர் என்ன; ஒரு ஸ்ரீவைஷ்ணவர், பரமபதத்துக்கு எழுந்தருளினால் இருக்கிற ஸ்ரீவைஷ்ணவர்கள் என்னினைந்திருக்கக்கடவரென்ன; அது அதிகாராநுகுணமாயன்றோ விருப்பது, தர்ப்தனாகில் ஆர்த்தனாயிருக்கிறான், ஆர்த்தனாகில் தர்ப்தனாயிருக்கிறான் என்று அருளிச்செய்ய; பிள்ளையும் இவ்வர்த்தத்தை அநுஷ்டாநபர்யந்தமாகக் கண்டபடி; - அம்மங்கியம்மாள், பரமபதத்துக்கு எழுந்தருளுகிற காலத்திலே, அவர் திருமாளிகையிலே பிள்ளையெழுந்தருள; அவருடைய தேவியார் ப்ரஸந்நையாயிருக்க, ஸ்ரீபாதத்திலே ஸேவித்துப்போந்தமுதலிகள் இதுக்கு நிதானம் என்னென்று கேட்க; அம்மாள், தேவியார்விஷயத்தில் இதுக்கு முன்பு பண்ணின ப்ராதிகூல்ய முண்டாகி லன்றோ அவர்பேற்றுக்கு இவர் வெறுக்கவேண்டுவதென்று அருளிச்செய்தார்; அநந்தரம் தம்முடைய ஸ்ரீபாதத்தை யுடையாரொரு ஸ்ரீவைஷ்ணவர் திருநாட்டுக்கெழுந்தருள, ஸ்ரீவைஷ்ணர்வர் பிள்ளைகள் தம்முடைய ஸ்ரீபாதத்திலேவிழுந்து அழ; இதுக்கடி யென்னென்று முதலிகள் கேட்க, "பெறுகிற தேசம் கொந்தளிக்கிறபடி கண்டால் இழக்கிற தேசம் என்படக்கடவது" என்றருளிச்செய்தார்.

### நூற்றறுபத்துநாலாம்வார்த்தை.

பட்டர் ஸ்ரீபாதத்திலே ஸேவித்திருப்பாரொரு ஸ்ரீவைஷ்ணவரை ப்ரஸாதக்கிழியையெடுத்துக்கொண்டு வாருமென்ன, ப்ரஸாதக்கிழியினருகே பணக்கிழியுமிருக்க, அவர் ப்ரஸாதக்கிழியையெடுப்பது பணக்கிழியையெடுப்பதாய்நிற்க, இவர்வரக் காணாமையாலே எழுந்தருளி இவர் நிற்கிற நிலையைக்கண்டு இடம்பெற்ற வளவிலே இருவரும் உம்மை நலிந்தார்களாகாதே, வீர் என்றருளிச்செய்தார்.

### நூற்றறுபத்தஞ்சாம்வார்த்தை.

ஆச்சான்பிள்ளை ஸ்ரீபாதத்திலே ஸேவிப்பார் இரண்டு ஸ்ரீவைஷ்ணவர்கள், ராகத்வேஷங்கொண்டாடி அவர்களிலே ஒருவர் பரிபவப்பட்டோம் என்று பட்டினிவிட, பரிபவப்படுவாருந் தாமேயாம், பட்டினிவிடுவாரும் தாமேயாம் என்றருளிச்செய்தார்.

### நூற்றறுபத்தாறும்வார்த்தை.

இரண்டு ஸ்ரீவைஷ்ணவர்கள் ராகத்வேஷங் கொண்டாடிவர இவர்களைச் சேரவிட்டருளவேணுமென்று ஆச்சான் பிள்ளைக்கு ஒரு ஸ்ரீவைஷ்ணவர் விண்ணப்பஞ்செய்ய; ஜகத்தில் ஈச்வரர்கள் இருவருண்டோ என்றருளிச்செய்ய, ஆகிலும் சேரவிட்டருள

வேணுமென்ன, ஸ்வஶரீரத்தை நியமிக்கமாட்டாத நான் அந்ய சரீரத்தை நியமிக்கப் புகுகிறேனோவென்ன, ஆகிலும்இப்படியருளிச்செய்யலாமோவென்ன; அத்ர்ஷ்டத்துக்கு அஞ்சி நெஞ்சைமீட்கக்கண்டிலோம், த்ர்ஷ்டத்துக்கு அஞ்சி வாயைமூடக்கண்டிலோம், நாம்இவர்களைச்சேரவிடும்படி யென்னென்று அருளிச்செய்ய; இருவரும் அந்யோந்யம் ப்ரீருக்களாய்த்தங்களில் ஏக மநாக்களாய்விட்டார்கள்.

## நூற்றறுபத்தேழாம்வார்த்தை.

பிள்ளையுறங்காவில்லிதாஸர், முதலியாண்டான்ஸ்ரீபாதத்திலே சென்று தெண்டனிட்டு ஶிஷ்யலக்ஷண மிருக்கும்படி யென்னென்னென்று விண்ணப்பஞ்செய்ய; ஆண்டானருளிச்செய்தபடி; - ஆசார்ய விஷயத்திலே ஶிஷ்யன் பார்யாஸமனுமாய் சரீரஸமனுமாய் தர்மஸமனுமாயிருக்கும்; அதாவது-சொன்னத்தைச் செய்கையும், நினைத்தத்தைச்செய்கையும், நினைவாயிருக்கையும், என்றருளிச்செய்தார்.

## நூற்றறுபத்தெட்டாம்வார்த்தை.

அநந்தரம், பிள்ளை கூரத்தாழ்வான் ஸ்ரீபாதத்திலே சென்று தெண்டனிட்டு ஆசார்யலக்ஷணமிருக்கும்படி யெங்ஙனே யென்று விண்ணப்பஞ்செய்ய, ஆழ்வானருளிச்செய்தபடி; - ஶிஷ்யன் விஷயத்தில் ஆசார்யன் பர்த்ர்ஸமனுமாய் சரீரிஸமனுமாய் தர்மிஸமனுமாயிருக்கக்கடவன்; அதாவது-ஏவிக்கொள்ளுகையும், எடுத்திடுவிக்கையும். அதாவது - அசேதநத்தைக்கொண்டு நினைத்தபடி விநியோகங்கொள்ளுமாப்போலே விநியோகங்கொள்ளுகையும், எடுத்திடுவிக்கையும், எடுத்துக்கொள்ளுகையுமென்றருளிச்செய்தார்.

## நூற்றறுபத்தொன்பதாம்வார்த்தை.

ஆசார்யனாவான், சிஷ்யனுக்கு ஹிதகாமனாயிருக்குமவன், சிஷ்யனாவான், ஸர்வப்ரகாரத்தாலும், ஆசார்யனுக்குத் தன்னையொதுக்கிவைக்குமவன்.

## நூற்றெழுபதாம்வார்த்தை.

உடையவர், ஸந்யஸித்தருளுகிறபோது ஶரீரஸம்பந்தத்தை விட்டுவிடவேண்டுகிறதோ வென்று கேட்க, முதலியை யொழிய ஸந்யஸித்தோமென்றார்; இப்படி செய்யலாமோ என்று அருகிருந்தார் கேட்க, த்ரிதண்டத்தை விடிலன்றோ முதலியை விடுவது என்றருளிச்செய்தார்.

## நூற்றெழுபத்தொரும்வார்த்தை.

கோளரியாழ்வானென்றொருத்தன், எனக்கு ஹிதமருளிச்செய்யவேணுமென்ன, பட்டர், பெருமாளையும்பார்த்து அவனையும்

பார்த்துவிட்டதில் இவனுக்கு விஸ்வாஸம் பிறவாமல் நிற்க, "ప్రాదైవభవతోయాతాభూయసీజన్మసన్తతిః। తస్యామన్యతమంజన్మ సంచిన్త్యశరణం వ్రజ" "ப்ராதைவபவதோயாதா பூயஸீஜந்மஸந்ததிஃ। தஸ்யாமந்யதமஂஜந்ம ஸஞ்சிந்த்யஶரணம்வ்ரஜ" என்கிற ஶ்லோகத்தை யருளிசெய்தார்.

## நூற்றெழுபத்திரண்டாம்வார்த்தை.

ஸுக்ர்தது ஷ்க்ர்தங்களிரண்டுக்கும் தலை, ஆத்மஸமர்ப்பணமும், ஆத்மாபஹாரமும்;இவற்றிலும் விஞ்சின ஸுக்ர்த துஷ்க்ர்தங்கள் - ஆத்மாபஹார தோஷத்தைப்போக்கி ஆத்மஸமர்ப்பணத்தைப் பண்ணுவித்த ஆசார்யன்பக்கலிலே க்ர்தஜ்ஞதையும் க்ர்தக்நதையும்.

## நூற்றெழுபத்துமூன்றாம்வார்த்தை.

திருக்கோட்டியூர்நம்பி திருநாளுக்கெழுந்தருளி திருமாலையாண்டானையும் அழைத்துக்கொண்டு எம்பெருமானார் மடமே எழுந்தருள, அவரும் தண்டன் ஸமர்ப்பிக்கஅவரைப்பார்த்தருளி, நீர் திருமாலையாண்டான் பக்கலிலே திருவாய்மொழிக்கு அர்த்தம் கேளுமென்று இவரைத்திருமாலையாண்டான்திருக்கையிலே காட்டிக்கொடுத்துத் தாம் மீண்டெழுந்தருளினார். * திருக்கோட்டியூர் நம்பிகோயிலுக்கெழுந்தருளித்திருமாலையாண்டான் பக்கலிலேயெழுந்தருளித் திருவாய்மொழி வ்யாக்யாநம் நடத்தாமல் தவிருவானென்? என்று கேட்டருள, ஆளவந்தார் அருளிச்செய்ய அடியேன் கேட்ட அர்த்தமொழிய இவர் சில விஶ்வாமித்ர ஸ்ர்ஷ்டி பண்ணி ஸ்வகல்பிதமாகச் சொல்லுகையாலே தவிர்ந்தேன் என்ன, அவர் சொன்ன அர்த்தம் ஏதென்ன; (அறியாக்காலத்துள்ளே) என்கிற பாட்டை,உபகார ஸ்ம்ர்தியாகவேணுமென்று சொன்னாரென்ன,அதுவும் ஆளவந்தா ரருளிச்செய்ய நான்கேட்டேன் என்று நம்பி அருளிச்செய்து, ஸாந்தீபன்பக்கலிலே, க்ர்ஷ்ணன் அத்யயநம் பண்ணினாற்போலே காணும் உம்முடைய பக்கலிலே எம்பெருமானார் திருவாய்மொழி கேட்கிறது; ஆளவந்தார் திருவுள்ளத்திலுண்டான அர்த்தமொழிய இவருக்கு ப்ரகாஶியாதென்றிரும், நீர் இவருக்கு அஜ்ஞாதஜ்ஞாபநம் பண்ணுகிறோமென்றிராதே கொள்ளும் என்று அருளிச்செய்தருளினார். இத்தால் சொல்லிற்றாய்த்து-ஆசார்யனுடைய ஆத்மகுணங்களோடு தேஹகுணங்களோடு வாசியற ஶிஷ்யனுக்கு உபாதேயமா யிருக்கிறபடி.

## நூற்றெழுபத்துநாலாம்வார்த்தை.

பின்பழகிய பெருமாள் ஜீயர்க்கு ஒருக்கால் திருமேனிபாங்கின்றியிலே கண்வளர்ந்தருளும்போது, தமக்கு அந்தரங்கரான

ஸ்ரீவைஷ்ணவர்களையழைத்து நான் இப்போதுதிருவடிச்சாராமல் ஆலஸ்யம் பொறுத்து இன்னமு மிங்கே சிறிதுநாளிருக்கும்படி *ஏழையேதலன் * ஆழியெழச்சங்கு இவற்றைப்பெருமாள்திருவடிகளிலே விண்ணப்பஞ்செய்து ப்ரபத்தி பண்ணுங்கோள் என்ன, அவர்களும் அப்படியேசெய்து ஜீயருக்குத் திருமேனிபண்டுபோலேபாங்காய்த்து; இதைக்கேட்ட ஸ்ரீவைஷ்ணவர்கள் இவருடைய ஆசார்யரான நம்பிள்ளை ஸ்ரீபாதத்திலே சென்று தெண்டனிட்டு ஜ்ஞாநவ்ர்த்தருமாய் வயோவ்ர்த்தருமான ஜீயர் இப்படிசெய்தார், இது இவருடைய ஸ்வரூபத்துக்குச் சேருமோ வென்று விண்ணப்பஞ்செய்ய,பிள்ளையும் அவருடைய அபிப்ராயம் அறிகிற்றிலோம், ஸகலவேதசாஸ்த்ரங்களும் போவது பிள்ளையெங்களாழ்வார்க்காய்த்து, அவரைச்சென்று கேளுங்கோளென்ன; அவர்களும்எங்களாழ்வாரைக்கேட்க, அவரும் ஸ்ரீரங்கஸ்ரீயிலே ஸங்கம்போலே காணுமென்ன; பிள்ளை யிதைக்கேட்டருளி அழகிது, திருநாராயணபுரத் தரையரைச்சென்று கேளுங்கோள் என்ன, அவரும், துவக்கின கைங்கரியங்கள் தலைக்கட்டாமையாலே காணுமென்ன இத்தையும் கேட்டருளி, ஆகிறது அம்மங்கியம்மாளைக் கேளுங்கோளென்ன, அவரும் பிள்ளைகோஷ்டியி லிருந்து அவர் அருளிச்செய்கிற பகவத்விஷயங் கேட்கிறவர்களுக்கு மொரு தேசவிசேஷம் ருசிக்குமோவென்ன; மீளவும் பிள்ளை யித்தையுங்கேட்டருளி பெரியமுதலியாரைக் கேளுங்கோளென்ன, அவரும் பெருமாள் சிவந்த திருமுகமண்டலமும் கஸ்தூரித் திருநாமமும் பரமபதத்தில் கண்டேனில்லையாகில், மூலையடியே முறித்துக்கொண்டு மீண்டுவருவேனென்றன்றோ பட்டரருளிச்செய்தார். அப்படியே இவரும்பெருமாள் திருமுகமண்டலத்தையும்கஸ்தூரித் திருநாமத்தையும் விட்டுப்போகமாட்டாராகவேணும் என்றார். பிள்ளை, இவையெல்லாவற்றையும் கேட்டருளி ஜீயர்திருமுகமண்டலத்தைப்பார்த்துச் சிரித்து இவையெல்லாம் உம்முடைய நினைவுக்கு ஒக்குமோவென்ன, இவை யித்தனையு மன்றென்று ஜீயர் விண்ணப்பஞ்செய்ய; ஆனாலும் உம்முடைய அபிப்ராயத்தைச் சொல்லுமென்ன, பிள்ளை;-தேவரீர் ஸர்வஜ்ஞராகையாலே அறிந்தருளாததில்லை, ஆனாலும் அடியேனைக்கொண்டு வெளியிட்டருளத் திருவுள்ளமாகில் விண்ணப்பஞ்செய்கிறேன், தேவரீர் திருமஞ்சநச்சாலையிலேயெழுந்தருளித் திருமஞ்சநஞ்செய்தருளித் தூய்தாகத் திருக்குற்றேலியல் சாத்தியருளி உலாவியருளும்போது குறுவேர்ப்பரும்பின திருமுகமண்டலத்தில் ஸேவையும், சுழற்றிப் பணிமாறுகிற கைங்கர்யத்தையும்விட்டு அடியேனுக்குப் பரமபதத்துக்குப்போக இச்சையாயிருந்ததில்லை என்று ஜீயர் விண்ணப்பஞ் செய்தார்;

இதைக்கேட்டருளி பிள்ளையும் முதலிகளுமெல்லாம், "இவ்விபூதியிலேயும் இவ்வுடம்போடே ஒருவர்க்கும் இவ்வைஶ்வர்யம் கூடுமதோ! என்று மிகவுந் திருவுள்ளமுகந்தருளினார்கள்.

### நூற்றெழுபத்தைந்தாம்வார்த்தை.

நஞ்சீயர் பட்டர் ஸ்ரீபாதத்திலே ஆச்ரயித்த வநந்தரத்திலே கையிலேயிருந்த சிலபொன்னைவாங்கி பட்டர்ஸ்ரீபாதத்திலே யிட்டு தெண்டனிட்டவாறே, பட்டர் அத்தையெடுத்துஇவரைப்பார்த்து நான்கொடுத்த த்ரவ்யத்தில் ஸாபேக்ஷராயிருக்கிற இவர் உபதேசித்த ஜ்ஞாநம் நமக்கு உத்தாரகஹேதுவாகப் புகுகிறதோவென்றோ வுனக்கோடுகிறது என்று கேட்டருளி இவரைப்பார்த்து, ஸர்ப்பதஷ்டனாய் ம்ர்தனுன ராஜகுமாரனுடைய ஸம்ஸ்காரதசையிலே, மந்த்ரௌஷத ஶக்தியுடையனாயிருப்பானொருவன் வந்து, உன்மகனைப்பிழைப்பிக்க இந்தராஜ்யத்தைத் தாவென்னிலும் கொடுக்கும்படியான புத்ரவாத்ஸல்யத்தையுடைய ராஜாவின்பக்கலிலே ஒரு பிடிசோறு வேண்டியுண்டு ம்ர்தனுன ராஜபுத்ரனைப் பிழைப்பிக்கும், ப்ரக்ர்திமான்களெல்லாரும் உண்கிற சோற்றிலே இவனுக்குஇச்சையுண்டாய்த்தென்று, அந்த விஷஹரண ஶக்தியில் ஏதேனுங்குறைந்ததில்லையிறே, அப்படியே எல்லாரும் ஸ்ப்ர்ஹை பண்ணுகிற அர்த்தகாமங்களிலே எங்களுக்கு ஸ்ப்ர்ஹையுண்டாய்த்தேயாகிலும்நாங்கள் உபதேசிக்கிறஜ்ஞாநத்துக்கு ஒரு ஸம்ஸாரபந்தத்தை யறுத்துப் புருஷார்த்தத்தைத் தரவல்ல ஶக்தி யுண்டென்றிருமென்று அருளிச்செய்தார். இத்தால்-ஆசார்யனுக்காதல்வேறொரு ஸ்ரீவைஷ்ணவனுக்காதல் இதரஸம்ஸாரிகளோபாதி ஹேதுஸத்தாப்ரயுக்தமான அர்த்தகாமப்ராவண்ய முண்டாய்த்தென்று இவர்களையும்ப்ரக்ர்திமான்களோபாதியாக நினைக்கலாகாது, – எங்ஙனேயென்னில், "కామోపభోగపరమాం ఏతావదితినిశ్చితాః" "காமோபபோகபரமாः ஏதாவதிதிநிஶ்சிதாம்" என்று அர்த்தகாமங்கள் புருஷார்த்த மென்றிருப்பார் அஜ்ஞர், ஜ்ஞாநவான்கள் ஶரீராவஸாநத்தளவும், "సదృశంచేష్టతేస్వస్యాః ప్రకృతేర్జ్ఞానవానపి" (ஸத்ர்ஶம்சேஷ்டதேஸ்வஸ்யாঃ ப்ரக்ர்தேர்ஜ்ஞாநவானபி) இத்யாதிப்ரக்ரியையாலே வாஸநாப்ரயுக்தமாய்ச் செல்லக்கடவதென்றருளிச்செய்தார்.

### நூற்றெழுபத்தாறும்வார்த்தை.

நஞ்சீயர்மடத்திலே பட்டருடைய மூத்தபெண்பிள்ளை, காஞ்சோரிச்சருக்குண்டோவென்று கேட்டுவர, அப்போது முன்வாயிலே சிலவற்றைப்பார்த்துக்காணாமையாலே இல்லையென்று பின்

னையும் பார்த்தவாறே ஒருகலத்திலே கண்டு தம்முடைய மடியிலே இட்டுக்கொண்டு எழுந்தருளினவாறே இத்தையொருவர்கையிலே வரவிடலாகாதோ, நீர் கொண்டெழுந்தருளவேணுமோவென்று பட்டரருளிச்செய்ய, அப்போது இல்லையென்றுவிட்ட மஹாபாபிக்கு ஆளிட்டிருக்கவும் வேணுமோ என்று அருளிச்செய்தார். இத்தால், ஆசார்யபுத்ரபௌத்ராதிகளும் ஆசார்யவத் அநுவர்த்தநீயரென்று கருத்து.

நூற்றெழுபத்தேழாம்வார்த்தை.

பட்டர், குடும்ப ஸஹிதமாக கூரகுலோத்தமனிலேயிருக்கிற நாளிலே திருநந்தவநத்திலே அல்பம்உபஹதி யுண்டாய்த்தென்று, திருநந்தவநஞ்செய்கிற ஏகாங்கிகள் சிலவார்த்தைசொன்னார்களென்று பெரிய ஜீயர் அவர்களை யழைத்து நான் பெருமாள்திருக்குழல் சிக்கு நாறுகிறதென்றோ திருநந்தவநஞ்செய்கிறது, பட்டருடைய குடும்பத்துக்கு இஷ்டவிநியோகார்ஹமாகத் திருநந்தவநவ்யாஜத்தாலே கோவினை னத்தனை யன்றோவென்று அருளிச்செய்தார்.

நூற்றெழுபத்தெட்டாம்வார்த்தை.

தூவியம்புள்ளுடை திருவவதரித்தாரென்று நம்பிள்ளைக்குச்சிலர் விண்ணப்பஞ்செய்ய, அப்போது அருகே ஸேவித்திருந்த திருப்பேராச்சானைப்பார்த்து “எனக்கொரு தமையனார் திருவவதரித்தார்” என்று நம்பிள்ளையருளிச்செய்தார்.

நூற்றெழுபத்தொன்பதாம்வார்த்தை.

நம்பி திருவழுதிவளநாடுதாஸர் திருநாட்டுக்கெழுந்தருளுகிற ஸமயத்திலே ஸேவித்துப்போந்த ஸ்ரீவைஷ்ணவர் அழ, கெடுவாய், செத்துப்போகிறநான் போகாநின்றேன் ஸ்ரீபராஸரபட்டர் வாசிக்கக்கேட்க விருக்கிற நீயேன் அழுகிறாயென்றருளிச்செய்தாரென்று பிள்ளையருளிச்செய்தார்.

நூற்றெண்பதாம்வார்த்தை.

பெருமாள்கோயிலிலே ஒருபாகவதஜன்மத்திலே பிறந்தானொரு ஊமை, அஞ்சாறு வருஷம் ஊமையாயிருந்து அநந்தரம் இரண்டு மூன்று ஸம்வத்ஸரம் காணாதிருந்து பின்பு அவன் வார்த்தைசொல்லவல்லனாய்வர, இந்த ஆஶ்சர்யத்தைக் காண்கைக்காக எல்லாரும் திரண்டு, ஊமாய்! எங்குப்போனாய் என்று கேட்க; அவனும் நான் க்ஷீராப்திக்குப்போய்வந்தேனென்ன, அங்கு விஶேஷமென்னென்று கேட்க, சேனைமுதலியார் உடையவராய் வந்து அவதரி

த்தார் என்று சொன்ன வநந்தரம் அவனைக் கண்டதில்லை யென்று ஸேநாபதிஜீயர் அருளிச்செய்தார்.

யாதவப்ரகாசனோடே எம்பெருமானார் படித்தருளுகிறகாலத்திலே அந்த்ராஜ்யத்தின் ராஜாவினுடைய புத்ரியை ப்ரஹ்மரக்ஷஸ்ஸு பிடிக்கையாலே யாதவப்ரகாசனுக்கறிவிக்க, "யாதவப்ரகாசன் போகச்சொன்னானென்று சொல்லுங்கோளென்று சொல்லிப்போகவிட; அவன் றன்னை அங்குநின்றும் போகச்சொன்னேனென்று ப்ரஹ்மரக்ஷஸ்ஸு சொல்ல, யாதவப்ரகாசனும் போரகுபிதனாய் சிஷ்யர்களையுங் கூட்டிக்கொண்டு மஹாமந்த்ரத்தையும் ஜபித்துக்கொண்டு ப்ரஹ்மரக்ஷஸ்ஸின் முன்னேபோய் நிற்க, ரக்ஷஸ்ஸும் முடக்கினகாலைப் பின்னையும்நீட்டி, வாராய் அடா யாதவப்ரகாசா நீஜபிக்கிறமந்த்ரம் நானறியேனோவென்றுஅந்தமந்த்ரத்தையும் சொல்லி,நான்இவற்றுக்குப்போவேனோ, நீஉன் ஜந்மமுமறியாய் என்ஜந்மமுமறியாயென்ன,ஆகில்நீபிரானே ஸர்வஜ்ஞனாயிருந்தாய்,ஆகில்உன்னுடைய ஜந்மமேது என்னுடைய ஜந்மமேதுஎன்று யாதவப்ரகாசன் கேட்க; உன்னுடைய ஜந்மம், ஸ்ரீமதுராந்தகத்திலேரிகரையிலேஒருபுற்றாய் அதிலே ஒருஉடும்பாயிருப்புதி,திருமலைக்குப்பெருங்கூட்டம் போகிறபோது ஸ்ரீவைஷ்ணவர்கள் அந்த ஏரிகரையிலேநீராடி அங்கேஸ்வயம்பாகம்செய்து அமுதுசெய்தருளின தளிகையின்கீழே சிந்தின ப்ரஸாதத்தையும் தீர்த்தத்தையும் ப்ரஸாதப்பட்டாய், அத்தாலே நீயிப்படி வித்வானாய்ப் பிறந்தாய்; இனி என்னுடைய ஜந்மம் ப்ராஹ்மணஜந்மம், யாகம்பண்ணினேன், மந்த்ரலோப க்ரியாலோபம் வந்தவாறே ப்ரஹ்மரக்ஷஸ்ஸானேனென்ன; ஆனால் நீயார்க்குப்போவுதியென்ன; உன்னுடன்வாசிக்கிறவரிலே யொருவர் அநந்தகருட விஷ்வக்ஸேநாதிகளென்கிற நித்யஸூரிகளிலே யொருவரென்று உடையவரைக்காட்டி, அவர் திருவடிகளைத் தண்டனிட்டு, இவர் போகச்சொன்னாராகில் போகிறேன்என்ன;ஆகில் இளையாழ்வீர்! நீர்போகச்சொல்லீரென்ன; ஆனால் நீபோகிறத்துக்கு அடையாளத்தைக்காட்டிப்போவென்ன, "இவ்வரசுமுறிந்துவிழும்" என்று அவ்வரசை முறித்துக்கொண்டுபோயிற்று; யாதவப்ரகாசனும் இளையாழ்வீர்! நீர்ஸர்வஜ்ஞராயிருந்தீரென்று மிகவு முபஸ்லோகித்து மீண்டு தன்னுடைய மடமேவந்தான்.

நூற்றெண்பத்தோராம்வார்த்தை.

அநந்தாழ்வான் ஸ்ரீபாதத்தையுடையரா யிருப்பார் ஸ்ரீவைஷ்ணவர்கள் பட்டணங்களில் நின்றும் திருமலையைத்திருவடித்தொழப்போகாநிற்கச்செய்தே, வளத்தான் மங்கலமுடையான், திண்ணை

யிலே கிடந்தவளவிலே, அவன் எங்கேறப் போகிறிகோளென்ன, இவர்களும், திருவேங்கடமுடையானைத் திருவடித்தொழப்போகிறோம் என்ன, இவனும், நானும்போருகிறேனென்று சொல்லி இவனுங்கூடப்போய் அவர்களும் இரண்டுமூன்று பயணம்போனவளவிலே, இவனுடன் உறவற்றுத் தங்களிலே கூடிப்போகப்புக்கபடியாலே இவனும் என்னை ஸ்ரீவைஷ்ணவனுக்கிக் கொண்டுபோகவேணுமென்று இவர்களைப்பலகாலும் வேண்டிச்கொள்ள, இவர்களும் பேசாதேபோய்த்திருமலையிலேவந்தவாறே அநந்தாழ்வான் ஸ்ரீபாதத்திலேவந்து தண்டனிட்டுநிற்க; அவரும் இவர்களைக்காரியங்களும் கேட்டு இவர்களுக்குச் சிலவார்த்தைகளும் அருளிச்செய்து திருவேங்கடமுடையான்பாடேறப்போகலாகாதோவென் றருளிச்செய்த வளவிலே, இவனும் என்னை ஸ்ரீபாதத்திலே காட்டிச்கொடுக்கவேணுமென்ன; அவரும் அத்தைக்கேட்டு அவன் சொல்லுகிறதேதென்று கேட்டருள; ஆச்ரயிக்கவேணுமென்கிறானென்று விண்ணப்பம்செய்ய; அநந்தாழ்வானும் வாராயென்றழைத்தருளி உனக்குஎன்பாடே ஹிதம் கேட்கவேணுமோவென் றுகேட்டருள, வேணும், என்னை ரக்ஷித்தருளவேணுமென்ன; ஆனால் என்பக்கலிலே ஹிதம் கேட்கில் உன் ஐஸ்வர்யம் உன்னைவிட்டகலும் என்றருளிச்செய்ய; அவனு மிவைபோக வமையுமென்று விண்ணப்பஞ்செய்ய; ஆனால் நீ நான் புக்க தேசம் புகுவுதியென்று அருளிச்செய்து ஹிதத்தையு மருளிச்செய்தவாறே, நெல்லுக்குப்பால் வற்றவற்றத் தலைவணங்குமாப்போலே சரணாகதி நெஞ்சில் பற்றப்பற்றத்தன் மேற்கிடக்கிற பொன்னடங்கவாங்கி ஆசார்ய தக்ஷிணையாகக்கொடுத்து ஊரிலே வந்தவாறே, இவர் ஸ்ரீவைஷ்ணவரானுரென்று பலஸ்ரீவைஷ்ணவர்களும் வந்துகாண, அவர்களுக்குவேண்டுமவை கிஞ்சித்கரிக்கப்புக்கவாறே இவருடைய மாதாபிதாக்கள்இவரை யழைத்துரிஷிகளைப்போலேயிருக்கிற ப்ராஹ்மணர்வந்து புகுந்து ப்ரஸாதித்துப்போகாநின்றார்கள், நீர்செய்கிற தர்மத்தை விலக்கலாகாது, உம்மை விச்வஸித்திருக்கிற வெங்களுக்கும் ஏதேனும் தரவல்லீரோவென்று கேட்க; அப்படியே செய்கிறேன் என்று தான் தேடின த்ர்வ்யத்தை ஆள்விழுக்காட்டிலே யிட்டு இவர்களுக்குங் கொடுத்துத் தாமும் தம்மோபாதியைப்பத்தி அருளிச்செயலும் ஓதி ஸ்வரூபஜ்ஞானம்பிறந்து பிற்றை யாண்டு திருமலையேறவர; அநந்தாழ்வான், கண்டீரோ அப்போதேஇவை உம்மைவிட்டகலுமென்று சொன்னேன் என்று அருளிச்செய்ய; அடியேனுக்கு இரண்டுவார்த்தை யருளிச்செய்தருளிற்று, என்பக்கலிலே ஹிதம் கேட்டால் நான் பெறும் தேசம் பெறுவுதியென்றருளிற்று, அத்தைக் கிழிச்சீரையிலே தநமென்று முடிந்துகொண்

டேன், இங்குள்ள ஐஸ்வர்யம் உன்னைவிட்டகலுமென்றருளிச் செய்தருளிற்று, அது ப்ரத்யக்ஷமாகக் கண்டபடியாலே ஸ்ரீபாதத்துக்கடிமையென்னு மிடங்கண்டேன் என்று விண்ணப்பஞ்செய்ய; இனி நீரிங்கேயே நில்லுமென்றருளிச்செய்தருளினார்.

### நூற்றெண்பத்திரண்டாம்வார்த்தை.

பெருமாள் ஆழ்வானைப்பார்த்து நீ உனக்கு வேண்டுவது நம்மை வேண்டிக்கொள்ளென்று திருவுள்ளமாக; நாயன்தே! அடியேனுக்குப்பண்டே எல்லாம் தந்தருளிற்றேயென்று விண்ணப்பஞ்செய்ய; இல்லை, இப்போது நம்மை வேண்டிக்கொள்ளென்ன; ஆகில் நாயன்தே, அடியேனோடு ஸம்பந்த முடையா ரெல்லாரும் பரமபதம் பெறவேணுமென்ன, தந்தோம் என்று திருவுள்ளமாக; இத்தைஉடையவர் கேட்டருளிக் காஷாயத்தை முடிந்தெறிட்டு ஆர்த்துக்கொள்ள, இது என் என்ன, நமக்கு ஆழ்வானோடே ஸம்பந்தமுண்டாகையாலே பரமபதம் பெறலாமேயென் றருளிச் செய்தார்.

### நூற்றெண்பத்துமூன்றாம்வார்த்தை.

உடையவர் அபயப்ரதாநம் அருளிச்செய்யாநிற்க, பிள்ளையுறங்காவில்லிதாஸர் கோஷ்டியில்நின்றும் புறப்பட்டு ஸ்ரீவிபீஷணப்பெருமாள் ஸ்வாபிமாநத்தை விட்டு பெருமாள் திருவடிகளே தஞ்சமாக(సర్వలోకశరణ్యాయరాఘవాయ) (ஸர்வலோகஶரண்யாய ராகவாய) என்று பற்றினவனைக் கல்லுந்தடியுங்கொண்டது - பெருமாள் பரிகரம், நாம் என்செய்யக்கடவோம் என்று பயப்பட; உடையவர் அருளிச்செய்தபடி; எனக்குப் பெரியநம்பி யுண்டு, உமக்கு நானுண்டு என்று அருளிச்செய்தருளினார்.

### நூற்றெண்பத்துநாலாம்வார்த்தை.

எம்பெருமானாரிலும் ஆளவந்தாரிலும் வாசி யார்க்குண்டென்று ஆழ்வானை முதலிகள்கேட்க; ஓரிராவெல்லாம் விசாரித்து, பெருமாளிலும் பெரியபிராட்டியாரிலும்வாசி யார்க்குண்டென்றார்: (நத்யஜேயம்) என்றார் பெருமாள்; (நகஶ்சித்நாபராத்யதி) என்றாள் பிராட்டி; இப்படி இருவர்க்கும் வாசியென்றருளிச் செய்தார்.

### நூற்றெண்பத்தஞ்சாம்வார்த்தை.

ஒருநாள் உடையவரும் முதலிகளும் எழுந்தருளாநிற்க, பெரியநம்பிதண்டனிட, உடையவர் அஞ்ஜலிபண்ணிப்போர, முதலிகள், உடையவரை இது வென்னென்றுகேட்க, அப்போது அவருடைய இஷ்டம் அநுவர்த்திக்கையன்றோ நமக்கு ஸ்வரூபம் என் றருளிச்செய்தார்.

## நூற்றெண்பத்தாறும்வார்த்தை.

அநந்தரம் நம்பி ஸ்ரீபாதத்திலேசென்றுகேட்க, ஆளவந்தாரும்,முதலிகளும், எழுந்தருளினப்போலே யிருந்தது,அத்தாலேதெண்டனிட்டேனென்ன, இது ஹேதுவாகமாட்டாதென்று விண்ணப்பஞ்செய்ய,ஆளவந்தார்க்குப்பின்பு அர்த்தஸ்திதி இவர்க்கேயுள்ளது, வேறொருவருக்குமில்லே, ஒருவரைத் தெண்டனிடக்கடவதாய் அத்தால்மற்றோரைத் தெண்டனிடுவதென்றருளிச்செய்தார்.

## நூற்றெண்பத்தேழாம்வார்த்தை.

எம்பெருமானர் மேற்கே வெள்ளேசாத்தி யெழுந்தருளினபோது இவருடைய உபந்யாஸத்தைக்கண்டு ஸர்வரும் விஸ்மிதராக; என்பரமாசார்யர் வார்த்தையைக்கேட்டுச் சொன்னேனித்தனே, அவரைக்கண்ணுலே கண்டேனுகில் பரமபதத்தளவும் ஸோபாநமாகக்கட்டேனே வென்று அருளிச்செய்தார்.

## நூற்றெண்பத்தெட்டாம்வார்த்தை.

எம்பெருமான்றனே நம்மாழ்வாராய் வந்தானென்று ஆளவந்தா ரருளிச்செய்வர்; நித்யஸம்ஸாரிகளிலே யொருவனே உபயவிபூதி விலக்ஷணனும்படி எம்பெருமானுக்கினனென்று எம்பாரருளிச்செய்வர்,

## நூற்றெண்பத்தொன்பதாம்வார்த்தை.

திருமாலேயாண்டான் ஸ்ரீபாதத்திலே எம்பெருமானர் திருவாய்மொழிகேளாநிற்க,ஆளவந்தாரருளிச்செய்தாராகத் திருமாலேயாண்டான் நிர்வஹித்ததொழிய பாட்டுக்கள்தோறுஞ் சிலவர்த்தங்களே ப்ரதிபாதித்து இங்ஙனே யானுலோவென்று உடையவரருளிச்செய்ய; இப்படி ஆளவந்தாரருளிச்செய்யக் கேட்டறியேனென்று - திருமாலேயாண்டா னருளிச்செய்து இங்ஙனே நடவாநிற்கச்செய்தே, (அறியாக்காலத்துள்ளே) என்கிறபாட்டுக்கு அறிவுநடையாடாத தசையிலே ஸம்பந்தஜ்ஞாநத்தைப் பிறப்பித்து ஜ்ஞாநத்தை யழிக்கக்கடவதான தேஹஸம்பந்தத்தோடே பின்னேயும் வைத்தாயென்கிற இழவாலே யருளிச்செய்கிருனென்று திருமாலேயாண்டானருளிச்செய்ய; இத்தை எம்பெருமானர் கேட்டருளி, முன்னிற்பாட்டுக்களும் பின்னிற்பாட்டுக்களும் பெரியப்ரீதியோடே நடவாநிற்க நடுவே அப்ரீதிதோற்றச்சொல்லுமது சேராது, இங்ஙனே யாமித்தனே;—(அறியாமாமாயத் தடியேனே-அறியாக்காலத்துள்ளே அடிமைக்கணன்புசெய்வித்து - வைத்தாயால்) என்கிருனென்று இத்தையும் ஒருபகாரமாக்கி அருளிச்செய்கிருனென்றுஉடையவர்விண்ணப்பஞ்செய்ய;இதுவிச்வாமித்ர

ஸ்ர்ஷ்டி, ஆளவந்தாரருளிச்செய்யக் கேட்டறியோமென்று திருமாலையாண்டான் திருவாய்மொழியருளிச்செய்யத்தவிர்ந்தார்.

நூற்றுத்தொண்ணூறும்வார்த்தை.

எம்பெருமானார் வெள்ளைசாத்தி யெழுந்தருளினபோது திருமலைநல்லான் சிஷ்யரான சிலவேடர் புனம்பாராநிற்க - அம்மலையடியே யொரு ஸ்ரீவைஷ்ணவ ரெழுந்தருள; இந்தவேடர் அவரைத்திருநாமமே குறியாக நீர் எங்குநின்றெழுந்தருளுகிறீரென்று கேட்க; கோயில் நின்றும் வருகிறேனென்ன; எம்பெருமானார் திருவடிகளுக்கு ஒருகுறைகளுமில்லையே, பெரியதிருச்செல்வத்துக்கு ஒருகுறைகளு மறநடவாநின்றதோ வென்றுகேட்க; என்ன எம்பெருமானாரும என்ன திருச்செல்வமும், எம்பெருமானார் வெள்ளைசாத்திக்கொண் டெழுந்தருளினார், இன்னவிடத்திலே யெழுந்தருளினாரென்று தெரிந்ததில்லையென் றருளிச்செய்ய; அவர்களும் ஆறுநாள் பட்டினியே கிடந்தார்கள், ஆறாம்நாள் ராத்ரி எம்பெருமானார் மழையுமிடியுமாய்க் குளிரிலே ஈடுபட்டு இவர்கள் மழையிலே நெருப்பொளிகண்டு அங்கே நம்மைக்கொண்டுபோங்கோளென் றருளிச்செய்ய; முதலிகளும் அங்கே யெழுந்தருளி, வழியெங்கே பிள்ளைகாள்! என்றழைக்க; ப்ராஹ்மணக்குரலா யிருந்தது, பெருவிடாயோடே ஒருக்காலமழையாநின்றது என்றோடிவந்து வேலியையும் பிரித்து இங்கே வாருங்கோளென்று, சாத்துகைக்குப்புடைவையும் கொடுத்து சாத்தினபுடைவையும் காம்புலரவிட்டுக்காய்ச்சி யொற்றி, எங்குநின்று மெழுந்தருளுகிறதென்று கேட்க, கோயில் நின்றும் வருகிறோமென் றருளிச்செய்ய; எம்பெருமானார் செய்தருளுகிற தென்னனென்றுகேட்க, நீங்கள் எம்பெருமானாரை யறிந்தபடி யென்னென்ன; நாங்கள் நல்லானடிமைகள், எங்களுக்கு ஹிதமருளிச்செய்கிறபோது, "எம்பெருமானார்திருவடிகளே தஞ்சமென் றிருங்கோள்" என்றருளிச்செய்தார்; அன்று தொடங்கி எம்பெருமானார்திருவடிகளே தஞ்சமென்றிருந்தோம் என்ன; ஆகில் அவரிறேயென்று முதலிகள் உடையவரைக்காட்ட, இவர்களும் உடையவர்திருவடிகளைப்பிடித்துக்கொண்டு வ்யாகுலப்பட்டு ஸேவித்துநிற்க, உடையவரும் "நல்லான்" என்கிற காளமேகம் இங்கும் வர்ஷித்ததோவென்று உகந்தருள; பின்பு தினைக்கதிரைக்கொண்டுவந்து தேனமுதையும் மிடாவோடே ஸமர்ப்பித்து இத்தை வறுத்து இடித்துத் தேனிலே குழைத்து அமுதுசெய்யுங்கோளென்று விண்ணப்பஞ்செய்ய, அவர்களும் அப்படியேசெய்து அமுதுசெய்துகண்வளர்ந்தார்கள். மற்றைநாள் விடிந்தவாறே அந்தவேட முதலிகளிலேயொருவரை

யும் ஸ்ரீபாதத்தில்முதலிகளிலே யொருவரையுமாகக்கோயிலுக்குப் போகவிட; அவர்களுடனே நாற்பத்தஞ்சுதிருநாம மெழுந்தருளி னார்கள்; அந்த வேடமுதலிகள் அந்தமலைக்கு மேற்கே அறுகாத வழிகொண்டுபோய் ஒருவேடனகத்திலேவிட்டுவர; அந்தவேடன் பகலெல்லாம் வேட்டைக்குப்போய்வந்து ராத்ரி உண்ணப்புக்கவா றேப்ராஹ்மணர் உண்ணுதிருக்க நாம்உண்ணலாகாதென்று அரு காகவொருக்ராமத்திலே கட்வளாரியனென்பா னொருவனகத்திலே வேண்டுங் கட்டளைகளும் பண்ணிக்கொடுவந்து இவர்களைக் கொ ண்டுபோய்ச் சடக்கென வமுதுசெய்வியுங்கோளென்று மீண்டார் கள்; அவ்வகமுடைய மணவாட்டுப்பெண் உங்களுக்கு அமுதுசெ ய்யவேண்டாவோவென்ன, வேண்டாவென்றார்கள்; உங்களுக்கு பயப்படவேண்டா, நானும் எம்பெருமானார்ஸ்ரீபாதத்தையுடையே னென்றாள்; நீஎம்பெருமானாரை ஆச்ரயித்தபடி யென்னென்றுகே ட்க; நாங்கள் இவ்விடம் வர்ஷமின்றிக்கே யிருந்தவாறே அங்கே கோயிலிலே வந்திருந்தோம், என்னகமுடையானும் நானும் ஒரு மச்சிலே இருக்கையாயிருக்கும்; அப்போது எம்பெருமானார் ஏழகத்திலே மாதுகரம்பண்ணி அமுதுசெய்தருளுவர்; திருவீதி யிலே யெழுந்தருளும்போது அகளங்கநாட்டாழ்வான்முதலான பட்டமுதலிகளெல்லாரும் இவர் திருவடிகளிலே ஸேவித்துக்கொ ண்டு வருவர்கள், இவர் மாதுகரத்துக்கு அந்தவகத்தி லெழுந்தரு ளினார், நான்மச்சினின்றுமிழிந்து தகைந்தேன்,இது வென்பெண் ணேயென்றார்; உம்மை ராஜாக்களும் பட்டமுதலிகளும் தண்ட னிடாநின்றார்கள், நீர் மாதுகரம் பண்ணாநின்றீர் என்றவாறே; அவர்களுக்கு நாம் பகவத்விஷயத்திலே சிலவார்த்தை சொல்லு கையாலேகாண் என்றருளிச்செய்ய; அந்த வார்த்தையை எனக்கு மருளிச்செய்யவேண்டுமென்ன; அப்போது அருளிச்செய்தருளினார்; பின்பு எங்கள்தேசம் வர்ஷமுண்டாய் நாங்கள் எங்கள் நாட்டே றப்போகிறபோது அவரருளிச்செய்த வார்த்தையை மறந்தேன் என்றவாறே, அத்தை நெஞ்சிலே படும்படி யருளிச்செய்து போ கப்புக்கவாறே, அடியேனுக்கு ஆத்மரக்ஷையாக ஏதேனும் தந்தரு ளவேணுமென்று விண்ணப்பஞ்செய்தேன், அப்போது சாத்தி யிருந்த ஸ்ரீபாதரக்ஷையை ப்ரஸாதித்தெழுந்தருளினார்;நாங்களும் அன்றேபோந்தோம்;பின்னையும் ஸேவிக்கப்பெற்றிலேனென்றவா றே, திருவுள்ளத்திலே விசாரித்தருளித் திருப்போனகம் சமைக்க வருளிச்செய்து இவள் செய்யுமது பார்த்திருமென்று ஒரு ஸ்ரீவை ஷ்ணவரை வைக்க; அவளும் அடைவாகச்சமைத்து முன்புடுத்த புடைவையையும் விழுத்து சுத்தமான புடைவையையு முடுத்து உள்ளேபுகுந்து, "எம்பெருமானார் திருவடிகளேசரணம்" என்று

உச்சரித்து ஸ்ரீபாதரக்ஷையையு மேறியருளப்பண்ணித் திருவடிவி ளக்கி அமுதுசெய்யப்பண்ணிப் புறப்பட்டுதண்டன்ஸமர்ப்பித்து முதலிகளை ஸ்ரீபாதம்விளக்க வெழுந்தருளவேண்டுமென்று விண் ணப்பஞ்செய்ய; முன்பு பார்த்திருக்கச்சொன்ன ஸ்ரீவைஷ்ணவரை யழைத்து இவள்செய்ததேதென்று கேட்டருள; இவளும் திருப் போனகத்தைச் சமைத்து முன்புடுத்த புடைவையை விழுத்து, சுத்தமானபுடைவையை யுடுத்து, திருப்போனகத்தை யுள்ளே கொண்டு புகுந்து கதவையடைத்து த்யானம்பண்ணிக்கொண் டிருந்தாள்; கறுத்து நீண்டிருந்தது, எம்பெருமானா யிருந்த தில்லையென்றவாறே; அவள்தன்னையழைத்து நீ உள்ளே செய்த தேதென்றுகேட்க; முன்பு ஏறியருளப்பண்ணித் தந்த ஸ்ரீபாத ரக்ஷையை யேறியருளப்பண்ணித் திருவடிவிளக்கி அமுதுசெய் யப்பண்ணி யாக்கும் அடியேன் ப்ரஸாதப்படுவது, இப்போதும் அப்படியேசெய்தேன் என்று விண்ணப்பஞ்செய்ய; அவை தன்னைக் கொண்டுவந்து காட்டென்ன; அவளும் கொண்டுவந்து காட்ட; அங்குத்தைக்குத் தகுதியாயிருந்தவாறே எம்பெருமானா ரரு ளிச்செய்தவார்த்தை ஒத்திருந்ததில்லையாகில் முதலிகள் அமுதுசெ ய்யார்கள், அவத்தை என்செவியிலே சொல்லிக் காணாயென்ன; அவளும் விண்ணப்பஞ்செய்தாள், வார்த்தையும் ஒத்திருந்தது, ஆகில் இதுக்குள்ளே எம்பெருமானாருண்டோவென்று பார்த்துக் காணாயென்ன; அவளும் திருவிளக்கேற்றிக்கொண்டுவந்து அடை வேபார்த்தாள், எம்பெருமானார்திருவடிகளானவாறே அங்கே திகைத்து எம்பெருமானார்திருவடிகள்போலே யிருக்கிறது, கா ஷாயமில்லாமையாலே தெரிகிறதில்லை என்றவாறே, நான்காண் என்ன; அவளும் திருவடிகளைப் பிடித்துக்கொண்டு அழப்புக்கவா றே கண்ணநீரைத்துடைத்து, ( [illegible] ) (விதுராந்நாநிபுபுஜேஸூசிநிகுணவர்திச) என்று பாவநத்வபோக் யத்வங்களை யுடைத்தாயிருந்தது, முதலிகாள்! இனி அமுதுசெய் யுங்கோளென்றருளிச்செய்ய அவர்களும் அமுதுசெய்துகண்வளர; இவளும் தளிகைப்ரஸாதமும் கூட்டி பாலையும் கலந்து மச்சிலே கிடக்கிற பர்த்தாவை யெழுப்பி ப்ரஸாதத்தையுமிட்டேட்டி ப்ரஸா தப்படபண்ணி தான் ப்ரஸாதப்படாதேகிடக்க; இதென்னென்று கேட்க, கோயில்நின்றும் எம்பெருமானாரும் முதலிகளு மெழுந் தருளி அமுதுசெய்யமாட்டோமென்று கண்வளருகிறார்கள் என்றவாறே; நான் இதுக்கு என்செய்யவேணும் என்ன; நீ எம் பெருமானார்திருவடிகளை ஆச்ரயிக்கவல்லையோவென்ன; இவனும் ராத்ரியிலே ஸம்வதித்து ப்ரத்யயம் பண்ணிக்கொடுக்க இவளும் ப்ரஸாதம்சூடி நித்ரைபண்ணி விடிந்தவாறே எம்பெருமானார்

திருவடிகளிலே தண்டனிட்டு இற்றைக்கெழுந்தருளி நிற்கவேண்டும், இவனைக்ருபைபண்ணி யெழுந்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய; எழுந்தருளிநின்று அவனைக்ருபைபண்ணி அந்தக்ராமத்திலே நாலஞ்சுநாளெழுந்தருளியிருந்து த்ரிதண்டகாஷாயாதிகளையும் ஸம்பாதித்துத் தம்முடைய திருவாராதநமான பேரருளாளர் திருமுன்பேவைத்து தண்டன்ஸமர்ப்பித்து முன்புபோலே அவற்றை உடையவர் தரித்தருளினார்.

## நூற்றுத்தொண்ணூற்றோராம்வார்த்தை.

எம்பெருமானை அபேக்ஷிக்கை வார்த்தாமாத்ரம்; ஸ்ரீவைஷ்ணவர்களையபேக்ஷிக்கை கையைப்பிடிக்கை; ஆசார்யனை யபேக்ஷிக்கை காலைப்பிடிக்கை. (గురుప్రమాణీకృతచిత్తవృత్తయ శ్శ్రుతిప్రమాణప్రతిపన్నవృత్తయః। అమానినో డమ్భవివర్జితా నరా స్తరన్తి సంసారసముద్రమశ్రమమ్)

## நூற்றுத்தொண்ணூற்றிரண்டாம்வார்த்தை.

அந்யசேஷத்வ நிவர்த்தியும் ஸ்வஸ்வாதந்த்ர்ய நிவர்த்தியும் அதிகாரியக்ர்த்யம்; ஜ்ஞாநப்ரதாநமும் ஜ்ஞாநவர்த்தகத்வமும் ஆசார்யக்ர்த்யம்; புருஷகாரத்வமும் கைங்கர்யவர்த்தகத்வமும் பிராட்டிக்ர்த்யம்; விரோதி நிவர்த்தகத்வமும் ப்ராப்யப்ரதத்வமும் ஈச்வரக்ர்த்யம்.

## நூற்றுத்தொண்ணூற்றுமூன்றாம்வார்த்தை.

அக்நியை யகற்றுவாரும், அவித்யை யகற்றுவாரும், அன்யரை யகற்றுவாரும், அச்சத்தை யகற்றுவாரும், அபோக்யரை யகற்றுவாரும்.

## நூற்றுத்தொண்ணூற்றுநாலாம்வார்த்தை.

துக்காநுபவம் ப்ரக்ர்தி, துக்காநுபவிதா ஆத்மா, துக்காஸஹைபிராட்டி, துக்கநிவாரகன் ஈச்வரன்.

## நூற்றுத்தொண்ணூற்றஞ்சாம்வார்த்தை.

நஞ்ஜீயர் பட்டரை, பெருமாள் சந்த்ரபுஷ்கரிணிக்கரையிலே கண்வளர்ந்தருளுகிற விதுக்குத்திருவுள்ளத்தில் கருத்தென்னென்று விண்ணப்பஞ்செய்ய; (நாராயணா ஓமணிவண்ணா) என்று கூப்பிட்டபின்பிறே மடுவின்கரையிலேவந்தது, இங்குக்கண்வளருகிறது நான்கூப்பிடுவதற்குமுன்னே என்னை யெடுக்கைக்காக நாணகப்பட்டபொய்கையிலே ஏற்கவே வந்து கண்வளர்ந்தருளுகிறார், இவ்வர்த்தங்கேட்டது உம்முடைய வசநத்தாலன்றுகாணும், உம்மைக்கொண்டு பெருமாள் என்னினைவை வெளியிட்டருளினார் என்றருளிச்செய்தார்.

நூற்றுத்தொண்ணூற்றாறும்வார்த்தை.

ஆழ்வானுக்கு பாலமித்ரனாயிருப்பானொருப்ராஹ்மணனுக்கு அநேககாலம் பிள்ளையின்றிக்கேயிருந்து பின்பு ஒருபிள்ளை பிறந்தவாறே கோயிலிலே ஆழ்வானுக்கு வார்த்தையாய்க்கேட்டப்போதே பெரியபெருமாள் திருவடிகளிலே சென்று அப்பிள்ளைக்கு ஹிதத்தையருளிச்செய்தருளி, வருவாரையெல்லாம் அந்தப்பிள்ளைசெய்வதென்னென்றுவினவுவர்;ஒருநாள்ஆண்டாள்போனத்தை வாவென்றழைத்து உறவுகொண்டாடாநின்றீர் இதுக்கு ஹேதுவென்னென்ன; நான் அவனுக்கொரு நல்வார்த்தை சொன்னேன் காணென்ன; அவனெங்கே நீரெங்கே, இப்படி சொல்லுவதொரு வார்த்தையுண்டோ வென்ன; ஒருவன் விலங்கிலே கிடந்தால் விலங்கு விடுவிக்கும்போது விலங்கில் கிடக்கிறவனுக்குச்சொல்லுமோ, விலங்கையிட்ட ராஜாவுக்குச் சொல்லுமோவென் றருளிச்செய்தார்; அந்தப்பிள்ளை, உபநயநம்பண்ணின ஸமநந்தரத்திலே கோயிலிலே வந்து ஆழ்வான்ஸ்ரீபாதத்திலே வந்து சேர்ந்தான்.

போகலராஜ்யத்து ஸ்ரீஸாளக்ராமத்துக்கு உடையவரெழுந்தருள, ஊரடையசைவராகையாலே, ஆதரியாதேயிருக்க, உடையவர், முதலியாண்டானைப்பார்த்து இவ்வூரார்நீர்முகக்குமிடத்திலே உன்னுடைய ஸ்ரீபாதத்தைவிளக்கி வாவென்றருளிச்செய்ய; அவரும் அப்படியேசெய்ய; பிற்றைநாள் அவ்வூராரடைய உடையவர் ஸ்ரீபாதத்தை ஆச்ரயித்தார்கள்; அதுக்குப்பின்பு ஸ்ரீஸாளக்ராமமென்று பேராய்த்து.

நூற்றுத்தொண்ணூற்றேழாம்வார்த்தை.

மிளகாழ்வானை, முதலிகள் நீர் கீழையூருக்குப் பலகாலும் போவானேன் என்று கேட்க; நான் அங்கேபோனால் பகவத்விஷயத்துக்கு அநுகூலமானவார்த்தைகள்அவர்களுக்குச்சொல்லுவன், அத்தாலே இங்குத்தைக்கு விரோதியார்கள் என்றும், அவர்கள் பக்கலிலேசில்கொண்டுபோந்துபாகவத விஷயத்துக்கு உறுப்பாக்கினால் அவர்களுக்கு ஓராநுகூல்யம்பிறக்குமென்றும்போனேன் என்ன; அப்படியாகிலும் அவர்கள் பதார்த்தங்கள்ஆமோவென்ன; நான் எல்லாரையும் நாராயணஸம்பந்தநிபந்தநமாகக் காணுமத்தனையல்லதுப்ராக்ருதஸம்பந்தநிபந்தநமாகக் காணேன், அத்தாலே ஒருவஸ்துவும்அந்யஸம்பந்தமாயிராதேஎன்றுஅருளிச்செய்தார்.

நூற்றுத்தொண்ணூற்றெட்டாம்வார்த்தை.

நடாதூரம்மாளும் ஆளிப்பிள்ளானுமாகக் கூட வமுதுசெய்யாநிற்க, அத்தைப் பெருங்கூர் பிள்ளைகண் டநுபவித்து, தேவரீருடைய அநுஷ்டாநத்தைக் காணாதே அருளிச்செய்தவார்த்தை

யைத் தஞ்சமென்றிருந்தேனாகில் அநர்த்தப்பட்டோ மித்தனையி றே என்று விண்ணப்பஞ்செய்ய; அம்மாளும் ஸதாசார்ய ப்ரஸாதம் உத்தேஶ்யமென்றபோதே எல்லா மிதிலே கிடந்த தன்றோ வென்றருளினார்.

நூற்றுத்தொண்ணூற்றொன்பதாம்வார்த்தை.

திருக்கோட்டியூர்நம்பியை, தம்முடைய தமையனார் அந்திம தசையிலே எனக்குத்தஞ்சமேதென்று கேட்க; விரஜைக்கிக்கரை யில் உம்மை எங்குநின்றும் வந்தீர் என்று கேட்டாருண்டாகில் திருக்கோட்டியூர்நம்பிஸ்ரீபாதத்தில்நின்றும் வந்தோம் என்றும், அக்கரையில் உம்மைக்கேட்டாருண்டாகில், திருக்கோட்டியூர்நம்பி தமையனார் என்றுஞ்சொல்லுமென்று அருளிச்செய்தார்.

இருநூறும்வார்த்தை.

அபாகவதத்யாகம், பாகவதபரிக்ரஹம், பகவத்ஸ்வீகாரம், ஸ்வாசார்யாங்கீகாரம், ஸ்வப்ரஜ்ஞை, இவை யித்தனையு முண்டானபோதாய்த்து ஈடேறலாவது.

இருநூற்றோராம்வார்த்தை.

திருக்கோட்டியூர்நம்பி ஸ்ரீபாதத்திலேஉடையவர் பதினெட்டு ப்ரகாரம் எழுந்தருள, இன்னமும் கேட்கவந்தீரோ வென்ன; உடையவர், ஒருரு இரண்டுருவாந்தனையும் வருவனென்றருளிச் செய்தார்.

இருநூற்றிரண்டாம்வார்த்தை.

பெரியமுதலியாருக்கும், நம்மாழ்வாருக்கும், நடுவுள்ள ஆசார்யர்களெல்லாரையும் அறியவேண்டாவேவென்று நம்பிள்ளை ஜீயரைக்கேட்க; அவர்களுடையபாஹுள்யத்தாலே அறியப்போகாது, இத்தால் இவனுடைய ஜ்ஞாநத்துக்காதல் பேற்றுக்காதல்குறைவாராது; அதெங்ஙனேயென்னில்; — ஸந்தாநத்தில் பித்ர்பிதா மஹப்ரபிதாமஹப்ரபர்திகளுக்கவ்வருகே நாமறிகிலோமிறே, இதுக்காக ப்ராஹ்மண்யத்துக்கு ஏதேனும் தட்டாகிறதோவென் றருளினார்.

இருநூற்றுமூன்றாம்வார்த்தை.

நஞ்ஜீயரைப் பெரியகோயில்வள்ளலார் திருவாய்மொழியிலே ஓரர்த்தப்ரஸ்தாபத்திலே ஜீயரருளிச்செய்தபடி யொழிய இங்ஙனேயானாலோவென்ன; நான் சொன்னபடி அழகிதென்று திருக்கலிகன்ற தாஸர் சொல்லுவர் என்று ஜீயர் அருளிச்செய்ய; உம்முடைய ஶிஷ்யர் அழகிதென்பதொன்றது ப்ரமாணமாகச்சொல்லுவானேனென்னென்ன; அதிலொரு நிபந்தநமில்லைகாணும், ஸதாசார்ய ஸந்நிதியோடு ஸச்சிஷ்யஸந்நிதியோடு வாசியில்லைகாணும் ஒருவனுக்குத் தீர்த்தம் பிறக்கவென் றருளினார்.

## இருநூற்றுநாலாம்வார்த்தை.

பட்டர் திருவணையாட வெழுந்தருளுகிறபோதுபகலில்வழிநடந்த ஆயாஸத்தாலே விட்டதொரு தூற்றடியிலே நஞ்ஜீயர் மடியிலே திருமுடியைவைத்துக் கண்வளர்ந்தருள, அவ்விராமுடியத் துடைமாறுதல், சலிப்புதல் செய்யாதே எழுந்தருளி யிருந்தாரென்று பிள்ளை யருளிச்செய்வர்.

## இருநூற்றஞ்சாம்வார்த்தை.

எம்பெருமானார், திருக்கோட்டியூர்நம்பி ஸ்ரீபாதத்திலே நின்று நெடுநாளோடே கூட ஸ்தோத்ரங் கேட்டருளிச் சாத்தினவாறே, இனி ஜ்ஞாநகார்யத்தில் உமக்குக்கர்த்தவ்யமொன்றுமில்லை, பெரியநம்பிக்குப்ரியமாகக் கோயில் திருவாராதநம் நடத்தலாகாதோ வென்று சாமஸ்லோகார்த்தத்தையும் அவ்வளவிலே யருளிச்செய்து விடைசொடுத்தருள, இவரும் விடைகொண்டு திருக்குளக்கரையிலே யெழுந்தருளி, முதலியாண்டான் எம்பெருமானார் தாழ்த்தருளினவாறே ஸ்ரீபாதத்திலே கண்டு வரவேணுமென்று வர, ஓரடி முற்பட்டீரில்லையே, எனக்கு சரமஸ்லோக மருளிச்செய்த உருகுபதத்தோடே யெழுந்தருளியிருக்கிறார், புக்கு தெண்டனிட்டு வாவென்று அருளிச்செய்ய, ஆண்டானும் நம்பிஸ்ரீபாதத்திலே சென்று தெண்டனிட்டு நிற்க, ராமாநுஜ பரிக்ரஹீதனைப் போலே யிருந்தாயென்று விஷயீகரித்து சரமஸ்லோகார்த்தத்தை அருளிச்செய்து, உனக்கு பரிஹரிக்கவேண்டுவது மூன்றுபடுகுழியுண்டு, அத்தைக்கேளென்ன, அருளிச்செய்யலாகாதோவென்ன; வித்வான், அபிஜாதன், எம்பெருமானார்மருமகனென்கிறவற்றையெல்லாம் உத்தேஶ்ய மென்றிராதே, எம்பெருமானார்திருவடிகளில் பண்ணின ஸம்பந்தமே உனக்கு உத்தாரகஹேது வென்றிரு என்றருளிச்செய்ய, அத்யந்தஹேயனுயிருக்கிற வென்னையும் தங்களோடே ஒரு கோவையிலே கோப்பதே! என்று கண்ணும் கண்ணீருமாய் விடைகொண்டு எம்பெருமானார்ஸ்ரீபாதத்தேறப் போந்தார் என்று பிள்ளையருளிச்செய்வர்.

## இருநூற்றாரும்வார்த்தை.

எம்பெருமானார், "உந்துமதகளிற்றன்" என்கிற பாட்டை அநுஸந்தித்துக்கொண்டு திருக்கோட்டியூர்நம்பிதிருவாசலிலே (சீரார்வளையொலிப்பவந்து திறவாய்) என்கிறவிடத்தை அநுஸந்திக்கிறபோது நம்பிதிருமகளார், திருக்கதவைத் திறந்துகொண்டு புறப்பட, எம்பெருமானார் விழுந்து தெண்டனிட்டுக் கிடக்க, கையை நெரித்துக்கொண்டு உள்ளேயோடிப் புக, நம்பி இதுவென் பெண்ணே என்ன, என்னை எம்பெருமானார் தெண்டனிட்டா

றொன்ன, அதுக்கு பயப்படவேணுமோ வென்றருளிச்செய்து எம்பெருமானுர் உள்ளேபுக்கருளினவாறே, இளையாழ்வீர்! இப்போது அநுஸந்தாநம் * உந்துமதகளிற்றனேவென்றருளிச்செய்தாரென்று பிள்ளையருளிச்செய்வர்.

## இருநூற்றேழாம்வார்த்தை.

நம்பிதிருவழுதி வளநாடுதாஸர், ஒருரு கண்ணிநுண் சிறுத்தாம்பை யருளிச்செய்து, (மதுரகவிசொன்ன சொல் நம்புவார் பதிவைகுந்தங்காண்மினே) என்று தலைக்கட்டினவாறே ஸ்ரீபாதத்லே ஸேவித்திருந்த ஸ்ரீவைஷ்ணவர், லீலாவிபூதியிலே ஒருவன் இத்தை ஶ்ரத்தைபண்ணி யநுஸந்திக்க, அவ்விடம் நித்யவிபூதி யாம்படி யெங்ஙனேயென்று கேட்க; அது இருந்தபடி கேளீர்;- கூரத்தாழ்வான்திருமகனுர் திருவவதரித்த பின்பு இடைச்சுவர் தள்ளி இரண்டு விபூதியும் ஒன்ருய்த்துக் காணென்றருளிச்செய் தாரென்று பிள்ளை அருளிச்செய்வர்.

## இருநூற்றெட்டாம்வார்த்தை.

ஆளவந்தார் ஸ்ரீபாதத்திலே ஸேவித்திருப்பாரிரண்டு ஸ்ரீவைஷ்ணவர்கள் அந்யோந்யம் விச்லேஷ பீருக்களாய் வர்த்திக்கிறவர்கள், ஒருநாள் இருவரும் ஆற்றுக்கெழுந்தருளி ஒருவர்புறப்பட்டுவர, ஆளவந்தா ரருளிச்செய்த வார்த்தை;-அன்றிலினுடைய வவஸ்த்தைபிறந்தபோதுகாண் ஆத்மஜ்ஞாநம் பிறந்ததாவது என்றருளிச்செய்தார்.

## இருநூற்றொன்பதாம்வார்த்தை.

ஆளவந்தார் திருவநந்தபுரத்துக் கெழுந்தருளுகிறபோது, தெய்வவாரியாண்டானை மடத்துக்குவைத்து திருவநந்தபுரத்துக்கெழுந்தருளுகிற வளவிலே ஸந்நிதியில்முதலிகளைப்பார்த்து, குருகைகாவலப்பன் நமக்கு இட்டுத் தந்த திருமுகத்தை யெடுத்துக்கொண்டு வாருங்கோள் என்றருளிச்செய்தருளித் திருமுகத்தைப்பார்த்தருள, மாஸமும் திவஸமும் அன்றுதானுயிருந்தபடியாலே ஒரு புஷ்பகவிமாநம் பெற்றிலோமே? என்று போரஶோகார்த்தராய் மீண்டெழுந்தருளா நிற்க, தெய்வவாரியாண்டானுக்கு ஆளவந்தாருடைய விஶ்லேஷம் பொறுமல் திருமேனிசோஷிக்க, வைத்யர்கள்பலரும் பார்த்தவிடத்தில் இவருக்கு விஷயஸ்ப்ர்ஹை யாக்கும் இப்படியாய்த்தென்றுசொல்ல, உமக்கு எந்தவிஷயத்திலே ஸ்ப்ர்ஹையாயிருக்கிறதென்று கேட்க, அடியேனுக்கு ஆளவந்தார்விஷய மொழியவேறேயும் ஒருவிஷயமுண்டோவென்று அருளிச்செய்ய, ஆகில் இவரை அங்கே கொண்டுபோங்கோ

ளென்று வைத்யர்கள்சொல்ல, இவரைக்கட்டணத்திலே கொண்டு
போக, ஒருநாளைக்கொருநாள் திருமேனிபெருத்து நடக்கவல்ல
ராய் வருகிறவளவிலே, ஆளவந்தாரும் திருவநந்தபுரம் ஸேவித்து
மீண்டெழுந்தருளா நிற்க தெய்வவாரியாண்டானும் தண்டன்
ஸமர்ப்பித்து எழுந்திருக்கமாட்டாம லிருந்தபடியைக்கண்டு, பெரு
மாள் ஸ்வதந்த்ரருமாய் ஸூரருமா யிருக்கையாலே ஸ்ரீபரதாழ்
வான் வைத்த விடத்திலே யிருந்தார், நான் ஸ்வதந்த்ரனுமன்றிக்
கே சூரனுமன்றிக்கே யிருக்கையாலே யிறே நாம் வைத்தவிடத்தி
லிராமல் நீர் வந்ததென்று ஆளவந்தார் அருளிச்செய்ய, இத்தைக்
கேட்டுத் தெய்வவாரியாண்டான் நாம்வந்து ஸ்வரூபஹாநிப்பட்
டோமென்று ஸத்தை குலைந்துகிடக்க, என்னை ஸ்வதந்த்ரனுமாக்கி
ச் சூரனுமாக்கி யெழுந்திருக்கிறோம் என்று கிடக்கிறீரோவென்
று ஆளவந்தா ரருளிச்செய்ய, வைத்தவிடத்தே யிராதே வந்து
ஸ்வரூபஹாநிபட்டாப்போலே இதுவு மொரு ஸ்வரூபஹாநியாய்
த்ததோவென்று பரபரென எழுந்திருந்துநிற்க, ஆளவந்தாரும்
இதொரு அதிகாரவிஶேஷ மிருந்தபடியென்னென்று உகந்து
போரஇளைத்தாயேயென்று க்ர்பைபண்ணி, திருவநந்தபுரத்துத்திரு
க்கோபுரந் தோன்றுகிறது, ஸ்ரீபத்மநாபப்பெருமாளை ஸேவித்து
வாருமென்று அருளிச்செய்ய, என்னுடைய திருவநந்தபுரம் எதி
ரேவந்ததென்று ஸ்வாசார்யரான ஆளவந்தார்திருவடிகளைக்காட்டி
கூட ஸேவித்துக்கொண்டு மீண்டு கோயிலுக்கெழுந்தருளினார்.

## இருநூற்றுப்பத்தாம்வார்த்தை.

எம்பார் திருமலைநம்பி திருமாளிகைக்கு ஸர்வவிதகைங்கர்யங்
களும் பண்ணிக்கொண்டு போருகிறபடியைக்கண்டு உடையவர்
ப்ரீதராய்க்கொண்டு எழுந்தருளியிருக்கிறவளவிலேஒருநாள்நம்பி
க்குத் திருப்படுக்கை படுத்து, எம்பார் முதலில் அதிலே படுத்துக்
கொண்டுபார்க்க, இத்தை ஒருநாள்உடையவர் கண்டு இவருடைய
பரிமாற்றமிருந்த பொல்லாங்கென்னென்று இக்ரமத்தைத் திரு
மலைநம்பிக்கு அருளிச்செய்ய, திருமலைநம்பி எம்பாரை யழைத்து,
ஸ்ரீகோவிந்தப்பெருமாளே, நீர் நமக்குப்படுத்த படுக்கையிலே
படுத்துக்கொண்டீரென்று கேட்டோம், இப்படி செய்யலாமோ
இதுக்கு பலம் ஏதென்ன; நரகமென்ன; இப்படி யறிந்திருந்து செ
ய்வானென்னென்ன, தேவரீர் திருமேனியிலே ஒன்று உறுத்து
தல், ஊன்றுதல், கடித்தல் செய்யாமல் கண்வளரப்பெற்றால் அடி
யேனுக்கு நரகமேயமையும் என்று விண்ணப்பஞ்செய்ய, இத்
தைஉடையவர் கேட்டருளி இதொரு ப்ரதிபத்தி விஶேஷ மிருந்த
படியென்னென்று உகந்தருளினார்.

இருநூற்றுப்பதினோராம்வார்த்தை.

பெரியநம்பிதிருமகளாரத்துழாய் புக்ககத்திலே யிராநிற்க, ஒருநாள் தீர்த்தமாடத் துணைவரவேணுமென்று மாமியாருக்கு அருளிச்செய்ய, உன்சீதநவெள்ளாட்டியைக் கொண்டுபோவென்றுகடுத்துச்சொல்ல, நம்பிபக்கல்வந்து, நம்பீ! என்னையிப்படிசொன்னாளென்ன, நாமறியோம் உங்கள் ஜீயருக்குச்சொல்லுமென்ன இவளும் அங்கேசென்று விண்ணப்பம் செய்ய, அருகேயிருந்த முதலியாண்டானைப்பார்த்து, உமக்கு இந்தானும்அம்மா ஸ்ரீதந வெள்ளாட்டி யென்று திருவுள்ளமாய் இவளைக் கொண்டுபோமென்ன, ஆண்டானும் கூடவெழுந்தருளிநீராடப்பண்ணுவித்துஇவருடைய புக்ககத்திலே நின்று தாஸவ்ர்த்திகளைச்செய்யத்தொடங்கினார்; இவருடைய புக்ககத்தார் இதுவென் ஆண்டானென்ன, என்னைவரவிட்ட உடையவரும் எங்கள் நாய்ச்சியாரும் சொன்னது செய்யவேணுமேயென்ன, அவர்களும் நம்பிஸ்ரீபாதத்தேறப் போய் நம்பீ! முதலியாண்டானை வரவிட்டு இப்படி யெங்களை நசிப்பிக்கிறதென்னென்ன, நாமறிந்தோமோ எம்பெருமானாருக்குச் சொல்லுங்கோளென்ன, அங்கேசென்று விண்ணப்பஞ்செய்ய, உடையவரும், ஆண்டானை அத்துழாய்க்குச் சீதநவடிமையாகக் கொடுத்தோம், அங்கு உங்களுக்கு நிற்க ப்ரியமன்றாகில் இங்கே நின்று அடிமைசெய்கிறதென்றருளிச்செய்து அழைப்பித்துக்கொண்டருளினார்.

இருநூற்றுப்பன்னிரண்டாம்வார்த்தை.

த்ரைலோக்யாள் என்பாளொருஸ்த்ரீ ஆச்சிஸ்ரீபாதத்திலே ஆச்ரயித்திருக்கும், அங்கே அநந்தாழ்வானெழுந்தருள, அவளை ஆறுமாஸம் ஸேவித்திருந்து அவரெழுந்தருளினவாறே ஆச்சி ஸ்ரீபாதத்தேறச்சென்றாள்; அவர் இத்தனைநாள் வந்திலையீயென்ன, அநந்தாழ்வானை ஸேவித்திருந்தேனென்ன, அவர் நான் சொன்னத்திலும் ஏற்றமாகச்சொல்லிற்றுண்டோவென்ன, உண்டு;- உம்மை யாச்ரயித்துப் பதினாறுட்டைநாளுண்டு, எம்பெருமான் திருவடிகளைத் தஞ்சமென்றிரித்தனே, அவர்ஆறுமாஸத்திலேஉம்முடைய திருவடிகளே தஞ்சமென்னும்படி பண்ணினாரென்றாள்.

இருநூற்றுப்பதின்மூன்றாம்வார்த்தை.

அப்பன் ஆழ்வானுடைய அந்திமதசையிலே ஸ்ரீபாதத்திலே ஸேவிக்கப்பெற்றிலேன், எனக்கு ஹிதாம்ஸமருளிச்செய்ய வேணுமென்று பட்டர்க்கு விண்ணப்பம்செய்ய; ஊரையும் ஸ்வாஸ்த்யத்தையும் விட்டு மேற்குநோக்கி ஓரடியிட்டபோதே ஹிதாம்ஸமற்றது, சொல்லவேணுமோவென்றருளிச்செய்தார்.

இருநூற்றுப்பதிநாலாம்வார்த்தை.

முதலியாண்டான் ஸ்வாநுவ்ருத்தி ப்ரஸந்நாசார்யராலே மோக்ஷமென்ன, கூரத்தாழ்வான், க்ருபாமாத்ர ப்ரஸந்நாசார்யராலே மோக்ஷமென்ன; ஆண்டான், (குற்றமின்றிக்குணம்பெருக்கிக்குருக்களுக்கநுகூலராய்) என்று பெரியாழ்வாரருளிச்செய்கையாலே ஸ்வாநுவ்ருத்திப்ரஸந்நாசார்யராலே யாகவேணுமென்ன; ஆழ்வான், அங்ஙனன்று, (பயனன்றாகிலும் பாங்கலராகிலும், செயல் நன்றாகத்திருத்திப்பணிகொள்வான், குயில்நின்றார்பொழில்சூழ்கூருகூர்நம்பி) என்று ஸ்ரீமதுரகவியாழ்வாரருளிச்செய்கையாலே அவருடைய அடிப்பாட்டிலே நடக்கிற நமக்கெல்லாருக்கும் ஸ்வாநுவ்ருத்திகூடாமையாலே, க்ருபாமாத்ர ப்ரஸந்நாசார்யராலே மோக்ஷமாகவேணுமென்றருளிச்செய்தார்; ஆண்டானும் அப்படியாமென்று மிகவும் ப்ரீதரானார்.

இருநூற்றுப்பதினைஞ்சாம்வார்த்தை.

ஈஸ்வரன் மோக்ஷப்ரதன் என்றிருந்தபோது ஆசார்யனைத் தஞ்சமென்றிருப்பான், ஆசார்யன் மோக்ஷப்ரதனென்றிருந்தபோது ஆசார்ய வைபவஞ் சொன்னவனைத் தஞ்சமென்றிருப்பான்.

இருநூற்றுப்பதினாறாம்வார்த்தை.

பிள்ளை, பின்பழகியபெருமாள்ஜீயர்மடத்திலே ஒருநாள் எழுந்தருளியிருக்க, எல்லார்க்கும் ஆழ்வாருடைய அவஸ்த்தையுண்டாய்ப் பெறவேண்டியிராநின்றது, ஸ்த்ரீ அந்நபாநாதிகளோடேயிருக்கிற நாங்கள் செய்வதென்னென்று விண்ணப்பஞ்செய்ய; இங்கு அந்தஅவஸ்த்தைபிறந்ததில்லையாகிலும்ஸதாசார்யகடாக்ஷவிஶேஷத்தாலே ஸ்த்தூலஶரீர விமோசநத்துக்கும், கைங்கர்யப்ராப்திக்கும் நடுவே அவ்வவஸ்த்தையைப் பிறப்பித்து எம்பெருமான் கார்யஞ்செய்யுமென்று நம்பிள்ளையருளிச்செய்தாரென்று நடுவில்திருவீதிப்பிள்ளைபட்டரருளிச்செய்வர்.

இருநூற்றுப்பதினேழாம்வார்த்தை.

ஶிஷ்யன் ஆசார்யவிஷயத்தில் அர்த்தமுகத்தாலே ப்ரதிபத்தி பண்ணுமிடத்து அப்போது அங்குத்தைக்கும் அடியுண்டு இல்லை என்று நிரூபிக்கக்கடவனல்லன், தன் ஶரீரதாரணத்தோபாதியாகிலும் அங்குத்தைக்கு அம்முகங்களாலே ப்ரீதி பண்ணுகை ஸ்வரூபமென்று நம்பிள்ளையருளிச்செய்வர்.

இருநூற்றுப்பதினெட்டாம்வார்த்தை.

நஞ்ஜீயர், பட்டரை ஸ்ரீபாதந்தாங்குவதாகத்தோளிலே தண்டைவைக்கப்புக, உம்முடைய வேஷத்துக்கு விருத்தமாகச்செய்ய

லாகாதுகாணுமென்று பட்டாருளிச்செய்ய, இங்குத்தைகைங் கர்யத்துக்கு ஏகாந்தமென்று வேஷபரிக்ரஹம் பண்ணினேன், இதுதானே இதுக்கு விரோதியாமாகில்பழையவெள்ளையை யுடுக்கி றேனென்றார்.

இருநூற்றுப்பத்தொன்பதாம்வார்த்தை.

வைஷ்ணவனுக்குக் கரணத்ரயத்தாலும் காலக்ஷேபம் ஏதெ ன்னில்; ஆசார்ய கைங்கர்யம், பகவத்கைங்கர்யம், பாகவதகைங்கர் யம். இவை மூன்றும் தன்னிலொக்குமோ வென்னில்; ஸ்வரூபத் தை யுணர்ந்தவன், ஆசார்ய கைங்கர்யமே பகவத்கைங்கர்யமும் பாகவதகைங்கர்யமுமென்றிருக்கும்;ப்ரபாவஜ்ஞனவன், பகவத் கைங்கர்யமே ப்ரதாநமென்றிருக்கும்;உபயத்திலும் உணர்வில்லா தான் மூன்றையும் தத்ஸமமென்றிருப்பான்.

இருநூற்றிருபதாம்வார்த்தை.

எல்லாவாசார்யர்களுடையஅபிப்ராயமும்,எல்லாவாழ்வார்கள் திருவுள்ளக்கருத்தும், எல்லா வேதங்களுடைய கதியும், எல்லா ஶாஸ்த்ரங்களுடைய நினைவும் நிரூபித்தவளவில் ஆசார்யகைங்கர் யமே பரமப்ரயோஜநமென்று, நஞ்ஜீயர், பிள்ளைக்கருளிச்செய்தா ரென்று வடக்குத்திருவீதிப்பிள்ளை யருளிச்செய்வர்.

இருநூற்றிருபத்தோராம்வார்த்தை.

ஆசார்யகைங்கர்யம் தனக்குப் பசிவிளைந்துண்கை; பாகவத கைங்கர்யம் தாய்க்குச்சோறிடுகை; பகவத்கைங்கர்யம் ஒப்பூணுண் கையும் மூப்புக்குச்சோறிடுகையுமென்று வடுகநம்பியருளிச்செய் வர்.

இருநூற்றிருபத்திரண்டாம்வார்த்தை.

ஆச்சான்பிள்ளை தேவியார், மடத்தில் பிள்ளையோடேபிணங்கி வாருகோலே! போய்க்கிட என்ன, மடத்தில் பிள்ளையும் வாழும் மடத்துக்கு ஒருவார்கோலும் வேணுங்காணும், இவ்வார்கோல் தலைக்கடையை விளக்கித் திண்ணையிலே கிடக்கவோ, திருப்பள் ளியறையை விளக்கியுள்ளே கிடக்கவோ, என்று விண்ணப்பஞ் செய்தார்.

இருநூற்றிருபத்துமூன்றாம்வார்த்தை.

பகவத் ப்ரஸாதம் பகவத் ருசியைப் பிறப்பிக்கும், பகவத் ருசி ஆசார்யாங்கீகாரத்தைப் பிறப்பிக்கும், ஆசார்யாங்கீகாரம்ஸ்வீகார ஜ்ஞாநத்தைப்பிறப்பிக்கும், ஸ்வீகாரஜ்ஞாநம் பகவத் ப்ராப்தியை ப்பிறப்பிக்கும், பகவத் ப்ராப்தி தத்கைங்கர்யத்தைப் பிறப்பிக்கும், தத்கைர்யம் ததீயகைங்கர்யத்தைப்பிறப்பிக்கும்.

இருநூற்றிருபத்துநாலாம்வார்த்தை.

உடையவர் அந்திமதசையிலே அருளிச்செய்த வார்த்தை;- ஒருவன் ப்ரபந்நனானால் அவனுடைய தேஹயாத்ரை கர்மாதீநமாகையாலே கரையவேண்டா, கரைந்தானாகில் நாஸ்திகனுமித்தனை; ஆத்மயாத்ரை பகவததீநமாகையாலே அதில் தனக்கந்வய மில்லை, உண்டென்றிருந்தானாகில் ஆத்மஸமர்ப்பணம் பொய்யாமித்தனை; ஆகையாலே உபய யாத்ரையுங்கொண்டு அந்வயமில்லை, ஆகையால் கரணத்ரயங்களையுங்கொண்டு வேண்டிற்றுச்செய்து திரியவோவென்னில்; அது ஸ்வரூபமன்று, இனி உபாயாந்தரத்தில் அந்வயமில்லாவிட்டால் ப்ராப்யமான கைங்கர்யத்தில் அந்வயிக்கு மித்தனை, அது கூடாது; இங்கேயிருக்கும் நாள் செய்யுங்கைங்கர்யமாறு, அவையாவன - ஸ்ரீபாஷ்யத்தை வாசித்து வாசிப்பிக்கவும், மாட்டானாகில் அருளிச்செயலையோதி ஓதுவிக்கவும், அதுவும் மாட்டானாகில் உகந்தருளின திவ்யதேசங்களிலே அமுதுபடி சாத்துப்படி ஆராய்ந்துபோரவும், அதுவும்மாட்டானாகில் திருநாராயணபுரத்திலே ஒருகுடில்கட்டியிருக்கவும், அதுவும் மாட்டானாகில், த்வயத்தின் அர்த்தாநுஸந்தாநம்பண்ணவும், அதுவும் மாட்டானாகில் என்னுடையவனென்று அபிமானிப்பானொருஸ்ரீவைஷ்ணவனபிமாநத்திலே யொதுங்கியிருக்கவும். இப்படி வர்த்திக்கும் அதிகாரிக்கு முன்னடி பார்த்து வர்த்திக்கவேண்டுவது மூன்று விஷயங்களுண்டு; அவர்களாரென்னில்; - அநுகூலரும், ப்ரதிகூலரும், அநுபயரும். இதில் அநுகூலராவார் - ஸ்ரீவைஷ்ணவர்கள்; ப்ரதிகூலராவார் - பகவத்விட்டுக்கள்; அநுபயராவார் – ஸம்ஸாரிகள். இதில் அநுகூலரான ஸ்ரீவைஷ்ணவர்களைக்கண்டால், சந்தந குஸுமதாம்பூலாதிகளைப்போலேயும் நிலாத் தென்றல் சந்தனம் போலேயும் அபிமதவிஷயம்போலேயும் உகந்து வர்த்திப்பான்; பகவத்த்விட்டுக்களைக்கண்டால்ஸர்ப்பாக்நிகளைக்கண்டப்போலே, வெருவிவர்த்திப்பான்; அநுபயரைக்கண்டால் காஷ்டலோஷ்டாதிகளைக்கண்டாப்போலே உபேக்ஷித்து வர்த்திப்பான். இப்படி வர்த்திக்கவொட்டாதொழிகிறது அர்த்தகாமப்ராவண்யம். அர்த்தகாமமடியாக அநுகூலரான ஸ்ரீவைஷ்ணவர்களை அவமாநம் பண்ணினானாகில் ராஜபுத்ரனை அவமாநம்பண்ணினால் ராஜஹ்ருதயம் புண்படுமாப்போலே தத்வாரா எம்பெருமான் திருவுள்ளம் புண்படும்; ப்ரதிகூலரான பகவத்த்விட்டுக்களை அர்த்தகாமமடியாக ஆதரித்தானாகில், ராஜாஸார்வபௌமனாயிருக்க, ராஜமஹிஷி க்ஷுத்ர ஜந்துக்கள்பக்கலிலே மடிபிக்ஷை புக்கால் ராஜாவுக்கு அவத்யமாமாப்போலே எம்பெருமானுக்கு அவத்யமாய், தத்வாரா எம்பெருமான்திருவுள்ளம் புண்படும்; அநுபயரான ஸம்ஸாரிகளை,

அர்த்தகாமமடியச ஆதரித்தானாகில் ரத்நத்துக்கும் பாஷாணத்துக்கும் வாசி அறியாதாரைப்போலே நமக்கும் பிறர்க்கும் வாசியறிந்திலன், இவனுக்குப் பிறந்த ஜ்ஞாநம் கார்யகரமாகப்பெற்றிலோமேயென்று இவனளவில் ஈஸ்வரன்,உதாஸீநனாய்ப்போரும்.

இருநூற்றிருபத்தஞ்சாம்வார்த்தை.

முதலியாண்டானருளிச்செய்தவார்த்தை ; ப்ரபந்நன் யாவச்சரீரம் காலயாபநம் பண்ணும்படி யெங்ஙனேயென்னில்;- தேஹத்தில் ஆத்மபுத்திதவிர்கையும், தேஹாநுபந்திக்களான பதார்த்தங்களிலே மமதாபுத்தி தவிர்கையும், தேஹாத்பரனான ஆத்மாவைத் தானாக நினைத்திருக்கையும், ஸ்வரக்ஷணத்தில் ப்ராப்தியில்லாத பாரதந்த்ர்யமேஸ்வரூபமென்றிருக்கையும்.பாரதந்த்யத்துக்குளெல்லையேதென்னில்,ததியஶேஷத்வபர்யந்தமென்றிருக்கை.உத்தேஶ்யரான ஸ்ரீவைஷ்ணவர்கள் விஷயத்திலும், மஹோபகாரகனான ஆசார்யன் விஷயத்திலும்,ஸர்வப்ரகார ரக்ஷகனான எம்பெருமான் விஷயத்திலும், கரணத்ரயத்தாலும்ஆனவளவும் அநுகூலனாய்ப்போரவும்; வருந்தியும் ப்ராதிகூல்யம்தவிரவும், ஆசார்யருசி பரிக்ருஹீதமான த்வயார்த்தம் நெஞ்சிலேபட அநுஸந்திக்கவும், உகந்தருளின நிலங்களிலே பலகாலும்புக்கு முகங்காட்டவும், அருளிச்செயலைக்கொண்டு போதுபோக்கவும், ந்யாயார்ஜிதமான த்ரவ்யத்தாலே க்ஷுந்நிவ்ர்த்திமாத்ரத்திலே பர்யாப்திபிறக்கவும்,தேஹாத்மாபிமாந நிவ்ர்த்தி பூர்வகமாக ஸம்ஸாரபீதனாகவும், பரதேவதா ப்ரதிபத்தியும் ப்ரயோஜநாந்தர நிவ்ர்த்தி பூர்வகமாக ப்ராப்ய ருசியும், ஸாதநாந்தர நிவ்ர்த்தி பூர்வகமாக ஸித்தோபாயவ்யவஸ்த்தையும், இவை யித்தனையும் ஆசார்ய கடாக்ஷத்தாலும், எம்பெருமான் விஷயீகாரத்தாலும் ஸித்திக்குமென் றத்யவ ஸித்திருக்கையும், ஆசார்யஸந்நிதி யில்லாதபோது, விடாய்த்தவன் தண்ணீர் பெற்றானாகிலோவென்னுமாப்போலேயிருக்கவும், பகவத்ஸந்நிதியில்லாத போது நடுவழியிலே பசித்தவன் ஊணைச் சேரப்போமாப்போலே யிருக்கவும்.

இவ்வதிகாரிக்கு ஸ்ரீவைஷ்ணவர்கள்ஸ்ரீபாததீர்த்தம், ஜாதமான ப்ரஜைக்குத் தாய்முலைப்பால்போலே; எம்பெருமானுடைய தீர்த்தம் பசுவின்பாலும் நெய்யும்போலே; ஆழ்வார்கள் அருளிச்செயல் அம்ர்தபாநம்போலே; ஸாமாந்யஶாஸ்த்ரஶ்ரவணம் அநபிமதபோஜநம்போலே; விவிதபலங்களான நாநாவித பகவந்மந்த்ர ஜபாதிகள் வாஸநாபலத்தாலே வந்ததாகில் ஸம்ஸாரதர்மாநுவர்த்தநம்போலே, த்வயார்த்தாநு ஸந்தாநம் ப்ராப்யதேஶவாஸக ஸமாந மென்னலாமித்தனையிறே; மற்றுச்சொல்லலாவதில்லை.

## இருநூற்றிருபத்தாறும்வார்த்தை.

ஆசார்யன்கடவனென்றிருந்தால் வருவதென்னென்னில்:- த்ர்ஷ்டத்திலே கர்மாதீநம்; அங்கு ஏதேனும் சுருங்கிற்றுண்டாகில் ஆசார்யனை வெறுத்தபோது எம்பெருமானைக்கொண்டு தீர்த்துக்கொள்ள வொண்ணாது, எம்பெருமானை வெறுத்தோமாகில் ஆசார்யனைக்கொண்டு தீர்த்துக்கொள்ளலாம்.

## இருநூற்றிருபத்தேழாம்வார்த்தை.

எம்பெருமானார் தம்முடைய ஸ்ரீபாதத்திலே ஆச்ரயித்திருப்பாரொரு ஸ்ரீவைஷ்ணவருடைய பிள்ளைக்கு ஏகாயநரோட்டை ஸம்ஸர்க்கமுண்டாக, நம்மோடு ஸம்பந்தமுடையவன் வ்யபிசரித்து அநர்த்தப்படவொண்ணாதென்று பெருமாள் திருவடிகளிலே எழுந்தருளிநிற்கச்செய்தே அவனும் அங்கே ஸந்நிஹிதனாக, வாராய்! உனக்கு ப்ரமாணங்களால் காட்டலாம்படி ஜ்ஞாநபௌஷ்கல்யமில்லை, நான் வேதாந்தங்களில் அறுதியிட்டிருக்கும்பொருள் இவ்வாத்மாவுக்குத் தஞ்சமா யிருக்குமர்த்தம் த்வயமல்லதில்லையென்று பெருமாள் திருவடிகளில்ஸ்ரீசடகோபனை யெடுத்து ஸத்யம்பண்ணிக்கொடுத்தருளினார்; அவரும் அன்றுதொடங்கி த்வயநிஷ்டரானார்.

## இருநூற்றிருபத்தெட்டாம்வார்த்தை.

பட்டர் த்வயத்தி னர்த்தத்தை புத்திபண்ணி சப்தாந்தரத்தாலே இவ்வர்த்தத்தை யநுஸந்திக்கவொண்ணாதோவென்று உடையவர்க்கு விண்ணப்பஞ்செய்ய; அநுஸந்திக்கைக்குக் குறையில்லை, ஆகிலும் இப்பாசுரத்துக்குச் சுரக்கும் அர்த்தம் வேறொருபாசுரத்துக்குச்சுரவாது என்றருளிச்செய்தார்.

## இருநூற்றிருபத்தொன்பதாம்வார்த்தை.

நம்மாசார்யர்கள் திருமந்த்ரத்திலும் சரமச்லோகத்திலும் அர்த்தத்தை யொளித்துப்போருவர்கள்; த்வயத்தில் சப்தம் ஓதுங்கி ஒளித்துப்போருவர்கள்.

## இருநூற்றுமுப்பதாம்வார்த்தை.

திருமந்த்ரமும் சரமச்லோகமும் ஆசார்யவாக்யம்; த்வயம் சிஷ்யவாக்யம். த்வயத்தில் பூர்வகண்டத்தி னர்த்தத்தை யநுஸந்தித்தால் ஸ்வரக்ஷணார்த்தமாக விலங்கிக்கிடந்த துரும்பையெடுத்துப் பொகட ப்ராப்தியில்லை; உத்தரகண்டத்தி னர்த்தத்தை யநுஸந்தித்தால் தலைசொறிகைக்கு அவஸரமில்லை, மடலெடுத்துக்கொண்டு புறப்படு மித்தனை.

### இருநூற்றுமுப்பத்தோராம்வார்த்தை.

பகவச்சரணாரவிந்த சரணாகதனாய் ஜ்ஞாநிநா௦ அக்ரேஸரனாய் விலக்ஷணாதிகாரியான இப்ப்ரபந்நனுக்கு உபாயத்தில் ப்ரவ்ர்த்தி ஸ்வரூபவிரோதி; உபேயத்தில் நிவ்ர்த்திருசிவிரோதி; இவ்விரண்டர்த்தத்துக்கும் நிதர்சநபூதர் ஸ்வரக்ஷண க்ஷமையாயிருக்கச்செய்தேயும் ஸ்வஸ்வரூப பாரதந்த்ர்யத்தை அநுஸந்தித்து அசோகவநிகையில் எழுந்தருளியிருந்த பிராட்டியும், பெருமாள் நில்லென்றிருக்கச்செய்தேயும் தம்முடைய செல்லாமையைக்காட்டி அவருடைய வார்த்தையை யதிக்ரமித்து காட்டிலே தொடர்ந்தடிமை செய்த இளையபெருமாளும்.

### இருநூற்றுமுப்பத்திரண்டாம்வார்த்தை.

ஸம்ஸாரஸம்பந்தமற்றுத் திருநாட்டிலே போயிருக்குமளவும் த்வயத்தில் இரண்டுகண்டத்தி னர்த்தத்தையுங் கொண்டு ப்ரபந்நனானவன் காலயாபநம் பண்ணக்கடவன்.

### இருநூற்றுமுப்பத்துமூன்றாம்வார்த்தை.

ஆசார்ய ஸமாஶ்ரயணம் எப்போது அப்போது பிறந்தானாகக்கடவன், அன்றுமுதல் ஶரீராந்தமளவாகக் கீழ்ச்சொன்னபடி செய்துபோருமாகிலிறே தன் ஸ்வரூபத்துக்கும் இவன் ஸ்வரூபத்துக்குஞ் சேருவது; அல்லாதபோது எம்பெருமான் இவனைப் புருஷகாரமுகத்தாலே விடமாட்டாதே விதியே என்று ரக்ஷிக்குமித்தனை.

### இருநூற்றுமுப்பத்துநாலாம்வார்த்தை.

நஞ்ஜீயருக்கு பெரியபட்டரருளிச்செய்த பத்தர்த்தம்;- சருகேற்றின மரக்கலத்துக்குக்கேடு,காற்றாலே யாதல், ஸமுத்ரஸ்த்த பர்வதஶிகரம் தட்டியாதல், பெருங்கடல் பாய்ந்தாதல், மஹாமத்ஸ்யங்களினுடைய புச்சவிக்ஷேபங்களாலே யாதல், ப்ரதிகாரமில்லாத வழிஉவருமாப்போலே, எம்பெருமான்திருவடிகளிலே பண்ணிவைத்த ப்ரபத்திக்கும் பாகவதவிஷயங்களிலே அறிந்து மறியாதும்பண்ணின அபசாரங்களாலே சில அந்தராயங்கள் நாஶபர்யந்தமாக வுண்டாகவே ஸம்பவிக்கும். தத்பய ஸம்பாவநாநிவ்ர்த்யர்த்தமாக இவ்வத்தர்த்தத்தைக் கேட்டு புத்திபண்ணி யநுஷ்டித்து நிர்ப்பரனாய் மார்பிலே கைவைத்துறங்கும்; அவையெவையென்னில்; – ஆசார்யன் திருவுள்ளத்தாலே அநவரதம் நினைக்கும்படியாக ஶரீரார்த்தப்ராணன்களை யழிய மாறியாகிலும் ஒரு கைங்கர்யம் உறுதியாகச்செய்வது;பகவத்விஷயத்திலும்எல்லாரும் கொண்டாடும்படியாகவும் திருவுள்ளத்துக்குப் பாங்காகவும், தன்னை

ஞ்சு உணரவும் ஒரு ஸ்ரீகார்யஞ்செய்வது; பாகவதவிஷயத்திலும் அப்படியே பலஸ்ரீவைஷ்ணவ கோஷ்டியிலும் இன்னான் கல்யாண குணங்களையுடையவன் பகவத்பாகவதவிஷயங்களில் செய்து போரும்படி அழகிதென்று கொண்டாடும்படி போருவது; ஸர்வஸாக்ஷியாய் நினைவின் தலையிலே குடியிருக்கிற வெம்பெருமான் சிரியாதபடி, வறை நாற்றமான அல்பாஸ்திர பலச்ரத்தையாலே ஏகாந்தத்திலும் அந்யதேவதோபாஸநாதிகளை ஆசரியாதொழியவும், அந்யதேவதோபாஸகரோடு ஸஹகமந ஸஹவாஸ ஸஹாவஸ்தாநம் ஸம்பாஷணங்களை வருந்தியும் ஒழியவும்; வறைநாற்றத்தை யாசைப்பட்ட பெருச்சாளி இடரிலே யகப்பட்டு அநர்த்தப்படுமாப்போலே அநர்த்த ஸம்பந்த ரதிநிமித்தமான போஜநாஸநஶயநாதி ஸம்பந்தத்தாலே ஜ்ஞாநஹாநிபிறந்து விபரீதஜ்ஞாநமும் பிறந்து ஸ்ரீவைஷ்ணவகோஷ்டியிலும் பஹிஷ்க்ர்தனாய்விடும்; ஶிரச்சேத பர்யந்தமான மஹாபத்து ஸம்பாதிதமானாலும் ஆத்மதர்ம ப்ரச்யுதி பிறவாதபடி த்ர்டாத்யவஸாய நிஷ்டாகதனாகவும். இதுக்கு த்ர்ஷ்டாந்தபூதர் இவர்களிறே; பெரியநம்பியும் கூரத்தாழ்வானும்;

ஸாமாந்ய ஶாஸ்த்ரத்தில் கண்வையாதே விஶேஷஶாஸ்த்ரத்திலே அநவரத தர்ஷ்டியாய் அநுஷ்டாநத்திலும் அப்படியாய்த் தன்னை ஒருங்கப்பிடித்து நிஸ்ஸம்ஶயனாயிருக்கை; ஆதிபரதனும் திருக்கண்ணமங்கையாண்டானுமிறே இதுக்கு ப்மாணபூதர். நமக்கெட்டாத நிலமன்றோவென்னில்; ஏறுவான் சாருங்குதிரையிறே. இளநெஞ்சர்க்கெல்லாம் இத்தை அத்யவஸிக்கில் அருமையில்லை; ஒருத்தி அப்யாஸத்தாலே மலையை யெடுத்துக் காட்டினாளென்னும் பழஞ்சொலில்லையோ; கோயில் திருமலை பெருமாள் கோயில்முதலான ப்ரஸித்த க்ஷேத்ரங்களில் நித்யவாஸம்பண்ணுதல், அங்கே நித்யவாஸம்பண்ணி அபியுக்தரான ஸ்ரீவைஷ்ணவர்கள் பலகாலும் நினைக்கும்படி ஆப்தம்பண்ணி அர்த்தோபகாரத்தாலேயாதல், ஶேஷவ்ர்த்தியாலேயாதல், அநுவர்த்தித்துக்கொண்டுபோரவும், புத்ரமித்ர க்ஷேத்ர களத்ரஅர்த்ததேஹாதிகளிலே அதிப்ரஸக்திபண்ணாதே ஆசார்யன் ஆத்மஹிதம்பண்ணினத்துக்கொருவாசிதோற்ற அவற்றோடு ஒட்டற்றுப்பரிமாறவும்; பகவத்பாகவத கைங்கர்யத்திலெ மிகவும் தாத்பர்யமுடையனாய் ஸம்ஸாரத்தின் அநித்யத்தை யநுஸந்தித்து அவற்றோடு வேறொரு ஒட்டறவிடுகைக்கும், நித்யனாய் ப்ரியபூதனாய் ஸர்வவிதபந்துபூதனான வெம்பெருமானை, (நிரந்தரம் நினைப்பதாக நீநினைக்கவேண்டுமே) என்று அநுஸந்தித்துவரவும்; இப்பத்தர்த்தம் ப்ரதிபத்தி ஸ்நாநம்.

## இருநூற்றுமுப்பத்தஞ்சாம்வார்த்தை.

கந்தாடையாண்டா னருளிச்செய்த வார்த்தை;-ஸ்ரீவைஷ்ணவன் ஸம்ஸார மண்டலத்திலே யிருக்கு மிருப்பை, பிராட்டிராவணபவநத்திலேயிருந்து காட்டினாள்; எங்ஙனேயென்னில்; பிராட்டி இளையபெருமாள்திறத்தி லருளிச்செய்தவார்த்தை பெருமாள் திருவடிகளை யகற்றினாப்போலே இவனுக்கு ததீயாபராதம் எம்பெருமான்திருவடிகளை யகற்றும்; பிராட்டிக்கு ராவணஸ்பர்ஶம் போலே இவனுக்குதேஹஸம்பந்தம்; பிராட்டிக்கு தர்ஜநபத்ஸநாதிகளைப்பண்ணின ராக்ஷஸிகள் ஸஹவாஸம்போலே இவனுக்கு களத்ரபுத்ராதி ஸஹவாஸம்; பிராட்டிக்கு மாரீசதர்ஶநம்போலே இவனுக்கு விஷயப்ராவண்யம்; பிராட்டிக்கு ராவண தர்சநம் போலே இவனுக்கு இந்த்ரியங்கள்;பிராட்டிக்குத்திருவடிதோற்றரவுபோலே இவனுக்கு ஆசார்யன் தோற்றரவு; பிராட்டிக்குத்திருவடி ராமகுணங்களைச்சொன்னாப்போலே இவனுக்கு ஆழ்வார்களருளிச்செயல்; பிராட்டிக்குத் திருவாழி மோதிரத்தின் வரலாறு சொன்னாப்போலே இவனுக்கு ஆசார்ய னருளிச்செய்த குருபரம்பரை; பிராட்டிக்குத் திருவாழிமோதிரங்கொடுத்தாப்போலே இவனுக்கு ஆசார்ய னருளிச்செய்த திருமந்த்ரம்; பிராட்டிக்கு ஸ்ரீவிபீஷணாழ்வான்பெண்பிள்ளைகள் உசாத்துணையானாப்போலே இவனுக்கு ஸ்ரீவைஷ்ணவர்கள் உசாத்துணை; பிராட்டிக்கு விரோதியான ராவணாதிகளை நிரஸித்துப் பெருமாள் பிராட்டியை எழுந்தருளுவித்துக்கொண்டு போனாப்போலே இவனுக்கு விரோதியான ப்ரக்ருதி ஸம்பந்தத்தை யறுத்து எம்பெருமான் பரமபதத்தேறக்கொண்டுபோகை; இப்பத்துவார்த்தையையும் அநுஷ்டாநபர்யந்தமாகவுடைய ஸ்ரீவைஷ்ணவன் ஶரீரத்தளவும் நிரபாயமாகவிருந்து எம்பெருமான்திருவடிகளைப்பெறும்.

## இருநூற்றுமுப்பத்தாறும்வார்த்தை.

காணவேணுமென்றாசைப்படுகை காட்சி; அநுபவிக்கவேணுமென்றாசைப்படுகை அநுபவிக்கை; கைங்கர்யத்தை யாசைப்படுகை அநுபவஜநிதப்ரீதிகாரித கைங்கர்யம்; இவை யித்தனையும் ஏககாலத்திலே கடிக்கும்-அக்கரைப்பட்ட வதிகாரிக்கு.

## இருநூற்றுமுப்பத்தேழாம்வார்த்தை.

ஒருமுமுக்ஷுவுக்கு மூன்று த்யாஜ்யம், மூன்று உபாதேயம்; அதென்னென்னில்; - பௌருஷஸங்கம், காமஸங்கம, அர்த்தஸங்கம், என்றிவை மூன்று;ஆசார்யவிக்ரஹஸங்கம், ஆசார்யகைங்கர்ய ஸங்கம், ஆசார்யனருளிச்செய்த வார்த்தையி லதிஸங்கம், என்று இவை மூன்று.

### இருநூற்றுமுப்பத்தெட்டாம்வார்த்தை.

ஸ்வஸ்வரூப விரோதி, ஸம்பந்தமோசநத்வம், ஸ்வஸ்வரூப தர்ஶநத்வம், ஸ்வஸ்வரூபாநுபவத்வம், ஸ்வஸ்வரூப விகாஸவ்ர்த்தித்வம், ஸ்வஸ்வரூப அவிகாஸாநுபவத்வம், உபயவிகாஸ விர்த்தித்வம்.

### இருநூற்றுமுப்பத்தொன்பதாம்வார்த்தை.

ஜ்ஞாநதஶை, ப்ராபகதஶை, ப்ராப்திதஶை, ப்ரப்யதசை என்று நாலு; ஜ்ஞாநதஶையில் அஜ்ஞாநத்தை முன்னிட்டிருக்கக்கடவன்; ப்ராபகதஶையில் ஆகிஞ்சந்யத்தை முன்னிட்டிருக்கக்கடவன்; ப்ராப்தி தஶையில் ஆர்த்தியை முன்னிட்டிருக்கக்கடவன்; ப்ராப்ய தஶையில் த்வரையை முன்னிட்டிருக்கக்கடவன்.

### இருநூற்றுநாற்பதாம்வார்த்தை.

அநுபவம் விச்சேதியாமைக்கும், உசாத்துணைக்குமாகவாய்த்து தேஶவிஶேஷம் வேண்டுகிறது;

### இருநூற்றுநாற்பத்தோராம்வார்த்தை.

நானநுபவிக்கையாவது - அவனநுபவிக்கை. அபிமதவிஷயத்தில் அழுக்குகக்கும் செருக்கரைப்போலே வருத்தி வருந்திப் பெறுவாரும் இரந்து பெறுவாருமாயிருக்கும்.

### இருநூற்றுநாற்பத்திரண்டாம்வார்த்தை.

பகவத்பரர்த்விவிதர்; முமுக்ஷுக்களென்றும் புபுக்ஷுக்களென்றும். முமுக்ஷுக்கள்தான் த்விவிதர்; பகவச்சரணார்த்திகளும், கைவல்யார்த்திகளும்: பகவச்சரணார்த்திகள் த்விவிதர், உபாஸகரும், ப்ரபந்நரும்: ப்ரபந்நர்த்விவிதர்; ஆர்த்தரும், த்ர்ப்தரும்: ஆர்த்த ப்ரபந்நர்த்விவிதர்; ஸம்ஸாரமடிக்கொதித்தவர்களும் பகவதநுபவம் பெற்றாலொழிய தரிக்கமாட்டாதாரும்.

### இருநூற்றுநாற்பத்துமூன்றாம்வார்த்தை.

வ்யதிரிக்தங்களைவிட்டு அவனைப்பற்றுகை - வைஷ்ணவனாகையாவது; தன்னைவிட்டுஅவனைப்பற்றுகைஏகாந்தியாகையாவது; அவனைவிட்டு அவனைப் பற்றுகை பரமைகாந்தியாகையாவது.

### இருநூற்றுநாற்பத்துநாலாம்வார்த்தை.

அம்மங்கியம்மாள் வார்த்தை; - உடம்பைப்பற்றிச் சோறு தேடுவாரும், உறவுமுறைபற்றிச் சோறுதேடுவாரும், உடம்பனைப்பற்றிச் சோறுதேடுவாரும், உடம்புகளைப்பற்றிச் சோறுதேடுவாரும், லோகத்தைப்பற்றிச் சோறுதேடுவாரும், உயிரைப்பற்றிச்

சோறுதேடுவாரும், அவனைப்பற்றிச் சோறுதேடுவாரும், அவனையும் அவனையும் பற்றிச்சோறுதேடுவாரும், தன்னையும் அவனையும் பற்றிச் சோறுதேடுவாருமாயிறே யிருப்பதென்று.

இருநூற்றுநாற்பத்தஞ்சாம்வார்த்தை.

கலக்கத்தோடு கூடின தேற்றம் ப்ரதமாதிகாரிக்கு; தேற்றத்தோடு கூடின கலக்கம் சரமாதிகாரிக்கு.

இருநூற்றுநாற்பத்தாறும்வார்த்தை.

நஞ்ஜீயருக்கு பட்டரருளிச்செய்தவார்த்தை; - உபாயாஂஶ நிருபகர்த்ரிவிதர். எங்ஙனே யென்னில்;- கர்மஜ்ஞாந நிஷ்டரொன்றும், ஸித்தோபாயஸ்வீகார நிஷ்டரொன்றும், ஸித்தோபாயாந்தர்க்கதநிஷ்டரொன்றும்: இதில்ஸித்தோபாயஸ்வீகாரநிஷ்டன் கர்மஜ்ஞாநாதிநிஷ்ட்டனை அருவருக்கும்; ஸித்தோபாயாந்தர்க்கத நிஷ்டன் ஸித்தோபாயஸ்வீகாரநிஷ்டனை அருவருக்கும்; கர்மஜ்ஞாநாதி நிஷ்டன் கர்மபரிபாலநபங்கம் பிறக்கிறதோ வென்று கலங்கிக்கொண்டு போரும்;ஸித்தோபாயஸ்வீகாரநிஷ்டன்ஸித்தஸாதந பரிபாலந பங்கம் பிறக்கப்புகுகிறதோவென்று கலங்கிக்கொண்டு போரும்; ஸித்தோபாயாந்தர்க்கததத்வநிஷ்டன் ஸித்தஸாதநநிஷ்கர்ஷம் பண்ணிக்கொண்டு போரும்.

இருநூற்றுநாற்பத்தேழாம்வார்த்தை.

திருச்சங்கணித்துறைநம்பிக்கு பட்டரருளிச் செய்தவார்த்தை; - முமுக்ஷுவுக்கு சேதநகதமானஜ்ஞாநம் த்ரிவிதம்; உபாஸநாத்மகஜ்ஞாநமென்றும், ப்ரபதநாத்மகஜ்ஞாநமென்றும்,ஸ்வரூப யாதார்த்த்யஜ்ஞாநமென்றும். உபாஸநாத்மகஜ்ஞாந முடையன், உபாஸ்யன்பக்கலிலே தனக்குண்டான வ்ர்த்தியிலுகப்பை அவனுக்கும் தனக்குமென்றிருக்கும்; ப்ரபதநாத்மக ஜ்ஞாந முடையவன் ப்ரபத்தவ்யன்பக்கலிலே தனக்குண்டான வ்ர்த்தியிலுகப்பை அவனுக்கே யென்றிருக்கும்; ஸ்வரூபயாதார்த்த்ய ஜ்ஞாநமுடையவன் ஸ்வதஸ்ஸர்வஜ்ஞன்பக்கலுண்டான வ்ர்த்தியை ஸ்வயம் ஸ்வகார்யமென்றிருக்கும்; இவற்றுக்குதாஹரணம்; பதிவ்ரதைமாங்கல்யஸூத்ரம் பெருகினால் பந்திக்கும்போது பர்த்தாவினுடைய நிக்ரஹாநுக்ரஹங்களை ஹேதுவாக்காமல் தன்னுடைய அநர்த்தவ்ர்த்தியென்று நினைத்திருக்குமாப்போலே.

இருநூற்றுநாற்பத்தெட்டாம்வார்த்தை.

நம்பிள்ளைவார்த்தை, ஆத்மஸமர், ப்ராணஸமர், த்ர்ஷ்டிஸமர், பாஹுஸமர், ஆபரணஸமர், ஆயுதஸமர், பாதஸமர், பாதரேகாஸமர், பாதரக்ஷாஸமர், சாயாஸமர்.

இருநூற்றுநாற்பத்தொன்பதாம்வார்த்தை.

ஸர்வேஶ்வரனைப்பற்றுமவர், ஷட்விதர். அவர்களாகிறார்;- உத்தமன், உத்தமப்ராயன், மத்யமன், மத்யமப்ராயன், அதமன், அதமப்ராயன்: உத்தமனாகிறான் - உத்க்ர்ஷ்டனான எம்பெருமான்பக்கல் உபஜீவ்யாம்ஶத்துக்கு விரைகட்டுமவன்; மத்யமனாவான் - மாதவைஶ்வர்யத்துக்கு மஹாஜ்ஞானதபஸ்ஸு பண்ணுமவன்; மத்யப்ராயனாவான் மாதவனைப் பெற்று வகுத்தவாழ் வறியாதவன்; அதமனாவான் – அம்மானைப் பெற்று அந்நத்தைப் பற்றுமவன்; அதமப்ராயனாவான் - அம்மானைப்பெற்றும் அல்லாதாரைப் பற்றுமவன்.

இருநூற்றைம்பதாம்வார்த்தை.

கந்தாடையாண்டான் வார்த்தை; - ப்ரபத்திநிஷ்டர் மூவர்;- சப்த நிஷ்டரும், அர்த்தநிஷ்டரும், அபிமாநநிஷ்டரும்.

இருநூற்றைம்பத்தோராம்வார்த்தை.

அஜ்ஞாநதஶை - கும்பகர்ணனைப்போலே; தேவதாந்தர பஜநம் பண்ணுகிறதஶை ராவணனைப்போலே; பக்திதஶை சூர்ப்பணகையைப்போலே;ப்ரபத்திதஶை ஸ்ரீவிபீஷணாழ்வானைப்போலே என்று நம்பிள்ளை.

இருநூற்றைம்பத்திரண்டாம்வார்த்தை.

ஸர்வயோகஸந்யாஸி, ஸர்வோபாய ஶூந்யன், உண்டு உபவாஸி, ஸர்வஸங்கபரித்யாகி; திருமழிசைப்பிரான், நம்மாழ்வார், திருமங்கையாழ்வார், எம்பெருமானார்.

இருநூற்றைம்பத்துமூன்றாம்வார்த்தை.

அர்த்தலுப்தன் ஸம்ஸாரி; ஜ்ஞாநலுப்தன் ஸ்ரீவைஷ்ணவன்; கைங்கர்யலுப்தர் முக்தநித்யதர்; தாஸ்யலுப்தன் எம்பெருமான்.

இருநூற்றைம்பத்துநாலாம்வார்த்தை.

பத்தன், தன்னை ப்ரக்ர்தியென்றிருக்கும்; விஷயீ, தன்னைகாமுகனென்றிருக்கும்; கேவலன் தன்னை ஸ்வதந்த்ரனென்றிருக்கும்; ஶாஸ்த்ரி, தன்னை ஸர்வஜ்ஞனென்றிருக்கும்; கர்மீ தன்னை போக்தா வென்றிருக்கும்; ஜ்ஞாநி தன்னைவிரக்தனென்றிருக்கும்; பக்திமான் தன்னை மோக்ஷஸாதநனென்றிருக்கும்; ப்ரபந்நன் தன்னை அசித்தென்றிருக்கும்.

இருநூற்றைம்பத்தஞ்சாம்வார்த்தை,

பத்தருக்குசோறும், தண்ணீரும் தாரகம் ஆஜ்யக்ஷீராதிகள் போஷகத்ரவ்யம்; ஸ்ரக்சந்தநாதிகள் போக்யம்: முமுக்ஷுவுக்கு

ஜ்ஞாநம் தாரகம்; ஆசார்யவைபவம் போஷகம்; பகவத்குணாநு ஸந்தாநம் போக்யம்: நித்யமுக்தருக்கு மிது நாநுபவம் தாரகம்; கைங்கர்யம் போஷகம்; பகவந்முகோல்லாஸம் போக்யம்.

இருநூற்றைம்பத்தாறும்வார்த்தை.

ஓராசார்யன் ஸ்ரீபாதத்திலே இரண்டுபேர் ஆஸ்ரயிக்க, ஒருவர் ஜ்ஞாநாதிகராக ஒருவர் ஸம்பந்தமாத்ரமேயா யிருப்பானேன் னென்னில்;- பாபக்ஷீணமாகாமையாலே.பாபக்ஷீணமானால் ஆஸ்ரயிக்கக்கூடுமோ வென்னில், பாபந்தான் த்ரிவிதமாகையாலே கூடும்; எங்ஙனேயென்னில்; - ஒரு ஸ்த்ரீக்கு மூன்று ப்ரதிபந்தகம் உண்டாமாப்போலே. அவையாவன – பாணிக்ரஹணம்பண்ணவொட்டாத பாபமும், பர்த்தாவோடு ஸம்ஸ்லேஷிக்கவொட்டாத பாபமும், புத்ரரின்றிக்கே யிருக்கிற பாபமும்; இவை பாபகர்மத்தாலே போமாப்போலே; அதிகாரிக்கும் ஸமர்ப்பணவிரோதி க்ஷயமும், ஸாதநவிரோதிக்ஷயமும், ப்ராப்யவிரோதிக்ஷயமும், என்றிவை மூன்றும் பாபகர்மத்திலே போகவேண்டுகையாலே.

இருநூற்றைம்பத்தேழாம்வார்த்தை.

வைஷ்ணவனென்றும், ஏகாந்தியென்றும், பரமைகாந்தியென்றும் ஆகாரம் மூன்று. வைஷ்ணவனாகிறான் - தேவதாந்தர நிவ்ர்த்திபூர்வகமாக பகவச்சேஷத்வஜ்ஞாநம்பிறந்தவன்; ஏகாந்தியாகிறான் - ஸாதநாந்தர நிவ்ர்த்திபூர்வகமாக ஸித்தஸாதநஸ்வீகாரம் பண்ணினவன்; பரமைகாந்தியாகிறான்-ப்ரயோஜநாந்தர நிவ்ர்த்திபூர்வகமாக பரமப்ராப்ய ருசி பிறந்தவன்.

இருநூற்றைம்பத்தெட்டாம்வார்த்தை.

வைஷ்ணவன் அக்ர்த்யத்தை பாபமென்று தவிரும்; ஏகாந்தி அக்ர்த்யத்தை ஸ்வரூபஹாநியென்று தவிரும்; பரமைகாந்தி அக்ர்த்யத்தை ருசியில்லாமையாலே தவிரும்;(அருவருத்தஞ்சினாயேல்) என்னக்கடவதிறே.

இருநூற்றைம்பத்தொன்பதாம்வார்த்தை.

வைஷ்ணவன் க்ர்த்யத்தை அதிகாரி ஸம்பத்திக்காகச் செய்யும்; ஏகாந்தி க்ர்த்யத்தை லோகஸங்க்ரஹதயா கர்த்தவ்யமென்று செய்யும்; பரமைகாந்தி க்ர்த்யத்தை க்ர்பையாலே செய்யும்.

இருநூற்றறுபதாம்வார்த்தை.

வைஷ்ணவன் கைங்கர்யத்தை ஸாதநமென்று செய்யும்; ஏகாந்தி கைங்கர்யத்தை காலக்ஷேபமென்று செய்யும்; பரமைகாந்தி கைங்கர்யத்தை ராகப்ராப்தமென்று செய்யும்.

## இருநூற்றறுபத்தோராம்வார்த்தை.

சாந்தனுக்கு ஸத்வோத்ரேகஹேது - ஸத்வோத்தருடைய சரீராஹார நிரூபணம்பண்ணிச் சருகுதிரட்டாத ஸம்யக்ஜ்ஞாந நிஷ்டை; ஸ்வரூபஜ்ஞனுக்கு ஸ்வவர்ணாநுகூலமான ஸுஹ்ர்த்தர் ஶநமேஸர்வாபேக்ஷிதம்; ஸ்வரக்ஷணத்துக்கு பரேச்சாநுகூலமான ஸ்வஶேஷத்வமே ஸ்வரூபோபாயயுக்தம்; ஸத்வஸ்த்தனுக்கு ஸலக்ஷமிகாநுபவஸாதநம் ஸத்வஸ்தவிஷய லக்ஷ்மீகத ஸம்பந்தஸார ஜ்ஞாநமே.

## இருநூற்றறுபத்திரண்டாம்வார்த்தை.

ஶாந்தனாகிறான் சதுர்விதாஹங்காரங் கழிந்தவன்; அவையாவன - தேஹத்திலஹங்காரமும், ஸ்வரூபத்திலஹங்காரமும், உபாயத்தி லஹங்காரமும், உபேயத்தி லஹங்காரமும்: தேஹத்திலஹங்காரமாவது – தேஹத்தைத்தானாக நினைக்கையும், தேஹாநுபந்திகளான பதார்த்தங்களிலே மமதாபுத்திபண்ணுகையும், தேஹாந்த ராநுபவத்தில் புருஷார்த்தபுத்திபண்ணுகையும்.

## இருநூற்றறுபத்துமூன்றாம்வார்த்தை.

இது கழிகையாவது தேஹத்தில் ஆத்மபுத்தி நிவர்த்தியும், தேஹாநுபந்தியான பதார்த்தங்களில் மமதாபுத்தி நிவர்த்தியும், தேஹாந்தராநுபவத்தில் புருஷார்த்தபுத்தி நிவர்த்தியும்;ஸ்வரூபத்தில் அஹங்காரமாவது-தேஹத்தையண்டைகொண்டு ஸ்வரூபத்தை யுறுமுதல்,ஸ்வரூபத்தை யண்டைகொண்டு தேஹத்தை உறுமுதல் செய்கை; இதுகழிகையாவது - அவன் வடிவே படியாகையாலே பரஸ்வரூபத்துக்குள்ளே ஸ்வஸ்வரூபம் விளங்குகை; உபாயத்திலஹங்காரமாவது-ஸ்வகதஸ்வீகாரத்தில்உபாயபுத்திபண்ணுகை; இதுகழிகையாவது – ஸ்வகதஸ்வீகாரத்தில் உபாயபுத்தியை த்யஜித்து, பரகதஸ்வீகாரத்துக்கு விஷயனாகை; உபேயத்தில் அஹங்காரமாவது-நாம் அவனுக்கடிமை செய்கிறோமென்றிருக்கை; இது கழிகையாவது – தன்கையாலே தன்மயிரை வகிர்ந்தால் அந்யோந்யம் உபகாரஸ்ம்ர்தி கொண்டாட வேண்டாதாப்போலே அவயவபூதனான வாத்மா அவயவியான எம்பெருமானுக்கடிமை செய்கிறானென்றிருக்கை.

## இருநூற்றறுபத்துநாலாம்வார்த்தை.

பக்தன் வித்யாதீநன், சாஸ்த்திரி புண்யபாபாதீநன், கேவலன், ஸ்வஸ்ரூபாதீநன் முமுக்ஷுபகவததீநன், ப்ரபந்நன் ஆசார்யாதீநன், ப்ரபத்தி நிஷ்டன் ததீயாதீநன்.

## இருநூற்றறுபத்தஞ்சாம்வார்த்தை.

ப்ரபந்நத்வமாவது - (களைவாய்துன்பங்களையா தொழிவாய் களைகண் மற்றிலேன்) என்றும், (வங்கத்தின்கூம்பேறுமாப்பறவை போன்றேன்) என்றும், (அருள் நினைந்தே யழுங்குழவியதுவே போன்றிருந்தேன்) என்றும், (அருளே புரிந்திருந்தேன்) என்றும், (கடைத்தலையிருந்துவாழும்) என்றும், (படியாய்க்கிடந்து) என்றும், (அவ்வருளல்லன வருளுமல்ல) என்றும், (நல்லானரு ளல்லால் நாமநீர்வையகத்துப் பல்லாரருளும்பழுது) என்றும், (துணியேனினி நின்னருளல்லதெனக்கு) என்றும், (உன்னாலல்லால் யாவராலு மொன்றுங் குறைவேண்டேன்)என்றும், (சேமஞ்செங்கோனருளே) என்றும், (அவன்செய்யுஞ்சேமம்) என்றும், (அவன்செய்வன செய்துகொள்ள) என்றுமிருக்கை.

## இருநூற்றறுபத்தாறும்வார்த்தை.

முமுக்ஷுத்வமாவது-(அடியேற்கு வானுலகந்தெளிந்தேயென்றெய்துவது) என்றும், (அடியார்கள் குழாங்களை-உடன் கூடுவதென்றுகொலோ) என்றும், (கூவிக்கொள்ளுங்கால மின்னங்குறுகாதோ) என்றும், (மாகவைகுந்தங் காண்பதற்கென் மனமேகமெண்ணும்) என்றும், (சென்னாளெந்நாள்) என்றும், (முகப்பேகூவிப் பணிகொள்ளாய்) என்றும், (உனக்காட்பட்டு மடியேனின்ன முழல்வேனோ)என்றும், (நின்மாதாள் சேர்ந்துநிற்பதெஞ்ஞான்று கொலோ) என்றும், (மங்கவொட்டு) என்று மிருக்கை.

## இருநூற்றறுபத்தேழாம்வார்த்தை.

காட்டுத்தீசூழின் போக்கடியற்ற ம்ர்காதிகளைப்போலே தாபத்ரயாத்மகமான ஸம்ஸாராநுபவபீதரான முமுக்ஷுக்களுக்கு ஆசார்யன் முன்னிலையாக ப்ரபத்யநுஷ்டாந ப்ரகாரஞ் சொல்லுகிறது;-ஸ்ரீவிபீஷணாழ்வான் ராவணனைக்குறித்து, (ప్రదీయతాం దాశరథాయ మైథిలీ) (ப்ரதீயதாம்தாஸ்ரதாயமைதிலீ) என்று கொண்டு பெருமாள்திருவடிகளிலே பிராட்டியை ஸமர்ப்பியென்றருளிச்செய்தாப்போலே ஆசார்யனும் முமுக்ஷுவைக்குறித்து, இவ்வாத்மாவை எம்பெருமான்திருவடிகளிலே ஸமர்ப்பியென்றும், ஸ்ரீவிபீஷணாழ்வான் பெருமாள்திருவடிகளிலே யடைகைக்கு (కథం నరాణాం మోక్షభిక్షా మధ్యం నరః) என்றுகொண்டு ப்ரஹஸ்தாதி வாக்யதோஷ தூஷிதமான ராவணன் ஹ்ர்தயம்போலே ஆசார்யன் ப்ரஸாதித்தவார்த்தையும் ப்ரக்ர்த ஸஹவாஸதோஷதூஷிதமான முமுக்ஷுவின் ஹ்ர்தயத்தில் தொங்காது; ஸ்ரீவிபீஷணாழ்வான் பெருமாள் திருவடிகளை யடைகைக்கு (వధ్యతామేష తీవ్రేణ దణ్డేనసచివైస్సహ) (வத்யதா

மேஷதீவ்ரோண தண்டேநஸசிவைஸ்ஸஹ)என்றுகொண்டு மஹாராஜர்சொன்னவார்த்தைக்கு ஸ்ரீவிபீஷணாழ்வான் ஹ்ர்ஷ்டராய்நின்றாப்போலே முமுக்ஷுவும் ஒருஜ்ஞாநாதிகர் நெருக்கிச்சொன்ன வார்த்தைக்கு அதிப்ரீதனாயிருப்பான்; ஸ்ரீவிபீஷணாழ்வான் பெருமாள்திருவடிகளை யடைகைக்கு, (పరిత్యక్తామయాలఙ్కా మిత్రాణిచధనానిచ) (பரித்யக்தாமயாலங்கா மித்ராணிசதநாநிச) என்றுபரிக்ரஹமானவற்றை விட்டாப்போலே முமுக்ஷுவும் பகவத்விஷயஞ்சொல்லப்போகாத தேசத்தைவிட்டுப்போவான்; ஸ்ரீவிபீஷணாழ்வான் பெருமாள்திருவடிகளை யடைகைக்கு (ఖస్థఏవవ్యతిష్ఠత) (கஸ்தஏவவ்யதிஷ்டத) என்று நிராலம்பனாய் நின்றாப்போலே முமுக்ஷுவும எம்பெருமான்திருவடிகளையடைகைக்குஉபாயாந்தரசூந்யனாயிருப்பான்; ஸ்ரீவிபீஷணாழ்வான் பெருமாள்திருவடிகளையடைகைக்கு (త్యక్త్వాపుత్రాంశ్చదారాంశ్చ రాఘవంశరణంగతః) (த்யக்த்வாபுத்ரா0ஸ்சதாரா0ஸ்ச ராகவ0ஸரண0கதஃ) என்று அநுபாதேயங்களை விட்டுப் போந்தாப்போலே முமுக்ஷுவும் எம்பெருமான் திருவடிகளை யடைகைக்கு விலங்கான விரோதிகளை விடுவான்; ஸ்ரீவிபீஷணாழ்வான் பெருமாள்திருவடிகளை யடைகைக்கு (ఆజగామముహూర్తేన యత్రరామస్సలక్ష్మణః) (ஆஜகாமமுஹூர்த்தேந யத்ரராமஸ்ஸலக்ஷமணஃ) என்றுகொண்டு பெருமாளெழுந்தருளியிருந்த தேசமே உகந்து வந்தாப்போலே முமுக்ஷுவும் எம்பெருமானுகந்தருளின திவ்யதேசமே தனக்குத் தஞ்சமாகப் பற்றுவான்; ஸ்ரீவிபீஷணாழ்வான் பெருமாள்திருவடியடைகைக்கு (నివేదయతమాంక్షిప్రమ్) (நிவேதயதமா0க்ஷிப்ரம்) என்றும், (ఆనయైనంహరిశ్రేష్ఠ) (ஆநயைந0ஹரிச்ரேஷ்ட) என்கிறவிடங்களில் ஸ்ரீவிபீஷணாழ்வா னொருவனுமே ப்ரஸ்துதனாக, கூடவந்த முதலிகளுக்கு இழவுபேறு ஒத்தாப்போலே முமுக்ஷுக்களுக்கு எம்பெருமான்திருவடிகளிலே ஆசார்யன் பண்ணின ப்ரபத்தியே யமையும்; ஸ்ரீவிபீஷணாழ்வான் பெருமாள் திருவடிகளையடைகைக்கு, (తతస్తుసుగ్రీవవచోనిశమ్య తద్ధరీశ్వరేణాభిహితం నరేశ్వరః। విభీషణేనాశుజగామసఙ్గమం పతత్రిరాజేనయథాపురన్దరః) (ததஸ்துஸுக்ரீவவசோநிஸம்யதத்தரீஸ்வரேணாபிஹித0நரேஸ்வரஃ। விபீஷணேநாஸுஜகாமஸங்கம0பதத்ரிராஜேந யதாபுரந்தரஃ) என்று மஹாராஜர் முன்னிலையாகப் பெருமாள்ஸ்ரீவிபீஷணப்பெருமாளை கைக்கொண்டருளினாப்போலே முமுக்ஷுவையும் ஆசார்யர்முன்னிலையாக எம்பெருமான் கைக்கொண்டருளும்;

இப்படி கைக்கொண்டருளப்பட்ட ப்ரபந்நன் ஸம்ஸாரமண்டலத்திலே யிருக்கு மிருப்பை, பிராட்டி ராவணபவநத்திலே அசோகவநிகையிலே யிருந்து காட்டினாள். பிராட்டிக்கு ராவண

ஸம்பந்தம்போலே ஸ்ரீவைஷ்ணவனுக்கு உடம்போட்டை ஸம்பந்தம்; பிராட்டிக்கு ஏகாக்ஷீ ஏககர்ணிகளைப்போலே ஸ்ரீவைஷ்ணவனுக்கு அஹங்கார மமகாரங்கள்; பிராட்டியைப் பெருமாள் திருவடிகளில்நின்றும் பிரிக்கைக்குத்தோற்றின மாரீசனைப்போலே வைஷ்ணவனுக்கு முடிகைக்குத் தோற்றின விஷயப்ராவண்யம்;பிராட்டியைதர்ஜநபர்த்ஸநாதிகளைப்பண்ணினராக்ஷஸிகளோட்டை ஸம்பந்தம்போலேவைஷ்ணவனுக்கும் புத்ரமித்ராதிகளோட்டை ஸம்பந்தம்; பிராட்டிக்குத் திருவடிதோற்றரவுபோலே வைஷ்ணவனுக்கும்ஆசார்யன்தோற்றரவு; பிராட்டிக்குதிருவடிவர்ஷித்த ராமகுணம்போலே வைஷ்ணவனுக்கும் ஆழ்வார்களருளிச்செயல்;பிராட்டிக்குத் திருவாழிமோதிரத்தின்வரவுபோலே ஸ்ரீவைஷ்ணவனுக்கும் ஆசார்யன் ப்ரஸாதித்தகுருபரம்பரை;பிராட்டிக்குத் திருவாழிமோதிரம்போலே ஸ்ரீவைஷ்ணவனுக்கு ஆசார்யன் ப்ரஸாதித்த திருமந்த்ரம்; பிராட்டிக்குத் திருவாழிமோதிரத்தைப் பார்த்து அவ்வழியாலே அணிவிரலைக்குறித்து அவ்வழியாலே திருக்கை தொடக்கமாக வணைத்த திருத்தோள் திருமேனியெல்லா மணைத்த்து தரித்தாப்போலே ஸ்ரீவைஷ்ணவனும் ஆசார்யன் ப்ரஸாதித்த திருமந்த்ரத்தில் அர்த்தாநுஸந்தாநத்தோடே தரித்திருப்பான்; பிராட்டிக்கு இளையபெருமாள்திறத்தில் அருளிச்செய்தவார்த்தை பெருமாள்திருவடிகளையகற்றினாப்போலே வைஷ்ணவனுக்கும் பாகவதாபசாரம், * (𑌕𑍍𑌷𑌿𑌪𑌾𑌮𑌿 * 𑌨𑌕𑍍𑌷𑌮𑌾𑌮𑌿 க்ஷிபாமி * நக்ஷமாமி) இவற்றுக்கு விஷயமாய் எம்பெருமான்திருவடிகளை யகற்றும்; பிராட்டிக்கு விரோதிகளான ராவணாதிகளைத் துணித்து, பெருமாள் பிராட்டியைத்திருவயோத்யையேறக்கொண்டெழுந்தருளினாப்போலே ஸ்ரீவைஷ்ணவனுக்கும் விரோதியான ப்ரக்ருதி ஸம்பந்தத்தை ஸவாஸநமாகவறுத்து இந்த வாத்மாவை எம்பெருமான் பரமபதத்தேறக்கொண்டுபோய் நித்யமுக்தரோடொக்க நித்யகைங்கர்யத்தைக் கொண்டருளும்; இப்பத்துவார்த்தையும் அநுஷ்டாநபர்யந்தமாகவுடைய ஸ்ரீவைஷ்ணவனுக்கு இவ்விடந்தான் பரமபதம்.

### இருநூற்றறுபத்தெட்டாம்வார்த்தை.

எம்பெருமான் பக்கலிலே அபராதம்பண்ணினால் ஜந்மாந்தரத்திலே யீடேறலாம், ஸ்ரீவைஷ்ணவர்கள்பக்கலிலே அபராதம் பண்ணினால் ஜந்மாந்தரத்திலுமில்லை.

### இருநூற்றறுபத்தொன்பதாம்வார்த்தை.

ஆண்டாள்வார்த்தை;-ஆசார்யன்விஷயத்தில் அபசாரம்பண்ணின நாலூரானும் ஈடேறினான், பகவத்விஷயத்தில் அபராதம்

பண்ணின சிசுபாலனுமீடேறினான், பாகவதவிஷயத்தி லபசாரம்
பண்ணினார் இன்னாரீடேறினாரென்று இதுக்கு முன்பு கேட்டறிவ
தில்லை.

### இருநூற்றெழுபதாம்வார்த்தை.

நம்பிள்ளை, நஞ்சீயரை அவதாரங்கள் ஏதுக்காக வென்ன; ஈச்
வரன் அவதரித்துப்பண்ணின ஆனைத் தொழில்களெல்லாம் பாகவ
தாபசாரம் பொறாமை என்று ஜீயரருளிச்செய்தார்.

### இருநூற்றெழுபத்தோராம்வார்த்தை.

தேவகிப்பிராட்டிவார்த்தை;-(నకశ్చిన్నాపరాధ్యతి) (நகஸ்சிந்நா
பராத்யதி) என்னுமவளாகையாலே பிராட்டியும் தன் விஷயத்தில்
அபராதம்பொறுக்கும்; (మిత్రభావేన) (மித்ரபாவேந)என்னு மவனா
கையாலே - ஈச்வரனும் தன்விஷயத்தி லபராதம் பொறுக்கும்;
பாகவதவிஷயத்தி லபசாரம் இவர்கள் தங்களுக்கேயாகிலும் உயிரு
முடலும் பிரியும்படியாயிறே யிருப்பது.

புருஷகாரபூதையான பிராட்டி ஒருகையும் ப்ரபத்த்யுபதேச
ம்பண்ணின வாசார்யன் ஒருகையுமாக ப்ராப்யஸ்தலத்தேறப் பிடி
த்துக்கொண்டுபோகிலும் ப்ரதிபந்தகமாயேவிடும் - ப்ரபந்நவிஷ
யாபசாரம்;இதுக்குஉதாஹரணம்-விண்ணப்பஞ்செய்வார்திறத்தில்
அபசாரம்பண்ணின ஸ்ரீவைஷ்ணவர்கதை.

### இருநூற்றெழுபத்திரண்டாம்வார்த்தை.

எல்லாவேதங்களையும் எல்லா சாஸ்த்ரங்களையும் எல்லாவாழ்
வார்கள் ப்ரபந்தங்களையும், எல்லாவாசார்யர்கள் பாசுரங்களையும்
பார்த்தவிடத்து, ஒருவைஷ்ணவனுக்கு நிலைநின்ற ஆசார்யாபி
மாநமொழிய மோக்ஷோபாயமுமில்லை; நிலைநின்ற பாகவதாபசார
மொழிய மோக்ஷவிரோதியுமில்லை.

### இருநூற்றெழுபத்துமூன்றாம்வார்த்தை.

எம்பெருமானார் தம்முடைய அந்திமதசையிலே யருளிச்செ
ய்தவார்த்தை;-உடையவர் தம்முடைய திருவுள்ளத்திலே ஆர்த்
தியோடேவிசாரித்து பெரியபெருமாளைத்திருவடித்தொழுது விண்
ணப்பஞ்செய்தபடி;-ஸம்ஸாரத்தில் அருசிபிறந்ததென்று ஸாங்க
ப்ரபத்தியைப்பண்ணியருளினார், இப்போதிதுவென்னென்று பெ
ரியபெருமாள் வினவியருள; காலாதிக்ரமம் பிறந்ததே யென்ன;
காலத்துக்கு நாமன்றோ கடவோம், சிறிதுகாலம் உம்மைக்கொ
ண்டு லோகத்தைத் திருத்தப்பார்த்தோம்,அறப்பதறினீர்,இனிஉம
க்கு வேண்டுவதென்னென்ன; சடக்கெனத் திருவடிகளிலே சேர்த்

துக்கொள்ளவேண்டுமென்ன, ஆகில் இற்றைக்கிழமைக்கு நாலாம் நாள் அப்படியே செய்கிறோமென்ன, அப்போது என்னுடைய ஸம்பந்தி ஸம்பந்திகளெல்லாம் நாம்பெற்ற லோகம் பெறவேணு மென்று விண்ணப்பஞ்செய்து மடத்துக்கெழுந்தருளி, அப்போது முதலிகளெல்லாரையு மழைத்தருளி, ஒருக்காலு மருளிச்செய்யாத வர்த்தங்களெல்லா மருளிச்செய்தார்; அவ்வர்த்தங்களை யெல்லாங்கேட்டு அதிசங்கை பண்ணி விண்ணப்பஞ்செய்ய; இவரும் வெள்ளக்கேடாக வொண்ணாதென்று இற்றைக்கு நாலாம் நாள் பெரியபெருமாள் திருவடிகளிலே போகிறோமென்றருளிச்செய்ய; இவருடைய விச்லேஷத்தில் ஆத்மத்யாகம்பண்ணக்கடவோமென்று தேறியிருக்கிற ப்ரகாரத்தைத் திருவுள்ளம்பற்றி ஆளவந்தார் ஸ்ரீபாதமே, ஆத்மத்யாகம் பண்ணினருண்டாகில் நம்மோடன் வயமில்லையென்றருளிச்செய்ய, இவர்களும் இத்தைக்கேட்டு மிகவும் சோகார்த்தராய் இனி எங்களுக்குச்செய்ய வடுப்பதென், பட்டிபுகுதல், பட்டினி கிடத்ததன்றோ வென்று விண்ணப்பஞ்செய்ய, அருளிச்செய்த வார்த்தை;-ஸகல வேதங்களிலும் ஸகல சாஸ்த்ரங்களிலும், ஸகலமான ஆழ்வார்கள் திவ்ய ப்ரபந்தங்களிலும், ஸகலாசார்ய பாசுரங்களிலும் பார்த்தவிடத்தில் ஒருவதிகாரிக்கு த்வயமொழிய புருஷார்த்தமில்லை, ஆசார்யாபிமாநமொழிய மோக்ஷோபாயமில்லை, பாகவதாபசார மொழிய மோக்ஷவிரோதியில்லை.

பாகவதாபசாரந்தான் பஹுவிதம்;-அதில் ப்ரதாநமான அபசாரம் பன்னிரண்டு; அவையெவை யென்னில்;-ஜந்மநிரூபணம், சரீரநிரூபணம், பாவநிரூபணம், ஆச்ரம நிரூபணம், அவயவநிரூபணம், ஆலஸ்யநிரூபணம், வாஸநிரூபணம், பந்துநிரூபணம், ப்ரகாரநிரூபணம், வர்த்தநநிரூபணம், தோஷநிரூபணம். இதில் ஜந்மநிரூபணமாவது - (శూద్రం వా భగవద్భక్తం నిషాదం శ్వపచం తథా । వీక్షతే జాతిసామాన్యాత్ స యాతి నరకం నరః ॥ న శూద్రా భగవద్భక్తా విప్రా భాగవతాః స్మృతాః । సర్వవర్ణేషు తే శూద్రా యే హ్యభక్తా జనార్దనే । యః పశ్యతి శుభాచారం వైష్ణవం పీతకల్మషమ్। స వై యస్మిన్కులే జాతం ప్రణమేద్దణ్డవద్భువి ॥ కిమప్యత్రాభిజాయన్తే యోగినస్సర్వయోనిషు। ప్రత్యక్షితాత్మనాథానాం నైషాం చిన్త్యం కులాదికమ్) என்றித்யாதி புராணங்களிலே சொல்லப்பட்டிருக்கையாலே தான் வைஷ்ணவர்களை ஜந்மநிரூபணம் பண்ணுவது அபசாரம். (க) சரீரநிரூபணமாவது-புருஷசரீரமென்றும், ஸ்த்ரீசரீரமென்றும், திருவநந்தாழ்வானைப் பாம்புசரீரமென்றும், ஸ்ரீகருடாழ்வானையும் ஜடாயு மஹாராஜனையும் பக்ஷிசரீரமென்றும், ஸ்ரீகஜேந்த்ராழ்வானையும் திருவடியையும் ஸுக்ரீவமஹாராஜனையும் ம்ர்கங்களென்றும், ப்ரஹ்லாதாழ்வா

னையும் ஸ்ரீவிபீஷணப்பெருமாளையும் மஹாபலியையும் இவர்கள் முதலான பகவத்தாஸரை ராக்ஷஸரென்றும், தேவதிர்யக்மநுஷ்ய ஸ்த்தாவரரூபங்களான சதுர்வித சரீரங்களில் பகவத்பக்தர்யாதொருசரீரம் பரிக்ரஹித்திருந்தாலும் இந்த சரீரமென்று சரீர நிரூபணஞ்செய்கைஅபசாரம்.(உ)பாவநிரூபணமாவது-ஷட்பாவ விகாரமான பால்ய யௌவநவ்ர்த்தாதி வயோநிரூபணஞ் செய்கை அபசாரம். (ங)

ஆச்ரமநிரூபணமாவது - ப்ரஹ்மசர்யக்ர்ஹஸ்த்த வாநப்ரஸ்த்தயத்யாதிகளில் ஸ்ரீவைஷ்ணவர்களை இந்த ஆச்ரமத்தவர்களென்று ஆச்ரம நிரூபணஞ்செய்கை அபசாரம். (ச) அவயவநிரூபணமாவது-திருமேனியிலேயாதல், அவயவங்களிலேயாதல், ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஒரு தோஷமுண்டாகிலும் அவர்கள் ஜ்ஞாநமே ஸர்வாவயவபூர்த்தியென்று பாராமலிருக்கை அபசாரம்.(ரு)ஆலஸ்யநிரூபணமாவது-ப்ரபந்நனானவன் தம்முடைய திருமேனியை யுபேக்ஷபண்ணி ஹேயமா யிருக்குமிடத்தில் குத்ஸியாமல் அவர் விக்ரஹமே போக்யமாகப் பாராதிருத்தல் அபசாரம். இதுக்குவிண்ணப்பஞ்செய்வார்கதை.(சு) வாஸநிரூபணமாவது - கோயில்திருமலை பெருமாள்கோயில் நின்று மெழுந்தருளின ஸ்ரீவைஷ்ணவர்களை எத்தனை ஆதரிப்பார்கள், அப்படியே ஒரு குப்பத்திலிருந்து எழுந்தருளின ஸ்ரீவைஷ்ணவரை அவரிருந்த ஸ்தலமே திவ்யதேசமென்று உத்தேச்யப்ரதிபத்திசெய்யாதிருக்கைஅபசாரம்;(எ)

பந்துநிரூபணமாவது - தன்னுடைய ப்ரக்ர்தி பந்துக்களிலே யொரு ஸ்ரீவைஷணவருண்டாகில் தன்னுடைய ஸ்வாமியென்றுஉத்தேச்ய ப்ரதிபத்திசெய்யாதிருக்கைஅபசாரம்;(அ)ப்ரகாசநிரூபணமாவது-ஆசார்யரையும்,ஸிம்ஹாஸநத்திலவர்களையும், பூஜ்யரானவரையும், ப்ரஸித்தமாக ஆசார்ய கைங்கர்ய தாஸ்யகர்த்யம் பண்ணுமவர்களையும், உபாயசூந்யராய் ஒதுங்கி வர்த்திக்குமவர்களையும், ஏகப்ரகாரத்திலே ரக்ஷகரென்று பாராதிருத்தல் அபசாரம்; (கூ)ப்ரகார நிரூபணமாவது – திருநந்தவநஞ் செய்கிற ப்ரபந்நரையும், திருமுற்றங்கள் கட்டுவிக்கிற பரபந்நரையும், சாத்துப்படி திருமாலை திருவிளக்கிடுகிற ப்ரபந்நரையும், மற்றுமித்யாதி பரிசாரகங்கள் செய்கிற ப்ரபந்நரையும்,பார்வைக்கு ஒன்றுஞ் செய்யமாட்டாதே வெறுமனேயிருக்கிற ப்ரபந்நரையும், ஏகப்ரகாரத்திலே யுத்தேச்யரென்று பாராதிருக்கை அபசாரம்; (கo) வர்த்தந நிரூபணமாவது-ஸ்ரீவைஷ்ணவர்கள் திருமேனி யாத்ரையான ப்ரக்ர்திவச்யர்நிரூபத்தில், வ்யவஹாரம் பண்ணுதல்,

க்ர்ஷிபண்ணுதல், ஆயுதம்பிடித்து ஸேவித்தல், எவ்வகையில் பாங்காயிருந்தாலும் இவ்வகையிலிருக்கிறார்களென்று நினைக்கை அபசாரம்; இதுக்கு அவறை வ்யாபாரிகதை;(கக) தோஷநிருபணமாவது - ஸ்ரீவைஷ்ணவர்கள் திருமேனிபோகமான ப்ரவ்ர்த்தி-(సాకథాభారతీపుణ్యా ద్రౌపదీచపతివ్రతా। తద్విధాపాణ్డవాధన్యా ప్రసన్నేపురుషోత్తమే) (ஸாகதாபாரதீபுண்யா த்ரௌபதீசபதிவ்ரதா - தத்விதாபாண்டவாதந்யா ப்ரஸந்நேபுருஷோத்தமே) என்று த்ரிவிதகரணங்களிலும் விசேஷஜ்ஞரென்றும், அநுஷ்டாதாவென்றும், ஸ்ரீவைஷ்ணவர்களை ஏவமாதிதோஷங்கள் நிருபிக்கை அபசாரம். (கக)

தான் ஸ்ரீவைஷ்ணவர்கள் தோஷத்தைப் பார்க்கக்கடவனல்லன், கண்ணாலேபார்த்து மநஸ்ஸாலே நினைத்து, வாக்காலேசொல்லி, அம்மை கநகம்ர்கத்தைக்கொண்டுவரச்சொல்லி, பகவானையனுப்பின அபசாரம். அதெங்ஙனேயென்னில்; * கந்தர்ப்பகோடிலாவண்யமாய்* பஞ்சோப நிஷண்மயமாய், (హస్తుహవుహవు) என்றுதிவ்யமங்கள விக்ரகாநுபவம்பண்ணி - சப்தாதிவிஷயப்ராவண்யத்தில் ஒரு ஸுவர்ணபாஸ ம்ர்கத்தை யபேக்ஷித்து பெருமாளைவிட்டபோதே, பரமபாகவதனான விளையபெருமாளை பௌருஷவாக்யங்களைச் சொன்னபோதே ராக்ஷஸர்கையில் சிறைபோகவேண்டிற்று; வாசகத்தால் செய்த வபசாரத்துக்கு ப்ராயச்சித்தமில்லை. (నక్షమామికదాచన) (நக்ஷமாமிகதாசந) (మద్భక్తంశ్వపచంవాపి నిన్దాంకుర్వన్తియే నరాః। పద్మకోటిశతేనాపి నక్షమామివసున్ధరే) என்று. (கஉ)

இவைதானேரொன்று பஹுமுகமாகவந்தேறும். இவ்வபராதங்களைதான்பண்ணுகையும், தனக்குத்தேச்யனானவாசார்யன்பண்ணிலும், -(నియమాతిక్రమంరహసిబోధయేత్) (நியமாதிக்ரம0ரஹஸிபோதயேத்) என்கிறபடியே யேகாந்தத்தில் நியமித்துத்தவிர்ப்பியாதொழிகையும், பாரதந்த்ராரானவர்கள்பண்ணுமிடத்தில் முதுகிலேயடித்து விலக்காதொழிகையும், ஸ்ரீவைஷ்ணவர்கள் அந்யோந்யம் அபராதம் பண்ணுமிடத்தில் அவர்கள் ஸ்ரீபாதத்தைக்கட்டிக்கொண்டு ஆனவளவும் நியமித்துத் தவிர்ப்பியாதொழிகையும், அவர்கள்தவறாத வளவில் தான் பகவத்விஷயத்தில் சரணம் புகுராதொழிகையும், ஸ்ரீவைஷ்ணவர்கள் ஏகாந்தத்திலே பண்ணின அபராதங்களைப்ரகாசமாக்குகையும், அபராதக்ஷாமணம் பண்ணினவர்களை பாகவதாபசாரம்பண்ணினார்களென்று நினைத்திருக்கையும் இவ்வபராதங்களுக்கெல்லாமடி.

இருநூற்றெழுபத்துநாலாம்வார்த்தை.

அவச்யம் பரிஹார்யங்களான பன்னிரண்டு மறிய வேண்டும்; அவையாவன - ஆஹாரநியமமும், விஹாரநியமமும், அந்நநியம

மும், போஜநநியமமும், ஸ்நாநநியமமும், ஸ்வரூப நியமமும், உபாயநியமமும் உபேயநியமமும், வாஸநியமமும், போகநியமமும், ஆசாரநியமமும், ஸம்ஸர்க்கநியமமும். ஆஹார நியமமாவது பாகவதாந்நமே புஜிக்கை. (க) விஹாரநியமமாவது-பகவதாலயங்களிலும் திருநந்தவநங்களிலும் ஸ்வாசார்யன் ஸஞ்சரிக்கும் ஸ்தலங்களிலும் மற்றும் விலக்ஷணமானஸ்தலங்களிலுஞ் சரியாதே மற்றவிடத்திலே ஸஞ்சரிக்கை.(உ)அந்நநியமமாவது-ப்ராக்ர்தரிடத்தில் தன்னைக் கீழ்ப்படுத்தி ஆர்ஜியாதே, அமுதுபடி, சாத்துப்படி, ஸ்ரீகார்யம் முதலானவற்றுக்கு அர்ஹமான த்ரவ்யங்களுக்கு கர்த்தவ்யதயா அநுகூலனை நெருக்கி ஆர்ஜியாதே ஸ்வக்ஷேத்ரத்தில் ஸ்வசரீரத்தில் க்ர்ஷிபண்ணியாதல், அநுகூலருடைய ஸ்நேஹத்தால் வந்த த்ரவ்யமாதல், மாதுகரமுஷ்டியினாலே யார்ஜித்த த்ரவ்யம் ஸ்வீகரிக்கையும். (ங) போஜநநியமமாவது - இப்படி ஆர்ஜிதமான த்ரவ்யத்தை பகவத்பாகவத விஷயத்தில் ஸமர்பித்து ப்ரஸாதப்ரதிபத்திபண்ணும்போது ப்ரஸாதஸ்வீகாரமென்றும், க்ஷுந்நிவர்த்தி மாத்ரமென்றும் தேஹதாரண மாத்ரமென்றும் புருஷார்த்தமென்று இருக்கை. (ச)

ஸ்நாநநியமமாவது-பாபவிமோசந மென்றுதல்,ப்ரயோஜநாந்தரநினைவாதல், புண்ய முழுவுகிறேனென்றுதல், அதிகாரி ஸம்பத்திக்கு உடலாகவாதல், சரீரமாலிந்யத்துக்காகவாதலன்றிக்கே, பர்த்ர்போகத்துக்கு பதிவ்ரதைஸ்நாநம்பண்ணுமாப்போலே பகவத்பாகவதஸமாராதநஞ் செய்கைக்காக ஸ்நாநம்பண்ணுகை. (ரு) ஸ்வரூபநியமமாவது - ததீயசேஷமாயிருக்கை. (சு) உபாயநியமமாவது-அநந்யஸாதநனாயிருக்கை. (எ) உபேயநியமமாவது அநந்யப்ரயோஜநனாயிருக்கை. (அ) வாஸநியமமாவது-அநந்யப்ரயோஜனரான மஹாபாகவதருடைய திருமாளிகை கடைத்தலையிலேயொதுங்கிவர்த்திக்கை. (கூ) போகநியமமாவது - அவர்களுடைய ஸேவையே யெல்லாபோகங்களுமென்றிருக்கை. (க0) ஆசாரநியமமாவது-அர்த்தகாமாபிமாநங்கள் ஹேதுவாக ஸ்ரீவைஷ்ணவர்கள் திருவுள்ளத்திலும் ஆசார்யன் திருவுள்ளத்திலும் கலக்கம் வாராமல் வர்த்திக்கை. (கக) ஸம்ஸர்க்கநியமமாவது – ஸாத்விக ரங்கீகாரமுள்ள தேசத்திலே வஸித்திருக்கை. (கஉ) இந்நியமங்களுண்டாய்ப் போரவே இவ்வபாராதங்களொன்றும் புகுராதென்றருளிச் செய்தருளினார்.

### இருநூற்றெழுபத்தஞ்சாம்வார்த்தை.

நம்மனிச்சர் ஸ்ரீவைஷ்ணவர்களைக்கண்டால் தங்களோபாதி ப்ரக்ர்திமான்களாக நினைத்திருக்கும் புல்லிமையின்றிக்கே யாயிற்றிருப்பது; - (திருவுடை மன்னர்) (செழுமாமணிகள்) (நிலத்தேவர்) (தெள்ளியார்) (பெருமக்கள்)(பெருந்தவத்தர்)(உருவுடையா

ரிளையார்) (சிறுமாமனிசர்) (எம்பிரான்றன்சின்னங்களி வரிவர்) என்றும் எங்குல நாதரான வாழ்வார்கள் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு இப்படி திருநாமஞ்சாத்துகையாலே கேவலன் தன்னோடொக்க வொருமநுஷ்ய னென்று நினைத்திருக்கை அபசாரம்.

### இருநூற்றெழுபத்தாறும்வார்த்தை.

உடலை நெருக்கி உயிரோடே யுறவுகொண்டாடுவானைப்போலேகாணும் நாரங்களைநெருக்கி நாராயணனோடே உறவுகொண்டாடுகை.

### இருநூற்றெழுபத்தேழாம்வார்த்தை.

ஸ்ரீவைஷ்ணவர்களை நெகிழ நினைத்தானாகில் – நிலம்பிளந்தால் இழையிட வொண்ணாதாப்போலேயும், மலைமுறிந்தால் தாங்க வொண்ணாதாப்போலேயும், கடலுடைந்தால் அடைக்க வொண்ணாதாப்போலேயும் இதுவும் அப்ரதிக்ரியமாயிருப்பதொன்று.

### இருநூற்றெழுபத்தெட்டாம்வார்த்தை.

நாட்டிலேயிருந்து பெருமாளைஸேவிப்பாரிரண்டு ஸ்ரீவைஷ்ணவர்கள் அந்யோந்யம் விச்லேஷபீருக்களாய்ப்போருகிறவர்கள் ஒருக்கால் ராகத்வேஷங்கொண்டாடி ஒருவர் ஆச்சான்பிள்ளை ஸ்ரீபாதத் தேறவந்து மற்றையவருடைய குற்றம் விண்ணப்பஞ் செய்ய; ஸேவித்திருந்தவர்களிலேசிலர் அப்படிச் சொல்லலாமோவென்ன; ஆச்சான்பிள்ளை;-அவர்சொல்லுகிறீர், தண்டல்படையினானையமன், (పరిహర) என்றான், பிராட்டி, (నకశ్చిన్నాపరాధ్యతి) என்றாள், ஈச்வரன்,(செய்தாரேல் நன்றுசெய்தார்)என்றான், ஆழ்வார்கள் (அவன்றமமொவ்வினையராகிலும்) என்றார்கள்; இப்படி யிருக்க அவர் குற்றம்இவரையொழியச்சொல்லுவாராரொன்று அருளிச்செய்தார்.

### இருநூற்றெழுபத்தொன்பதாம்வார்த்தை.

ஸோமாசியாண்டானுக்கு அப்பிள்ளையருளிச்செய்தபடி;-ஆண்டான்! தேவரீர் ஜ்ஞாநவ்ர்த்தருமாய், வயோவ்ர்த்தருமாய் சீலவ்ர்த்தருமாய்,ஸ்ரீபாஷ்யம் திருவாய்மொழியிரண்டுக்கும் நிர்வாஹகருமாய், எல்லாவற்றாலும் பெரியவரா யிருந்தீர்; ஆகிலும் சாத்தியிருக்கிற திருப்பரிவட்டத்தலையில் பாகவதாபசார நிமித்தமாக ஒருதுணுக்கு முடிந்துவையுமென்றருளிச்செய்தார்.

### இருநூற்றெண்பதாம்வார்த்தை.

எம்பெருமான், ஸ்வவிஷயத்தில் அபசாரத்தைச் செய்யலாவதுண்டோவென்று பொறுக்கும்;பாகவதாபசாரமும் இவன் சாபலத்தாலே வந்ததாகில்சொல்லலாவதுண்டோவென்று பொறுக்கும்,

அஸஹ்யாபசாரம் ஒருபடியாலும் பொறான்; ஸதாசார்யன் ஏறிட்டுக்கொள்ளுமாகில் அதுவும்பொறுக்கும்; இதுக்கு உதாஹரணம்; (మయి ద్వేషానుబన్ధోఽభూత్ సంస్థితాఽప్యుత్థితే తవ। మత్పితుస్త్వత్కృతం పాపం దేవత్వత్తః ప్రణశ్యతు) (மயித்வேஷாநுபந்தோபூத் ஸ0ஸ்த்திதாபுத்திதேதவ। மத்பிதுஸ்த்வத்க்ர்த0பாப0 தேவதத்வத்தஃப்ரணஶ்யதி) என்றுத்தான்.

## இருநூற்றெண்பத்தோராம்வார்த்தை.

ஒருவனுக்கு பாகவதசேஷத்வம்ஸ்வரூபம்; பாகவதப்ரஸாதம் - உபாயம்; பாகவதகைங்கர்யம் உபேயம்; பாகவதாபசாரம் விரோதி; ஔபாதிக பாகவதவிஷயராகமும், நிருபாதிகபாகவதத்வேஷமும், ஒருவனுக்கு நிலைநின்ற தோஷம்.

## இருநூற்றெண்பத்திரண்டாம்வார்த்தை.

பிள்ளைவரந்தரும்பெருமாள்தாஸர்வார்த்தை; - எம்பெருமான் வெறுக்கும், மறக்கும், பொறுக்கும், ஒறுக்கும்: ப்ரயோஜநாந்தரபரரைக்கண்டவாறே நம்முடைய ரக்ஷகத்வத்தைப் பறித்துக்கொண்டு போவதே! என்று வெறுக்கும்;தன்னளவில் பண்ணின அபசாரத்தை மறக்கும்; ஆஜ்ஞாதிலங்கநத்தைப் பொறுக்கும்; பாகவதாபசாரத்தை ஒறுக்கும்.

## இருநூற்றெண்பத்துமூன்றாம்வார்த்தை.

நடாதூராழ்வான் ஒரு ஸ்ரீவைஷ்ணவர்கையைப் பிடித்துக்கொண்டு போகாநிற்க, நடுவில் திருவீதியிலே ஒருதிருக்குலத்தில் ஸ்ரீவைஷ்ணவர் அணுகிவர, கைக்கொடுத்துக்கொண்டுபோகிற ஸ்ரீவைஷ்ணவர் அவஜாதி நிரூபணம் பண்ணி, "கடக்கப்போ" என்ன, ஆழ்வான் அத்தைக்கேட்டு மூர்ச்சித்தார்; மூர்ச்சைதெளிந்தபின்பு அருகுநின்ற ஸ்ரீவைஷ்ணவர்கள் இது வென்னென்ன; திருக்குலத்திலே திருவவதரித்து இரண்டாற்றுக்கும் நடுவேவர்த்திக்கப்பெற்ற மஹாநுபாவனை பறையன், நெடுங்காலம் ஆத்மாபஹாரம் பண்ணித்திரிந்த நானன்றோ பறையனென்றருளினர்.

## இருநூற்றெண்பத்துநாலாம்வார்த்தை.

ஸ்ரீவைஷ்ணவனுக்கு அடுஞ்சோறு மூன்று, அடாச்சோறு மூன்று; அடாச்சோறாவது - அநுகூலரை நெருக்கி ஜீவிக்கையும், ப்ரதிகூலர்பக்கல் ஸாபேக்ஷனாய் ஜீவிக்கையும்,ஸாதநாந்தரபுத்த்யா கைங்கர்யம் பண்ணி ஜீவிக்கையும்; அநுகூலரை நெருக்குகையாவது - ஸர்வேச்வரனுயிர் நிலையிலே கோலிட்டடித்த மாத்ரம்; (ஆயர் கொழுந்தாய்) (జ్ఞానీత్వాత్మైవ మే మతమ్) (నాహమాత్మానమాశాసే మద్భక్తైస్సాధుభిర్వినా) (మమ ప్రాణా హి పాణ్డవాః) (ஜ்ஞாநீத்வாத்மைவமே

த்மைவமேமதம்)(நாஹமாத்ம நமாசாஸேமத்பக்தைஸ்ஸாதுபிர் விநா)(மமப்ராணுஹிபாண்டவா:) என்றுண்டாகையாலே;இவ்வர்த்தத்தில் வடுகநம்பிவார்த்தை; பகவதபசாரம்-எம்பெருமான் திருமேனியிலேதீங்குநினைக்கை;பாகவதாபசாரம்-அவன்திருமார்பிலே கோலிட்டடித்தமாத்ரம்;(యేప్రపన్నామహాత్మానస్తేమేనయనసంపదః)(யேப்ரபந்நாமஹாத்மாந ஸ்தேமேநயநஸம்பத:) என்றுண்டாகையாலே; இவ்வர்த்தத்திலே வானமாமலையாண்டான் பணிக்கும்படி;- ஸாத்விகரை நெருக்குகையாவது-மிதுந போக்யமான ஸ்ரீகௌஸ்துபத்திலே கரியிட்டுக்கீறின மாத்ரம். வகுளாபரணஸோமயாஜியார், தெய்வவாரியாண்டானை, எம்பெருமான் இங்கேவந்து அவதரிக்கைக்கு ஹேதுவென்னென்ன; பாகவதாபசாரம் பொறுமையென்றார்;ஆகையாலேஸ்ரீவைஷ்ணவர்களை நெருக்களம்பெருமான் நெஞ்சுளுக்கும், ப்ரதிகூலர்பக்கல் ஸாபேக்ஷனுகையாவது - ராஜமஹிஷி ராஜஸந்நிதியிலே அவன் காற்கடையிலே நின்றமாத்ரம்:

## இருநூற்றெண்பத்தஞ்சாம்வார்த்தை.

த்ரிபுவநவீரதேவன் பட்டருடைய ஆபிஜாத்யங்கண்டு நீர் நம்பக்கல் ஒருநாள்வந்து போகீர் என்று அபேக்ஷிக்க, பள்ளிகொள்ளுகிறவர் கைமறுத்தால் உன்னுடையவாசலொழிய வேறு போக்குண்டோ வென்றருளினர்: இவ்வர்த்தத்திலே கந்தாடையாண்டான் பெரியஜீயர்க்கு ந்யஸ்தபரனானவன் உடுத்தபுடைவைக்கு, ப்ரதிகூலர்பக்கலிலே கஞ்சியரிசிவேண்டிநிற்கையாவது படிபெற்றுண்ணும் பதிவ்ரதை, மேல் அழிவுக்கு பரபர்த்ர்ஸ்வீகாரம் பண்ணின மாத்ரமென்றருளிச்செய்தார், ஸாதநபுத்த்யா கைங்கர்யமாவது - பணிகொள்ளக் கூலியின்றிக்கே பணிசெய்து கூலிவேண்டுகை:இவ்வர்த்தத்தில்கந்தாடையாண்டான், கோபாலஜீயர்க் கருளிச்செய்தவார்த்தை; கைங்கர்யம் பண்ணி பலம் வேண்டுகையாவது - நாடுமூருமறிய ஒருவனுக்கு கைகொடுத்த ஸ்த்ரீயானவள் தன்பர்த்தாவோடே ராத்ரிஸம்ச்லேஷித்து விடிந்தவாறே அதுக்குக்கூலி தரவென்று அவனை மடிபிடித்துவளைத்த மாத்ரம்; அதுவென் கைங்கர்யம் பண்ணுமவனுக்கு ஜீவிக்கவேண்டாவோவென்ன; கொட்டையிட்டுப் பணிசெய்யா நின்றால், கொட்டின்வாய்தேய்ந்தால் கொட்டுடையவன் இரும்பிட்டுக்கொள்ளு மித்தனை யல்லது, கொட்டு, தானே இரும்பிட்டுக்கொள்ளக்கண்டிலோமே, அப்படியே இவனைக்கைக்கொண்டு பணிகொள்ளு மவனுக்கேயன்றோ ஜீவந மிடுகையும் பரமாயிருப்பது என்றருளிச்செய்தார்.

## இருநூற்றெண்பத்தாறும்வார்த்தை.

அடுஞ்சோறுவன-அநுகூலர் ஆதரத்தோடேயிடுமதும், சிஷ்யன் இழவாளனுக்கொடுக்குமதும், முஷ்டிபுக்கு ஜீவிக்குமதும்; இவ்வர்த்தத்தில் ப்ரபந்நரருளிச்செய்யும்படி; - போக்ய புத்த்யா கைங்கர்யம் பண்ணி ஜீவிக்குமதும், அநுகூலர் ஆதரத்தோடே கொடுக்குமதும் அவன் திருக்கைச்சிறப்பு; சிஷ்யன் கொடுக்குமது கருகூலத்தார் கொடுக்கக் கொள்ளுகை; முஷ்டி புகுந்தது அவன் பிறந்தபேரளவிலே தண்டிக்கொண்டமாத்ரம்; அதிலும் பேறிழவிலே ப்ரீதிவிஷாதம் பிறவாதோவென்ன; பெறுவதும் ஒருமுஷ்டி இழப்பதும் ஒருமுஷ்டியாகையாலே, அப்போது உச்சரிக்கிற பகவந்நாமத்தோடே சமிக்குமென்று பிள்ளை யருளிச்செய்வர்.

## இருநூற்றெண்பத்தேழாம்வார்த்தை.

போஜந விரோதியாவது-ஒருவைஷ்ணவன் ஆதரத்தோடே சோறிடப்புக்கால் உண்ணுமவன் ஆஹாரஸௌஷ்டவம் நிரூபிக்கையும், இடுமவன் இவனுக்கு இது அமையாதோ வென்றிருக்கையும்; போஜ்யவிரோதியாவது-இட்டுக்கணக்கெண்ணுஞ்சோறு; ஸ்வரூபாநுரூபமான போஜநமாவது-வ்யாதியைப்பற்றவாதல், பூஜையைப்பற்றவாதல், என்னது நானிடுகிறேனென்கிற போஜநத்தைத்தவிர்ந்து, (நெய்யமரின்னடிசில்) என்றும், (நல்லதோர்சோறு) என்றும், (உண்ணுஞ்சோறு) என்றும் இவற்றை புஜிக்கை.

## இருநூற்றெண்பத்தெட்டாம்வார்த்தை.

உடையவர் திருமலைக்கு எழுந்தருளுகிறபோது உத்தரநல்லூரிலே யெழுந்தருளின வளவிலே வானமாமலை தாஸரென்று ஒரு கோபாலஸ்ரீவைஷ்ணவர், பாலமுதுகாய்ச்சிக்கொண்டுவந்து உடையவர்க்குப் பாங்காகப் பரிமாற, உடையவர் விரும்பியமுது செய்ய, மீண்டெழுந்தருளுகிறபோதும் அப்படியே பாங்காகக் கொண்டுவந்து பரிமாற, இது நன்றாயிருந்ததீயென்ன; ஸ்ரீவைஷ்ணவர் முன்புவிரும்பியமுதுசெய்தவாறே இப்போதும் பாங்காகக் கொண்டுவந்தேனென்ன; அங்ஙனேயோவென்று ஒருநாள்உபவஸித்தருளினார். (உ)

## இருநூற்றெண்பத்தொன்பதாம்வார்த்தை.

ஒரு ஸ்ரீவைஷ்ணவரை ஒரு ஸ்ரீவைஷ்ணவர் அமுதுசெய்யப் பண்ணும்போது, இழவும், இரப்பும், இறுமாப்பும், துணுக்கமும், சோகமும், வாழ்வுமுண்டாகவேண்டும் என்று ஆச்சான்பிள்ளை யருளிச்செய்தருளினார். (உ)

## இருநூற்றுத்தொண்ணூறும்வார்த்தை.

விளைநகர்ப்பிள்ளை ஸ்ரீவைஷ்ணவர்களை அமுதுசெய்யப் பண்ணுவொன்றுபட்டர்கேட்டு, இதுக்கு அபிப்ராய மறியவேணுமென்று அவர்திருமாளிகையேற வெழுந்தருளி, அமுதுசெய்யக் காலமானவாறே அகத்துக்கு எழுந்தருள வேண்டுமென்ன; பட்டரும் பிள்ளையை யழைத்து, வாரீர் பிள்ளாய் நீர் என்னநினைத்து அமுது செய்யப்பண்ணுவீரென்ன; அடியேன் பின்புவரும் முதலிகளுக்கு முன்புஎழுந்தருளின முதலிகள் திருப்போனகப்பானையொழிச்சுவ ரென்கிற விதுப்ரயோஜநமாக நினைத்திருப்பனென்ன, பட்டரும் முதலிகள்முகம்பார்த்து இச்சொல்லற்ற சோறுண்டாகில் உஜ்ஜீவநமென்றருளினர்.

## இருநூற்றுத்தொண்ணூற்றோராம்வார்த்தை.

ஸ்ரீவிதுரர்திருமாளிகையிலே யமுதுசெய்தது மடிதடவாத சோறென்றிறே; இச்சொல்லற்றசோறிறே அது; அச்சோறு உண்ணுஞ்சோறு.

## இருநூற்றுத்தொண்ணூற்றிரண்டாம்வார்த்தை.

பிணச்சோறும், மணச்சோறும், விலைச்சோறும், புகழ்ச்சோறும், பொருட்சோறும், எச்சிற்சோறும், இவையாறும் த்யாஜ்யம்; மற்றைச்சோறிறே வைஷ்ணவனுண்ணுஞ்சோறென்று தீர்த்தங்குடிஜீயர் அருளிச்செய்வர்.

## இருநூற்றுத்தொண்ணூற்றுமூன்றும்வார்த்தை.

விஷயப்ராவண்யத்தில் கணிகாஸ்பர்சம் விதவாஸ்பர்சத்தைப் பற்ற யாகஸமாநம்; விதவாஸ்பர்சம் ப்ராஹ்மணஸ்த்ரீஸ்பர்சத்தைப்பற்ற யாகஸமாநம்; ப்ராஹ்மணிஸ்பர்சம்மாத்ர்ஸ்பர்சத்தைப் பற்ற யாகஸமாநம்; மாத்ர்ஸ்பர்சம் வைஷ்ணவஸ்பர்சத்தைப்பற்ற யாசஸமாநம்.

## இருநூற்றுத்தொண்ணூற்றுநாலாம்வார்த்தை.

தேஹம் திரள்பொருது; ஸ்வரூபம்தனிபொருது. பகவத்விஷயத்துக்கு வெளியும் திரளும்தேட்டமாயிருக்கும்; க்ஷுத்ர விஷயத்துக்கு இருளும் தனிமையும் தேட்டமாயிருக்கும்.

## இருநூற்றுத்தொண்ணூற்றஞ்சாம்வார்த்தை.

விஷயஸ்பர்சம் த்விவிதம்; அவிலக்ஷணவிஷயஸ்பர்சமென்றும் விலக்ஷண விஷயஸ்பர்சமென்றும்; அவிலக்ஷண விஷயஸ்பர்சம்-தேவதாநத்தில் ஜலகார்யம்போலே ப்ராயஸ்சித்தஸாத்யம்; விலக்ஷணவிஷயஸ்பர்சம் திருநந்தவநத்தில் ஜலகார்யம்போலே யாவதாத்மபாவிநாகஹேது.

பகவதநுப்பவம் பண்ணுமவனுக்கு விஷயாநுபவத்தில் அந்வயமில்லே; இவ்வர்த்தத்தை ஆழ்வார்கள் பலவிடங்களிலு மருளிச்செய்தார்கள்.

## இருநூற்றுத்தொண்ணூற்ருரும்வார்த்தை.

எங்ஙனேயென்னில்;- * வாசுதேவன் வலேயுளகப்படுதல், * மாதரார் கயற்கணென்னும் வலேயிலகப்படுதல், * மதுரக்கொழுஞ்சாறுகொண்ட சுந்தரத்தோளிலே யகப்படுதல், * சாந்தேந்து மென்முலேயார்தடந்தோளிலே யகப்படுதல், * வானவர்க்கு வன்துணேயான * அரங்கத்துறையுமின்றுணேவனேத்துணேயென்றிருத்தல், * அவரவர் பணேமுலே துணேயென்றிருத்தல், * அப்பொழுதைக்கப்பொழு தென்னாராவமுதத்தைப் பாநம் பண்ணுதல், * பாவையர் வாயமுதத்தைப் பாநம்பண்ணுதல், * நால்வேதப்பயனேப் பேணுதல், * மாதரார்வனமுலேப்பயனேப்பேணுதல், ஒன்று இதுவாதல்-ஒன்று அதுவாதல் என்று ஏவமாதிகளாலே பஹுவிதமாக வருளிச்செய்தார்கள்.

## இருநூற்றுத்தொண்ணூற்றேழாம்வார்த்தை.

அக்கரைச்சடியார்வார்த்தை; உச்சியம்போதினில் க்ஷுத்து நலியாநின்றதென்று என்பக்கலிலே ஒரு ஸ்ரீவைஷ்ணவர் வந்தால் க்ஷுந்நிவர்த்திபண்ணி யுகப்பிக்குமோபாதி ப்ரக்ர்திவ்யாதி நலியாநின்றதென்று என்பக்கலிலே ஒருஸ்ரீ வைஷ்ணவர் வந்தால் ப்ரக்ர்திவ்யாதியை ப்ரக்ர்தியையிட்டு சமிப்பித்தா லாகாதோவென்ன, நம்பிள்ளே யருளிச்செய்தபடி;-வாரீர், தாய் நெடுங்காலம் மலடுநின்று பெற்றதொரு பிள்ளே, பித்தேறி உன்பக்கலிலே உறிபோட்டுக் கொள்ளுகைக்கு கயிறுதா,கழுத்தையறுத்துக்கொள்ளுகைக்கு அரிவாள் தாவென்று வந்தால் கொடாதொழிகிறது அவன்சரீரநாசத்தை யஞ்சியன்றே, அவ்வளவும் போராதோ ஒரு ஸ்ரீவைஷ்ணவனுடைய ஸ்வரூபநாசமென்று.

## இருநூற்றுத்தொண்ணூற்றெட்டாம்வார்த்தை.

ஸ்ரீவைஷ்ணவனுக்கு விஷயப்ராவண்யம் பத்து முகமாக விரோதிக்கும்; அவையாவன-ஸ்வாநர்த்தம்,பராநர்த்தம், சாஸ்த்ர விரோதம், பகவந்நிக்ரஹம், பாகவதநிக்ரஹம், ஆசார்யநிக்ரஹம், விரோதிவர்த்தகத்வம், ஸ்வரூபவிரோதம், உபாயவிரோதம், உபேயவிரோதம்,தேசாந்தராபாவம்.தேவதாந்தரபரனுக்குகாலாந்தரேணவாகிலும் பாகவதனுகைக்கு யோக்யதையுண்டு, விஷயப்ரவணனுக்கு நரகமொழிய பலமில்லே; ஆகையாலே ஸ்ரீவைஷ்ணவன்

விஷயப்ரவணனாகையாவது - முதலை முடியோடே விழுங்குமாப் போலே யென்று ஆச்சான்பிள்ளை.

இருநூற்றுத்தொண்ணூற்றொன்பதாம்வார்த்தை.

முமுக்ஷுவுக்கு விஷயப்ராவண்யமும், தேவதாந்தர பஜநமும் ஸமாநம்;-வெற்றிலையுஞ்சந்தநமுமாய்ப்புக்குக் காமனை அர்ச்சிக்கிறத்தோடு எருக்கும் தும்பையுங்கொண்டுருத்ரனை அர்ச்சிக்கிறத்தோடுவாசியில்லாமையாலே. தேவதாந்தரந்தான் இதுக்கு ஸத்தை;-*மாரனார்வரிவெஞ்சிலைக்காட்செய்யும்பாரினூர். தேவதாந்தர பரனுக்கு அநந்தரஜந்மத்திலே வைஷ்ணவனாகைக்கு யோக்யதையுண்டு; விஷயபரனுக்கு நரகமொழிய பலமில்லை: ஆகையாலே தேவதாந்தர பஜநத்திலும் க்ரூரம். சௌசஸாபேக்ஷன் ஸ்நாநம்பண்ணிவருமாப்போலேகாண் - விஷயப்ரவணன் பகவத்பரனாய்த்திரிகிறபடி. ராஜகுமாரன் முடியோடே முடி தாழ்க்குமாப்போலே ஸ்ரீவைஷ்ணவன் விஷயப்ரவணனாகை. பிணவனுக்குப்பிணம்தேட்டம்; அதுவெறுமன்கிடையாமையாலே பணமுந்தேட்டம்; வைஷ்ணவனுக்குப் பிணமுந்தேட்டமன்று பணமுந்தேட்டமன்று, மணமேதேட்டம்; அதென்னமணமென்னில்;-அழகியமணவாளப்பெருமாளாகிறமணம்,வயலாலி மணவாளனாகிறமணம்,*விரையார்பொழில் வேங்கடவனென்கிறமணம். விஷயப்ரவணனுக்கு பகவதநுபவத்தில் அந்வயமில்லை, விஷயப்ராவண்யம் வந்தவாறே பாகவதாபசாரம் வரும், பாகவதாபசாரம் வந்தவாறே ஆசார்யாபிமாநம் போம், ஆசார்யாபிமாநம் போனவாறே – அருந்தலையான வழியும், அருநரகமும் பலமாம்; விஷயப்ராவண்யம் போனவாறே பாகவதாபசாரம்போம், பாகவதாபசாரம்போனவாறே ஆசார்யாபிமாநம்வரும், ஆசார்யாபிமாநம் வந்தவாறே - அர்ச்சிராதிமார்க்கமும் பரமபதமும்பலமாம்.

முந்நூறும்வார்த்தை.

முமுக்ஷுவுக்கு தேவதாந்தரப்ராவண்யமும், அர்த்தப்ராவண்யமும், விஷயப்ராவண்யமும் மோக்ஷப்ரதிபந்தகம்; அதில் இரண்டுப்ராவண்யமுண்டானால் காலாந்தரத்திலே யீடேறலாம்; ஒரு ப்ராவண்யம் ப்ரதிபந்தகமாயேவிடும்.

முந்நூற்றோராம்வார்த்தை.

திருவழுந்தூராளொருஸ்த்ரீ, சோழதிவாசரர் ஸ்ரீபாதத்திலே நல்வார்த்தை கேட்கவேண்டுமென்றுவர; அவர் ப்ராக்ர்திமாந்கள் சொல்லும் வார்த்தையைச்சொல்ல; ஊருகிறத்துக் கஞ்சி உள்ளே புகுந்தவென்னைஉயிர்க்கழுவில் வைத்தீரோயென்றுஅவள்சொல்ல,

பரீக்ஷித்தோங்காண் என்று நல்வார்த்தைசொன்னர். கடக்கத்தப்பிள்ளை மின்னுக்கஞ்சினவர்களை இடியின்கையிலே காட்டிக்கொடுத்தாப்போலேகாண் ஸம்ஸாரத்துக்கஞ்சி அதர்ஷ்டத்திலே சேர்ந்தவர்களை தேஹவச்யராக்குகை.

முந்நூற்றிரண்டாம்வார்த்தை.

வேஷங்கண்ட விஷயப்ரவணனுக்கு பகவத்விஷயத்திலந்வயமில்லை, பகவத்விஷயத்தில் அந்வயமுடையவனுக்குவிஷயாந்தரங்களில் அந்வயமில்லை என்று திருக்குருகைப்பிரான்ஜீயர்;

முந்நூற்றுமூன்றாம்வார்த்தை.

அம்மங்கிக்குப்பெரியமுதலியாரருளிச்செய்தவார்த்தை;-உன்னுடைய பால்யத்தைப்பாராதே பகவத்விஷயஞ் சொன்னோம், விபூதியென்படக்கடவதென்றறிகிலோம்,உடம்மையிட்டுவெருட்டாதே உயிரையிட்டு மருட்டிக்கொண்டுபோரு என்று.

முந்நூற்றுநாலாம்வார்த்தை.

சோமாசியாண்டான்,ஸ்ரீவைஷ்ணவனுக்குவிஷயப்ராவண்யம் தன்னை யுணர்ந்தாலுங் கூடாது, தன்ஸத்தையை யுணர்ந்தாலுங் கூடாது, ஸம்பந்தத்தை யுணர்ந்தாலுங் கூடாது, சரீரத்தையுணர்ந்தாலுங் கூடாதென்றருளினர்.

முந்நூற்றஞ்சாம்வார்த்தை.

அந்தர்யாமியாய்நின்று ஸத்தையைநோக்கினீர், அழுந்திக்கிடந்தநாளிலே கரணங்களைத்தந்தீர், அக்கரணங்களைக்கொண்டு வ்யபிசரியாதபடி ஆசார்யனை யிடுவித்தங்கீகரிப்பித்தீர், ரூபநாமங்களையுந்தந்தீர், விஷயாந்தரப்ராவண்யமும் பரநிந்தையுமே யாத்ரையாயிருக்கிற வாயாலே த்வயத்தை உச்சரிப்பித்தீர், தேவரீர் செய்தருளின வேற்றம் ஜந்மபரம்பரைகடோறும்பிறந்து த்வயத்தையுச்சரித்தால் வருவதுண்டோவென்னும்படியிறே இவ்வேற்றமெல்லாம் கீழ்ப்பட்டு ப்ரக்ருதியே மேற்பட்டுப்போராநின்றது; ஆகிலும் சரீராரம்ப கர்மத்தை யறுத்து அதிகாரிஸம்பத்தியையுண்டாக்கிக்கொடுத்தருளீர் தேவரீர் திருவுள்ளமாகில் என்று ஆச்சான் பிள்ளை யநுஸந்தாநம்.

முந்நூற்றாறாம்வார்த்தை.

அந்தர்யாமியாய்நின்று ஸத்தையைநோக்கினீர், அத்வேஷந்தொடக்கமான ஆத்மகுணத்தைப்பிறப்பித்தீர்,ஆசார்யன் திருவடிகளிலேசேர்த்தருளினீர்,ஸம்ஸாரஸம்பந்தத்தையுங்கழித்தருளினீர், ஸர்வாபராதங்களையும் பொறுத்தருளினீர்,அர்ச்சிராதிமார்க்கத்தை

யும பரமபதத்தையும் குணாநுபவத்தையுந்தந்து யாவதாத்மபாவி நித்யகைங்கர்யங்கொண்டருளினீர், ஸர்வஸ்வாமியான ஸர்வேச்வரனே! தேவரீர் செய்தருளினபடி யென்றான்! என்று நம்பிள்ளை யநுஸந்தாநம்.

முந்நூற்றேழாம்வார்த்தை.

அநந்யப்ரயோஜநனல்லாமையாலே உகப்புக்கு பாத்ரமல்லேன், ஆர்த்தப்ரபந்நனல்லாமையாலே இரக்கத்துக்கு பாத்ரமல்லேன், ப்ராமாதிகமல்லாமையாலே க்ஷமைக்கு பாத்ரமல்லேன், உபகாரகனென்று உகந்தீர், அநந்யனென்று இரங்கினீர், அவர்ஜநீயனென்று பொறுத்தீரென்று ஆச்சான்பிள்ளை.

முந்நூற்றெட்டாம்வார்த்தை.

ஸ்ரீவைஷ்ணவனை ஸ்ரீவைஷ்ணவர்கள்கொண்டாடப்புக்கால் ஆசார்யவைபவமிருக்கும்படியே! என்றும், உடையவர்கள் செய்யுமதுக்குக் கேள்வியுண்டோவென்றும், அவர்களருளிச்செய்கையாலே யுண்டாகக்கடவதென்றும் நினைக்கக்கடவன்.

முந்நூற்றொன்பதாம்வார்த்தை.

ஓரதிகாரியானவன் ஸம்ஸாரிபரிபவிக்கும்போது அநுஸந்திக்கும்படி நாலுவகையாயிருக்கும்; அவையாவன-நாயனும் அடியானுமானால் அடியானுக்குப் பிறந்த பரிபவம் நாயனன்றோ என்று கொள்வானென்று அவன்தலையிலே வைத்து தாந்தனா யிருக்கை; இவன் பண்ணின பரிபவம் தேஹஸ்பர்சியோ ஆத்மஸ்பர்சியோவென்று விவேகித்து, ஆத்மா ஜ்ஞாநாநந்தஸ்வரூபனாகையாலே-இப்பரிபவோக்திக்கு விஷயமல்லன்; இனிதேஹமிறே பரிபவவிஷயம்; இதுதான் அசுசிகளுக்கெல்லாம் கொள்கலமாகையாலே இதினுடைய தோஷமெல்லாம் இவனாற்சொல்ல முடியாதிறேயென்று வெறுப்புக் கெட்டிருக்கை. நாம் இத்தேஹத்தில் வாஸனையாலே உபாதேயபுத்திபண்ணிப்போருகையாலே இதினுடைய ஹேயதையை இவன் பரிபவோக்தியாலே யுணரப்பெற்றோமேயென்று அவன்பக்கலிலே உபகாரஸ்ம்ர்தி பண்ணியிருக்கை;-ஒருவைஷ்ணவன் ப்ரக்ர்தியை பரிபவித்தால் இவனுக்கு ஈச்வரன் அநர்த்தத்தைச் சிந்திக்கிறானேவென்று க்ர்பைபண்ணி இவ்வநர்த்தம் வாராதபடி திருவடிகளிலே சரணம் புகுவான்.

முந்நூற்றுப்பத்தாம்வார்த்தை.

ஸ்ரீவைஷ்ணவர் பரிபவத்தில் அநுஸந்திக்கும்படி;-இவர், நம்மைக் கழுத்துக்குமேலாக வுறவுபண்ணிவிடாதே அபிமாநித்த

வித்தாலே சிக்ஷாரூபமாகச் சொல்லப்பெற்றோமேயென்று இவர்க்கடிமையானஸ்வரூபமுஜ்ஜீவித்ததென்று க்ர்தார்த்தனுவான்.

முந்நூற்றுப்பதினேரும்வார்த்தை.

ஸ்ரீவைஷ்ணவன் ஸ்தோத்ரம்பண்ணினுல், நமக்குள்ளகுணங்களைச்சொன்னுனென்று உகக்கக்கடவனல்லன், இல்லாத குணங்களை ஏறிட்டுச்சொன்னுனென்று வெறுக்கக்கடவனல்லன், சீற்றத்துக்கு விஷயமான நம்மைக்குறித்து நிர்ஹேதுகமாக ப்ரஸாதித்தபடியாலே உகந்து, இவர்சொன்ன குணங்கள் நமக்கு இதுக்குமுன்பு இல்லையாகிலும் இவர்ப்ரஸாதத்தாலே மேல்உண்டாகக்கடவதென்று விச்வஸித்திருப்பான்; ஸம்ஸாரிஸ்தோத்ரம் பண்ணினுல் அடியானுனவனுடையஸ்தோத்ரத்துக்கு உகப்பான் நாயனன்றோவென்று தான் அதில் அந்வயமற்று சாந்தனு யிருப்பான்; இவனுடைய ஸ்தோத்ரம் தேஹஸ்பர்சியாய்த் தோன்றினபோது தேஹத்தில் இக்குணங்களில்லை, இவன் தன்வாஸனையாலே ப்ரமித்தானத்தனை, இக்குணங்கள்ஆத்மஸ்பர்சியன்றுஎன்றிருப்பான்.

முந்நூற்றுப்பன்னிரண்டாம்வார்த்தை.

பட்டருக்கு எம்பாரருளிச்செய்த வார்த்தை;-நீர் ஒருக்காலும் உடம்போடுண்டான வுறவுக்கு உளைந்து போருகிறீரில்லை, இதுக்கடியுற்றானுன வெம்பெருமான் பக்கலிலுறுதியை யுணர்ந்தோ, அன்றியே உம்முடைய பக்கலுண்டான வுறுதியை யுணர்ந்தோவென்றுகேட்க; அடியேனுக்கு இவை யிரண்டுமுண்டோ, உள்ள வுறவித்தனையும் உடம்போடுண்டான ஊற்றத்தாலே யன்றோவென்று விண்ணப்பஞ்செய்ய; எம்பாரும் இதுகேட்டு க்ர்தார்த்தராய், நீர்இங்ஙனேசொல்லுவானேன், ஆழ்வானேடுண்டானகுடற்றுடக்காலே அந்தரங்கமான வர்த்தங்களையாராயும்படியானவாகாரங்களையுடையீர், உடையவராலே யுண்டான ஜ்ஞாநமுடையீர், அதடியாகவெங்களோடுண்டான வுறவறிவீர், இப்படியிருக்க எங்களை நீர்இங்ஙன் உழைப்பிக்கலாமோ,இவ்வாகாரங்களில்உமக்குண்டான வுறவுறுதி சொல்லீரென்று உறுத்திக்கேட்க, பட்டர் விண்ணப்பஞ் செய்தபடி; - என்னுடைய வுயிர்க்கு உடைமையாகையன்றோ வுறுதியாவது, அங்ஙன்ன்றியே இவ்வுயிருக்கு ஒரு உறுதியுண்டாகில் அவ்வுயிருக்கு உறுதியுண்டோ, ஆகையால் அவ்வுயிரையுணர்ந்த ஆநந்தத்தாலே பிறந்த வுறுதியன்றோ வுண்டாகிலுள்ளது, என்றுவிண்ணப்பஞ்செய்ய;எம்பாரும் இதிலொரு குறையில்லை,சொன்னபடி யழகிது, ஆனுலும் அவ்விஷயஸ்பர்சத்தை யுணர்ந்த வாநந்தத்திலுங் காட்டில் இவ்விஷயத்திலே அநாதராதிசயங்கா

ணும் அபேக்ஷிதமாயிருப்பது, ஆகையால் உடம்போடுண்டான வுறவுக்கு உளைந்துபோரீரென்றருளிச்செய்ய; பட்டரும், க்லேச ஹேதுவான ப்ரக்ருதியை யுணர்ந்துசோகிக்கத்தொடங்கினார்: எம்பாரும், அருளிச்செய்தகார்யம் பலிப்பதே! என்று ப்ரீதரானார்.

முந்நூற்றுப்பதின்மூன்றாம்வார்த்தை.

அஜ்ஞனுடைய குணமும், ஜ்ஞானவானுடைய குணஹாநியும் விச்வஸிக்க வொண்ணாது; ஒருமூலஸ்பர்சமுள்ள இரும்பு பொன்னுமென்றிருப்பர்கள்; பகவத்ஸ்பர்சமுண்டானால் ஸம்ஸாரமற்றதுஎன்றிரார்கள்;த்வாரசேஷிபக்கலிலேதுவளக்கடவவிக்கெடுவான் ப்ரதாநசேஷிபக்கலிலே துவளாமல் இழந்துவிட்டானே.!

முந்நூற்றுப்பதினாலாம்வார்த்தை.

ஒருவனுக்கு பாரதந்த்ர்யமும், வ்யவஸாயமும், வ்ர்த்தியும் வேண்டும்; பௌருஷத்தை யேறிட்டுக்கொண்டு பாரதந்த்ர்யத்தை யழித்தான்; வ்யாபாரத்தையேறிட்டுக்கொண்டு வ்யவஸாயத்தை யழித்தான், விஷயாந்தராநுவ்ர்த்தியை யேறிட்டுக்கொண்டு வ்ர்த்தியையழித்தான்.

முந்நூற்றுப்பதினஞ்சாம்வார்த்தை.

ஆத்மஸாக்ஷாத்கார ஜ்ஞாநம்பிறவாமையாலே ஸ்வதேஹாத்மாபிமாநம் போகிறதில்லை, பகவத் பாரதந்த்ர்ய ஸாக்ஷாத்கார ஜ்ஞாநம் பிறவாமையாலேஸ்வஸ்வாதந்த்ர்ம்போகிறதில்லை,பகவத்போக்யதாவிஷயஸாக்ஷாத்காரஜ்ஞாநம் பிறவாமையாலே விஷய ப்ராவண்யம் போகிறதில்லை.

முந்நூற்றுப்பதினாறாம்வார்த்தை.

உடையவன்உடைமையை முன்னிட்டுக்கொண்டுகிடந்தான், உடைமை விநியோகத்தைமுன்னிட்டுக்கொண்டு கிடந்தது, விநியோகம் ப்ரீதியைமுன்னிட்டுக்கொண்டு கிடந்தது, ப்ரீதி உபாயத்தை முன்னிட்டுக்கொண்டு கிடந்தது, பரஸ்வரூபத்தை முன்னிட்டுக்கொண்டுகிடக்கில் ஸ்வஸ்வரூபத்தையறிந்திலன், ஸ்வஸ்வரூபத்தை முன்னிட்டுக்கொண்டு கிடக்கில் ஜீவநத்தை யறிந்திலன்.

முந்நூற்றுப்பதினேழாம்வார்த்தை.

உடையவர் திருக்கண்ணபுரத்துக்கெழுந்தருளுகிறபோது அம்மங்கிக்குப்போய்வருகிறேனென்ன, அம்மங்கி உடையவர்க்கு ப்ரஸாதித்த வார்த்தை;—அக்நிஜ்வாலையி லகப்படாதேகிடீர், அருநஞ்சுதின்னாதேகிடீர், அசுசிமிதியாதேகிடீர், அபலைகளோடு செறியாதேகிடீர், ஆஸ்திகரோடு செறிந்துபோருங்கிடீரென்று;

இதுக்கு வ்யாக்யாநமாக உடையவர் அருளிச்செய்தபடி;-அக்நி ஜ்வாலையென்கிறது-விரோதிகளை; விரோதிகள் ஸர்ப்பாக்நிபோலே; அவர்களாகிறார் - பாஹ்யகுத்ர்ஷ்டிகள். அருநஞ்சு என்கிறது-ப்ரச்சந்நவிரோதிகளை; ப்ரச்சந்நவிரோதிகள்-எலும்ச்சம்பழமும், கருப்பூரமும்போலே; அவர்களாகிறார்-ரூபநாமங்களை யேறிட்டுக் கொண்டு உள்ளேபுகுந்து பிந்நப்ரதிபத்திகளாயிருக்குமவர்கள். அசுசியென்கிறது-விரோதிகளை; விரோதிகள் காஷ்டலோஷ்டாதிகள்போலே; : அவர்களாகிறார் - சரீரைகதத்பரரான ஸம்ஸாரிகள். அபலைகளென்கிறது - அநுகூலரை; அநுகூலர் சந்நிகைகளைப் போலே; அவர்களாகிறார் - த்யாஜ்யோபாதேயங்களைத்தெளியவறியாதவர்கள். ஆஸ்திகரென்கிறது-அநுபோக்தாக்களை; அநுபோக்த்தாக்கள் - காமிநிகளைப்போலே; அவர்களாகிறார் - பூர்ணாதிகாரிகளென்று.

முந்நூற்றுப்பதினெட்டாம்வார்த்தை.

இவனுக்கு இழைச்சலிலும் இடும்பையிலும் அச்சம், ஏறுகையிலக்வயமில்லை; எடுப்பவனுக்காயிற்று ஏறுகையிலந்வயமுள்ளது. சங்கிப்பாரும், ஸ்ரீகோசம் திருடுவாரும், சுவர்ப்புறத்திலே கேட்பாரும், பொய்க்கண்ணீர்விழவிடுவாரும், ஒக்குமொக்கு மென்பாரும் உபாதேயரன்று.

முந்நூற்றுப்பத்தொன்பதாம்வார்த்தை.

விரோதிக்கு நல்லாரோடே செறியாதே பந்துக்களோடே செறி, பகவத்ப்ரபாவஞ்சொல்லுவாரோடே செறியாதே ஸ்வரூப ப்ரபாவஞ்சொல்லுவாரோடேசெறி என்று ஆச்சான்பிள்ளை.

வாரீர் என்கைக்கும், வம்மின் என்கைக்கும் பேசுமின் என்கைக்கும் யோக்யரன்று, (ஒட்டோம்) என்கைக்கே யோக்யர் கூழாட்கள்.

முந்நூற்றிருபதாம்வார்த்தை.

* நாட்டாரோடியல் வொழிந்து நாரணனை நண்ணினுரெருவன், நாட்டாரோடு வார்த்தை சொல்லக்கடவனல்லன், ஆரோடே சொல்லுவதென்னில்;-நாராயணனுக்கு வார்த்தை சொல்லுதல், நாராயணபரமான நெஞ்சுக்குச்சொல்லுதல், நாராயணபரரோடேசொல்லுதல், நாராயணபரமாக வேண்டுமென்பார்க்குச் சொல்லுதல் செய்யக்கடவன்.

முந்நூற்றிருபத்தோராம்வார்த்தை.

முமுக்ஷுவாய் ப்ரபந்நனாயிருக்குமவனுக்கு அஞ்சுகோடி த்யாஜ்யமாய் மூன்றுகோடி உபாதேயமாயிருக்கும்; அதென்போலவென்னில்; - பதிவ்ரதையாயிருப்பாளொரு ஸ்த்ரீக்கு அஞ்சு

கோடி த்யாஜ்யமாய், மூன்றுகோடி உபாதேயமானாப்போலே. அவனுக்குத்யாஜ்யர் - கந்நிகைகள், வேச்யைகள், வேச்யாபதிகள், ஒருவனுக்குக் கைக்கொடுத்துவைத்து எழுந்துபோனவள், உள்ளேயிருந்து மயக்குகிறவள்; இனி உபாதேயராவார்-மாதாபிதாக்கள், தன்பர்த்தாவுக்கு அவர்ஜநீயரானபந்துக்கள், தன்னோட்டை பதிவ்ரதைகள். இவனுக்குத்யாஜ்யர்-ஸம்ஸாரிகள், தேவதாந்தரங்கள், தேவதாந்தரபரதந்த்ரர்கள், தர்சநத்திலேபுகுந்துநின்று தர்சநாந்தரியாய்ப் போனவர்கள், ரூபநாமங்களையுடையராய் உள்ளேபுகுந்து அநந்யப்ரயோஜநரோடே மசக்குப் பரலிட்டுத்திரிகிறவர்கள்; இனி உபாதேயர்-ஆசார்யர்கள், ஸ்ரீவைஷ்ணவர்கள், ஸப்ரஹ்மசாரிகள்.

முந்நூற்றிருபத்திரண்டாம்வார்த்தை.

ஒருவைஷ்ணவனோடே ஸஹவாஸம்பண்ணும்போது அவனுடைய குணதோஷங்களிரண்டும் நிரூபிக்கவேண்டும்; நிரூபிக்கிறது குணங்கண்டு ஸ்துதிக்கவும், தோஷங்கண்டு தூஷிக்கவுமன்று, நாமே செறிகைக்கும், பற்றுகைக்கும் என்று ஆச்சான்பிள்ளை.

முந்நூற்றிருபத்துமூன்றாம்வார்த்தை.

நம்பிள்ளைவார்த்தை;-த்யாஜ்யவிஷயமும், உதாஸீநவிஷயமும், அநுக்ரஹவிஷயமும், அநுபவவிஷயமும். அதாவது-நாஸ்திகர், ஆஸ்திகநாஸ்திகர், நாஸ்திகஆஸ்திகர், ஆஸ்திகர். நாஸ்திகராவார்-புறம்போடு உள்ளோடுவாசியற நாஸ்திகர்; ஆஸ்திக நாஸ்திகராவார்-புறம்பு ஆஸ்திகரைப்போலேயாய் உள்ளுநாஸ்திகர்; நாஸ்திக ஆஸ்திகராவார் - புறம்புநாஸ்திகரைப்போலேயாய் உள்ளு ஆஸ்திகர்; ஆஸ்திகராவார்-உள்ளோடு புறம்போடு வாசியற ஆஸ்திகராயிருப்பவர்கள்.

முந்நூற்றிருபத்துநாலாம்வார்த்தை.

முதலியாண்டான், மிளகாழ்வானுக்கு அருளிச்செய்தவார்த்தை;—கன்னக்கள்ளர்நால்வர், அவர்களை ப்பரிஹரித்து வர்த்திக்கவேண்டும். அவர்களாரென்னில்; ஆத்மாபஹாரி, விபூத்யபஹாரி, குணத்வாபஹாரி, பரத்வாபஹாரி. ஆத்மாபஹாரியாகிறான் - திருமார்பில்கௌஸ்துபத்தைக்களவுகண்டவன். எங்ஙனேயென்னில்;-ஸ்வதந்த்ரனாயிருக்கை. விபூத்யபஹாரியாகிறான்-ஏகாயநன். எங்ஙனேயென்னில்;-மாத்ர்ஹீநன். குணத்வாபஹாரியாகிறான்-மாயாவாதி; எங்ஙனேயென்னில்; நிர்க்குணமென்கையாலே. பரத்வாபஹாரியாகிறான்-ருத்ரபரத்வ ப்ரமாண நிஷ்டன். இவர்களுக்கு அஜ்ஞாநமும் அந்யதாஜ்ஞாநமும், விபரீத ஜ்ஞாநமும் விஞ்சியிருக்கும்.

முந்நூற்றிருபத்தஞ்சாம்வார்த்தை.

ஸ்வரூபநாசகரோடு செறிகையுமநர்த்தம், ஸ்வரூபவர்த்தகரோடு செறியாதிருக்கையு மநர்த்தமென்றும், அஸத்ஸங்கதி அநர்த்தத்திலே தலைக்கட்டும், ஸத்ஸங்கதி * ஸதாபச்யந்தியிலே தலைக்கட்டும் என்றும் ஆச்சான்பிள்ளைவார்த்தை.

முந்நூற்றிருபத்தாறும்வார்த்தை.

பெரியதிருநாள் தீர்த்தம் ப்ரஸாதித்துப் பெருமாளெழுந்தருளுகிறபோது எம்பெருமானார் தாமும் தீர்த்தமாடி ஸேவித்தெழுந்தருளுகிறவர், பிள்ளை யுறங்காவில்லிதாஸர்திருக்கைகொடுத்துவர இதென்னென்று சிலர் விண்ணப்பஞ்செய்ய; ஜந்ம முயர்ந்திருக்கத் தாழ நின்றோமே யென்கிற வபிமானமுண்டிறே யெல்லார்க்கும், அக்கொத்தையுமில்லாதவரிறேயிவரென்றருளிச்செய்தருளினார்.

முந்நூற்றிருபத்தேழாம்வார்த்தை.

பட்டர் நீராடி யெழுந்தருளாநிற்க ஒருசைவன் எதிரேவர, அவனுடம்பில் சாம்பல் தம்திருமேனியிலே படிந்தாப்போலே யிருக்க, பின்னையும்போய் நீராடி யெழுந்தருளி உள்ளே யெழுந்தருளாதே திருமாளிகை வாசலிலே நின்று ஆண்டாளையழைத்து, இப்படி பட்டதுக்கு ப்ராயஶ்சித்த மருளிச்செய்ய வேண்டுமென்ன; ஆண்டாளும் நெடும்போது திகைத்துநின்று ஸ்ரீ பாத தீர்த்தத்தையாகிலுங்கொள்ளுமித்தனையன்றோவென்ன, அதுசேருமோவென்ன, உயிர் மாளுமளவில் உயிரைமாறியாகிலும் உயிரை நோக்கவேண்டாவோவென்ன, ஆகில் திருவுள்ளமானபடி செய்யுமத்தனையன்றோ வென்ன; அவ்வளவிலே ஆழ்வார்திருவரங்கப் பெருமாளரையரை † ஸ்ரீபாதந்தாங்குகிறச்சொல்லமால் சுட்டார் இங்கே தண்டுவாங்க வெழுந்தருள, ஆண்டாள் அவரைக்கண்டு தீர்த்தம் வாராநின்றதென்ன, பட்டர் நமக்குக்கூடுகிறதோ வென்ன, முத்தூணிட்டுக்கறக்கிலும் பசலுக்குப்பாலன்றோ வேண்டுவதென்ன, பட்டரும் அப்படியே செய்கையன்றோவுள்ளதென்ன, கலசப்பானையிலே திருமஞ்சனங்கொண்டு ஸ்ரீபாதத்திலே சொரிந்து தீர்த்தத்தையும் ப்ரஸாதப்பட்டு ப்ரீதரானார்.

முந்நூற்றிருபத்தெட்டாம்வார்த்தை.

பட்டாறியில் ஸம்மதியாரொன்று பட்டருடைய ஸ்ரீபாதத்தை வேறே சிலரை யிட்டு விளக்குவித்து ஆண்டாள் ப்ரஸாதப்படுவரென்று நஞ்சீயரருளிச்செய்தாரென்று நம்பிள்ளையருளிச்செய்வர்.

---

† இவ்விடத்திற்குச் சரியான பாடத்தை கோசாந்தரங்களிலே கண்டுகொள்வது.

முந்நூற்றிருபத்தொன்பதாம்வார்த்தை.

பகவத்சேஷத்வம் ஸர்வஸாதாரணமுமாய் சேதநனுக்கு ஸர்வாஸாதாரணமுமாயிருக்கும்; பகவத்சேஷவ்ர்த்தி ஸர்வஜந ஸாதாரணமுமாயிருக்கும்; பாகவதசேஷத்வமும் பாகவத கைங்கர்யமும் பரமைகாந்திக்கே அஸாதாரணம்.

முந்நூற்றுமுப்பதாம்வார்த்தை.

பாகவதவைபவஞ் சொல்லாநிற்கச்செய்தே ஒருவர் பகவத்விஷயஞ்சொல்ல, இப்போது விசேஷஞ்சொல்லுகிறவிடத்தில் ஸாமாந்யமென்னென்று ஆச்சான்பிள்ளை.

முந்நூற்றுமுப்பத்தோராம்வார்த்தை.

மத்பக்தவிச்லேஷ விஷயத்தில் ஸத்தையுடனே யிருக்குமவர்கள் மத்விஷயசத்ருக்களென்று ஈச்வரவாக்யம்; மறுவலிடாத சப்தாதிவிஷயத்தில் ப்ராவண்யத்தில் விரக்தியும், வளராநிற்பதான பாகவதவிஷய ப்ராவண்யமுங்காண் வைஷ்ணவ லக்ஷணமாவது என்றுநம்பிள்ளை.

முந்நூற்றுமுப்பத்திரண்டாம்வார்த்தை.

ஒருவனுக்கு ஒரு வ்யஸநமுண்டானால் அந்தவ்யஸநம் தீரும்படியாக ப்ரஸாதிக்கவேண்டுமென்று ஒரு ஸ்ரீவைஷ்ணவனை யபேக்ஷிக்க; அந்த ஸ்ரீவைஷ்ணவனும் ப்ரஸாதிக்க, அவனுக்கு அந்த வ்யஸநந்தீரக் காணாநின்றோம், இது பகவச்சக்தியாலேயோ, வைஷ்ணவன்சக்தியாலேயோ வென்று பின்பழகியபெருமாள்ஜீயர் நம்பிள்ளையைக்கேட்க; பகவச்சக்தியாலே யென்றருளிச்செய்ய; ஆனால் எம்பெருமானை யபேக்ஷிக்க வமையாதோவென்ன; அமையாது, அவனை ப்ரஸாதிப்பித்துக்கொள்ளும் வகை இதுவல்லதில்லையென்ன; ஒருவைஷ்ணவன் ப்ரதிஜ்ஞையை எம்பெருமான் முடித்துக்கொடுத்த விடமுண்டோவென்ன; அர்ஜுநனுக்கு ஜயத்ரதனோபாதி பலமின்றிக்கே யிருக்க, நான் அஸ்தமிப்பதுக்குமுன்னே, ஜயத்ரதனை வதிக்கக்கடவேனென்று அர்ஜுநன் பண்ணின ப்ரதிஜ்ஞையை ஸர்வேச்வரன் முடித்துக்கொடுத்தமை கண்டிலீரோ என்றருளினார்.

முந்நூற்றுமுப்பத்துமூன்றாம்வார்த்தை.

பிள்ளை;-ப்ரபந்நர் - ஜ்வரமாய்க்லேசியாநிற்க, பிள்ளைகாரியார்தாஸரும் சக்ரபாணிப்பிள்ளானும் அறியவந்தவளவிலே, இடவகையில் உத்தமனம் பிரக்ஷகனாய் க்லேசியாநின்றானென்ன; ப்ரபந்நர், "வர்த்தமாநரோகம் சாந்திரஸ்து" என்று ப்ரஸாதிக்க; பிள்ளான்! நீர்க்லேசியா நிற்க ப்ரஸாதிக்கையாவதென்? அது

சமிக்கையாவதென் என்ன; பிராட்டி ராவணபவநத்திலே யிருந்து ராக்ஷஸிகளாலே க்லேசப்படுத்தப்பட்டாளென்று, அவள் (ஶீதோ பவ ஹநூமத:) (சீதோபவஹநூமத:) என்றவாக்யம் பலித்ததில்லையோவென்று மூதலித்துக்கொடுத்தார்.

முந்நூற்றுமுப்பத்துநாலாம்வார்த்தை.

அநந்தாழ்வான் நோவுசாத்திக்கிடந்தாரென்று கேட்டருளி, திருவேங்கடமுடையான், "அநந்தாழ்வானையறிந்து வாருங்கோள்" என்று சில ஏகாங்கி ஸ்ரீவைஷ்ணவர்களைவிட்டறிவிக்க; ஆளிட்டு அந்திதொழுதானோவென்ன: திருவேங்கடமுடையான் எழுந்தருளி வாசலிலேவந்து நிற்க; பேசாதேகிடந்தான்; அநந்தாழ்வான்! நாம் வரப் பேசாதேகிடந்தாயீ! என்ன; ஒரு ஸ்ரீவைஷ்ணவன் வரப்பேசாதே யிருந்தேனாகிலன்றோ எனக்குக் குறையாவதென்ன; நாம் உம்மை இதினின்றும் போகச்சொல்லில் செய்வதென்னென்ன; நீர் ஒருகிழமைமுற்பட்டிரித்தனையன்றோ, இருவரும் திருமலையாழ்வாரை ஆச்ரயித்தோ மித்தனையன்றோவென்றருளிச்செய்தார்.

முந்நூற்றுமுப்பத்தஞ்சாம்வார்த்தை.

எம்பெருமான் இடைச்சி கையிலே கட்டுண்டிருந்தபடி-ராஜா அந்தஃபுரத்திலே மாலையாலே கட்டுண்டிருந்தாப்போலே.

முந்நூற்றுமுப்பத்தாறும்வார்த்தை.

மூன்றுவஸ்துவிலே பகவத்வஸ்துவளருமென்று பிள்ளான் பணிக்கும்; - திருவநந்தாழ்வான் மடியிலும், பெரியதிருவடி திருமுதுகிலும், ஸேனைமுதலியார்திருப்பிரம்பின்கீழும். நாய்ச்சிமாரோடே எம்பெருமான் லீலைகொண்டாடா நிற்க, லீலையாலே ஜகந்நிர்வஹணத்தை மறக்கிறானோவென்று நியமிச்கைக்காக ஸேனைமுதலியார் எழுந்தருளினவாறே, இந்தானும் ஐயர்வந்தாரென்று நாய்ச்சிமார் உள்ளேபுக்கருளுவராம்.

முந்நூற்றுமுப்பத்தேழாம்வார்த்தை.

ஸ்வஸ்வரூபத்துக்குஸீமா ததீயசேஷத்வம்; பரஸ்வரூபத்துக்குஸீமா அர்ச்சாவதாரம்; விரோதிஸ்வரூபத்துக்குஸீமா அஹங்காரமமகாரங்கள்; உபாய ஸ்வரூபத்துக்குஸீமா பகவத்க்ர்பை; உபேயத்துக்குஸீமா பகவந்முகோல்லாஸமென்று நம்பிள்ளை.

முந்நூற்றுமுப்பத்தெட்டாம்வார்த்தை.

கைகேயி பகவதபசாரம் பண்ணினாளேயாகிலும், தன்மகன் என்றாகிலும் பாகவத ஸ்நேகமுண்டாகையாலே முக்தையானாள்,

சக்ரவர்த்தி, பகவத்ஸ்நேஹம்பண்ணினானேயாகிலும் முக்தனாகிறிலன்.

முந்நூற்றுமுப்பத்தொன்பதாம்வார்த்தை.

அம்மணியாழ்வான் இருநூற்றுக்காதமாறு வந்து பட்டர் ஸ்ரீபாதத்திலே தண்டனிட்டு, *"நெடுமாற்கடிமைக்கு அர்த்தமருளிச்செய்யவேணும்" என்று அபேக்ஷிக்க; பட்டரும் எம்பெருமானையறிகையாவது - அவனுக்கு அணைவயிற்றுப்படி; ததீயரையறிகையாவது - அவனை முழுக்க வறிகையென்றருளிச்செய்ய; "இனி பலவகையாக வருளிச்செய்யில் அடியேன் மறப்பேன்" என்று அவர் அதுதன்னையே தாரகமாகக்கொண்டுபோனார்.

முந்நூற்றுநாற்பதாம்வார்த்தை.

பாகவதசேஷத்வ விதுரமான பகவச்சேஷத்வமும், தேஹாத்மாபிமாநம்போலே பொல்லாதென்று முதலியாண்டான்.

திருமங்கையாழ்வார்க்கு ததீயவிஷயத்திலுண்டான ஊற்றஞ்சொல்லுகிறது;-(நம்பிதன் நல்லமாமலர்ச்சேவடி சென்னியிற்சூடியுந்தொழுதும்-எழுந்தாடியும்) என்கிற பாசுரத்தைக்கேட்டு, இவர் கால்வாசியறிந்தவராயிருந்தாரென்று, ஆழ்வீர்! திருச்சேறையிலேவாரீர், உம்முடைய வபேக்ஷிதத்தைத்தலைக்கட்டித்தருகிறோமென்ன; இவர் திருச்சேறையிலே யெழுந்தருள, இவ்வாழ்வாருடைய அசைந்தவளையத்திலே புழுகைவழியவார்த்தாப்போலே *மாமதலைப்பிரான், தம்முடைய திருவடிகளைக் கொண்டுவந்து வைக்கப்புக, அத்தைப் புறங்கையாலே தட்டி, *"உன்பொது நின்ற பொன்னங்கழலோ வென்தலைமேலிருப்பது, *உன்றாள் தொழுவார்காண்மி னென்றலைமேலார்" என்ன; அத்தைக்கேட்டு லஜ்ஜாவிஷ்டனாய், உமக்கு அந்தர்யாமியாயிருந்தோமேயென்ன; *எம்பெருமான்றாள்தொழுவா ரெப்பொழுதுமென்மநத்தேயிருக்கின்றாரோயென்ன; ஆகிலும் - அர்ச்சாவதாரமாய் ஸுலபனாயிருந்தோமேயென்ன, *கடன்மல்லைத்தல சயநத்துறைவாரைக் கொண்டாடும் நெஞ்சுடையா ரவரெங்கள் குலதெய்வமேயென்ன, அவர்கள் எங்கேயுளரென்ன, (போதோடுபுனல்தூவும் புண்ணியரோவிண்ணவரில் பொலிகின்றாரோ) என்று - அவர்கள்ஸ்வரூபத்தைச்சொல்ல, (கண்களார் வளவும்நின்று) என்கிறபடியே கண்ணுக்கு இரையிடுகைக்கும், நெஞ்சுக்கு அநுஸந்தாநமாக இரையிடுகைக்கும் நாம்வேணுமேயென்ன, (வண்சேறையெம்பெருமானடியார் தம்மைக்கண்டேனுக் கிதுகாணீரென்னெஞ்சுங் கண்ணிணையும் களிக்குமாறு) என்ன; ஆகில் (सर्वगन्धस्सर्वरसः) (ஸர்வகந்தஸ்ஸர்வரஸ:) என்கிறபடியே உமக்குரஸாயநஸேவைக்கு நாம்வேண்

டுமேயென்ன, (எம்பெருமான் தானைநாளுஞ் சிந்திப்பார்க்கென்னுள்ளந் தேனூறியெப்பொழுதுந் தித்திக்குமே) என்ன, ஆகில் உமக்கு உபாயோபேயத்துக்கு நாம் வேணுமேயென்ன; உபாயத்துக்கு முற்பாடராகையாலும் உபேயத்துக்கெல்லைநிலமாகையாலும், இருந்தநாளைக்குஉசாத்துணையாகையாலும், (பேராளன்பேரோதும் பெரியோரையொருகாலு ம்பிரிகிலேனே) என்ன, ஆகில் அடியிலே நமக்குதாஸரென்றுபுகுந்தீரோயென்ன, (மற்றெல்லாம் பேசிலும் நின்றிருவெட்டெழுத்துங்கற்று நானுற்றது முன்னடியார்க்கடிமை) என்ன, இவர் நின்றநிலையில் தமக்குப் பிறந்த ப்ரீத்யதிசயத்தாலே பின்னையும் அவ்வாழ்வார் திருவுள்ளத்தைச்சோதிக்கைக்காக, அடியிலே நம்மைக்கவிபாடவென்றிழிந்து நம்மடியார்திறத்திலேமண்டிற்றென்னென்ன, (ராஜபுருஷஃ) என்னுமாப்போலே ஒருவனைக்கவிபாடுமவன் ஊரும் பேரும் தாரும் குடியும் வைத்துக் கவிபாடுமாப்போலே சொன்னேனித்தனை, ததீயவிஷயமே யுத்தேச்யமென்ன, ஆகிலும் பிரித்துச்சொன்னீரோயென்ன, பர்த்தாவின் தேஹத்தை விரும்பின பதிவ்ரதைக்குக் குற்றமுண்டாகிலிறே திவ்யமங்கள விக்ரஹத்தை விரும்பினவெனக்குக் குற்றமுண்டாவதென்று தமக்கு ததீயவிஷயத்திலுண்டான ஊற்றத்தைச்சொல்ல, ஈச்வரன் திருவுள்ளமுங்களித்து இவ்வாழ்வார்க்குத் தோற்றோமென்று இவர்திறத்திலே மடலெடுக்கும்படியாயிற்று ஈச்வரன் திருவுள்ளம்.

முந்நூற்றுநாற்பத்தோராம்வார்த்தை.

ஒருதேசவிசேஷத்தேறப்போய் அநுபவிக்கு மநுபவம் ஸாத்மிக்கைக்காகவும் உபகார ஸ்ம்ர்திக்காகவும் ப்ரபத்தி பண்ணின போது பரமபதத்தேறப்போகில், நச்சுப்பொய்கையென்று ஸம்ஸாரிகள் இத்துறையில் இழிவாரில்லாமையாலும், இவன் ஸம்ஸாரிகளைத்திருத்தவேண்டுகையாலும், ப்ரபந்நனுடைய சரீரம் சரமசரீரமாகையாலும், ஸர்வேச்வரனுக்கு அபிமதமாகையாலும், இத்தேசத்தில் பகவதநுபவந்தான் இவனுக்கு அபூர்வமாகையாலும், ஆசைகிளரவும் இவன் தன்னிசைவாலும் இவ்வர்த்தங்களைப்பற்ற வாய்த்து சரீராவஸாநத்திலே மோக்ஷமாகைக்கடி.

முந்நூற்றுநாற்பத்திரண்டாம்வார்த்தை.

கழிந்தநாளைக்கு அநுதபிக்கையும், வருகிறகாலத்தைப்பழுதுபோக்காமையுங்காண் வைஷ்ணவத்வமாவது என்று பிள்ளை.

முந்நூற்றுநாற்பத்துமூன்றாம்வார்த்தை.

நம்பிள்ளை, நஞ்சீயரை தான் தனக்கு வைஷ்ணவத்வ முண்டென்றறியலாவது எவ்வவஸ்த்தை பிறந்தாலென்ன ; அர்ச்சாவ

தாரத்துக்கு உயிருண்டென்று நெஞ்சிற்பட்டவன்றும், ஒருவைஷ்ணவன்பக்கல் புத்ரதாராதிகள்பக்கல்ஸ்நேஹத்தளவாகிலும் ஸ்நேஹம் பிறந்தவன்றும், ஒருஸ்ரீவைஷ்ணவர் கடுத்து வார்த்தை சொன்னால் தன்னெஞ்சில் சிவிட்குத்தட்டாமல் போகரூபமானவன்றும், பரதாரபரத்ரவ்யங்களில் நசையற்றவன்றும், ஏகாந்தியென்றறியலாம்; ஸ்வதார ஸ்வத்ரவ்யங்களில் நசையற்றவன்று பரமைகாந்தியென்றறியலாம் என்றருளிச்செய்தார்.

முந்நூற்றுநாற்பத்துநாலாம்வார்த்தை.

பொன்னாச்சியார் வார்த்தை;-பாண்டியமண்டலத்திலே ஒரு ஸ்ரீவைஷ்ணவனுடையவைஷ்ணவத்வத்தைக்கொண்டாட, எழுதியணிந்த வைஷ்ணவத்வமோ, எல்லைநிலத்தில் வைஷ்ணவத்வமோவென்றும்.

முந்நூற்றுநாற்பத்தஞ்சாம்வார்த்தை.

பட்டர் தம்முடைய ஸ்ரீபாதத்திலே ஸேவிப்பாரொரு ஸ்ரீவைஷ்ணவரை, நீர் அநந்தாழ்வான்ஸ்ரீபாதத்திலே சென்று ஸ்ரீவைஷ்ணவ லக்ஷண மிருக்கும்படி யென்னென்று கேட்டுவாரும் என்ன; அவரும், அநந்தாழ்வான்ஸ்ரீபாதத்திலேசெல்ல, அன்று பல ஸ்ரீவைஷ்ணவர்கள் அங்கே யமுதுசெய்தருள, அவரும் இடம் பெறுமையாலே ஸ்ரீவைஷ்ணவர்க ளமுதுசெய்யுமளவும் பேசாதேயிருக்க, அநந்தாழ்வானும் அவரைப்பார்த்து, அமுது செய்தருளிற்றில்லையே, நெடும்போதுண்டே இளைப்போடேநிற்கிறதுஎன்று, அநந்தாழ்வான் தாமும் அவருமாக வுள்ளே யமுது செய்தருளி, பின்னை எங்கு நின்று மெழுந்தருளுகிறதென்ன; பட்டர் அநந்தாழ்வான் ஸ்ரீபாதத்திலேசென்று ஸ்ரீவைஷ்ணவலக்ஷணமிருக்கும்படி யென்னென்று கேட்டு வாவென்று அருளிச்செய்து விட்டாரென்ன; ஆகில், கொக்குப்போலேயிருக்கும், கோழிபோலேயிருக்கும், உப்புப்போலேயிருக்கும், உம்மைப்போலேயிருக்கும் என்று விண்ணப்பஞ்செய்யுமென்றருளிச்செய்தருளினார்.

முந்நூற்றுநாற்பத்தாறும்வார்த்தை.

பரஸம்ர்த்த்ய ஸஹத்வம், பரஸம்ர்த்திஸமத்வம், பரஸம்ர்த்தி ப்ரயோஜநத்வம், பரஸம்ர்த்யேக ப்ரயோஜநத்வம்.

முந்நூற்றுநாற்பத்தேழாம்வார்த்தை.

ஸ்ரீவைஷ்ணவனாகிறான்-ஸம்ஸாரத்தில்நசையற்றுபரமபதத்திலே யாசைபிறந்தவன். இவனுக்கு பரிஹரிக்கவேண்டுவதென்னென்னில்;-உடம்பில்ருசிவிளையாதொழிகையும், உறவுமுறையார்

கள

பக்கல் ஆசை வளராதொழிகையும், உடன்படியாக வுகக்கு மவர்களோடு உறவுகொண்டாடா தொழிகையும், லோகம்சிலு கிடாமல் ஒதுங்கி வர்த்திக்கையும், உடம்புக்கு இரைதேடி ஒருவனுக்கு ஏவல்தொழிலை ஒருபடியாலுஞ் செய்யாதொழிகையும், உள்ளத்துக்குள்ளே நிற்கு மொருவன்பக்கல் ஒருபடிபட்ட ருசியுண்டாய்ப்போரவும், தலையறுப்புண்டவனையும் தலையறுத்தத்தாலே சந்தியிலே தலையோடு ஏந்தினவனையும் இவர்களுக்குக்கீழான சந்த்ராதித்யர்களையும் தஞ்சமென்று சரணம்புகாதொழிகையும், இவர்களை சரீரமாகவும் அடிமையாகவு முடைய எம்பெருமான்பக்கல் ஆன வடிமைசெய்து போரவும், எம்பெருமானே தஞ்சமென்று சரணம்புக்கவர்களைத் தனக்குத் துணையாகவும் உயிராகவும் நினைத்துப்போரவும், இவர்களோடு விளையாடியும் பொல்லாங்குசொல்லாதொழியவும், இவர்களைப்பொல்லாங்கு சொல்லுவாருடனே கூடிஞராகில் அவர்களை வாயைக்கிழித்தல், தான் செவியைப்புதைத் துக்கொண்டு கடக்கப்போதல் செய்யவும், எம்பெருமான் திருவாசலுக்குள்ளேமயிர் விரித்தல்; உமிதல், கால்நீட்டுதல் தொடக்கமானவை வருந்தியும் தவிரவும், ஆபத்துக்களாலே புகுந்து ஒதுங்க வேண்டிற்றாகில் அநர்த்தப்படாநின்றோமே யென்று அஞ்சிப் போரவும், இப்படிப்பட்ட போதுபோக்கு ஸம்ஸாரத்திலிருக்கும் ஸ்ரீவைஷ்ணவனுக்கு.

## முந்நூற்றுநாற்பத்தெட்டாம்வார்த்தை.

பட்டரை, ஒருவன் தேவதாந்தரங்களை வைஷ்ணவர்கள் அநுவர்த்தியாதொழிவானென்னென்ன; ப்ரமாண விரோதமுள்ளவிடத்திலன்றோ ஸந்தேஹ முள்ளது, இங்கு ஸந்தேஹமில்லைகாணென்றருளிச்செய்தார்; ஆவதென்னென்ன;-ஸத்வப்ரசுரரை ரஜஸ்தமஃப்ரசுரர் அநுவர்த்திக்குமதொழிய ஸத்வப்ரசுரர் ரஜஸ்தமஃப்ரசுரரை யநுவர்த்திக்கக் கடவதோவென் றருளிச்செய்தார்; (తేషామపి నమోనమః) (தேஷாமபிநமோநமஃ) என்கிறபடியாலே.

## முந்நூற்றுநாற்பத்தொன்பதாம்வார்த்தை.

நம்பிள்ளையை, ஒருவன் எம்பெருமானையொழிய தேவதாந்தரங்களை பஜிக்க லாகாதென்கிறநீங்கள் நித்யநைமித்திகாதிகளில் அக்நீந்த்ராதிகளைப் பஜிப்பானென்? ஆலயத்தில் பஜியாதொழிவானென்னென்ன; அக்நிஹோத்ராதிகளில் அக்நியை உபாஸித்தும் ச்மசாநாக்நிகளை நிவர்த்தித்தும் போகிறப்போலே. இரண்டிடத்துக்கும் வாசியெங்ஙனே யென்னில்;- நித்யாதிகளில் பகவத்ப்ரகாரபுத்த்யாபண்ணுகிற வுபாஸநம்பகவதுபாஸநமேயாக விதிக்கையாலும், அவற்றினுடைய ப்ரதிஷ்டைகளில் பராபரதத்வ

ப்ரத்யயம்பண்ணியிருக்கும்தாமஸபுருஷர்களாலேவேதவிருத்தாக மமந்த்ரப்ரக்ரியையாலேஸ்வதந்த்ரமாகதேவதாந்தரங்கள், க்ர்தப்ர திஷ்டித மாகையாலும், இவ்விடத்தில் பகவத் ப்ரகாரபுத்த்யா உபாஸிக்க விதியில்லாமையாலும், தேவதாந்தர வர்க்கங்களில் தூரதோவர்ஜநீயத்வம் ருத்ரனுக்குண்டு: எங்ஙனேயென்னில்;-- ஸத்வஸ்த்தருக்கு அத்யந்தம் விரோதியானதமஃப்ராசுர்யத்தாலே. ஸித்யாதிகளில்போலே ஆலயங்களிலும் பகவத்ப்ரகாரபுத்த்யா உபாஸிக்கலாமோவென்ன; அப்படி உபாஸிக்க விதியில்லாமை யாலே ஆகாது, த்யாஜ்யதயாஜ்ஞாதவ்யங்களான பகவத்வ்யதிரி க்தவிஷயங்கள் ஸ்வீகாரத்துக்குடலாகவும், உபாதேயதயா ஜ்ஞாதவ்யமான பகவத்விஷயம் த்யாகத்துக்குடலாகவும் கடவ தோவென்றருளிச்செய்தார். (தீர்த்தனுலகளந்த சேவடிமேற் பூந் தாமம்) என்கிற பாட்டிலே ப்ரஸ்துதமான தேவதாந்தரபஜநம், அர்ஜுநனுக்கு ருத்ரன்பக்கலிலே ஓரஸ்த்ர லாபத்துக்காக பக வந்நியோகத்தாலே வேண்டிற்று.

மூந்நூற்றைம்பதாம்வார்த்தை.

ஸ்ரீவைஷ்ணவத்வமாவது-மூன்று ப்ரகாரமாயிருக்கும். எங் ஙனேயென்னில்; ஸத்காரயோக்யரென்றும், ஸஹவாஸ யோக்ய ரென்றும், ஸதாநுபவயோக்யரென்றும். ஸத்காரயோக்யர் - ரூப நாமப்ரதாநர், உச்சாரணப்ரதாநர், அபிமாநப்ரதாநர்; ஸஹவாஸ யோக்யர்-ஜ்ஞாநப்ரதாநர், அநுஷ்டாநப்ரதாநர், அங்கீகாரப்ரதா நர்; ஸதாநுபவயோக்யர் - ஆர்த்திப்ரதாநர், அபிநிவேசப்ரதாநர், அபிருசிப்ரதாநர் என்று ஆட்கொண்ட வில்லிஜீயர்.

மூந்நூற்றைம்பத்தோராம்வார்த்தை.

வைஷ்ணவனாகையாவது - தத்வஜ்ஞாநநிஷ்டனாகை; தத்வ ஜ்ஞாநந்தான் ஆசார்யவிஷயீகாரலப்யம்; ஆசார்யவிஷயீகாரந்தான் தத்வத்தை நாமறியவேண்டுமென்னு மபிநிவேசாதிசயபூர்வகமாக பஜநலப்யம்; இந்த இச்சைக்குமுதலடி பகவத்விஷயத்தில் அத் வேஷம்; அந்த அத்வேஷத்துக்குக்காரணம் – பகவத்கடாக்ஷம். பகவத்கடாக்ஷத்துக்கு ஹேதுவென்னென்னில்;-இஸ்ஸம்ஸாரிசே தநனுக்குஅநாதியாகஎம்பெருமான்பக்கல் த்வேஷதூஷிதத்வமுண் டாகையாலே அவன் பார்த்தருளுகைக்கீடாக ஒன்று செய்யக் கூடாமையாலே பகவந்நிர்ஹேதுக கடாக்ஷம்;ஆனால்ஈச்வரனுக்கு வைஷம்ய நைர்க்ர்ண்யங்கள் வாராதோவென்னில்;-இச்சேதந னுக்கு அஜ்ஞாதமான அநந்ய ப்ரவ்ர்த்திகளிலே பிறப்பன சில ஸுக்ர்தமடியாகப் பார்த்தருளுகிறுனுகையாலே வைஷம்யநைர்க் க்ர்ண்யங்கள் வாராது; இங்ஙனேயிருப்பதொரு ஸுக்ர்தமடியாயி

ருக்க நிர்ஹேதுக மாவானென்னென்னில்;—விழவிட்டு மறந்து போனபொருளை எடுத்துக்கொண்டு சென்று கொடுத்தவனை, "நம் மதை நமக்குத்தந்தான் என்றிராதே, இவன் நமக்குத் தந்தானெ ன்றிருக்கும் க்ர்தஜ்ஞனைப்போலே, தந்தலையில் ஒன்று மின்றியிலே யிருக்க எம்பெருமான் பார்த்தருளினானென்று க்ர்தஜ்ஞனாயிருக்கிற விவ்வதிகாரி அபிஸந்தியாலே நிர்ஹேதுகமென்கிறது; இந்தயாத்ர்ச்சிக ஸுக்ர்தமென்கிறதுக்கடி ஸௌஹார்த்தம். அது அவனுக்குஸர் வாத்மவிஷயமாக வெப்போதுமுண்டாயிருக்க, ஒருத்தனுக்கு ஒருக்காலாக யாத்ர்ச்சிக ஸுக்ர்தத்தை யுண்டாக்குவானென்னெ ன்னில்; நெடுங்காலம் அநுபவித்துப்போநததொருபாபம் சுருக்க மொழியத் துலைந்த வளவிலே இந்தஸௌஹார்த்தம் இவனுடைய யாத்ர்ச்சிக ஸுக்ர்தத்துக்கடியாம்; ஜபாகுஸுமச்சாயைபதார்த்த ங்களெல்லாங்கிடக்க பளிங்கிலே ப்ரதிபலிக்குமாப்போலே அச்சபாபனான அதிகாரிபக்கலிலே ஸௌஹார்த்தம் பலிக்கக் கடவதென்று பிள்ளை யருளிச்செய்வர்.

## முந்நூற்றைம்பத்திரண்டாம்வார்த்தை.

ஒருவன் தன்னை வைஷ்ணவனென்று நினைத்திருக்கலாவது எவ்வளவு ஜ்ஞாநம் பிறந்தாலென்று பிள்ளை நஞ்சீயரைக்கேட்க; பகவத்பாகவதவிஷயங்களிலே ஒரு உச்ச்ராயங்கண்டால் நெஞ்சு சிவீலென்று இருந்ததில்லையாகில் தன்னை வைஷ்ணவனென்றிருப் பது, சிவீலென்றிருந்ததாகில் நமக்கு எம்பெருமானோடு உறவில்லை யாகாதே! ஸம்பந்தஜ்ஞாநம் பிறந்ததில்லை யாகாதே! என்று நினைத்திருப்பது என்றருளினார்.

## முந்நூற்றைம்பத்துமூன்றாம்வார்த்தை.

த்ர்ஷ்டத்துக்கு நாக்கு நீட்டாதொழிகையும், அத்ர்ஷ்டத் துக்குக் கைநீட்டாதொழிகையுங்காண் வைஷ்ணவலக்ஷணமென் று பிள்ளை.

## முந்நூற்றைம்பத்துநாலாம்வார்த்தை.

ஆச்சான்பிள்ளையை ஒரு ஸ்ரீவைஷ்ணவர், ஸ்ரீவைஷ்ணவத்வமா வது ஸர்வோபாயசூந்யதையோ, இதரவிஷயவிரக்தியோ, ஸித் தோபாயஸ்வீகாரமோ, பகவத்ப்ரேமமோவென்றுகேட்க; ஸர் வோபாயசூந்யதை ஸம்ஸாரிக்குமுண்டு; இதரவிஷயவிரக்திக்ஷப ணனுக்குமுண்டு; ஸித்தோபாயஸ்வீகாரம் கேவலனுக்கு முண்டு; பகவத்ப்ரேமம் ஏகாயநனுக்குமுண்டு. ஆகையால் இவையித்தனையு மன்று, இவற்றோடேகூட பகவதநந்யார்ஹசேஷத்வ ஜ்ஞாநத் தாலே பிறப்பதொரு தாந்திவிசேஷம். அதாவது-பரபரிபவத்தில்

நிர்த்தோஷாநுஸந்தாநம், நிர்ப்பரத்வாநுஸந்தாநம், உபகார ஸ்ம்ர்தி, இரக்கமென்றருளிச்செய்தார்.

முந்நூற்றைம்பத்தஞ்சாம்வார்த்தை.

ஸ்ரீவைஷ்ணவத்வமாவது - ரூபப்ராதாந்யம், ஸிஹ்நப்ராதாந்யம், உக்திப்ராதாந்யம், க்ரியாப்ராதாந்யம், ஸம்பந்தவிசேஷப்ராதாந்யம், த்யாகப்ராதாந்யம் இவையொன்றுமன்று, பாவப்ராதாந்யமேப்ராதாந்யம்.

நால்வரறிந்த வைஷ்ணவத்வமன்று, நாராயணனறிந்த வைஷ்ணவத்வமே வைஷ்ணவத்வம்: * நாடும் நகரமும் நன்கறிய நமோநாராயணாயவென்னவேண்டும்; நாடு வைஷ்ணவனென்று கைவிடவேண்டும்; நகரம் வைஷ்ணவனென்று கைக்கொள்ளவேண்டும். நாடாவது — ஸம்ஸாரம்; நகரமாவது - பரமபதமும், உகந்தருளின திவ்யதேசங்களும், ஜ்ஞாநாதிகரான ஸ்ரீவைஷ்ணவர்களும்.

முந்நூற்றைம்பத்தாறும்வார்த்தை.

வடக்குத்திருவீதிப்பிள்ளை;-அடுக்குக்குலையாத முஷ்டியும், ஆஸ்திக்யங்குலையாத வைஷ்ணவத்வமும்.

முந்நூற்றைம்பத்தேழாம்வார்த்தை.

திருநகரிப்பிள்ளை, ஆழ்வார்களருளிச்செயலிலே அந்வயமுடைய ஸ்ரீவைஷ்ணவர்களைத் தன்னுயிராகநினைத்திருப்பான், ஆசார்யர்கள்பாசுரங்களிலே அந்வயமுடைய ஸ்ரீவைஷ்ணவர்களைத் தன்னுடைய ஸத்தையாக நினைத்திருப்பான், இரண்டோடு மந்வயமுடைய ஸ்ரீவைஷ்ணவர்களை யல்லது ஸ்ரீவைஷ்ணவனென்றறுதியிடவொண்ணாது.

முந்நூற்றைம்பத்தெட்டாம்வார்த்தை.

ஸ்ரீவைஷ்ணவர்களென்று இவர்களுக்குப்பேராகைக்கடியேதென்று கேட்க; ஸ்ரீமத்புத்ரராகையாலும், ஸ்ரீமாந் பிதாவாகையாலும், ஸ்ரீபுருஷகாரமாகையாலும், ஸ்ரீமாந்வைபவத்தையறிகையாலும், இவர்கள் ஸ்ரீமத்பதத்தேபிறக்கையாலும், ஸ்ரீவைஷ்ணவர்களென்றுநிரூபகமென்றுபெரியகோயில்வள்ளலார் அருளிச்செய்வர்.

முந்நூற்றைம்பத்தொன்பதாம்வார்த்தை.

ஸ்ரீவைஷ்ணவனுடைய திநசரிதம், குருபரம்பரையையும் திருமந்த்ரத்தினுடைய விசதாநுஸந்தாநமான த்வயத்தையும் ஸதா அநுஸந்தாநம்பண்ணுகை, த்வயநிஷ்டரான ஸ்ரீவைஷ்ணவர்களோடே ஸஹவாஸம்பண்ணுகை, அஹங்காரக்ரஸ்தரான ஸம்ஸாரிகளோடு

அனுகி வர்த்தியாதொழிகை, ஸாத்விகஸமாசாரமொழிய நாட்டாருடைய பரிமாற்றங்களை நேராக நிவர்த்திக்கை, உத்தேச்யரான ஸ்ரீவைஷ்ணவர்களை உதாஸீநம் பண்ணாதொழிகை, த்யாஜ்யரான ஸம்ஸாரிகளை த்ர்ஷ்டமடியாக அநுவர்த்தியாதொழிகை, ஆஸுர ப்ரக்ர்திகளுக்கு அத்ர்ஷ்டவார்த்தை சொல்லாதொழிகை, ஸாது பரிக்ரஹமும் ஸதாசார்யப்ரஸாதமும் ஸ்வரூபவர்த்தகமென்றிருக்கை, பகவத்பாகவதவிஷயங்களில் அநுகூலவ்ர்த்தியைதேஹயாத்ரா சேஷமாக்காதொழிகை, ஸ்துதிநிந்தைகளில் அவிக்ர்தனாயிருக்கை, ஸ்வதோஷதர்சநம்பண்ணுகை, ஸ்வப்ரசம்ஸை பண்ணாதொழிகை, ஸ்வஸ்வாதந்த்ர்ய நிவ்ர்த்திபூர்வமான பகவத்பாரதந்த்ர்ய பராகாஷ்டை பாகவதபாரதந்த்ர்யமென்றிருக்கை, இவ்வோவர்த்தங்களை யநுஸந்தித்து உண்டான அம்சத்துக்கு உபாயபூதனான எம்பெருமான்பக்கலிலே உபகாரஸ்ம்ர்திபண்ணுகை, இல்லாதவம்சத்துக்கு அநுதாபபூர்வகமாக ஈச்வரனை யிரக்கை, இவ்வர்த்தநிஷ்டை தனக்குண்டானபோது நிஷ்டையில்லாத வேஷதாரிகளை நெஞ்சாலே நெகிழ நினையாதே பகவத் ப்ரபாவத்தையிட்டு ஆதரிக்கை. (నిర్దోషం విదితం జన్తుం ప్రభావాత్పరమాత్మనః)(நிர்தோஷம்விதிதம் ஜந்தும்ப்ரப்ாவாத்பரமாத்மநஃ) இவ்வர்த்தநிஷ்டைதான் பகவத்ப்ரஸாதத்தாலே பலிக்குமத்தனையல்லது ஸ்வயத்நத்தால் வருமதன்று; (అక్రూరమాలాకారాది పరమభాగవతాన్ కృత్వా) (அக்ரூரமாலாகாராதி பரமபாகவதாங் க்ர்த்வா) என்று ப்ரமாணம்; இவ்வோவர்த்தங்கள் தங்களுக்குறுப்பாக வதிகரிக்குமவையல்லது பிறர்க்குச் சொல்லுகைக்குக் கற்குமவையன்று.

முந்நூற்றறுபதாம்வார்த்தை.

பெருமாளெழுந்தருளாநிற்கத் திருவடித்தொழப் புறப்பட்டருளி, நஞ்சீயர் திருமேனியில் திருநாமங்களின்றியிலே யிருந்தபடியைப்பார்த்து, பர்த்தாவின்முன்பே தாலிகட்டாமல் நின்ற ஸ்த்ரீயைப்போலே யிராநின்றது, திருமண் கொண்டுவாருங்கோளென்றருளினார்.

முந்நூற்றறுபத்தோராம்வார்த்தை.

ஸ்வரூபஜ்ஞாநம்பிறந்தவனுக்கு சரீரவிச்லேஷத்தளவும்மஹாபயமும் மஹாவிச்வாஸமும் அநுவர்த்திக்கைக்குக்காரணம்- தன்னைப்பார்த்தபோதெல்லாம் மஹாபயமும், எம்பெருமானைப் பார்த்தபோதெல்லாம் மஹாவிச்வாஸமும். இரண்டுக்கும் மஹத்தையாவது-தன்னை யநுஸந்தித்தபோது ஸம்ஸாரத்திலே யிருந்தானாகவும் இங்கேயிருந்தானேயாகிலும் எம்பெருமானை யநுஸந்தித்தபோது பரமபதத்திலே யிருந்தானாகவும் நினைத்திருக்கை.

முந்நூற்றறுபத்திரண்டாம்வார்த்தை.

ஸ்வரூபத்தில்தெளிவும், உபாயத்தில் துணிவும், உபேயத்தில் த்வரையும், அதிகாரிக்ர்த்யமென்று பிள்ளை.

முந்நூற்றறுபத்துமூன்றாம்வார்த்தை.

ஸம்பாஷண ஸம்பந்தம், போஜநஸம்பந்தம், அத்ர்ஷ்டஸம்பந்தம், த்ர்ஷ்ட ஸம்பந்தம் - இவை பார்த்துச் செய்யவேண்டும். தானிடுந்தெண்டனுக்குஉகந்திடவும், தன்னையிடுந்தண்டனுக்குக் குழைந்துபோரவும், தன்ஸத்தையை யழிய மாறியாகிலும் தண்டன் கைக்கொள்ள வல்லனாகையும் அதிகாரி க்ர்த்யம்.

முந்நூற்றறுபத்துநாலாம்வார்த்தை.

மலைநாட்டிலே ஒருவனுடனே மூவராய் ஸ்ரீராமாயணம் வாசித்தார்கள்; அவர்களில் முதலதிகரித்தவனை யழைத்து உனக்கு இதில் ப்ரதிபந்நார்த்தமேதென்று கேட்க, சக்ரவர்த்தித்திருமகன் பித்ர்வசநபரிபாலநம் பண்ணுகையாலே மாத்ர்பித்ர்சுச்ரூஷை தர்மமென்று தோற்றிற்றென்ன; நீ அத்தைச்செய்யென்றான்; இருவராவானைக்கேட்க;-சக்ரவர்த்தித் திருமகனாய் சரீரபரிக்ரஹம்பண்ணினாலும் உடம்பெடுக்கை பொல்லாதாயிருந்தது, ஆகையால் இவ்வுடம்பையகற்றும்வகை விசாரிக்கவேண்டுமென்றான்; ஆகில் நீதத்விமோசநோபாயத்தைப் பண்ணென்றான்: மூவராவானைக் கேட்க, நம்முடைய புண்மருந்துகளால் ஒருபசையில்லை, ராவணன்தானேயாகிலும் அவனை விடில் தரியானென்ற, சக்ரவர்த்தித் திருமகன்க்ர்பையுண்டாகில் பிழைக்கலாமல்லது பிழைக்கவிரகில்லையென்றான்; ஆகில் நீஉள்ளதனையும் ஸ்ரீராமாயணத்தை பரிசயியென்றான்.

முந்நூற்றறுபத்தஞ்சாம்வார்த்தை.

வீரஸுந்தரனுக்கு பயப்பட்டு எம்பாரடிமையான ஜகந்நாத ப்ரஹ்மராயருடையவேச்யைமடத்திலே வந்திருக்க,இவளை அவன் சொன்னவார்த்தையைக் கேட்டு பயத்தாலே உடையவர், எம்பாரே! இவளை இங்குநின்றும் போகவிடவேண்டு மென்ன, எம்பாரும், பயார்த்தையான இவளை ரக்ஷிக்கவே தர்மம்தானே ரக்ஷிக்கும் எம்பெருமான் ரக்ஷகனென்னுமிடம்ஆஸ்த்ரீபாலமு மறியுமே,அவனே ரக்ஷகனென்கிறவவதாரணமறிகைக்கன்றோ வாசார்யஸேவை பண்ணுகிறது என்று விண்ணப்பஞ்செய்தார்.

முந்நூற்றறுபத்தாறாம்வார்த்தை.

வீரசிகாமணிப்பல்லவராயர், பட்டரை,ராஜகார்யஞ் செய்கையாலே ஸ்ரீவைஷ்ணவர்களை யநுவர்த்தித்து நல்வார்த்தைகேட்கப்

போகிறதில்லை, அடியேனுக்குத் தஞ்சமாயிருப்ப தொருவார்த்தையருளிச்செய்யவேண்டுமென்ன, கடற்கரைவழியை நினைத் திருமென்றருளினார்; பல்லவராயரும் தெரியாமையாலே கையைப்பிசைந்துநிற்க; கடற்கரைவெளியிலே ஓரம்ர்தக்கடல்போலே விட்டுக்கொண்டிருக்க, எதிர்கரையிலே பிணந்தின்னிப்பயல்ராவணன்விட்டிருக்க;எழுபதுவெள்ளம் ஸேனைஉணர்ந்துகொண்டு பெருமாளைக் குறித்துக்கொண்டு நோக்காநிற்க ப்ரக்ர்திமாங்களாகையாலே கண்தூங்கிக் காலோய்ந்து கைசோர்ந்தவளவிலே பெருமாள் தாமும்தம்பியாருமாக முதுகிலேயானவனாழிகையைக்கட்டிக்கையிலே தெரிந்து பெருக்கிப்பிடித்த அம்பும் தாமுமாக, சிலவண்டஜங்கள் முட்டையிட்டு நோக்குமாப்போலே எழுபதுவெள்ளஞ்சேனையும்சூழ நடையாடும்மதிள்போலே சாரிகையாகவந்த சக்ரவர்த்தித்திருமகனுடையகையும்வில்லுந்தஞ்சமென்றுஸுகமேயிருமென்றருளினார்.

முந்நூற்றறுபத்தேழாம்வார்த்தை.

தர்சநரஹஸ்ய மிருக்கும்படி;-உறங்குகிறபோது நம்மை நோக்குகிறவன் உணர்ந்தாலும் நம்மைநோக்குமென்று கந்தாடையாண்டான்.

முந்நூற்றறுபத்தெட்டாம்வார்த்தை.

கடக்கத்தபிள்ளையைக் கடக்கத்தானொரு ப்ராஹ்மணன் உமக்கு தேஹயாத்ரை நடக்கிறபடியென்னென்றுகேட்க; ஸ்வரக்ஷணவிஷயமாக சித்திரைமாஸத்திலே மூக்குநீர்முன்னடியிலேவிழ ஏற்றமிறைக்கிறவுனக்கு இடுகிறவெம்பெருமான் ந்யஸ்தபாரனாயணையிலே சார்ந்துகிடக்கிறவெனக்கிடச்சொல்லவேண்டுமோவென்றார்.

முந்நூற்றறுபத்தொன்பதாம்வார்த்தை.

ஒருப்ராஹ்மணன் இறப்பில்நின்றும்விழ அவ்வளவிலே சிறியாச்சான்அங்கேறவெழுந்தருள ப்ராஹ்மணன், ஆச்சான்! பெருமாள் என்னைத்தள்ளினபடி கண்டீரேயென்ன, அங்ஙனன்றுகாண், கர்மத்தாலே நாம்விழுந்தோம், பெருமாளெடுத்தானென்று நினைத்திராயென்றருளினார்.

முந்நூற்றெழுபதாம்வார்த்தை.

ஒருநாள் திருவீதியிலே பட்டரும் ஸ்ரீவைஷ்ணவர்களும் திரளாகவெழுந்தருளியிருந்து பகவத்குணம் நடவாநிற்க, ஒருஸ்ரீவைஷ்ணவர், நாம்பண்ணின ஸுக்ர்தம் கண்டதே! இப்படியிருக்கப்பெற்றோமே யென்ன; சிறியாச்சான்எழுந்திருந்து இது நெடுநாள் பெருமாள் ரக்ஷகரன்றென்று சிக்ஷித்தோம், இப்போது ஒரு

ஸாக்ஷாத்தேவருண்டாவதேயென்றார்; எம்பெருமான் ரக்ஷகனென்றிருக்கையும் ஸ்வரூபமன்று, எம்பெருமான் ரக்ஷ்யமென்றிருக்கையும் ஸ்வரூபமன்று, எங்ஙனேயென்னில்;-ரக்ஷகனென்றிருந்தானாகில் அநந்யார்ஹ சேஷத்வத்துக்குச் சேராது, ரக்ஷ்யமென்றிருந்தானாகில் ஸ்வஸ்வாமிஸம்பந்தத்துக்குச் சேராது.

## முந்நூற்றெழுபத்தோராம்வார்த்தை.

எம்பெருமான் ஸாபேக்ஷன், பிராட்டியும் ஆசார்யனும்ப்ரபந்நர்களும் ஸாபேக்ஷநிரபேக்ஷர்கள்.

## முந்நூற்றெழுபத்திரண்டாம்வார்த்தை.

ஆழ்வான், காலத்திலே ஸந்த்யாவந்தநம் பண்ண வெழுந்தருளாநிற்க, இரண்டு ஸ்ரீவைஷ்ணவர்கள் அருளிச்செயல்த்வநியைக் கேட்டுக்கொண்டு நிற்க, கூட வெழுந்தருளினவர்கள் அநுஷ்டாநத்துக்கு காலம்தப்புகிறதேயென்ன, ஸந்த்யாவந்தந வைகல்யம் பிறந்தால் ப்ராயஶ்சித்தம் பண்ணிக்கொள்ளலாம், பகவதநுபவ வைகல்யம்பிறந்தால் ப்ராயஶ்சித்த ஸாத்யமன்றென்றருளினார்.

## முந்நூற்றெழுபத்துமூன்றாம்வார்த்தை.

முதலியாண்டான் திருவாய்மொழி யோதுகிறபோது உடையவரெழுந்தருளியிருந்து ஒருபாட்டுச்சந்தையிட்ட வளவிலே இதினுடைய அர்த்தாநுஸந்தாநத்தாலே பரவசரானார்.

## முந்நூற்றெழுபத்துநாலாம்வார்த்தை.

ஆழ்வார்கள் மடலூர்ந்தும், நோன்புநோற்றும், தூதுவிட்டும் ஸ்வாமிக்கு அஸஹ்யமாம்படிசெய்கைஸ்வரூபவிருத்தமன்றோ வென்று எம்பாரைமுதலிகள்கேட்க, எம்பாரும்இவர்கள் செய்வதென் ஜ்ஞாநம்தலைமண்டையிடும்படிஅவனுடையஸௌந்தர்யம்இப்படி செய்யுமாகில் அது அவன்ஸௌந்தர்யத்தின்குற்றமன்றோ: எங்ஙனேயென்னில்;-சக்ரவர்த்திவாய்திறப்பதற்கு முன்னே நீங்களெல்லாரும்பெருமாளைத் திருவபிஷேகம்பண்ணவேண்டுமென்பானென் என்பக்கல் குறையுண்டோவென்ன, நாங்கள் செய்வதென், (బహవో౽నృపకల్యాణ గుణాఃపుత్రస్యసన్తితే। గుణాౝగుణవతో౽దేవ దేవకల్పస్యధీమతః) என்று இப்படிப்பட்ட பிள்ளையைப்பெற்ற வுன்குறையன்றோ வென்றார்கள்என் றருளிச்செய்தார்.

## முந்நூற்றெழுபத்தஞ்சாம்வார்த்தை.

சோமாசியாண்டான் அகளங்க நாட்டாழ்வான்காலத்திலே ஒரு இடையன் பால்களவுகண்டானென்று கட்டியடிக்க, பிள்ளை அத்தைக்கேட்டு மோஹித்துவிழுந்தாராம்.

## முந்நூற்றெழுபத்தாறும்வார்த்தை.

மூலைகளிலேயான யுவதியைப்போலேகாணும்-ஊமையல்லாத வைஷ்ணவன் அருளிச்செயலில் அந்வயியாதொழிகை யென்று ஆச்சான்பிள்ளை.

## முந்நூற்றெழுபத்தேழாம்வார்த்தை.

எம்பெருமான் க்ர்ஷ்ணனுய்வந்தவதரித்தாப்போலே வேதங்களும் திருவாய்மொழியாய் வந்தவதரித்தன.

## முந்நூற்றெழுபத்தெட்டாம்வார்த்தை.

பெரியநம்பியும் திருக்கோட்டியூர்நம்பியும் திருமாலையாண்டானுங்கூடி ஸ்ரீசந்த்ரபுஷ்கரிணிக்கரையிலே திருப்புன்னைக்கீழே யெழுந்தருளியிருந்து, தங்களாசார்யரான ஆளவந்தார் எழுந்தருளியிருக்கும்படியையும் அவரருளிச்செய்தருளினநல்வார்த்தைகளையும் நினைத்து அநுபவித்துக்கொண்டு மிகவும் ஹ்ர்ஷ்டராய் ஆநந்தமக்நராய்க்கொண்டெழுந்தருளி யிருக்கிறவளவிலே, திருவரங்கச்செல்வர் பலிப்ரஸாதிப்பதாக வெழுந்தருளிப்புறப்பட, இவர்களுடைய ஸமாதிபங்கம்பிறந்து எழுந்திருந்துதண்டனிட வேண்டுகையாலே, "கூட்டங்கலைக்கியார் வந்தார், இற்றைக்கு மேல்பட ஸ்ரீபலியெம்பெருமானெழுந்தருளாதகோயிலிலேயிருக்கக்கடவோம்" என்று ப்ரதிஜ்ஞைபண்ணிக்கொண்டார்கள்.

## முந்நூற்றெழுபத்தொன்பதாம்வார்த்தை.

அந்தர்யாமியறியாதே அர்ச்சாவதாரத்திலே யீடுபாடனுகையாவது - ஏகாந்தத்திலே பர்த்தாவை பருஷித்து பரிஹரிப்பதாய் ஓலக்கத்தே கொண்டாடும் பதிவ்ரதையைப் போலேயும், திருப்பள்ளியறை யிருட்டிக்கிடக்க திருவீதியிலே அணிவிளக்கேற்றுமாப்போலேயும், திருப்பள்ளியறை புல்லெழுந்திருக்க திருவீதி சோதித்து அலங்கரிக்குமாப்போலேயு மிருப்பதொன்று.

## முந்நூற்றெண்பதாம்வார்த்தை.

சாஸ்த்ரவிருத்தங்களான துர்விஷயங்களிலே ஸக்தனுகையும், சாஸ்த்ரங்களுக்கு அவிருத்தங்களான ஸதாசாராதிகளில் விரக்தனுகையும், சாஸ்த்ரவிஹிதமுமாய் ஸ்வரூபாநுகூலமுமான அர்ச்சாவதாரங்களிலே அஸக்தனுகையும், இம்மூன்றும் ஸ்வரூபயாதாத்ம்யஜ்ஞாநாநுகூலமான நித்யப்ரவர்த்திகளுக்கு விருத்தங்களாயிருக்கும்.

## முந்நூற்றெண்பத்தோராம்வார்த்தை.

வைஷ்ணவனுக்கு வஸ்தவ்யம் ஜ்ஞாநார்த்தமாக ஓராசார்யன் ஸந்நிதியிலே யொதுங்கி வர்த்தித்தல், அதுவும் மாட்டானுகில்

விலக்ஷணனாயிருப்பானொரு ஸ்ரீவைஷ்ணவன்திருமாளிகையிலே யொதுங்கி வர்த்தித்தல், அதுவும் மாட்டானாகில் மௌநியாய்க் கொண்டு ஒரு திருமுற்றத்திலே ஆனவளவு கைங்கர்யம்பண்ணி யொதுங்கி வர்த்தித்தல்.

முந்நூற்றெண்பத்திரண்டாம்வார்த்தை.

நம்பிதிருவழுதிவளநாடு தாஸர்க்கும் பிள்ளை திருநறையூரரை யருக்கும் பட்ட ரருளிச்செய்தவார்த்தை; உகந்தருளின நிலங் களிலேபொய்யேயாகிலும் புக்குப்புறப்பட்டுத்திரியவமையும், அந் திமதசையிலே கார்யகரமாம்.

முந்நூற்றெண்பத்துமூன்றாம்வார்த்தை.

எம்பெருமானுக்கில்லாத தொன்றாய் அவனைப்பெறுகைக்குப் பெருவிலையாயிருக்குமது அஞ்சலியேயிறே; கருடமுத்ரைக்கு விஷந் தீருமாப்போலே; (𑌅𑌞𑍍𑌜𑌲𑌿𑌃 𑌪𑌰𑌮𑌾 𑌮𑍁𑌦𑍍𑌰𑌾) என்கிறபடியே இம்முத்ரை யாலே அநாத்யபராதமும் நசித்து எல்லா மகப்படுமென்று.

முந்நூற்றெண்பத்துநாலாம்வார்த்தை.

அநந்தாழ்வான் போசலராஜ்யத்துக்குளெழுந்தருளுகிறபோது கட்டுப்ரஸாதங் கட்டிக்கொண்டுபோய் ஒருவிடத்திலே அவிழ்த்தவாறே அடைய எறும்பாயிருந்தது, இத்தைக்கண்டு அநந்தாழ்வான் பயப்பட்டு, (எம்பெருமான்பொன்மலைமே லேதேனுமா வேனே) என்றருளிச்செய்த வரிலே சிலராய் வர்த்திப்பர்கள், இப்படியே கொண்டுபோய்த்திருமலையிலேவைத்து வாருங்கோளெ ன்றருளிச்செய்தார்.

முந்நூற்றெண்பத்தஞ்சாம்வார்த்தை.

அநந்தாழ்வான், மூன்று ஸம்வத்ஸரமாக வாதமாய்க்கிடக்க, ஸ்ரீபாதத்துக்குப் பரிவரா யிருப்பார் சிலர், "திருவேங்கட முடை யான்செய்தருளுகிறதென்!" என்று வெறுக்க, திருவேங்கடமுடை யான் ஹிதமல்லதுசெய்யானென்றருளிச்செய்தார்.

முந்நூற்றெண்பத்தாறாம்வார்த்தை.

அநந்தாழ்வான் திருநந்தவநத்துக்கு மண்சுமவாநிற்க பிள்ளை களிலேயொருவன்சென்று கூடையை வாங்க, நான் இத்தைவிடில் இளைப்பன், நீஇத்தைத்தொடில்இளைப்புதியென்றவளவிலே, இளை ப்பாகாதென்று பின்னையும் வாங்க, ஆனால் நான்ஜீவிக்கிறஜீவநத் தை வாங்கவேணுமோ, நீயும்வேணுமாகில்ஒருகூடையை வாங்கிச் சுமக்கமாட்டாயோவென்றருளிச்செய்தார்.

முந்நூற்றெண்பத்தேழாம்வார்த்தை.

அநந்தாழ்வான் திருநந்தவநத்தில் திருமண்டபத்திலே யிருந்து திருமாலை கட்டாநிற்கத் திருவேங்கட முடையான் அருள் பாடிட, இவரும் பேசாதே யிருந்து திருமாலையுங் கட்டிக்கொண்டு பின்புகோயிலுக்குள்புக்கவாறே,நான்அழைக்கவாராவிட்டதென் னென்று திருவுள்ளமாக, தேவரீரைக்கொண்டு கார்யமென் கரு முகைமொட்டு வெடியாநிற்கவென்ன, ஆனால் நாம் உம்மை இங்கு நின்றும்போகச் சொன்னோமாகில் செய்வதென்னென்ன, * பரன் சென்றுசேர் திருவேங்கடமாமலையன்றோ, தேவரீரன்றோ வந்தே றிகள், இவ்விடம் தேவரீரையாச்ரயித்தவர்களதன்றோவென்றார்.

முந்நூற்றெண்பத்தெட்டாம்வார்த்தை.

அநந்தாழ்வான் திருப்படலிகையிலே திருமாலையைச்சேர்த் துக்கொண்டு உள்ளேபுக்குக்கைப்புடையிலேநின்று அருள்பாடு என்றவாறே திருத்திரையைநீக்கித் திருமாலையைநீட்டிக் கையை மறித்துப்போருவர்.

முந்நூற்றெண்பத்தொன்பதாம்வார்த்தை.

பீஷ்மர் ஜ்ஞாநாதிகராயிருக்க பகவத்பரிக்ரஹீதபக்ஷப்ரதி பக்ஷத்திலேநின்று க்ர்ஷ்ணன்திருமேனியிலேயகப்பட அம்பு படும்படியான செயல்கூடிற்று, ராஜாக்களைப் பணிக்கன் சிரமஞ் செய்விக்கும்போது நினைத்தவிடத்திலே தட்டுகை ப்ராப்தமாமா ப்போலே ஏவoவிதரும் ஸர்வேச்வரனுடைய லீலாரஸாதீநஸங்க ல்பாந்தர்க்கதர்.

முந்நூற்றுத்தொண்ணூறாம்வார்த்தை.

ஸ்ரீவிபீஷணாழ்வான் ஐச்வர்யார்த்தியோ, அநந்யப்ரயோஜந னேவென்னில்; அஸ்மதாதிகள் ப்ரபந்நராய்வைத்தே சரீராவஸாந த்தளவும் ஸ்த்ரீஅந்நபாநாதிகளோடே யிருக்கிறாப்போலே அந ந்யப்ர யோஜநனையே அதிகாராவஸாநத்தளவும் ஐச்வர்யாநுபவம் பண்ணுகிறான்.

முந்நூற்றுத்தொண்ணூற்றோராம்வார்த்தை.

எம்பெருமான் சிலரைப் போவென்னும், சிலரை வாவென் னும், சிலரைப் போதுஎன்னும். ப்ரயோஜநாந்தர நிஷ்டரை பலத் தைக்கொடுத்துப் போவென்னும்; கர்மஜ்ஞாநநிஷ்டரை கர்மங் கழிந்தவாறே வாவென்னும்; அநந்யப்ரயோஜநரைப் போதென் னும்; இந்த தேசத்தில் ஒருஅநந்யப்ரயோஜநரை யுண்டென்றிருந் தோமோ, உண்டாகில் அங்கே கண்டுகொள்ளுகிறோம்: எங்ஙனே

யென்னில்; - ப்ராப்யப்ராபகங்களிரண்டும் எம்பெருமானென்றால் விச்வஸிப்பாரில்லை, விச்வஸித்தால் க்ர்தஜ்ஞராயிருப்பாரில்லை, க்ர்தஜ்ஞராகப் பெற்றதாகில் பகவத்கைங்கர்யம் விரஸமா யிருக்கும்; இவை மூன்றுங் கூடிற்றாகிலும் ராகத்வேஷாபஹதராகையாலே பாகவதகைங்கர்யத்துக்கு இசையார்கள், அதுவுங்கூடிற்றாகில் ஆசார்யனுடைய தேஹயாத்ரையைக்கண்டு நெகிழநினைப்பார்கள், இதுவுங்கூடிற்றாகில் தங்களை சுத்தராக நினைப்பர்கள்; ஆகையாலே பகவத்குணஞ்சொல்லுகைக்கும் கேட்கைக்கும் இவ்விடத்தில் ஆளில்லைகாணுமென்று கந்தாடையாண்டான், பட்டருக்கு ஸரஸ்வதீபண்டாரத்திலே யெழுந்தருளியிருந்து பணித்த வார்த்தை.

முந்நூற்றுத்தொண்ணூற்றிரண்டாம்வார்த்தை.

திருமாலையாண்டா னருளிச்செய்யும்படி; - நாம் பகவத்விஷயஞ்சொல்லுகிறோமென்றால் ஸம்ஸாரத்தில் ஆளில்லை. அதெங்ஙனேயென்னில்; - ஒருபாக்கைப்புதைத்து அது உருவாந்தனையும் செல்லத் தலையாலேஎருச்சுமந்து ரக்ஷித்து அதினருகே கூரை கட்டி, பதினாறுட்டைக்காலங்காத்துக்கிடந்தால் கடைவழி ஒரு கொட்டைப்பாக்காயிற்றுக்கிடைப்பது; அதுபோலன்றிக்கே இழக்கிறது ஹேயமான ஸம்ஸாரத்தை, பெறுகிறது விலக்ஷணமான பரமபதத்தை; இதுக்குடலாகஒருவார்த்தையருளிச்செய்த ஆசார்யன்திருவடிகளிலே ஒருக்காலும் க்ர்தஜ்ஞராகாத ஸம்ஸாரிகளுக்கு நாம் எத்தைச்சொல்லுவது என்று வெறுத்தார்.

முந்நூற்றுத்தொண்ணூற்றுமூன்றாம்வார்த்தை.

அவதார மிருக்கும்படி யென்னென்று நம்பிள்ளையை முதலிகள்கேட்க; மெய்வெளுத்து நாக்குவற்றியிருக்கும் என்ன: அதென்னென்ன; அதிகாரிபெருமையாலே மெய்வெளுத்திருக்கும்; பெற்றால் ப்ரயோஜநாந்தரபரராகையாலே மயிர்பட்ட சோறென்று நாக்குவற்றியிருக்குமென்றருளிச்செய்தார்.

முந்நூற்றுத்தொண்ணூற்றுநாலாம்வார்த்தை.

ஆளவந்தார், ஒருநாள் பெருமாளைத் திருவடித்தொழவென்று உள்ளேபுகுராநிற்க, ஒருத்தி அநந்யப்ரயோஜநையைப்போலே கண்ணும்கண்ணீரும்கழுத்துங்கப்படமுமாய்ப்ரதக்ஷிணம்பண்ணுநிற்க உள்ளுப்புகுராதேபுறம்பேநின்றருளி, ப்ரயோஜநாந்தர பரையானவள் புறப்பட்டாளோவென்று கேட்டருள; இதுக்கு நிதாநமென்னென்று விண்ணப்பஞ்செய்ய; பெருமாள்ஸந்நிதியேயாகிலும் ப்ரயோஜநாந்தர பரரோட்டைச் சேர்த்திக்கு, அதிகாரிவிரோதம் பிறந்து பலவிரோதமும் பிறக்குங்காணென் றருளிச்செய்தார்.

முந்நூற்றுத்தொண்ணூற்றஞ்சாம்வார்த்தை.

தேஹாத்மவிவேகம், பரமாத்மவிவேகம், த்ரிஸாம்யவிவேகம், புருஷார்த்தாஉபுருஷார்த்தவிவேகம், விரோத்யவிரோதிவிவேகம், உபாயாஉநுபாயவிவேகம், வைஷ்ணவாஉவைஷ்ணவவிவேகம், துஷ்கரஸுஹ்ர்விவேகம், ஆசாராஉநாசாரவிவேகம், சிஷ்யாசார்யவிவேகம் இவைகள் ஒருவனுக்கு அவச்யம் ஜ்ஞாதவ்யங்கள்.

முந்நூற்றுத்தொண்ணூற்றாறும்வார்த்தை.

முமுக்ஷுவாய் ப்ரபந்நனான வதிகாரிக்கு ஜ்ஞாதவ்யமான வர்த்தம் நாலு. ப்ராப்யவிஷயமும், ப்ராபகவிஷயமும், ஆசார்யவிஷயமும், போஜநவிஷயமும். ப்ராப்யவிஷயமாவது-சரீரஸம்பந்த மற்று அர்ச்சிராதிமார்க்கத்தாலேபோய் பரமபதத்திலேசென்று அங்குண்டான பகவதநுபவப்ரீதியாலே பிறக்குங் கைங்கர்யம்; இதில் அத்யவஸாயமாவது - கைங்கர்யத்தையொழிந்த தர்மார்த்த காமங்களிலும், மோக்ஷத்தில் கைவல்யம் முதலாகவுள்ள புருஷார்த்தாந்தரங்களிலும் கால்தாழாதே இக்கைங்கர்யமேபரமப்ராப்யமென்றிருக்கை: ப்ராபகவிஷயமாவது – ஸௌலப்யாதிகுணவிசிஷ்டனுமாய் விக்ரஹ விசிஷ்டனுமாயுள்ள வீச்வரன்;இதில் அத்யவஸாயமாவது- பிராட்டி புருஷகாரமாக அவனே யுபாயமென்றறுதியிட்டு உபாயாந்தரங்களானகர்மஜ்ஞாநபக்திகளில் கால்தாழாதேயிருக்கை; ஆசார்யவிஷயமாவது - இவ்வுபாயஸ்வீகாரம் பண்ணினவன் சரீராவஸாநத்தளவும் மநோவாக்காயங்களினால் அநுகூலித்து வர்த்திக்கை; அதாவது - உகந்தருளின நிலங்களிலும் அர்ச்சாவதாரப்ரேமமுடைய ஸ்ரீவைஷ்ணவர்பக்கலிலும் த்ரிவித கரணத்தாலும் ப்ராதிகூல்யந்தவிருகை; இப்படி வர்த்திக்குமிடத்தில் க்யாதிலாபபூஜைகளைப் பற்றவாதல், பகவத்ப்ராப்திக்கு ஸாதநமென்றாதல் செய்யாதே ஸ்வயம்ப்ரயோஜந மென்றிருக்கை; போஜநவிஷயமாவது-ந்யாயார்ஜித த்ரவ்யத்தாலே தாஹம்போமளவேயென்று ஜீவிக்கை; இதிலத்யவஸாயமாவது - அநுகூலரை நெருக்கியாதல், ப்ரதிகூலரை யபேக்ஷித்தாதல், அமுதுபடித்ரவ்யத்தையாதல் ஜீவநமாக்காதே,உடம்பைவருத்தியாதல், அயாசிதமாகவாதல்வந்தத்ரவ்யத்தைக்கொண்டுதேஹயாத்ரைநடத்துகை.

முந்நூற்றுத்தொண்ணூற்றேழாம்வார்த்தை.

நம்பிள்ளை ஸ்ரீபாதத்திலே ஸேவித்திருப்பாரிரண்டு ஸ்ரீவைஷ்ணவர்கள் அந்யோந்யம்பிணங்கி ஒருவரையொருவர் மடிபிடித்துக்கொண்டுசெல்ல, அதுக்கடியென்னென்று பிள்ளை கேட்டருள, ஆச்சான்பிள்ளை, இத்தனைநாளாக ஸேவித்துநின்றதில் தேங்கினவர்த்தமிதுவென்று காட்டவந்தார்கள் என்ன, மேல் பிள்ளையரு

ளிச்செய்தபடி; பொல்லாங்கு! சோழுத்தவன்பாடே போகாதே நம்பாடேவந்தார்களென்றருளினார்.

மூந்நூற்றுத்தொண்ணூற்றெட்டாம்வார்த்தை.

ஸர்ப்பாஸ்யகதமான மண்டூகத்தினுடைய ஆர்த்தநாதத்தைக்கேட்டு ஆழ்வான் மோஹித்தாரென்று பிள்ளை யருளிச்செய்தார்; இத்தால்-பரதுஃகாஸஹிஷ்ணுத்வமும்,பரஸம்ர்த்த்யைகப்ரயோஜநத்வமும் வைஷ்ணவனுக்கு ஸ்வபாவமென்றபடி.

மூந்நூற்றுத்தொண்ணூற்றொன்பதாம்வார்த்தை.

பிள்ளைதிருவழுதிநாட்டடையார்க்கு அந்திமதசையிலே ஒரு க்லேசமுண்டாயிற்று, சுற்றிலிருந்தமுதலிகள் அந்யோந்யம் முகம் பார்த்தார்கள்; இவர் அத்தைத் திருவுள்ளத்திலேகோலி, வாரீர் கோள்முதலிகாள்! ஸம்ஸாரிகளிழவுக்கு நொந்தோம் காணுங் கோள், அவர்களில் நமக்கு அல்பமாய்த்து வாசி, எங்ஙனேயென்னில்;-நாம் இடுவது ஒருதண்டன், பண்ணுவது ஒருப்ரபத்தி,இழப்பது ஸம்ஸாரம், பெறுவது பரமபதம்; இத்தை யறியாதே அதஃபதிக்கிறார்களே! என்று க்லேசமாயிற்றுக் காணுங்கோளென்ன; இவர்களும் க்ர்தார்த்தரானார்கள்.

நானூறாம்வார்த்தை.

வீரஸுந்தரப்ரஹ்மராயன்காலத்திலே பட்டர் திருக்கோட்டியூரிலே யெழுந்தருளி யிருக்கச்செய்தே வீரஸுந்தரன் பட்டரென்று பிள்ளைப் பிள்ளையாழ்வான் ஆண்டாளுக்கு விண்ணப்பஞ் செய்ய, போரக்லேசித்தார்; பட்டரைக் கோயிலிலிருக்கவுங் கூடவொண்ணாதபடிபண்ணின இவன் பட்டனென்றதுக்குஇதுவென்னென்ன; பிள்ளையோடுண்டான விரோதத்தாலே அத்ர்ஷ்டத்தையிழந்தான், சிலநாளிருந்து த்ர்ஷ்டஸுகமாகிலும் அநுபவிக்கிறானேயென்றிருந்தோம், அதுவுங்கூட இழந்தானாகாதே! என்று க்லேசமாயிற்றென் றருளிச்செய்தார்.

நானூற்றொன்றாம்வார்த்தை.

நம்பிள்ளை திருவுள்ளத்திலே அபேக்ஷை நடக்கும்படியையும் அநபேக்ஷை நடக்கும்படியையும், வடக்குத் திருவீதிப்பிள்ளை யருளிச்செய்யும்படி; அபேக்ஷைநடப்பது-அஹங்கார நிரஸநத்திலும், அவிவேக நிரஸநத்திலும்; அநபேக்ஷைநடப்பது - ஆத்மஜ்ஞாநத்திலும், ஆத்மலாபத்திலும், பகவல்லாபத்திலும்; ஆத்மஜ்ஞாநமாவது-ஜ்ஞாநாநந்த ஸாக்ஷாத்காரம்; ஆத்மலாபமாவது-தத்ப்ரதிபந்தக நிவ்ர்த்தி; பகவல்லாபமாவது-ஸ்வயத்நஸாத்யமுமாய் ஸ்வகதமுமான பகவதநுபவத்தை.

நானூற்றிரண்டாம்வார்த்தை.

எம்பெருமானர் எம்பாரைநோக்கி, ஸ்ரீகோவிந்தப்பெருமாளே எம்பெருமான் எளியனென்று பலபடியாலுஞ் சொன்னோமேயென்ன; இப்படி யெளியனாகில் நமக்கென்னென்று எல்லாரும் உபேக்ஷிக்கைக் குடலாமித்தனையன்றோவென்ன, இப்படியிருக்கிற வவனைக் காணவேண்டுமென்னு மாசையுள்ளது உமக்கொருவர்க்குமன்றோவென்றருளினார்.

நானூற்றுமூன்றாம்வார்த்தை.

(எளிவரும் இயல்வினன் நிலைவரம்பிலபலபிறப்பா யொளிவரும்) என்கிறவிடமருளிச்செய்யாநிற்க, இப்படி குணவானாயிருக்கிற வவனை ஸாக்ஷாத்கரிக்க விரகில்லையோ வென்று மணக்கால் நம்பியை ஆளவந்தார் கேட்டருள; எனக்கு சேஷத்வாநு ஸந்தானமேயமையும், நீர் அப்பன்பாடே செல்லுமென்ன, இவரும் அங்கேசெல்ல அவரும் காலங்குறித்துவிட, இவரும் திருவனந்தபுரத்துக்கெழுந்தருளி அங்கே அக்காலத்தைநினைத்து "அப்பன்பக்கலேறப்போக ஒருபுஷ்பகம் பெற்றிலோமே!" என்று க்லேசிக்க, பெருமாளும், நாம்செய்தபடி காணுமிது, சேஷத்வஜ்ஞானமே யமையுமென்றருளினார்.

நானூற்றுநாலாம்வார்த்தை.

பிள்ளையை ஒருஸ்ரீவைஷ்ணவர் தஞ்சமாயிருப்ப தொருவார்த்தை யருளிச்செய்யவேணுமென்ன; முமுக்ஷுவான அதிகாரிக்கு அநுஸந்தேயம் - ஸ்வரூபம் பரதந்த்ரம், விரோதி ப்ரபலம், புருஷார்த்தம் அநந்யஸாத்யமன்று, பரிஹார்யம் தேவதாந்தர பஜநமும், பாகவதாபசாரமுமாகிற படுகுழிகளென்றருளினார்.

நானூற்றஞ்சாம்வார்த்தை.

துறையறிந்திழிந்து, முகமறிந்துகொடுத்து, விலையறிந்துபரிமாறி, நினைவறிந்து அடிமைசெய்யவேண்டும்.

நானூற்றாறாம்வார்த்தை.

ஜ்ஞானத்துக்கிலக்கு ஆசார்யகுணம், அஜ்ஞானத்துக்கிலக்கு ஆசார்யதோஷம், சக்திக்கிலக்கு ஆசார்யகைங்கர்யம், அசக்திக்கிலக்கு நிஷித்தாநுஸந்தானம்.

நானூற்றேழாம்வார்த்தை.

நம்பிள்ளை திருவெள்ளறைதேன்கொள் சோலைதாஸர் திருமாளிகையிலே யெழுந்தருளி அவருடைய திருமாளிகையிலே ஐச்வர்யத்தைக்கண்டு ப்ரீதராயிருக்க, இதுக்கடியென்னென்று யதிராஜ

தாஸர்பிள்ளையைக் கேட்க; நம்பிள்ளை, இஸ்ஸம்ஸாரஸுகந்தான் மூன்றுபடியாயிருக்கும்; இஸ்ஸுகத்தைத்தனக்கென்றும், தனக்கும் எம்பெருமானுக்குமென்றும், எம்பெருமானுக்கேயென்றும் நினைக்கைகாண்: தனக்கென்கை நரகாநுபவஸத்ர்சம்; தனக்கும் எம்பெருமானுக்கு மென்கை ஸ்வர்க்காநுபவ ஸத்ர்சம்; எம்பெருமானுக்கேயென்கை பரமபதாநுபவ ஸத்ர்சம்,

நானூற்றெட்டாம்வார்த்தை.

ஸ்வாபாவிகமான சேஷத்வத்தை விட்டு, ஔபாதிகமான பௌருஷத்தை யேறிட்டுக்கொள்ளுகிற வித்தனையிறேயென்று ஆச்சான்பிள்ளை.

நானூற்றொன்பதாம்வார்த்தை.

அந்நஸாங்கர்யம், ஜ்ஞாநஸாங்கர்யம், காலஸாங்கர்யம், தேச ஸாங்கர்யம், போகஸாங்கர்யம் இவைத்யாஜ்யம்.

நானூற்றுப்பத்தாம்வார்த்தை.

நடுவிற்றிருவீதிப்பிள்ளை; - ஸம்ஸாரிகள்தோஷத்தை த்தன் அசக்தியாலே காணுதிருக்கக்கடவன்; ஸாத்விகருடைய தோஷத்தை இவர்களுடைய சக்தியாலே காணுதிருக்கக்கடவன்; பத்தலோகத்தில் விலக்ஷணஜ்ஞாநத்துக்கு விச்சேத மின்றிக்கே யிருக்கையாவது-ஔஷதபலத்தாலே அக்நியை யேந்தி யிருக்குமாப்போலே ஜ்ஞாநத்துக்கு அவித்யாஸம்பந்தநிவ்ர்த்திபூர்வகமான அப்ராக்ர்த தேசப்ரவேசத்திலும் அவித்யாஸம்பந்தத்திலார்த்தி அத்யந்தாபேக்ஷிதம்.

நானூற்றுப்பதினேராம்வார்த்தை.

ஆச்சான்பிள்ளை, ஸித்தோபாயனான ப்ரபந்நனுக்கு அஞ்சு ஸ்பர்சம் பரிஹார்யம்; அவையாவன-சைவஸ்பர்சம், மாயாவாத ஸ்பர்சம், ஏகாயநஸ்பர்சம், உபாயாந்தரஸ்பர்சம், விஷயாந்தர ஸ்பர்சம்:இவையைந்தும் ஐந்தநுஸந்தாநத்தாலேபோம்.எம்பெருமானுடைய ஸர்வஸ்மாத் பரத்வத்தை யநுஸந்திக்கசைவஸ்பர்சம் போம்; ஸமஸ்த கல்யாணகுணங்களையநுஸந்திக்க மாயாவாதஸ்பர்சமறும்; ஸ்ரீயஃபதித்வத்தை யநுஸந்திக்க ஏகாயநஸ்பர்சமறும்; உபாய பூர்த்தியையநுஸந்திக்க உபாயாந்தரஸ்பர்சமறும்; திவ்ய மங்களவிக்ரஹத்தை யநுஸந்திக்க விஷயாந்தர ஸ்பர்சமறும்.

நானூற்றுப்பன்னிரண்டாம்வார்த்தை.

முமுக்ஷுவாய்ப்ரபந்நனானவனுக்கு ஸர்வப்ரகார ரக்ஷகனான ஸர்வேச்வரன் விஷயமாகவும், அநாதிகாலார்ஜிதபாபத்தைப்போக்கக்கடவளான பிராட்டிவிஷயமாகவும், மஹோபகாரகனான

ஆசார்யன் விஷயமாகவும், உத்தேச்யரான ஸ்ரீவைஷ்ணவர்கள் விஷயமாகவும், காம்யரான ஸம்ஸாரிகள்விஷயமாகவும், ஸ்வசரீர விஷயமாகவும், சரீரஸம்பந்திகள் விஷயமாகவும் பிறக்கும் அநுஸந்தாநம்;—தேஹாத்மாபிமாந நிவ்ர்த்திக்கும், தேஹாத்வ்யதிரிக்தனான வாத்மாவினுடைய அநந்யார்ஹசேஷத்வ ப்ரகாரத்துக்கும், சேஷபூதனுக்கு ஸ்வரக்ஷணத்தில் ப்ராப்தியில்லாத பாரதந்த்ர்யத்தினுடைய வெல்லைக்கும், இப்படி பரதந்த்ரனானவனுக்கு ஸ்வரூபப்ரயுக்தமான புருஷார்த்தஸித்திக்கும், இப்புருஷார்த்தத்துக்கு இடைச்சுவரான அஹங்காரமமகார நிவ்ர்த்திக்கும் அவனே யுபாயமென்று, ஸர்வப்ரகாரரக்ஷகனான ஸர்வேச்வரனை அநுஸந்திப்பது; இப்படி ரக்ஷகனான வீச்வரனுடைய கழற்றவொண்ணாத ஸ்வாதந்த்ர்யத்தைத் தலைசாயப்பண்ணி, இவ்வதிகாரியுடைய அபராதம் அவன் ஹ்ர்தயத்திலே படாதபடி பண்ணி, அவனுடைய சீலாதிஸ்வபாவங்களை ப்ரகாசிப்பித்து ரக்ஷிக்குமென்று பிராட்டியை அநுஸந்திப்பது; இம்மிதுநத்தோடு கழற்றவொண்ணாத ஸம்பந்தத்தையும் இஸ்ஸம்பந்தத்துக்கு அநுரூபராய் ஸ்வரூபாநுரூபமானஜ்ஞாநவர்த்தகனென்று ஆசார்யனை யநுஸந்திப்பது; ஸஹவாஸயோக்யரென்றும் ப்ராப்யாந்தர்க்கதரென்றும் ஸ்ரீவைஷ்ணவர்களை யநுஸந்திப்பது; பகவதநுபவ விரோதிகளென்றும் பாகவதஸம்ச்லேஷவிரோதிகளென்றும் ஸம்ஸாரிகளையநுஸந்திப்பது; பகவத்ஜ்ஞாநவிரோதிகளென்றும் விபரீதஜ்ஞாநத்திலே அந்வயிப்பிக்குமென்றும் தன்பக்கலிலே போக்யபுத்தியைப்பிறப்பிக்குமென்றும் சரீரத்தையநுஸந்திப்பது; பகவத்ப்ராவண்ய விரோதிகளென்றும் அர்த்தகாமாபிமாநங்களை வர்த்திப்பிப்பார்களென்றும் சரீரஸம்பந்திகளை யநுஸந்திப்பது; ந்யாயார்ஜிதமான தநத்தாலே க்ஷுந்நிவ்ர்த்திமாத்ரத்திலே பர்யாப்தனாய்ப்போருவது; இப்படிப்பட்ட ஆத்மகுணங்கள் ஆசார்யகடாக்ஷத்தாலும் எம்பெருமான் விஷயீகாரத்தாலும் உண்டாகக்கடவதாகையாலே ஆசார்ய விஷயத்தில் க்ர்தஜ்ஞதையும் எம்பெருமான் விஷயத்தில் ரக்ஷகத்வ ப்ரதிபத்தியும் ஸர்வகாலமும் நடையாடவும் கரணத்ரயத்தாலும் பகவத்பாகவதவிஷயங்களிலே ஸ்வரூபப்ராப்தகைங்கர்யம் பண்ணவும் உபகாரகனான வாசார்யனுக்கு ஸத்ர்சஸத்காரமில்லாமையாலே (என்னைத் தீமனங்கெடுத்தா யுனக்கென்செய்கேன்) என்றும் அநுஸந்திக்கவும்.

### நானூற்றுப்பதின்மூன்றும்வார்த்தை.

எம்பெருமானார்ஸ்ரீபாதத்திலேஸம்பந்தமுடைய முமுக்ஷுக்களுடைய காலக்ஷேபத்துக்கும் பரமபதப்ராப்திக்கும் ஸாதநம்-ஈச்வரன் க்ர்பையென்கிறப்ரதிபத்திநழுவாதொழிகையும், அநாதிகால

வாஸிதபாபநிவர்த்திக்குஸாதநம்பெரியபிராட்டியாருடையவிசேஷ கடாக்ஷமென்றிருக்கையும், இவ்வர்த்தமுபதேசிக்குமாசார்ய விஷயத்தில் ப்ரத்யுபகார நிரபேக்ஷோபகாரஸ்ம்ர்தி கண்ணழிவறவுண்டாகையும்,இவ்வர்த்தத்தோடு ஸம்பந்தமுடைய ஸ்ரீவைஷ்ணவர்களளவில் தனக்கு சிஷ்யத்வமாகிற முறை தப்பாதிருக்கையும், தேவதாந்தரஸ்பர்சத்தை தூரதோவர்ஜநீய மாக்குகையும்,உத்தேச்யரான ஸ்ரீவைஷ்ணவர்விஷயத்தில், த்யாஜ்யமான அர்த்தகாமம் நிமித்தமாக நெஞ்சுதவறாமல் அநுவர்த்திக்கையும், இவ்வதிகாரிக்கு சரீரபாதத்தளவும் ஸ்வரூபாநுரூபமான க்ர்த்யம் பகவத்பாகவதவிஷயத்தில் பண்ணு மநுகூலவர்த்தி மாறாதொழிகையும், ஈச்வரனையும் பிராட்டியையும் ஆசார்யனையும் உத்தேச்யரான ஸ்ரீவைஷ்ணவர்களையுமொழிய அல்லாத விஷயத்தில் நிஸ்ப்ர்ஹனாகையும்.

நானூற்றுப்பதிநாலாம்வார்த்தை.

விஷயம் வகுத்தவிஷயமானாலும், ஆற்றாமை கரைபுரண்டாலும், உபாயம்ப்ரபலோபாயமானாலும், ஸ்வசக்திஅதிகாரமானாலும், ஸ்வரூபாநுரூபமான உபாயத்தாலல்லதுபெறக்கடவோமன்றென்கிற அத்யவஸாயத்தைச்சொல்லுகிறது - (తత్తస్యసదృశంభవేత్) (தத்தஸ்யஸத்ர்ஶ௦பவேத்) என்றிருக்கு மிருப்பு.

நானூற்றுப்பதினஞ்சாம்வார்த்தை.

ஆசார்யவிஷயீகாரமோ, ஸ்ரீவைஷ்ணவாங்கீகாரமோ,பகவத்பாகவதவிஷயத்தில் கைங்கர்யமோ,தன்னுடையவநுஸந்தாநமோ, ஸ௦ஸாரநிவர்த்திக்கும் பரமபத ப்ராப்திக்கும் ஹேதுவென்னில், இவைநாலுமன்று, அநிஷ்டநிவர்த்தி பூர்வகமாக இஷ்டப்ராப்திக்கும் ஈச்வரன்க்ர்பை யென்கிறப்ரதிபத்திநழுவாதொழிகை, ஆசார்யவிஷயீகாரம் அஜ்ஞாநத்தைப்போக்கி வெளிச் செறிப்பிக்கும்; ஸ்ரீவைஷ்ணவாங்கீகாரம் ஸத்துக்கள் ஸத்கரிக்கப்பண்ணும்; பகவத்பாகவத விஷயத்தில் கைங்கர்யமும் தன்னுடைய வநுஸந்தாநமும் காலக்ஷேபம்.

நனூாற்றுப்பதினாறாம்வார்த்தைத்.

ரக்ஷகனுடைய ரக்ஷகத்வம் ஆளிட்டுச் சேவிக்கையாவது-அவனுடையஸ்வாமித்வத்துக்குக் கொத்தை; சேஷபூதனுடைய சேஷவ்ர்த்தி ஆளிட்டுச் சேவிக்கையாவது-இவனுடைய சேஷத்வத்துக்குக்கொத்தை. கொத்தையாகவேண்டுவானென்னென்னில்;- இருவருக்கும் இரண்டும் ஸ்வரூபமாகையாலே.

நானூற்றுப்பதினேழாம்வார்த்தை.

பட்டர், ப்ரபந்நனையழைத்தருளி, உம்மை எல்லாரும் ப்ரபந்நனென்னாநின்றார்கள், ப்ரபந்ந லக்ஷணமிருக்கும்படியென் என்று

கேட்க; - அர்த்தராத்ரியிலே தனிவழிபோகாநிற்க துஷ்டமர்கங்களாலே மிடைந்ததொரு காட்டிலே முன்னடிதோற்றாதபடி யிருண்டு வர்ஷமும் இடியுமுண்டாய்க் கண்ணுக்குள்ளே கொள்ளியை வீசினாப்போலே மின்னிக்கொண்டுவாராநிற்க அவ்வவஸ்தையில் திருநாமோச்சாரணம் பண்ணுமதொழிகைப்ரபந்ந லக்ஷணமென்றருளினார்.

நானூற்றுப்பதினெட்டாம்வார்த்தை.

திருவேங்கடயாத்ரையாக வெழுந்தருளாநிற்க, காட்டிலே ஒருநாளைவிடுதியிலே நீராடவெழுந்தருளாநிற்க ஸ்ரீபாதத்திலே விஷந்தீண்ட பரிவராயிருப்பார்கண்டு எங்கே விஷந்தீண்டிற்றென்ன, பொய் அந்தச்செடியிலே யென்ன, அவர்களும் லஜ்ஜாவிஷ்டராய்ப்போக, இத்தை அநந்தாழ்வான் கேட்டருளிப்ரபந்நரெழுந்தருளினவாறே நீர் என்னினைந்து விஷந்தீர்க்கவேண்டா திருந்தீரென்ன, ப்ரபந்நரும், கடித்தபாம்பு பலவானாகில் விரஜையிலே தீர்த்தமாடி ஸ்ரீவைகுண்ட நாதனைஸேவிக்கிறோம்,கடியுண்டபாம்புபலவானாகில் திருக்கோனேரியிலே தீர்த்தமாடி திருவேங்கடமுடையானை ஸேவிக்கிறோமென்று நினைத்திருந்தேன் என்று விண்ணப்பஞ் செய்தார்.

நானூற்றுப்பத்தொன்பதாம்வார்த்தை.

ஒரு விசேஷதிவஸத்திலே பெரிய திருமண்டபத்திலே பெருமாளும் நாய்ச்சிமாரும் புறப்பட்டருளி இருந்து திருத்திரையிட்டு ஏகாந்தமாயிரா நிற்க, பட்டர் திருவடித்தொழவென்றெழுந்தருளித்திருத்திரையை வாங்கினவாறே பெருமாள் முனிந்து புறப்படவிடத்திருவுள்ளமாக, இவர் புறப்பட்டவளவிலே அவனையழையுங்கோளென்று திருவுள்ளமாக, அருள்பாடு என்றவளவிலே இவரும் வந்து திருவடித்தொழ, நாம் புறப்படச்சொன்னபோது என்ன நினைந்திருந்தா யென்று கேட்டருள, பெருமாளும் நாய்ச்சிமாருமாக நினைத்திருந்தேனென்ன, நம்மை முன்பு என்ன நினைத்திருப்பதென்று கேட்டருள, முன்பு ஆழ்வானும் ஆண்டாளுமாக நினைத்திருப்பனென்ன; நம்மாணையே நம்மை முன்புபோலே நினைத்திருவென்று திருவுள்ளமாயருளினார்;

நானூற்றிருபதாம்வார்த்தை.

வைஷ்ணவத்வமாவது - வைஷம்யஜ்ஞாநம். அதாவது-வாசியறிகை. குருக்களுக்கும் ஸத்குருவுக்குமுள்ளவாசியும், தேவதாந்தரங்களுக்கும் பரதேவதைக்குமுள்ள வாசியும்,மந்த்ராந்தரத்துக்கும்மந்த்ரரத்நத்துக்குமுள்ளவாசியும், தேஹத்துக்கும்ஆத்மாவுக்குமுள்ளவாசியும், உபாஸகனுக்கும் ப்ரபந்நனுக்குமுள்ளவாசியும்,

ஸாதநாந்தரங்களுக்கும் ஸித்தஸாதநத்துக்குமுள்ளவாசியும், பரத்வத்துக்கும் அர்ச்சாவதாரத்துக்குமுள்ள வாசியும், ஸம்ஸாரிகளுக்கும்வைஷ்ணவனுக்குமுள்ளவாசியும், ஆத்மாவுக்குமீச்வரனுக்குமுள்ள வாசியும், புருஷார்த்தாந்தரங்களுக்கும் பரமபுருஷார்த்தத்துக்குமுள்ள வாசியுமறிகை. அதாவது, குருக்களாகிறார்-ஸம்ஸாரப்ரவர்த்தகருமாய், அஜ்ஞாநப்ரதருமா யிருப்பார்களென்றும், ஸத்குருவாகிறான்-ஸம்ஸாரநிவர்த்தகனுமாய் ஜ்ஞாநப்ரதனுமாயிருக்குமென்றுமறிகை; தேவதாந்தரங்கள் அஜ்ஞராய் அசக்தராயிருப்பர்களென்றும், பரதேவதை ஸர்வஜ்ஞனுமாய், ஸர்வசக்தியுமாயிருக்குமென்றுமறிகை; மந்த்ராந்தரங்கள்ப்ரயோஜநாந்தரப்ரவர்த்தகமுமாய் ஸ்வாதந்த்ர்ய ப்ரவர்த்தகமுமா யிருக்குமென்றும், மந்த்ரரத்நம் புருஷார்த்த ப்ரவர்த்தகமுமாய் பாரதந்த்ர்ய ப்ரகாசகமுமாயிருக்குமென்று மறிகை; தேஹம் ஜடமாய் பரிணாமியாயிருக்குமென்றும், ஆத்மா ஜ்ஞாநாநந்தமுமாய் ஏகரூபமாயிருக்குமென்று மறிகை; உபாஸகனுக்கு * ஆநுகூல்யஸ்ய ஸங்கல்பமும் ப்ராதிகூல்யஸ்யவர்ஜ்யமும் வேண்டும்; ப்ரபந்நனுக்கு (𑌅𑌪𑌰𑌾𑌧𑌾𑌨𑌾𑌮𑌾𑌲𑌯𑌃 𑌅𑌕𑌿𑌞𑍍𑌚𑌨𑌃) (அபராதாநாமாலய: அகிஞ்சந:) என்றிருக்கவேண்டுமென்றறிகை; ஸாதநாந்தரம் ஸாத்யமுமாய் ஸாபாயமுமாயிருக்குமென்றும், ஸித்தஸாதநம் ஸித்தமுமாய்நிரபாயமுமாயிருக்குமென்று மறிகை; பரத்வம் ஸ்வதந்த்ரமுமாய்துர்லபமுமாயிருக்குமென்றும், அர்ச்சாவதாரம் ஸுலபமுமாய் ஆச்ரிதபராதீநமுமா யிருக்குமென்று மறிகை; ஸம்ஸாரிகள்அநாசாரப்ரவர்த்தகருமாய் துர்மாநப்ரதர்களுமா யிருப்பர்களென்றும், ஸ்ரீவைஷ்ணவர்கள் ஆசாரப்ரவர்த்தகருமாய் துர்மாந நிவர்த்தகருமா யிருப்பர்களென்று மறிகை; ஆத்மா வ்யாப்யமுமாய் சேஷமுமாயிருக்குமென்றும், ஈச்வரன் வ்யாபகனுமாய் சேஷியுமாயிருக்குமென்று மறிகை; புருஷார்த்தாந்தரம் அல்பமுமாய் அஸ்திரமுமாயிருக்குமென்றும், புருஷார்த்தம் நித்யமுமாய் நிரதிசயமுமாயிருக்குமென்று மறிகையாகிற விதுவைஷம்ய ஜ்ஞாநமாவது.

நானூற்றிருபத்தோராம்வார்த்தை.

ஸ்வரூபாநுகூலமான ரக்ஷகத்வம், ஸ்வரூபாநுகூலமான சேஷத்வம், ஸ்வரூபாநுகூலமானஸேவை, ஸ்வரூபாநுகூலமான ஸஹவாஸம், ஸ்வரூபாநுகூலமானகாலக்ஷேபம், ஸ்வரூபாநுகூலமான இருப்பு, ஸ்வரூபாநுகூலமான பரிக்ரஹம், ஸ்வரூபாநுகூலமான போஜநம், ஸ்வரூபாநுகூலமான அத்யவஸாயம், ஸ்வரூபாநுகூலமான அபேக்ஷை என்கிற இவைபத்தும் ஒருவனுக்கு அவச்யம் ஜ்ஞாதவ்யமாகக்கடவது.

ஸ்வரூபாநுகூலமான ரக்ஷகத்வமாவது - தேசரக்ஷகனென்றும், தேஹரக்ஷகனென்றும், பதார்த்தரக்ஷகனென்றும், பௌருஷரக்ஷகனென்றுஞ் சொல்லுகிறரக்ஷகத்வங்களைத்தவிர்ந்து, தேசநிவர்த்தகனென்றும், தேஹநிவர்த்தகனென்றும், விஷயநிவர்த்தகனென்றும், பாவநிவர்த்தகனென்றும் பற்றுகை. அதாவது - (கொடு உலகம்)என்றஞ்சினவாறே * கலியுகமொன்றுமின்றிக்கே தன்னடியார்க்கருள் செய்யும்; * பொல்லா வாக்கை யென்றஞ்சினவாறே, * செடியாராக்கை யடியாரைச்சேர்தல் தீர்க்கும்; * ஐவராறுத்துத் தின்றிடவஞ்சிநின்னடைந்தேன் என்றவாறே * அடியாரைத்துப் பாம்புலனைந்துந்துஞ்சக்கொடான்; * நமன்றமர்செய்யும் வேதனைக்கொடுங்கி நடுங்கினேனென்றவாறே, * நமன்றமரொன்றமளை வினவப் பெறுவாரலரென்னும். * அடியார்படுதுயராயின வெல்லாம் நிலந்தரஞ்செய்யுமென்னக்கடவதிறே. ... ... (௧)

ஸ்வரூபாநுகூலமான சேஷத்வமாவது - இதர சேஷமென்றும், க்ர்ஹசேஷமென்றும், பித்ர்சேஷமென்றும், தேவதாந்தர சேஷமென்றும் சொல்லுகிற ஆபாஸசேஷத்வங்களைத் தவிர்ந்து ஸர்வேச்வரனேதாரகனென்றும், வ்யாபகனென்றும், சரீரியென்றும், சேஷியென்றும் பற்றுகை. அதாவது - (ஆவிக்கோர்பற்றுக் கொம்பு நின்னலாலறிகின்றிலேன்) என்றும், (உன்னைவிட்டெங்ஙனே தரிக்கேன்) என்றும், (என்னுடை வாழ்நாள்) என்றும், (அடியரோர்க்ககலலாமே) என்றும் இருக்கை. ... (௨)

ஸ்வரூபாநுகூலமான ஸேவையாவது - சேதநாந்தரஸேவையையும், தேவதாந்தரஸேவையையும், பகவத்ஸேவையையும், த்ர்ஷ்டப்ரயோஜநத்துக்காக ஸேவிக்கையையும், அத்ர்ஷ்டத்துக்கு ஹேதுவென்று ஸேவிக்கிற ஸேவையையும் தவிர்ந்து ஸ்வரூபப்ரயுக்தமென்று ஸேவிக்கை. அதாவது - (சேவியேனுன்னையல்லால்) என்றும், (உன்னைச்சேவித்து) என்றும், (சீதனையேதொழுவார்) என்றும், (விழிக்குங்கண்ணிலேன் நின்சண்மற்றல்லால்) என்றுமிருக்கை, .. ... ... ... ... (௩)

ஸ்வரூபாநுகூலமான ஸஹவாஸமாவது - விஷயாந்தரத்துக்காகச்சேருமதும், த்ரவ்யார்ஜநத்துக்காகச்சேருமதும், பரஹிம்ஸைக்குச்சேருமதும், காலக்ஷேபத்துக்காகச்சேருமதுந்தவிர்ந்து, ஸம்ஸாரத்திலே அருசிபிறக்கைக்கும், பகவத்விஷயத்திலே ருசிபிறக்கைக்கும், ஸ்வரூபத்திலே தெளிவுபிறக்கைக்கும், ஆசாரப்ரவர்த்தகனாகைக்கும், ஆவாரோடேசேருகை. அதாவது - (பெரியோரை யொருகாலும்பிரிகிலேன்) என்றும், (உயவேனுயர்ந்தவரோடல்லால்) என்றும் சேருகை. ... ... (௪)

ஸ்வரூபாநுகூலமான காலக்ஷேபமாவது - பகவத்குணாநுபவத்தை பிறரில் வ்யாவர்த்தமாக ஒன்று சொல்லுகிறபோது போக்கைத் தவிர்ந்து, (பூசித்தும்போக்கினேன்போது) என்கிறபடியே போது போக்குகை. அதாவது - ஸ்வரூபமென்றும், தாரகமென்றும், போக்யமென்றும் மறக்கமாட்டாமே சொல்லுகை. அதாவது (தாள்கள் தலையில் வணங்கிநாள்கடலைக்கழிமினே) என்றும், (கோவிந்தன் குணம்பாடி-ஆவிகாத்திருப்பேனே) என்றும், (தொல்சீரையோவாதவுணகவும்) என்றும், (ஏதுசெய்தால் மறக்கேன்) என்றும் போருகை. ... ... ... ... (௬)

ஸ்வரூபாநுகூலமான இருப்பாவது-த்ரவ்யார்ஜநத்துக்கு ஏகாந்தமென்றும், இவ்வருகுண்டான பயநிவ்ர்த்திக் குறுப்பென்றும், ஸ்வஜாதிவிச்லேஷம்பொறுமையும், புண்யக்ஷேத்ரவாஸமும்யோக்யதைக்குறுப்பென்று மிருக்கிற விருப்பைத்தவிர்ந்து, தேசத்திலே ப்ரமம் பிறக்கைக்கென்றும், தேசிகனை நித்யஸேவை பண்ணவாமென்றும், தேசவர்த்தகரான ஸாத்விகரோடேகலந்து பரிமாறுகைக்கென்றும், விபரீதங்கள் புகுராதவிடமென்று மிருக்கை. அதாவது -(தஞ்சைமாமணிக்கோயிலேவணங்கி) என்றும், (அதனுட்கண்ணா) என்றும், (கற்ஞூர்ச்சேர்கண்ணபுரம்) என்றும், (விளைந்த தானியமு மிராக்கதர்மீதுகொள்ளகிலார்கள்) என்றுமிருக்கை. ()

ஸ்வரூபாநுகூலமான பரிக்ரஹமாவது—அநுகூலனை நெருக்கி ஸ்வீகரிக்கையும், ப்ரதிகூலர்பக்கல் ஸாபேக்ஷனாய் ஸ்வீகரிக்கையும், ஸ்வரூப ப்ரயுக்தமானவற்றை பதார்த்தங்களுக்குறுப்பாக்கி ஸ்வீகரிக்கையும், அமுதுபடி சாத்துப்படிக்கு அர்ஹமானவற்றையும் பரிக்ரஹிக்கைதவிர்ந்து, க்ர்ஷிபண்ணுதல், முஷ்டிபுகுதல், சிஷ்யன் ப்ரீதியாலே தருமத்தையாதல், ஸாத்விகர்திருவுள்ள ப்ரஸங்நத்தாலே தருமத்தையாதல் பரிக்ரஹிக்கை. அதாவது-(மெய்வருத்திக் கைசெய்துய்மினோ) என்றும், (பிச்சைபுக்காக்கிலும் எம்பிரான் திருநாமமே நச்சுமின்) என்றும், (ಶರೀರಮರ್ಥಂಪ್ರಾಣಞ್ಚ) (சரீரமர்த்தம்ப்ராணஞ்ச) என்றும், (வருவிருந்தையளித்திருப்பார்) என்கிறவர்களுடைய பதார்த்தங்களை ஸ்வீகரிக்கை. (எ)

ஸ்வரூபாநுகூலமான போஜநமாவது - க்யாதியைப்பற்றவாதல், பூஜையைப்பற்றவாதல், என்னது நானிடுகிறேனென்றாதல் இடுகிறபோஜநத்தைத்தவிர்ந்து, (நெய்யமரின்னடிசில்) என்றும், (நல்லதோர்சோறு) என்றும், (மாற்றில்சோறு)என்றும், (உண்ணுஞ்சோறு) என்றும் சொல்லுகிறவற்றை புஜிக்கை. (அ)

ஸ்வரூபாநுகூலமான அத்யவஸாயமாவது - இவ்வருகுண்டான ரக்ஷகஸ்வீகாரங்களன்றியே, ஸ்வரூப விரோதிநிவ்ர்த்தி

பூர்வகமான புருஷார்த்தத்தைத்தருமென்கிற விச்வாஸம். அதாவது-(களைவாய்துன்பங்களையாதொழிவாய்களைகண்மற்றிலேன்)என்றும், (நீதாராய்பறை) என்றும், (உன்னாலல்லால் யாவராலுமொன்றுங்குறைவேண்டேன்) என்றும், (நின்னருளே புரிந்திருந்தேன்) என்றுமிருக்கை. ... ... ... ... ... (௯)

ஸ்வரூபாநுகூலமான வபேக்ஷையாவது - புத்ரபச்வந்நாதி பதார்த்தத்தையும், ஸ்வர்க்கைச்வர்யபுருஷார்த்தத்தையும், கைவல்ய புருஷார்த்தத்தையும் பகவதநுபவத்தைத் தனக்கினிதென்று புஜிக்கிற பதார்த்தங்களையும் தவிர்ந்து, (மாகவைகுந்தங் காண்பதற்கென்மனமேகமெண்ணும்) என்றும், (அடியார்கள் குழாங்களை - உடன்கூடுவதென்றுகொலோ) என்றும், (காண்பதென்ஞான்றுகொலோ)என்றும்,(வழுவிலாவடிமைசெய்யவேண்டும்) என்று மபேக்ஷிக்கை என்று ஆச்சான்பிள்ளை. (௧௦)

நானூற்றிருபத்திரண்டாம்வார்த்தை.

தெண்மை, திறமை, சதிர், இளிம்பு,இவைநாலும் ஒருஅதிகாரிக்கு அவச்யமநுஸந்தேயம். தெண்மையாவது-தத்வத்ரயவிஷயஜ்ஞானமும்,பராப்யப்ராபகவிஷயஜ்ஞானமும். திறமையாவது-உபாயாத்யவஸாயஜ்ஞானம். சதிராவது - நெஞ்சில் நினைத்ததொழிய வாக்குச்சொல்லுகை. அதாவது - ஸம்ஸாரத்திலேயிருக்கும்நாள்-ப்ரக்ர்தி ஸம்பந்தத்தை நினைத்திருக்கும்படி; தன் க்ர்ஹத்திலே ராஜமநுஷ்யன் வந்துவிட்டு ஆள்விட்டு நலியாநின்றால் தனக்கு அவ்விருப்பில் நசையாலே போகமாட்டான், ராஜமநுஷ்யனுகை யாலே புறப்படவிடமாட்டான், இனியுள்ளது அகவாயில் அவன்போகைக்குத்திருவிளக்குப்ரதிபலியாநிற்கப்புறவாயிலேப்ரீதிவசநம் பண்ணுமாப்போலே, ப்ரக்ர்திபந்தங்களும் நாராயணன் வரவிடவந்தவர்களாகையாலே - இவர்களளவில் (యథాపరగతానారీ) (யதாபரகதாநாரீ) என்றும், (పద్మపత్రమివాంభసి) (பத்மபத்ரமிவாம்பஸி) என்றும், (கண்டதோடுபட்டதல்லால்) என்று மிருக்குமத்தனையல்லது - வேறுசெய்யலாவதில்லை; இளிம்பாவது - உத்தேச்யர் சொன்னவார்த்தைக்கு உடன்படுகை.

நானூற்றிருபத்துமூன்றாம்வார்த்தை.

பகவத்ஸந்நிதியில் (అపరాధానామాలయః అకించనః) (அபராதாநாமாலய: அகிஞ்சந:) என்றநுஸந்திப்பான்; ஆசார்யன் ஸந்நிதியில் அஜ்ஞதையையும் ஆர்த்தியையு மநுஸந்திப்பான்; ஸ்ரீ வைஷ்ணவர்கள்ஸந்நிதியில் தன்னுடைய சேஷத்வத்தையும் பாரதந்த்ர்யத்தையு மநுஸந்திப்பான்; ஸம்ஸாரிகள்நடுவில் தனக்கினிமை

யையும் பூர்த்தியையு மநுஸந்திப்பான். [[illegible] - அமர்யாத:] * கண்டவாதிரிதந்தேன்; [[illegible]-க்ஷுத்ர:] * அற்பசாரங்களவை சுவைத்தகன்றொழிந்தேன்; [[illegible] - சலமதி:] * நின்றவாநில்லா நெஞ்சினையுடையேன்; [[illegible] - அஸூயாப்ரஸவபூ:] * தீவிளிவிளிவன்வாளா; [[illegible] — க்ர்தக்ந:] * செய்ந்நன்றிகுன்றேல்மின்; [[illegible] - துர்மாநீ] * சதிரமென்று தம்மைத்தாமே சம்மதித்து; [[illegible]-ஸ்மரபரவஶ:] * மாரனார்வரிவெஞ்சிலைக்காட்செய்யும்பாரினார்; [[illegible] - வஞ்சநபர:] * சூதனாய்க்கள்வனாகி; [[illegible] நர்ஶ0ஸ:] * கொன்றேன்பல்லுயிரை; [[illegible]-பாபிஷ்ட:] * ஒப்பிலாத்தீவினையேன்; [[illegible]-கதமஹமித:] * என்னான்செய்கேன்; [illegible]- துஃகஜலதேரபாராதுத்தீர்ண:] * துன்பக்கடல்புக்கு வைகுந்தனென்பதோர் தோணிபெறாதுழல்கின்றேன்; [[illegible] - தவபரிசரேய0சரணயோ:] * உன்னடிக்களடியேன் மேவுவதே.

### நானூற்றிருபத்துநாலாம்வார்த்தை.

ஈச்வரனளவில் உத்தாரகத்வ ப்ரதிபத்தியும், ஆசார்யனளவில் உபகாரகத்வ ப்ரதிபத்தியும், ஸ்ரீவைஷ்ணவர்களளவில் உத்தேச்ய ப்ரதிபத்தியும், உபாயத்தளவில் அத்யவஸாய ப்ரதிபத்தியும், உபேயத்தளவில்த்வராப்ரதிபத்தியும், சரீரத்தளவில்விரோதி ப்ரதிபத்தியும், சரீரஸம்பந்திகளளவில் பிரிவுகாரர் ப்ரதிபத்தியும், இதரரான ஸம்ஸாரிகளளவில் வழிபறிகாரர் ப்ரதிபத்தியும், ஐச்வர்யத்தளவில் அக்நி ப்ரதிபத்தியும், விஷயத்தளவில் இடி ப்ரதிபத்தியுமாகிற விப்பத்து ப்ரதிபத்தியும் ஒருவதிகாரிக்கு அவச்ய0ஜ்ஞாதவ்யமாகக்கடவதென்று ஆச்சான்பிள்ளை யருளிச்செய்ததாகத் திருநகரிப்பிள்ளையருளிச்செய்வர்.

இவற்றில் ஈச்வரனளவில் உத்தாரகத்வ ப்ரதிபத்தி யாவது- (ஆவிக்கோர் பற்றுக்கொம்பு) என்றும், (என்னுடைவாணாள்) என்றும், (ஆவியை யரங்கமாலை) என்றும், (உன்னைவிட்டு - எங்ஙனே தரிக்கேன்) என்று மிருக்கை. ஆசார்யனளவில் உபகாரகத்வ ப்ரதிபத்தியாவது – (என்னைத்தீமனங்கெடுத்தாயுனக்கென் செய்கேன்) என்றும், (மருவித்தொழும் மநமேதந்தாய்) என்றும், (தேவுமற்றறியேன்) என்றும், (மிக்கவேதியர் வேதத்தினுட்பொருள் நிற்கப்பாடியென்னெஞ்சுள் நிறுத்தினான்) என்றும், (ஒண்டமிழ்ச்சடகோபனருளையே - எண்டிசையுமறிய வியம்புகேன்) என்றுமிருக்கை. ஸ்ரீவைஷ்ணவர்களளவில் உத்தேச்யப்ரதிபத்தியாவது- (சீதனையே தொழுவார் விண்ணுளாரிலுஞ் சீரியர்) என்றும்,(போதொடு புனல் தூவும் புண்ணியரோ விண்ணவரில் பொலிகின்றார்)

என்றும், (எத்தனையுங் கண்குளிரக்காணப்பெற்ற விருநிலத்தார்க் கிமையவர் நேரொவ்வார் தாமே) என்றும், (பயிலுந் திருவுடையார் யவரேனு மவர்கண்டீர் பயிலும் பிறப்பிடைதோறெம்மையாளும் பரமர்) என்று மிருக்கை. உபாயத்தளவில் அத்யவஸாயப்ரதிபத்தியாவது - (களைவாய் துன்பங்களையாதொழிவாய் களைகண் மற்றிலேன்) என்றும், (என் நான்செய்கேன் யாரேகளைக ணென்னை யென்செய்கின்றாய், உன்னாலல்லால் யாவராலு மொன்றுங்குறைவேண்டேன்) என்றும், (நல்லானருளல்லால்) என்றும், (நின்னருளே புரிந்திருந்தே னினியென் திருக்குறிப்பே) என்று மிருக்கை. உபேயத்தளவில் த்வராப்ரதிபத்தியாவது - (மாகவைகுந்தங்காண்பதற்கென் மனமேகமெண்ணு மிராப்பகலின்றியே) என்றும், (அடியேற்கு வானுலகந் தெளிந்தே யென்றெய்துவது) என்றும், (அடியார்கள் குழாங்களை - உடன் கூடுவதென்றுகொலோ) என்றும், (வழுவிலாவடிமைசெய்யவேண்டுநாம்) என்றுமிருக்கை. சரீரத்தளவில் விரோதிப்ரதிபத்தியாவது- (பாம்போடொருகூரையிலே பயின்றாற்போல்) என்றும், (பொல்லாவாக்கை) என்றும், (ஆக்கைவிடும்பொழுதெண்ணே) என்றும், (மங்கவொட்டு) என்றும், (மேம்பொருள்) என்று மிருக்கை. சரீரஸம்பந்திகளளவில் பிரிவுகாரர்ப்ரதிபத்தியாவது-(தாயேநோயே தந்தையேநோயே) என்றும், (பெற்றாருஞ் சுற்றமுமென்றிவைபேணேன் நான்) என்றும், (பிறிந்தேன் பெற்றமக்கள் பெண்டிரென்றிவை பின்னுதவாதறிந்தேன்) என்று மிருக்கை. இதரரானஸம்ஸாரிகளளவில் வழிபறிகாரர்ப்ரதிபத்தியாவது - (நீசர்) என்றும், (தொழும்பர்) என்றும், (பூமிபாரங்கள்) என்று மிருக்கை. ஐச்வர்யத்தளவில் அக்நிப்ரதிபத்தியாவது - (வீழ்பொருட்கிரங்கி) என்றும், (பெருஞ்செல்வம் நெருப்பு) என்றும், (ஆண்டார் வையமெல்லாமரசாகிமுன்னாண்டவரே மாண்டாரென்று வந்தார்) என்று மிருக்கை. விஷயத்தளவில் இடிப்ரதிபத்தியாவது - (புலனைந்து மேயும்பொறி) என்றும், (சாந்தேந்து மென்முலையார் தடந்தோள் புணரின்பவெள்ளத்து ஆழ்ந்தேன், அரு நரகத் தழுந்தும் பயன் படைத்தேன்) என்றும், (பொறுத்துக்கொண்டிருந்தாற்பொறுக்கொணாப்போகமே நுகர்வான்புகுந்து - ஐவராறுத்துத்தின்றிடவஞ்சி நின்னடைந்தேன்) என்றும், (கடியார்காளையரைவர்புகுந்து காவல்செய்தவக் காவலைப்பிழைத்துக்குடிபோந்துன்னடிக்கீழ் வந்து புகுந்தேன்) என்றும், (கோவாயைவரென்மெய்குடியேறிக் கூறைசோறிவைதாவென்று குமைத்துப் போகார், நானவரைப் பொறுக்கிலேன் புனிதாபுட்கொடியாய் நெடுமாலே தீவாய்நாகணையிற்றுயில்வானே திருமாலே இனிச்செய்வ தொன்றறியேன்) என்றுமிருக்கை.

உத்தாரகப்ரதிபத்தியை * உயர்வறவுயர்நலந் தொடக்கமானவற்றிலும், உபகாரகத்வப்ரதிபத்தியை தூதுகள்நாலிலும், உத்தேச்யப்ரதிபத்தியை * பயிலுஞ்சுடரொளி * நெடுமாற்கடிமை தொடக்கமானவற்றிலும், அத்யவஸாயப்ரதிபத்தியை, * நோற்றநோன்பு * ஆராவமுது தொடக்கமானவற்றிலும், த்வரா ப்ரதிபத்தியை * முனியேநான்முகன்தொடக்கமானவற்றிலும், விரோதிப்ரதிபத்தியை * முந்நீர் ஞாலந்தொடக்கமானவற்றிலும், பிரிவுகாரர்ப்ரதிபத்தியை * கொண்டபெண்டிரிலும், * வழிபறிகாரர்ப்ரதிபத்தியை * நண்ணாதார்முறுவலிலும், அக்நிப்ரதிபத்தியை * ஒருநாயகத்திலும், இடிப்ரதிபத்தியை * உண்ணிலாவியவிலும், ப்ரதமாசார்யரானநம்மாழ்வார்விசேஷித்தருளிச்செய்தாராகையாலே, இப்பத்து ப்ரதிபத்தியும் ஓரதிகாரிக்கு அவச்யம் ஜ்ஞாதவ்யமாகக்கடவதென்று ஆச்சான்பிள்ளை யருளிச்செய்ததாகத் திருநகரிப்பிள்ளை யருளிச்செய்வர்.

## நானூற்றிருபத்தைந்தாம்வார்த்தை.

ஓரதிகாரிக்குத்யாஜ்யோபாதேயங்களென்றிரண்டு. அவையாவன - ப்ரக்ருதிப்ராக்ருதமும், பகவத்பாகவதரும். த்யாஜ்யமாவது - த்யாஜ்யப்ரதிபத்தி; உபாதேயமாவது - உபாதேயப்ரதிபத்தி; ப்ரதிபத்தியாவது - பெறாததிலே செல்லாமை, பெற்றதில் ப்ரீதியின்றிக்கே யொழிகை, இழந்தத்தில் க்லேசமின்றிக்கே யொழிகை, வழியில்லாவழியாலே ஆர்ஜியாதொழிகையாகிற விவை. (இவையன்றே நல்ல இவையன்றேதீய) என்றும், (உளதென்றிறுமாவார்) என்றும், (இன்பங்கள் மொய்த்திடினும் கனியார்) என்றும், (உண்டில்லை யென்று தளர்தலதனருகுஞ்சாரார்) என்றும், (துயரங்கள் முந்திலும்-முனியார்) என்றும், (கூறைசோறிவை வேண்டுவதில்லை) என்றும் இத்யாதிகளாலே த்யாஜ்யப்ரதிபத்தி சொல்லிற்று; (எங்கேகாண்கேன்) என்றும், (காணுமாறருளாய்) என்றும், (காண்பதெஞ்ஞான்றுகொலோ) என்றும், (கண்டுகொண்டு) என்றும், (கண்டேன் கமலமலர்ப்பாதம்) என்றும், (திகழக்கிடந்தமைகண்டேன்) என்றும், (என்னுடைய கண்களிப்பநோக்கினேன்) என்றும், (கூட்டுண்டு நீங்கினான்) என்றும், (எம்மைப்பணியறியாவீட்டீர்) என்றும்; (உருக்காட்டாதே யொளிப்பாயோ) என்றும், (தாந்தம்மைக்கொண்ட கல்தல்தகவன்று) என்றும், (யாம்மடலூர்தும்) என்றும், (குதிரியாய் மடலூர்தும்) என்றும், (அறிவிழந்தெனைநாளையம்) என்றும், (எங்குச்சென்றாகிலுங்கண்டு) என்றும் இத்யாதிகளாலே பெறாததில் செல்லாமை பிறக்கையும், பெற்றதில்ப்ரீதிபிறக்கையும், இழந்ததில்க்லேச மின்றியே யிருக்கையும், வழி

யல்லா வழியேயாகிலும் பெறவேண்டுமென் றிருக்கைசயுமாகிற் வுபாதேயப்ராதிபத்திசொல்லிற்று.

நானூற்றிருபத்தாறும்வார்த்தை.

ஒருகுலஸ்த்ரீக்குபாதிவ்ரத்யஹாநியென்றும், ஸ்த்ரீத்வஹாநியென்றும், பந்துஹாநியென்றும் மூன்றுண்டு; இவளுக்கு இவை பரிஹார்யமானவேபாதி அதிகாரிக்கும்இவைபரிஹார்யம். அதிகாரிக்கு பாதிவ்ரத்யஹாநியாவது-த்ர்ஷ்டார்த்தமாக இதரரை யநுவர்த்திக்கை;ஸ்த்ரீத்வஹாநியாவது - த்ர்ஷ்டத்தை ஈச்வரன் பக்கலிலே யபேக்ஷிக்கை; பந்துஹாநியாவது-த்ர்ஷ்டத்திலில்லாமையை ஸ்ரீவைஷ்ணவர்களுக்குச்சொல்லுகை.

நானூற்றிருபத்தேழாம்வார்த்தை.

அதிகாரிக்கு, ரூபம், நாமம், உக்தி, வ்ர்த்திம், புத்தியென்கிற இவை யஞ்சும்வேண்டும். இவற்றில் புத்தியேப்ரதாநம்; அதில்லையாகில் மற்றைநாலும் அஸத்கல்பம்; ஆகையிறே ஆழ்வார்களும் அதிலே யுறைக்கைக்கடி. எங்ஙனேயென்னில்;(சித்தமுஞ்செவ்வை நில்லாது) என்றும், (நெஞ்சமேநீயும்பாங்கல்லையே) என்றும், (சிந்தித்தறியாதார்) என்றும், (நின்றவாநில்லாநெஞ்சு) என்றும், (மறந்தேன்-இறந்தேன்) என்றும், (உணர்வொன்றில்லா) என்றும், (மனத்திலோர் தூய்மையில்லை) என்றும், (உள்ளமே-ஒன்று நீயுணரமாட்டாய்) என்றும், இது அவிதேயமானல் அநர்த்தமென்னு மாகாரத்தை யருளிச்செய்தார்கள்.

(உள்ளிலுமுள்ளந்தடிக்கும்) என்றும்,(உய்த்துணர்வென்னுமொளிகொள் விளக்கேற்றி) என்றும், (நினைக்குங்கால்) என்றும், (சிந்தையைச்செந்நிறுத்தி)என்றும்,(தொழுமின்தூயமநத்தராய்) என்றும், (கூடுமனமுடையீர்) என்றும், (பாடுமனமுடைப்பத்தருள்ளீர்) என்றும், (சிந்தித்திருப்பார்) என்றும் சொல்லுகையாலே-இது அநுகூலித்தால் உத்தாரகமென்னுமிடத்தையருளிச் செய்தார்கள்.

இப்படி யநுகூலித்த நெஞ்சுடையவனை ஈச்வரன் விச்லேஷிக்க மாட்டானென்னு மிடத்தைச் சொல்லுகிறது. (மாசற்றார் மனத்துளான்) என்றும், (நெஞ்சத்துப்பேராதுநிற்கும் பெருமான்) என்றும், (சிந்தையுள்ளே முளைத்தெழுந்த தீங்கரும்பு) என்றும், (அந்தாமத்தன்புசெய்தென் னுவிசேரம்மான்) என்றும், (நெஞ்சமே நீணகராகவிருந்த) என்றும், (வந்துனதடியேன் மனம்புகுந்தாய்) என்றும், (வந்தாயென்மனம்புகுந்தாய்) என்றும் (உள்ளம்புகுந்தவொருவன்) என்றும், (நிற்பது மிருப்பதுங்

கிடப்பதுமென்னெஞ்சுள்) என்றுஞ்சொல்லுகையாலே-அநுகூலரான ஸ்ரீவைஷ்ணவர்களை ஈச்வரன் விச்லேஷிக்கமாட்டானென்னுமிடத்தைச்சொல்லிற்று.

நானூற்றிருபத்தெட்டாம்வார்த்தை.

தானறுகையாவது - (யானுந் தானாயொழிந்தான்) என்றும், (யானும் நீதானே) என்றும், (யானேநீ) என்றும், (தானேயாகி நிறைந்து) என்றும், (தானும் யானுமெல்லாந்தன்னுள்ளே கலந்தொழிந்தோம்) என்றுமிருக்கை; சைதந்யமறுகையாவது - (செய்த்தலையெழு நாற்றுப்போல்) என்றும், (கடைத்தலையிருந்து) என்றும், (படியாய்க்கிடந்து)என்றும், (பூம்பட்டாம்புல்குமணையாம்) என்றுமிருக்கை; ஸாராந்தரமறுகையாவது-(அஹமந்நம்) என்றும், (உண்டிட்டாயினியுண்டொழியாய்) என்றும், (உருவமுமாருயிருமுடனேயுண்டான்) என்றும், (என்னெஞ்சுமுயிரு மவையுண்டு தானேயாகி நிறைந்தான்) என்றும், (தான் என்னை முற்றப்பருகினான்) என்றுமிருக்கை.

வேறறுகையாவது (நானுன்னை யன்றியிலேன் கண்டாய் நாரணனே நீயென்னையன்றியிலை)என்றும், (உறவேல் நமக்கிங்கொழிக்கவொழியாது)என்றுமிருக்கை. மண்ணீரை ஒரு பாத்ரத்திலேயெடுத்துத் தேற்றினால் மண்ணானது கீழேபடிந்து தெளிந்த நீரானது மேலே நிற்குமாப்போலே, அஜ்ஞாநமிச்ரமான சரீரத்திலேயிருக்கிற ஆத்மாவை ஆசார்யனாகிற மஹோபகாரகன் திருமந்த்ரமாகிற தேற்றாம்பாலாலேதேற்ற அஜ்ஞாநம்படிந்து ஜ்ஞாநம்ப்ரகாசிக்கும்; தெளிந்தஜலத்தை பாத்ராந்தரத்திலே சேர்க்குந்தனையும் கைப்பட்டபோதெல்லாம் சலங்குமாப்போலே கலங்குமென்றஞ்சி கலங்காமல் நோக்குவானொருவன்கண்வட்டத்திலே வர்த்திக்கை ஸ்வரூபமென் றருளிச்செய்தார்.

நானூற்றிருபத்தொன்பதாம்வார்த்தை.

ஈச்வரனுடைய ஆகாரத்ரயமாவது மேன்மையும், நீர்மையும், வடிவழகும். அதாவது - (முன்னை யமரர் முதல்வன் வண்டுவராவதி மன்னன் மணிவண்ணன்) என்றும், (மணியை வானவர் கண்ணனைத்தன்னதோரணியை) என்றும், (கண்ணபிரானை விண்ணோர் கருமாணிக்கத்தையமுதை) என்றும், (அண்டர்கோனணியரங்கனென்னமுதினை) என்றும், (பச்சைமாமலைபோல்மேனி-அமரரேறே ஆயர்தங்கொழுந்தே) என்றும், (மீதிட்டுப்பச்சைமேனி மிகப்பகைப்ப-கைதொழக்கிடந்த-மூவுலகளந்த) இத்யாதிகளாலே அநுஸந்திப்பான்.

நானூற்றுமுப்பதாம்வார்த்தை.

சேதநனுடைய பர்வத்ரயம். அதாவது - (தீர்த்தனுக்கற்றபின் மற்றோர் சரணில்லையென்றெண்ணித் தீர்த்தனுக்கே தீர்த்தமனத்தனாகி) என்றும், (தலைவணக்கிக் கைகூப்பி யேத்தவல்லார்) என்றும், (தாளுந்தடக்கையுங் கூப்பிப் பணியுமவர்) என்றும், (கங்குலும் பகலும்கண்டுயிலறியாள் கண்ணநீர் கைகளாலிறைக்கும், சங்குசக்கரங்களென்று கைகூப்பும் தாமரைக்கண்ணென்றே தளரும்) என்றும், (நாட்டினா யென்னையுனக்குமுன் தொண்டாகமாட்டினேனத்தனை யேகொண்டென் வல்வினையை) என்றும், (பாட்டினாலுன்னை யென்னெஞ்சத்திருந்தமை காட்டினாய்) என்றும், (மெய்ம்மையை மிகவுணர்ந்து ஆம்பரிசறிந்துகொண்டு - உன்கடைத்தலையிருந்து) என்றுமித்யாதிகளாலே சேதநனுடைய பர்வத்ரயத்தை யநுஸந்திப்பான்.

நானூற்றுமுப்பத்தோராம்வார்த்தை.

அநாதியான கர்மப்ரவாஹத்தாலே சதுர்விதசரீரங்களிலும் ப்ரவேசித்து சதுர்த்தசபுவநங்களிலும் தட்டித்திரிகிற சேதநனை, ஈச்வரன் தன்னைப்பெறுகைக்குறுப்பாக த்ரிவித சரீரங்களை த்யஜிப்பித்து, மநுஷ்யஜந்மத்திலேயாக்கி, கரணத்ரயத்தாலும் காலத்ரயத்தாலும் கர்மத்ரயத்திலே அந்வயிப்பித்து, அசித்த்ரயத்துக் கவ்வருகானவன், குணத்ரயத்தாலே க்ஷுத்ரனாய் ஆசாத்ரயத்தாலே அலமந்து, அபராதத்ரயத்தை யார்ஜித்து, ஈஷணத்ரயத்தாலே அடிபட்டு, தத்வத்ரயத்தை யறியாதே, தாபத்ரயத்தாலே தப்தனானவிவனை, தேவதாத்ரயத்துக்கு சேஷியாய் மஹிஷீத்ரயத்துக்கு வல்லபனாய் ஆத்மத்ரயத்தை யாளுமவனாய் த்ரிவிதபரிச்சேத ரஹிதனாய், த்ரிவித காரணவஸ்துவான ஸ்ரீமான் கடாக்ஷித்து விரோதித்ரயத்தை விடுவிக்கக்கோலி, ஸுக்ர்தத்ரயத்தைத்தொடுமானமாக்கி ஆநுகூல்யத்ரயத்திலே அந்வயிப்பித்து, அநுவர்த்தநத்ரயத்துக்காளாக்கி, அதிகாரத்ரயத்தையுடைய ஆசார்யோபதேசமான மந்த்ரத்ரயத்தாலே மாசறுத்து, பதத்ரயத்தையறிவிப்பித்து, ஜ்ஞாநத்ரயத்திலே நாட்டிவைத்து, சங்காத்ரயத்தைத் தவிர்ப்பித்து, ஆகாரத்ரயத்திலே அந்வயிப்பித்து, பர்வத்ரயத்தாலே போகமாக்கி, லோகத்ரயத்தை யுபேக்ஷிப்பித்து, பதத்ரயத்திலே கொண்டுபோய், ஸாம்யத்ரயத்தை ஸம்பந்நமாக்கி, புன்மைத்ரயமற்ற போகத்தை புஜிப்பிக்கும்.

த்ரிவிதசரீரமாவது - தேவதிர்யக்ஸ்தாவர சரீரங்கள்; கரணத்ரயமாவது - மநோவாக்காயங்கள்; காலத்ரயமாவது - பூதபவிஷ்

யத்வர்த்தமாநங்கள்; கர்மத்ரயமாவது - நினைக்கையும் சொல்லுகையுஞ் செய்கையும்; நினைக்கையாவது - பரஸம்ர்த்யஸஹத்வமும், பராநர்த்த சிந்தனையும், பரதோஷப்ரதிபத்தியும், ஸ்வயாத்ரா நிரூபணமும்; சொல்லுகையாவது - குடிமுடியும் படிதோஷஞ் சொல்லுகையும், ஸ்வம் அறுதிகொள்ளும்படி கோட்சொல்லுகையும், இதரசரிதங்களைச் சொல்லுகையும், பொய்சொல்லுகையும்; செய்கையாவது-பரஹிம்ஸையும், பரத்ரவ்யாபஹாரமும்; அசித்த்ரயமாவது-வ்யக்தமும், அவ்யக்தமும், காலமும்; குணத்ரயமாவது-ஸாத்விக, ராஜஸ, தாமஸம்; ஆசாத்ரயமாவது - அஹங்காரயுக்தப்ராவண்யமும், அர்த்தப்ராவண்யமும், விஷயப்ராவண்யமும்; அதாவது-(வென்றியேவேண்டி வீழ்பொருட்கிரங்கி வேற்கணார் கலவியே கருதி) என்கிற விவை; அபராதத்ரயமாவது - பகவதபசாரமும், பாகவதாபசாரமும், அஸஹ்யாபசாரமும்; ஈஷணாத்ரயமாவது-அர்த்தேஷணை, தாரேஷணை புத்ரேஷணைகள்; தத்வத்ரயமாவது-சித்தும், அசித்தும், ஈச்வரனும்; தாபத்ரயமாவது - ஆத்யாத்மிகம், ஆதிதைவிகம், ஆதிபௌதிகம்; தேவதாத்ரயமாவது-(வானவர்தம்மையாளுமவன்) இத்யாதிகள்; மஹிஷீத்ரயமாவது-

* ஒருமகளாயர்மடந்தை ஒருத்திநிலமகள் மற்றைத்திருமகள்.

ஆத்மத்ரயமாவது - நித்யர், முக்தர், பத்தர்; த்ரிவிதபரிச்சேதரஹிதனாவது - காலத்தாலும் தேசத்தாலும் வஸ்துக்களாலும் பரிச்சேதிக்கப்போகாதொழிகை; த்ரிவிதகாரணவஸ்துவாவது - நிமித்தோபாதாநஸஹகாரி காரணமாகை; விசேஷ கடாக்ஷமாவது-ஸௌஹார்த்தம்; விரோதித்ரயமாவது - ஸ்வஸ்வாதந்த்ர்யமும், அந்யசேஷத்வமும், தேஹாத்மாபிமாநமும்; ஸுக்ர்தத்ரயமாவது-ஆநுஷங்கிகம், ப்ராஸங்கிகம், யாத்ர்ச்சிகம்; ஆநுகூல்யத்ரயமாவது - அத்வேஷமும், ஆபிமுக்யமும், ஸத்ஸம்பாஷணமும்; அநுவர்த்தநத்ரயமாவது - (శరీరమర్థం ప్రాణఞ్చ సద్గురుభ్యో నివేదయేత్;).

அதிகாரித்ரயமாவது-(బహుశ్రుతానాం వృద్ధానాం బ్రాహ్మణానాముపాసితా) என்கிறபடியே - அறியக்கற்றுவல்லாராகை; மந்த்ரத்ரயமாவது-சாஸ்த்ரருசிபரிக்ர்ஹீதமும், சரண்யருசிபரிக்ர்ஹீதமும், ஆசார்யருசிபரிக்ர்ஹீதமும்; பதத்ரயமாவது - அந்யசேஷத்வ நிவர்த்தியும், அந்யோபாயநிவர்த்தியும், ப்ரயோஜநாந்தர நிவர்த்தியும் பண்ணிக்கொடுக்குமது; ஜ்ஞாநத்ரயமாவது - ஸ்வஜ்ஞாநம், ப்ராபகஜ்ஞாநம், ப்ராப்யஜ்ஞாநம்; சங்காத்ரயமாவது - விரோதிபூயஸ்த்தையும், ப்ராப்யப்ராசுர்யமும், உபாயலகுத்வமும்; ஆகாரத்ரயமாவது - ஈச்வரனுடைய மேன்மையும், நீர்மையும், வடிவழகும்; அதாவது - (முன்னையமரர் முதல்வன் வண்டுவராவதி மன்னன்

மணிவண்ணன்;) பர்வத்ரயமாவது - ஸ்வரூபவிரோதி நிவர்த்தியும், ஸாதநவிரோதி நிவர்த்தியும், ப்ராப்யவிரோதி நிவர்த்தியும்; லோகத்ரயமாவது-பூம்யந்தரிக்ஷஸ்வர்க்கம்; பாதத்ரயமாவது-த்ரிபாத்விபூதி; ஸாம்யத்ரயமாவது - ரூபஸாம்யம், குணஸாம்யம், போகஸாம்யம்; புன்மைத்ரயமாவது – அல்பம், அஸ்திரம், அபோக்யம்; அறுகையாவது - இவை யன்றியிலேயொழிகை.

நானூற்றுமுப்பத்திரண்டாம்வார்த்தை.

ஸங்கத்தைக்கழித்து - ஈஷணையைக்கழித்து பால்யத்தைக்கழித்துயௌவநத்தைக்கழித்துஜரையைக்கழித்துமரணத்தைக்கழித்து நரகத்தைக்கழித்து அவித்யையைக்கழித்து கர்மத்தைக்கழித்துவாஸநையைக்கழித்து தாபத்ரயத்தைக்கழித்து ஸூக்ஷ்மத்ரயத்தைக்கழித்து, விரஜைக்கக்கரைப்படுத்தி, லோகப்ராப்தியையுண்டாக்கி,-ரூபப்ராப்தியையுண்டாக்கி, ஸமீபப்ராப்தியையுண்டாக்கி, ஸாயுஜ்யத்தையுண்டாக்கி, ஜ்ஞாநத்தையுண்டாக்கி, பலத்தையுண்டாக்கி, ஐச்வர்யத்தையுண்டாக்கி, வீர்யத்தையுண்டாக்கி, சக்தியையுண்டாக்கி, தேஜஸ்ஸையுண்டாக்கி, விக்ரஹாநுபவத்தையுண்டாக்கி, கைங்கர்யத்தையுண்டாக்கி, இவன் கைங்கர்யத்தைக்கண்டு அவனுகந்தால் அவனுகந்தபடிகண்டு உகக்கைசேஷத்வத்துக்கு ப்ரயோஜநமென்று ஆச்சான்பிள்ளையருளிச்செய்தார்.

நானூற்றுமுப்பத்துமூன்றாம்வார்த்தை.

ஸ்ரீயஃபதியாகிற காளமேகத்தினின்றும் - ஸௌஹார்த்தமென்கிறதொரு பாட்டமழைவிழுந்து, க்ருபையாகிற நிலத்திலே ஜீவனாகிற ஓஷதிமுளைத்து, ஆசார்யனாகிற இப்பிதாவுக்கு இரக்கமென்கிற ஸங்கத்தாலே ஜ்ஞாநமென்கிற மாதாவின் பக்கலிலேசேர்ந்து ஜீவாத்மாவாகிற பெண்பிள்ளைபிறக்க, ருசியாகிற ஜீவநத்தையிட்டு வளர்த்துக்கொண்டுபோந்து, விவேகமாகிற பக்வம்பிறந்தவாறே பரமசேஷிகளாகிற ஸ்ரீவைஷ்ணவர்கள் திரளைச்சேர்த்து, எம்பெருமானாகிற வரன்கையிலே ஸ்வரூபஜ்ஞாநமென்கிற தாரையைவார்த்துக்கொடுக்க, அவனும் சேஷத்வமாகிற மந்த்ரவாஸஸ்ஸையுடுத்தி, சேஷவ்ருத்தியாகிற மங்கல்யஸூத்ரத்தைக்கட்டி, ரூபநாமங்களென்கிற ஆபரணங்களைப்பூட்டி, *கையைப்பிடித்துக்கொண்டுபோந்து அத்யவஸாயமென்கிற ஆஸநத்திலேகொண்டிருத்தி, ப்ராபகஜ்ஞாநமென்பதொரு அக்நியைவளர்த்து, இதரோபாயத்யாகமென்கிற ஸமிதைகளையிட்டு ஸித்தோபாயஸ்வீகாரமென்கிற ப்ரதாநாஹுதியைப்பண்ணி, மூலமந்த்ரத்தாலே ஜயாதிஹோமங்களைப்பண்ணி சாஸ்த்ரங்களாகிற பொரியைச்சிதறி, ஸம்பந்தஜ்ஞாநமாகிற பூர்ணாஹுதியாலே ப்ராப்தி ப்ரதிபந்தங்களை நிச்சேஷமாக்கி,

னிர்ப்பரத்வாநு ஸந்தாநம்பண்ணி பூர்வாசார்யர்களாகிற பந்துக்களை முன்னிலையாக்கி, மாதாபிதாக்களிருவரும் சேரவிருந்து காட்டிக்கொடுக்க; ஆழ்வார்களீரச்சொல்லாகிற மூப்போடே சேரவிட, வாத்ஸல்யாதி குணயுக்தனாய் அவனும் பர்த்தாவான ஆகாரங்குலையாதபடி அணைத்து நோக்கிக்கொண்டுபோந்து த்வரையாகிறபர்வம்விளைந்தவாறே அவனும் தன்ப்ரதாநமஹிஷியும்கூட அந்தஃபுரக்கட்டிலிலே கொடுபோய், * அந்தமில்பேரின் பத்தடியராகிற பந்துக்களோடே சேர்ந்து, ஹர்ஷப்ரகர்ஷத்தோடே ஆதரிக்க, ப்ரீதிவெள்ளமாகிற படுக்கையிலேகொண்டேற, விஷயவைலக்ஷண்யமாகிற போகோபகரணங்களோடே, ஸகலவித கைங்கர்யங்களாகிறஅநுபவத்தோடேமூட்ட, ஆநந்தமாகிறபெருக்காற்றிலே ஆழங்காற்பட்டு, (நம:)என்பது, (போற்றி) என்பது, (ஜிதம்)என்பது, பல்லாண்டு என்பதாகாநிற்கும்.

நானூற்றுமுப்பத்துநாலாம்வார்த்தை.

பகவத்விஷயம்(அப்பொழுதைக்கப்பொழுதென்னாராவமுதமே)யென்றார்; - (பொங்கைம்புலனும் பொறியைந்தும் கருமேந்திரியமைம்பூத மிங்கிவ்வுயிரோய்பிரகிருதிமானாங்காரமனங்கள்) என்கிறபடியே - இருபத்துநால்வரோடின ஆகாரத்திலே, (மார்வமென்பதோர்கோயிலமைத்து மாதவனென்னுந்தெய்வத்தைநாட்டி) என்கிறபடியேநடுவிற்றிருமுற்றத்திலேஇருபத்தறுவராவானைஉகந்தருளப்பண்ணி, அநந்யார்ஹனாய்-அநந்யசரணனாய், அநந்யபோகனாய், ஜ்ஞாநாநந்தியான இருபத்தைவரான் ஆத்மா திருவாராதநம்பண்ணும் நம்பியார்க்கும் பரத்வமெட்டாது, வ்யூஹம்கால்கடியார்க்கு, அவதாரம் அக்காலத்திலுள்ளார்க்கு, அர்ச்சாவதாரம்உகந்தருளினநிலங்களிலே எப்போதுந்திருவடிகளைப்பிடித்திருக்கவொண்ணாது, இவனுக்கெப்போது மொக்ஷப்பற்றலாவது - அந்தர்யாமித்வமேயிறே. இவனையே குறித்து நிற்கிறவிடமிறே அவ்விடம்; அல்லாதவிடங்களிற்காட்டில் அவன் அதிப்ராவண்யம் பண்ணாநிற்பதும் இங்கேயிறே.

எங்ஙனேயென்னில்;-(அந்தாமத்தன்புசெய்தென்னாவிசேரம்மான்) என்றும், (பனிக்கடலில் பள்ளிகோளைப் பழகவிட்டோடிவந்தென் மனக்கடலில் வாழவல்ல மாயமணாளநம்பி) என்றும், (வில்லாளன்நெஞ்சத்துளன்) என்றும், (கண்ணன்மனத்துள்ளேநிற்கவும்) என்றும், (திருமாலிருஞ்சோலைப் பொருப்பேயுறைகின்றபிரானின்று வந்து இருப்பேனென்றென்னெஞ்சு நிறையப்புகுந்தான்) என்றும், (நிற்பதுமிருப்பதும் கிடப்பதும் என்னெஞ்சுளே) என்றும்;

இங்கிருக்குமிடத்தில் தானொருவனுமேயோ வென்னில்;- (அரவிந்தப்பாவையுந்தானு மகம்படி வந்து புகுந்து) என்கிறபடியே நாய்ச்சிமாரோடும் ஸர்வபரிகரத்தோடும் கூடியிருக்கிறவிவனை இந்நம்பியார் திருவாராதநம்பண்ணும்படி; - (𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑍇 𑌮𑍁𑌹𑍂𑌰𑍍𑌤𑍇 𑌚𑍋𑌤𑍍𑌥𑌾𑌯 𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑍇𑌤𑍍) என்கிறபடியே ஸத்வோத்தரகாலத்திலே பிறந்து, (𑌉𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌨𑍋𑌹𑌤𑌮𑍍) என்கிற * நன்ஞானத்துறைபடிந்தாடி, அத்துறையிலே ஒருகுடம் திருமஞ்சநத்தை யெடுத்து, குருபரம்பரானுஸந்தாநத்தாலே கோயிலிலேவந்து அந்ய சேஷத்வநிவர்த்தி பூர்வகமான அநந்யார்ஹசேஷத்வாநு ஸந்தாநத்தாலே தண்டனிட்டு, * (உய்த்துணர்வென்னும் ஒளிகொள்விளக்கேற்றி, அநந்யசரணத்வாநுஸந்தாநமாகிறதிருவிளக்கை) (எழத்தூண்டி) என்கிறபடியே - அநந்யபோகத்வாநுஸந்தாநத்தாலே ப்ரயோஜநாந்தரமாகிற தூரலை விலக்கிட்டு, ஸம்பந்தஜ்ஞாநாநு ஸந்தாநத்தாலே திருவடிவிளக்கி, (அன்பினால் ஞானநீர்கொண்டாட்டுவனடியனேனே) என்கிறபடியே திருமஞ்சநஞ்செய்து, (வான்பட்டாடையுமஃதே) என்கிறபடியே வாசிகாநுஸந்தாநத்தாலே திருப்பரியட்டஞ்சாத்தி, (பூசுஞ்சாந்தென்னெஞ்சமே)என்கிறபடியே மாநஸாநுஸந்தாநத்தாலே சாத்துப்படிசாத்தி, (தேசமானவணிகலனு மென்கைகூப்புச்செய்கையே) என்கிறபுனையற்ற அஞ்சலியாலே திருவாபரணஞ்சாத்தி, (நாடாதமலர்) என்றும், (விண்டுவாடாமலர்) என்றும், (இனமலரொட்டுமிட்டு) என்றும், (கந்தமாமலரொட்டுமிட்டு) என்றும், சொல்லுகிற ஆநுகூல்யத்தாலே திருமாலை சாத்தி, (பூவியற்புகையும் விளக்குஞ்சாந்தமும் நீரும்மலிந்துமேவித்தொழுமடியார்) என்கிற அநுஸந்தாநத்தாலே தூபங்கண்டருளப்பண்ணி, (மாடுவிடாதென்மனம், பாடுமென்நா - ஆடும் எனங்கம்) என்கிறபடியே பக்திப்ரேரிதமான ந்ருத்தகீதவாத்யங்கண்டருளப்பண்ணி, கர்த்ருத்வநிவ்ருத்திபூர்வகமான அநுஸந்தாநத்தாலே (𑌅𑌹𑌮𑌨𑍍𑌨𑌮𑍍) என்கிறபடியே அவனுக்குபோக்யமாக்கி, (𑌅𑌹𑌮𑌨𑍍𑌨𑌾𑌦𑌃) என்கிறபடியே தானும்புஜித்து, (எம்பெருமான் றாள்தொழுவாரெப்பொழுது மென்மனத்தேயிருக்கின்றாரே) என்கிறபடியே இப்படி யுணர்த்தின வாசார்யன்விஷயத்திலே க்ருதஜ்ஞதாநுஸந்தாநத்தோடே தலைக்கட்டுகை. இருபத்துநால்வரிலே அஞ்சுபேர் க்ராமணிகள்; இவ்வைவரோடு கூடாதாரைச்வர்யமிது; இவ்வைவரோடுங்கூடினார்* இமையாதகண்பறியுண்டுவிடுவார்கள்.

நானூற்றுமுப்பத்தஞ்சாம்வார்த்தை.

நம்மாழ்வார் அறிவுகலங்கினபோதோடு, அறிவுநடையாடினபோதோடு, அஹங்காரம் தலைமண்டையிட்டபோதோடு, அநு

வர்த்தநத்தோடு வாசியற மிதுநமல்லது வாய்திறக்கவறியார். எங்ஙனேயென்னில்-அறிவுகலங்கினபோது, (சிந்தைகலங்கித் திருமாலென்றழைப்பன்) என்பர்; அறிவு நடையாடினபோது, (திருமால் நான்முகன் செஞ்சடையானென்றிவர்கள், எம்பெருமான் தன்மையையாரறிகிற்பார்) என்பர்; அஹங்காரம் தலைமண்டையிட்டபோது, (திருமால் தலைக்கொண்ட நங்கட்கெங்கேவருந் தீவினை) என்பர், அநுவர்த்தநத்தில் (அடிமை செய்வார் திருமாலுக்கே) என்பர்.

நானூற்றுமுப்பத்தாறும்வார்த்தை.

திருமங்கையாழ்வாரை ஈச்வரன் ஆக்கலாம் விரகேதென்று பார்த்தவிடத்து, இவர்விஷயாந்தரப்ரவணராகையாலே இவர் பக்கல் சாஸ்த்ரம் ஜீவியாதாயிருந்தது, இவர், விஷயாந்தரங்களிலே வந்தால், இது விலக்ஷணம் இது அவிலக்ஷணமென்றறிகிற உண்மானம் புறமானம் அறிவாரொருத்தரா யிருந்தாரென்கிற விதுவே பற்றாசாக நம்மை விஷயமாக்கினால் மீட்கக்கூடுமென்று தன்வடிவைக் காட்ட அதிலே அதிப்ரவணராய் அர்ச்சாவதாரத்துக்கவ்வருகு ஒன்றுமறியாதபடியானார்.

நானூற்றுமுப்பத்தேழாம்வார்த்தை.

நம்மாழ்வாரை ஈச்வரன் ஸ்வரூபத்தைக் காட்டி அங்கீகரித்தான். அவருக்குஎல்லாம் பரத்வத்திலேயா யிருக்கும்; இவர்க்கு எல்லாம் அர்ச்சாவதாரத்திலேயா யிருக்கும். எங்ஙனேயென்னில்; அவர்தொழுவது * கண்ணன்விண்ணூரை; இவர்தொழுவது * கண்ணபுரந் தொழுதாளென்னும்; அவர் தூதுவிடுவது (வீசுஞ்சிறகால்பறத்திர் விண்ணாடுநுங்கட்கெளிது) என்றும்; இவர் தூதுவிடுவது )செங்காலமடநாராயின்றேசென்று திருக்கண்ணபுரம்புக்கு) என்றும்; அவர்மடலெடுப்பது (சேணுயர் வானத்திருக்கும் தேவபிரான் றன்னை-குதிரியாய் மடலூர்தும்) என்றும்; இவர் மடலெடுப்பது * சீரார்கண்ணபுரமொழியவூராதொழியேன்; அவர் வளையிழப்பது-(விண்ணூர்தொழவேசரிகின்றனசங்கம்) என்றும்; இவர்வளை யிழப்பது (திருக்கண்ண புரத்துறையும் வரையெடுத்த பெருமானுக்கிழந்தேனென்வரிவளை) என்றும்; அவனெண்ணுவது-(மாகவைகுந்தங்காண்பதற்கென்மன மேகமெண்ணும்) என்றும்; இவனெண்ணுவது - (கண்ணபுரந்தொழுங்கார்க் கடல்வண்ணர்மேலெண்ணம்) என்றும்; அவர் விரும்புவது (அந்தமில் பேரின்பத்தடியரோடிருந்தமை) என்றும்; இவர் (அந்தரங்கள் காட்டினாய் கண்ணபுரத்துறையம்மானே) என்றும்; அவர்க்குஜ்ஞாநப்ரதன் (ஏனத்துருவாயிடந்தபிரான்); இவர்க்குஜ்ஞாநப்ரதன் * வய

லாமிமணவாளன்; அவருக்கு சேஷி (ஒருமாதெய்வம் மற்றுடையமோயாமே) என்கிற ஜகத்காரணவஸ்து; இவர்க்கு சேஷி (அரங்கநகரப்பா துணியேனினி நின்னருளல்லதெனக்கு) என்றும்; அவர்க்கு உபாயம் (அந்நலனுடையொருவனை நணுகினம் நாமே) என்றும்; இவர்க்கு உபாயம் (குறுங்குடிக்கே யென்னையுய்த்திடுமினென்றும்.

நானூற்றுமுப்பத்தெட்டாம்வார்த்தை.

திருவடிகள், சேஷியுமாய் உபாயமுமாய், உபேயமுமாய், பாதகமுமாய், ஸர்வரக்ஷகமுமாயிருக்கும். எங்ஙனே யென்னில்; (துயரறுசுடரடிதொழுதெழென்மனனே) என்கையாலே - சேஷித்வஞ் சொல்லிற்று;(ஆறெனக்குநின்பாதமே சரணாகத்தந்தொழிந்தாய்) என்கையாலே-உபாயத்வம்சொல்லிற்று; (கோலமாமென் சென்னிக்குன் கமலமன்னகுரைகழலே) என்கையாலே-உபேயத்வஞ்சொல்லிற்று; (அழித்தாயுன் திருவடியால்) என்கையாலே-பாதகத்வஞ் சொல்லிற்று; (ஊர்ந்த சகடமுதைத்தபாதத்தன்) என்கையாலே-ஸர்வரக்ஷகத்வஞ்சொல்லிற்று.

திருமேனியும், ருசிஜநகமுமாய், உபாயமுமாய், உபேயமுமாய், சேஷியுமாய் பாதகமுமாயிருக்கும். எங்ஙனே யென்னில்;- (காரார் திருமேனி கண்டதுவே காரணமா) என்கையாலே - ருசிஜநகத்வம் சொல்லிற்று; (வண்ணமருள்கொள்)என்கையாலே-உபாயத்வஞ்சொல்லிற்று;(காதல்கடல்புரையவிளைவித்தகாரமர்மேனி) என்கையாலே - உபேயத்வஞ் சொல்லிற்று;-(எம்மண்ணல் வண்ணமேயன்றிவாய் உரையாது) என்கையாலே - சேஷித்வஞ் சொல்லிற்று; (சிவனொடுபிரமன் வண்டிருமடந்தை சேர் திருவாகமெம்மாவியீரும்) என்கையாலே - பாதகத்வஞ் சொல்லிற்று.

திருவதரமும், தாரகமுமாய், சேஷியுமாய், ப்ராப்யமுமாய், போக்யமுமாய்,பாதகமுமாயிருக்கும்.எங்ஙனேயென்னில்;-(அமுதவாயிலூறிய நீர்தான் கொணர்ந்து புலராமே பருக்கி யிளைப்பை நீக்கீரோ) என்கையாலே - தாரகத்வஞ் சொல்லிற்று; (பவளவாய் முறுவலுங்காண்போம் தோழீ) என்கையாலே - ப்ராப்யத்வஞ் சொல்லிற்று; (கனியிருந்தனைய செவ்வாய்) என்கையாலே-போக்யத்வஞ் சொல்லிற்று; (முறுவலென தாவியடும்) என்கையாலே-பாதகத்வஞ் சொல்லிற்று.

திருக்கண்களும், ரக்ஷகமுமாய், சேஷியுமாய், உபாயமுமாய், உபேயமுமாய், பாதகமுமாயிருக்கும். எங்ஙனே யென்னில்;-(உயிர்க்கெல்லாந்தாயாயளிக்கின்ற தண்டாமரைக்கண்ணன்) என்கை

யாலே - ரக்ஷகத்வஞ் சொல்லிற்று; (அனைத்துலகுமுடையவரவி ந்தலோசநனை) என்கையாலே - சேஷித்வஞ் சொல்லிற்று; (அமலங்களாக விழிக்கும்) என்கையாலே - உபாயத்வஞ் சொல்லிற்று; (தாமரைக்கண்களுக்கற்றுத் தீர்ந்து) என்கையாலே-உபேயத்வஞ் சொல்லிற்று; (தாமரைக்கண்கள் கொண்டீர்தியாலோ) என்கையாலே - பாதகத்வஞ் சொல்லிற்று.

நானூற்றுமுப்பத்தொன்பதாம்வார்த்தை.

திருநாமமும் பாவநமுமாய், தாரகமுமாய், போக்யமுமாய், பாதகமுமாயிருக்கும். எங்ஙனேயென்னில்;-(தாமோதரனை வாயினாற்பாடி மனத்தினாற்சிந்திக்க-தீயினிற்றூசாகும்) என்கையாலே-பாவநத்வஞ் சொல்லிற்று; (கோவிந்தன் குணம்பாடி - ஆவிகாத் திருப்பேன்) என்கையாலே - தாரகத்வஞ் சொல்லிற்று; (ஆயர்தங் கொழுந்தே யென்னு மிச்சுவை) என்கையாலே - போக்யத்வஞ் சொல்லிற்று; (கண்ணன் நாமமே குழறிக்கொன்றீர்)என்கையாலே-பாதகத்வஞ் சொல்லிற்று.

திருமுடியும், பாவநமுமாய் சேஷியுமாய், ரக்ஷகமுமாய், போக்யமுமாய், பாதகமுமாயிருக்கும். எங்ஙனே யென்னில்; - (கெடுமிடராயவெல்லாங் கேசவாவென்ன) என்கையாலே-பாவநத்வஞ் சொல்லிற்று; (துன்னு குழற்கருநிறத்தென் றுணையே) என்கையாலே-ரக்ஷகத்வஞ்சொல்லிற்று; (முடியானே மூவுலகுந் தொழுதேத்துஞ் சீர்) என்கையாலே - ஸர்வசேஷித்வஞ் சொல்லிற்று; (பூந்துழாய்முடி) என்கையாலே - போக்யத்வஞ் சொல்லிற்று; (சுடர்முடிக்கே யொத்திமைசொண்டதுள்ளம்) என்கையாலே - பாதகத்வஞ்சொல்லிற்று.

நானூற்றுநாற்பதாம்வார்த்தை.

* பச்சைமாமலைபோன் மேனியென்றது - ஒருத்தரிட்டாகாதொழிகையும், எல்லாவற்றிலும் பெருத்திருக்கையும், தானே எல்லாவற்றையும் தரித்திருக்கவற்றாயிருக்கையும், இதிலே அந்வயித்தால் எங்குந் தெரியும்படியாயிருக்கையும்,ஒருத்தரால்பேர்க்கப்போகாதா யிருக்கையும், இதிலே அந்வயித்தார்க்கு - ஸகல போகங்களும் இதுக்குள்ளே யுண்டாயிருக்கையும், கத்யாகதியின்றியிலே யிருக்கையும், அஞ்சினான் புகலிடமாயிருக்கையும்.

* கடலையுமொப்பானென்கிறது - எல்லாவற்றையும் வளைத்துக்கொண்டிருக்கையும், கண்ணுக்கிலக்கா யிருக்கச்செய்தே ஆழமும் அகலமும் அளவிடவொண்ணாதா யிருக்கையும், உயிரற்றவற்றை யுட்கொள்ளா தொழிகையும், ஸ்வசக்தியாலே யுள்ளுப்போகவொ

ண்ணுதொழிகையும், தான் அள்ளி விநியோகங்கொள்ளவொண்ணு தொழிகையும், ஒன்றின்வாயாலே விநியோகங்கொள்ளலாயிருக்கையும், தர்சநீயமாயிருக்கையும்.

* கார்முகில் என்கிறது - தர்சநமாத்ரத்தாலே தாபசாந்தியைப் பண்ணுகையும், எங்குமொக்க வர்ஷிக்குமிடத்தில்தான்ஒரு ப்ரயோஜநத்தைதக்கணிசியாதொழிகையும், கொண்டவன் ப்ரத்யுபகாரம் தேடாதொழிகையும், ஒருபடிப்பட வுபகரிக்கப் பெறுமையாலே உடம்பு வெளுக்கையும்.

* எண்ணும் பொன்னுருவாயென்றது - நித்யமாயிருக்கையாலும், ஸகலராலும் கௌரவிக்கப்படுவதொன்றாகையாலும், உரையுண்டாகையாலும், உண்டென்ன வுயிர்நிற்கையாலும், இது கைப்பட்டவன் நினைத்தபடிபண்ணலாயிருக்கையாலும், அவனுக்கு அபிமதங்களெல்லாம் கொடுக்கவற்றாகையாலும், அலங்காரமாயிருக்கையாலும், ஆபத்துக்குதவுகையாலும், இது கைப்பட்டவனை ஸ்ரீமாந் என்கையாலும், இதுகைப்பட்டவன் ஸகலராலும்ஸேவ்யமானநு யிருக்கையாலும் சொல்லுகிறது.

* அந்தி மூன்று மனலோம்புமென்றது - காமாக்நி, கோபாக்நி-ஜாடராக்நி. விண்ணுளாரிலுஞ் சீரியனென்றது-வெட்டும்வாளிலும் - சிரமன்வாள் கனத்திருக்குமென்றபடி.

* என்பிழைத்தாள் திருவடியின் தகவினுக்கென்றது - அணுசதமானபாபம், விபுகதமான க்ர்பைக்கு எதிர் நிற்குமோ.

நம்பிள்ளை ப்ரஹ்மதேசத்திலேயெழுந்தருளியிருக்கச்செய்தே பெரியகோயில் வள்ளலார் காணவர, (குலந்தரும்) என்கிறபாட்டில் - முதல்பதத்துக்கு தாத்பர்யமருளிச்செய்யவேணுமென்று பிள்ளையைக் கேட்க, மூரட்டுத்திருப்பதியானன வென்னை நம்மூர் குலத்துக்கு சேஷமாக்கினகுலந் தருமென்று விண்ணப்பஞ்செய்தார்.

[என் முடிவுகாணுதே யென்னுள்கலந்தானை] என்னுடைய ஸத்தாஹாநிகாணும்படிக் கீடான க்ர்பாஹாநி அவனுக்கில்லாமையாலே என்னை யங்கீகரித்தான்;தொடங்கின வுபாயம் முடிவதற்கு முன்னே என்னுள் கலந்தான். வறுத்தபயறுபோலே ஆத்மாநுபவத்தளவிலே நின்று முடியாதபடி என்னுள் கலந்தான்; என்னஹங்காரம் பாராதே குலங்கொண்டே பரிக்ரஹித்தான்; அபரிச்சேத்யனுன தன்னை நான் புஜிக்குமாப்போலே அணுஸ்வரூபனுன வென்னை புஜித்தான்.

[நாநாவிதநரகம் புகும் பாவம்-நானோ? செய்தேன்] ([illegible]) நீசெய்து என்னைச் சொல்லலாமோ வென்பார்; அடாப்பழியிடுகிறார்க ளத்தனையன்றோ? நான் செய்ததென், தேவாங்கு சேற்றிலே விழுமாப்போலே அவனுக்கு ஸ்ப்ர்ஹணீயமான வஸ்துஇப்படி படுவதே!. [நானே செய்தேன்] அஹங்காரமொன்றாலுஞ் செய்தேன்.

நானூற்றுநாற்பத்தோராம்வார்த்தை.

குளப்படியிலே தேங்கினால் குருவிகுடித்துப்போம், வீராணத்தேரியிலே தேங்கினால் நாடுவிளையுமென் றருளிச்செய்தார். நாதமுனிகள், இவ்வர்த்தத்தை உய்யக்கொண்டாருக் கருளிச்செய்தார், உய்யக்கொண்டார் மணக்கால்நம்பிக் கருளிச்செய்தார், மணக்கால் நம்பியும் ஆளவந்தார்க்குப் பச்சையிட்டார்; இம்மஹாநுபாவன் இத்தர்சநத்திலேபுகுந்தானாகிலோவென்றார்-ஆளவந்தார்; ஆளவந்தார்க்கு எம்பெருமானார்,ஏகலவ்யனன்றோ வென்றார்-எம்பார்;வித்தாகுங்காய்பிஞ்சிலே தெரியுமென்றார்பெரியநம்பி;இதொருதிருவவதாரமோவென்றார் திருமாலையாண்டான்; உன்னோடுவருகிறவன் நித்யஸூரிகளிலே யொருவனென்றது - ப்ர்ஹ்ம ரக்ஷஸ்ஸு; என்னுடைய திருவநந்தபுரம் எதிரோவந்ததென்றார்-தெய்வவாரியாண்டான்; ஊர்புக்குவருகிறேனென்றார் – திருக்கோட்டியூர் நம்பி; பெருமாளே சரணமென்னக்கண்டிலோம், ஆளவந்தாரே சரணமென்னக்கண்டிலோம், நாமென்செய்யக்கடவோமென்றார்-பெரியநம்பி; என்னுடைய ஸர்வஸ்வத்தையும் வாங்கிக்கொள்ளவோ விப்படி செய்கிறதென்றார் - ஆழ்வார் திருவரங்கப்பெருமாளரையர்; வைத்த கையிலும் வாங்கினகை தஞ்சமென்றார் - அம்மங்கி; [illegible] மென்றார் - முதலியாண்டான்; பிதற்றென்றே யிருந்தேன் என்றார் - கூரத்தாழ்வான்; அன்னகடுந் தீர்ந்ததென்றார் – அருளாளப்பெருமா ளெம்பெருமானார்; அத்திட்டையாருக்குச் சொல்லுவேனென்றார் - வங்கிபுரத்துநம்பி; பார்த்திட்டேனாகிற் செய்வதென்னென்றார் - பிள்ளையுறங்காவில்லிதாஸர்; அருளிச்செய்த வார்த்தையும் பொய்யோ வென்றார்-பொன்னாச்சியார்; பூணாரச்செப்பாயிருந்திலையீ யென்றார் - பிள்ளையுறங்காவில்லிதாஸர். நஞ்சீயருக்கு விசேஷகடாக்ஷம் மூன்றுண்டு.

நானவர்க்கு நல்லேனென்றார்–வடுகநம்பி; விஷதர்ஷ்டியான பாம்பைபிடித்துக்கொண்டாட்டா நின்றீரென்றார் - அநந்தாழ்வான்; தொண்டனூர் நம்பி பின்னாட்டியாகப் பெற்றிலேனென்றார் – கொல்லிகாவலதாஸர்; பாய்ந்த பாய்ச்சலே தஞ்சமென்றிருந்தேனென்றார்-ஆட்கொண்ட வில்லிஜீயர்; நெருப்பெழுந்து

தாக்கினபோ தொன்றுண்டோவென்றார் - கணியனூர் சிறியாச்சான்; நான்காண்கிற களவுக்கு இதொரு களவோவென்றார்-திருப்பாவைபாடினார்; ஆண்டாள் சாத்தின திருவாபரணமோ, களைந்த திருவாபரணமோ வுள்ளிருக்கிற தென்றார் - தேவராஜப்பிள்ளை; த்ரிவித ப்ரவ்ர்த்தியை நிவ்ர்த்திக்கலாமோவென்றார் - திருவரங்கத்தாழ்வார்; ப்ரஜைகள் நடமாடுகிற வாசலிலே பாம்பைப்பிடித்து விடுவானைப்போலே இவருக்கு நான் ஹிதஞ்சொன்னேன்; இதென்னாய் விளைகிறதோ வென்று,உடலைக்காட்டி வெருட்டாதே உயிரைக்காட்டி யகப்படுத்திக்கொடு போகப்பாரென் றருளிச்செய்தார் - அம்மங்கிக்கு ஆளவந்தார்.

## எம்பார், பட்டருக்கருளிச்செய்த பத்துவார்த்தை.

ஸ்ரீ வைஷ்ணவலக்ஷண மிருக்கும்படி யென்னென்றுபட்டர் எம்பாரைக்கேட்க, அவரும், ஸகலவேத சாஸ்த்ரங்களாலே அறுதியிட்டவர்த்தத்தை பத்துவார்த்தையாலே பட்டருக்கு எம்பாரருளிச்செய்தார். இப்பத்து வார்த்தையினுடைய வாலாறு சொல்லுகிறது; - பெரியபெருமாளாகிற பெருங்கடலிலே ஆழ்வாராகிற காளமேகம்படிந்து, க்ர்பையாகிற அம்ர்தஜலத்தை பாநம்பண்ணி, நாதமுனியாகிற மஹாமேருவிலே வர்ஷித்து, பூர்வாசார்யர்களாகிற அருவிகளாலே போந்து, எம்பெருமானாராகிற ஏரியிலே தேங்கி, நம்மாசார்யர்களாகிற மதகுகளாலே புறப்பட்டு,ஸம்ஸாரமாகிறகழனிக்கு ஏறிப்பாய்கிறது; இனி * எத்தினை லிடார்க்கடல் கிடக்கிறாய்; அதன்றியே ப்ரக்ர்த்யந்தத்தில் எம்பெருமான் திருவடிகளைப் பெறலாமன்றோ என்கிறது.

முதல்வார்த்தை: - (காணவாராயென்றென்று கண்ணும் வாயுந்துவர்ந்தடியேன்) என்றும், (கங்குலும் பகலுங்கண் டுயிலறியாள்) என்றும், (பக்கம் நோக்கி நின்றலர்ந்தேன்பாவியேன்காண்கின்றிலேன்) என்றும், (ప్రపన్నశ్చాతకోయద్వత్) என்றுமிருக்கை. (க)

இரண்டாம்வார்த்தை; - அப்பேறும் அவனாலே பெறவேணுமென்றிருக்கை, அதாவது - (உன்னாலல்லால் யாவராலு மொன்றுங் குறை வேண்டேன்)என்றும், (உனக்குப் பணிசெய்திருக்குந் தவமுடையேன்) என்றும், (யானேநீ என்னுடைமையும் நீயே) என்றும், (எனதாருயிர் அவன்கையதே) என்றும், (இனியுன்திருவருளாலன்றிக் காப்பரிதால்) என்றும், (சேமஞ்செங்கோனருளே)என்றும்,(செய்த்தலை யெழுநாற்றுப்போல்அவன் செய்வனசெய்துகொள்ள) என்று மிருக்கை. ... ... (உ)

மூன்றாம் வார்த்தை; – இப்பேறுபெற்று வாழ நினைத்திருப்பார் தேவதாந்தர பஜநம் பண்ணுதொழிவர். அதாவது - (மறந்தும் புறந்தொழா மாந்தர்) என்றும், (தாழ்ச்சி மற்றெங்குந்தவிர்ந்து நின் தாளிணைக்கீழ்வாழ்ச்சி) என்றும், (கூராராழி வெண்சங்கேந்திக் கொடியேன்பால் வாராய்) என்றும், (கண்டாரிகழ்வனவே காதலன்றான் செய்திடினுங் கொண்டானை யல்லாலறியாக் குலமகள்போல்) என்று மிருக்கை, தன்பர்த்தாவோடே தான்வாழவில்லை யாகிலும்பிறர்முகம்பாராதவளையிறேபதிவ்ரதையென்பது. (௩)

நாலாம்வார்த்தை;- தேவதாந்தர பஜநம் பண்ணுமவரோட்டை ஸஹவாஸம் வருந்தியுங் கைவிடுவான். அதாவது - (எண்ணாதே யிருப்பாரையிறைப்பொழுது மெண்ணோம்)என்றும், (எண்ணாத மானிடத்தை யெண்ணாதபோதெல்லாம் இனியவாறே) என்றும், சடைத்தெவர்தந்துவக்கைப்பாராதொழிவதே! என்றும் பரந்தாமத்தைப் பற்றுவதே என்றும் - ஸத்தான சாந்துக்குச் சுண்ணாம்பு விரோதியாமாப்போலேயும், ஸ்தாலீஸம்ஸர்க்கத்தாலேஜலத்துக்கு உஷ்ணம்ப்ரவேசிக்குமாப்போலேயும், (పాకృతాన్నంత్యజేత్) (తస్యప్రకృతిలక్షణమ్) (ద్విషదన్నం నభోక్తవ్యం ద్విషన్తం నైవభోజయేత్ । పాణ్డవాః ద్విషన్తే రాజన్ మమప్రాణాహిపాణ్డవాః) என்று ஸர்வசக்திதானேஅநாதரிக்கையாலே ஸர்வதா நமக்கும் அநாதரணீயம். (௪)

அஞ்சாம்வார்த்தை; - உகந்தருளின திவ்யதேசங்களிலே வர்த்திப்பான். அதாவது – (நல்லார்கள் வாழும் நளிரரங்கம்) என்றும், (அற்றபத்தர் சுற்றிவாழுமந்தணீரரங்கம்) என்றும், (வேங்கடத்தைப்பதியாகவாழ்வீர்காள்) என்றும், (எம்பெருமான்பொன்மலைமே லேதேனுமாவேனே) என்றும். பிள்ளை திருநறையூரரையர், பட்டர்ஸ்ரீபாதத்திலேசென்று தண்டனிட்டு அடியேனுக்குத்தஞ்சமாக விருப்பதொரு வார்த்தையருளிச் செய்யவேணுமென்ன; பொய்யேயாகிலும் உகந்தருளின திவ்யதேசங்களிலே புக்குப்புறப்பட்டீராகில் அந்திமதசையிலே கார்யகரமாமென்றருளிச்செய்தார். ... .. ... ... (௫)

ஆறாம்வார்த்தை;- அநுகூலஸங்கல்பனாயிருக்கை. அதாவது - (தெருடியாகில் நெஞ்சே வணங்கு திண்ணமறி) என்றும், (సకృదేవ ప్రపన్నాయ) என்றும், (సకృత్కృతోఞ్జలిః) என்றும், இச்சாமாத்ரமேயமையுமென்றிருக்கை. ... ... ... ... (௬)

ஏழாம்வார்த்தை; ப்ராதிகூல்யத்தைவருந்தியும் கைவிடுவான். அதாவது - பகவதபசாரம், பாகவதாபசாரம், அஸஹ்யாபசாரரூபநாநாவிதாநந்தாபசாரத்துக்கு மடியாய், த்யாஜ்யமான அர்த்த

காமங்கள் நிமித்தமாக பகவத்பாகவத விஷயங்களிலே சிவிட்கென்றிருக்குமாகில் அத்தை வருந்தியுங் கைவிடுவான். (எ)

எட்டாம்வார்த்தை; ஆழ்வார்களீரச்சொல்லாலே நெஞ்சை நெகிழ்க்கை. அதாவது - (மிண்டர் பாய்ந்துண்ணுஞ் சோற்றை விலக்கி நாய்க்கிடுமின்நீரே) என்றும், (பூமிபாரங்களுண்ணுஞ் சோற்றினைவாங்கிப் புல்லைத்திணிமினே) என்றும், (எண்ணக் கண்டவிரல்களா லிறைப்பொழுதெண்ணகிலாதுபோ யுண்ணக் கண்ட தம் ஊத்தைவாய்க்குக் கவளமுந்துகின்றார்கள்) என்றும், (உண்ணாள் பசியாவதொன்றில்லை ஓவாதே நமோநாரணா வென்று எண்ணாநாளும், இருக்கெசுச் சாமவேத நாண்மலர்கொண்டுனபாதநண்ணாநாள், அவைதத்துறுமாகில் அன்றெனக்சவை பட்டினிநாள்) என்றும், (தரித்திருந்தேனாகவே தாராகணப்போர், விரித்துரைத்த வென்னாகத்துன்னைத், தெரித்தெழுதி, வாசித்துங் கேட்டும் வணங்கி வழிபட்டும், பூசித்தும் போக்கினேன்போது) என்றும், (நகரமருள் புரிந்து நான் முகற்குப்பூமேல், பகரமறை பயந்த பண்பன், பெயரினையே, புந்தியாற்சிந்தியாதோதியுரு வெண்ணும், அந்தியாலாம்பயனங்கென்) என்றுமிருக்கை. (அ)

ஒன்பதாம் வார்த்தை; - ஆழ்வார்களீரச் சொல்லாலே நெஞ்சை நெகிழ்க்கும் ஸத்துக்களோடே ஸஹவாஸம் பண்ணுவான். அதாவது - (வாழாட்பட்டு நின்றீருள்ளீரேல்) என்றும், (தொண்டீரொல்லீரும்வாரீர்) என்றும், (எல்லாரும் போந்தாரோ) என்றும், .(அணியரங்கன் திருமுற்றத்தடியார்தங்களின்ப மிகுபெருங் குழவுகண்டு) என்றும், (அவனடியார் நனிமாக்கலவி யின்பமே நாளும்வாய்க்க)என்றும், (அவனடியார்) (திருவுடைமன்னர்)என்றும், (வேறாகவேத்தி யிருப்பாரைவெல்லுமே மற்றவரைச்சாத்தியிருப்பார் தவம்) என்றும், (அடியார்கள்குழாங்களை - உடன்கூடுவதென்று கொலோ) என்றும், (அந்தமில்பேரின்பத் தடியரோடிருந்தமை) என்றும், (பேராளன் பேரோதும் பெரியோரையொருகாலும் பிரிகிலேனே) என்று மிருக்கை. ஆழ்வீர்! உமக்கு இவர்களோட்டை ஸம்பந்தம் ஓரளவின்றியிலே யிருந்த தீ! என்ன; என் செய்கேன், உபாயத்துக்குமுற்பாடராகையாலும், உபேயத்துக்கு எல்லைநிலமாகையாலும், இருந்தநாளைக்கு உசாத்துணை யாகையாலும் (பிரிகிலேன்) என்றார் ... ... ... ... ... (கூ)

பத்தாம் வார்த்தை; - ஆசார்யன் திறத்திற்செய்தவடிமையை மறந்து செய்யப்பெறாத வடிமைக்கு இழவுபாடனாயிருப்பான். அதாவது - ஆசார்யன்திருவுள்ளத்தைப் பின்சென்ற அநந்தாழ்

வரனைப் போலவும் எம்பாரைப்போலவும், ஆசார்யன் அநாதரம் அநர்த்த கரமென்று தன்னைத்தாழவிட்டு அடிமைசெய்த எச்சானைப்போலவு மிருக்கை. ... ... ... ... (௧0)

இப்பத்துவார்த்தையு மருளிச்செய்த ஆசார்யன்விஷயத்தில் க்ருதஜ்ஞனா யிருப்பான்; இப்பத்து வார்த்தையையும் ஒருருநெஞ்சிலேபட அநுஸந்திப்பான்; இப்பத்துவார்த்தையில் ஒன்றுகுறைந்தால் தன் ஆநுகூல்யம் அரைவயிறுமென்றிருப்பான். இப்படி யறுதியிட்டிருப்பார்க்கு * வைகுந்த மாநகர் மற்றது கையதுவே.

நஞ்சீயரருளிச்செய்த நாலுவார்த்தை.

அஜ்ஞாந ஸமயத்திலும், ஜ்ஞாநஸமயத்திலும், ஜ்ஞாநம்பக்வமான ஸமயத்திலும், ஜ்ஞாந பலமானபகவத்ப்ராப்தி ஸமயத்திலும், மாதாபிதாக்களோடு, ரூபநாமங்களோடு, போஜநாதிகளோடு, ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளோடு, விதிநிஷேதங்களோடு, தேசவாஸங்களோடு, பந்துவர்க்கத்தோடு, ஐச்வர்யாதிகளோடு, ப்ரார்த்தனைகளோடு வாசியற பேதித்திருக்கும்.

முதலடியான அஜ்ஞாநஸமயத்தில், விவேகம்ஸஞ்சரியாமையாலும், ([illegible]) (சரீரமேவமாதாபிதரௌஜநயத:) என்கிறபடியே கேவலசரீரத்தைப்பெற்றவர்களையே மாதாபிதாக்களாக வபிமாநித்து அவர்களிட்ட பேரும், அவர்கள் நியமித்த ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளும், அவர்களை யநுவர்த்தித்து அத்தாலே வந்தேறின ரூபநாமங்களும், அவர்கள் விரும்பின பந்துவர்க்கங்களும், அவர்கள் வம்சாபிமாநமும், ஐச்வர்யமும், அவர்கள்கற்பித்த ஸம்ஸார வர்த்தகமுமாயிருப்பன சில ப்ரார்த்தனைகளுமாய், ஸம்ஸாரத்தில் என்னை விஞ்சினாரில்லையென்று தன்னை ஸமாப்யதிக தரித்ரனாக வபிமாநித்து மேனாணித்திருமாந்திருக்கும். ... (௧)

ஜ்ஞாநம் பிறந்தஸமயத்தில், * அஞ்சு சேராக்கையான கேவல சரீரமென்று - ப்ரக்ருதேபரனாய், பஞ்சவிம்சகனாய், ஸ்வஸ்மை ஸ்வயம்ப்ரகாசனாய், ஏகரூபனாய், ஜ்ஞாநாநந்தைகஸ்வரூபனாய், அச்சேத்யனாய், அதாஹ்யனாய், அக்லேத்யனாய், அசோஷ்யனாய், நித்யனாய், ஜநநமரணாதிகளின்றிக்கேயிருப்பானொருவாத்மாவுண்டு, வேதசாஸ்த்ரங்களுமுண்டு, புண்யபாபங்களுமுண்டு, வர்ணாச்ரமங்களுமுண்டு; கீழ்நின்ற நிலைகள் பாபவிகாரத்தாலே ப்ரமித்த தித்தனையென்றுணர்ந்து நெகிழ்ந்து, ([illegible]) என்கிறபடியே வேதசாஸ்த்ரத்தை மாதாவாகவும், சாஸ்த்ரப்ரதாநம் பண்ணினவனையே பிதாவாகவும் அபிமாநித்து, அந்தசாஸ்த்ரம் விதித்தபடியே போஜநாதிகளும், ப்ரவ்ருத்திநிவ்ருத்திகளும், விதிநிஷேதங்

களும், வேதசாஸ்த்ரம் போமவர்களையே பந்துக்களாகவும், அந்த சாஸ்த்ராபிமாநத்தாலே வந்தேறின ரூபநாமங்களும் சாஸ்த்ராப்யாஸம் பண்ணலான தேசமாய் சாஸ்த்ரத்தை ஐச்வர்யமாகவும் ப்ரார்த்தனைகளாகவும் அபிமாநித்து, ஆத்மாபிமாநங்களில்என்னை விஞ்சினாரில்லையென்று தன்னை ஸமாப்யதிகதரித்ரனாக வபிமாநித்து மேனாணித்து இறுமாந்திருக்கும் ... ... ... (௨)

ஜ்ஞாநம் பக்வமான ஸமயத்தில், ஸகல சாஸ்த்ரங்களையுமாராய்ந்துபார்த்தால் ஆத்மாவினுடைய ஸ்வாதந்த்ர்யம் விநாசமென்றும், ஈச்வரஸ்வாதந்த்ர்யம் இவனைக்கரையேற்றுமென்னுமிடமும், (పతింవిశ్వస్య) (ఆత్మదాస్యంహరేస్స్వామ్యమ్) இத்யாதி ப்ரமாணங்களாலும், (ఆర్జ్యస్సర్వశాస్త్రోక్తిః) என்று ப்ரமாணங்கள் சொல்லுகையாலும், கீழ்நின்றநிலைகளையடைய நெகிழ்ந்து, தத்வத்ரயவிஷயஜ்ஞாநத்தையும், தத்வத்வய விஷயவைராக்யத்தையும், தத்வைக விஷயபக்தியையுமுடையனாய், தத்வஹிதங்களை யறியும்போது, ணைசப் பறிபறித்தும், கிடந்தானைகண்டேறியும், அல்லாமையாலே லோகத்திலே அர்த்தகாமோபஹதனன்றியிலே வேதசாஸ்த்ர நிதாநஜ்ஞாநனாய், லோகபரிக்ரஹமுடையனா யிருந்துள்ள ஆசார்யன் ஸ்ரீபாதத்திலே சென்று கண்ணுங் கண்ணீருமாய், கீழ் தேஹாத்மாபிமாநியாயும் கேவலாத்மாபிமாநியாயும் தான்பட்ட அநர்த்தமெல்லாம் நோக விண்ணப்பஞ்செய்ய, ஆசார்யனும் தன் நிரவதிக க்ர்பையாலே இவன்கண்ணீரைத்துடைத்து இரண்டு பங்குக்கு ஒருகையோலைபோலே ஈச்வரஸ்வாதந்த்ர்யத்துக்கும், ஆத்மபாரதந்த்ர்யத்துக்கும் வாசகமாய், இவ்வாத்மாவுக்கும் எம்பெருமானுக்கும் உண்டான * ஒழிக்கவொழியாத ஸம்பந்தத்துக்கு, எட்டிழையாய் மூன்றுசரடாயிருப்பதொரு மங்கல்யஸூத்ரமுண்டென்று பெரிய திருமந்த்ரத்தை ஆசார்யன் தன் இரக்கத்தாலே யருளிச்செய்து, ஸ்வரூபத்தில் உணர்ச்சியோடு ஸ்வரக்ஷணத்தில் அசக்தியோடு ஈச்வரனைப் பேணிக்கொண்டு வர்த்தியென்று அருளிச்செய்தருளினால், தான் கீழ்நின்ற நிலைகளை நெகிழ்ந்து, (பெற்றார் பெற்றொழிந்தார்) என்றும், (பெற்றதாய் நீயே பிறப்பித்த தந்தை நீ) என்றும், (பெற்றாருஞ்சுற்றமு மென்றிவைபேணேன் நான்) என்றும், (தாயேதந்தையென்றும் தாரமே கிளைமக்களென்றும் நோயேபட்டொழிந்தேன்) என்றுஞ் சொல்லுகிறபடியே - திருமந்த்ரத்தையே மாதாவாகவும் ஆசார்யனையே பிதாவாகவும் அபிமாநித்து, ஆசார்யன் திருவுள்ளமான ரூபநாமங்களும் போஜநாதிகளும் ப்ரவ்ர்த்தி நிவ்ர்த்திகளும் விதி நிஷேதங்களும், ஆசார்யன் விரும்பி வர்த்திக்கும் தேசமே திவ்யதேசமாகவும், ஆசார்யன் திருவுள்ளத்தாலே ஸஹவாஸயோக்யராகக் கற்பித்த பரமஸத்வ

நிஷ்டரான ஸ்ரீவைஷ்ணவர்களே பந்துக்களாகவும், அவர்கள், தங்களுக்கு ஐச்வர்யமாக வபிமாநித்திருக்கும் ஆசார்யகைங்கர்யமே தனக்கு ஐச்வர்யமாகவும், தத்கைங்கர்யத்தின்மேலுண்டான ப்ரார்த்தனையே தனக்கு தேஹயாத்ரையாகவும் நினைத்து, (குலங்களாய வீரிரண்டிலொன்றிலும் பிறந்திலேன் - நின்னிலங்குபாதமன்றி மற்றோர்பற்றிலேன்) என்றும், (கற்றிலேன் கலைகள் - நற்றுணையாகப்பற்றினேனடியேன்) என்றும், (போதெல்லாம்போதுகொண்டுன் பொன்னடி புனையமாட்டேன் - ஏதிலேனரங்கர்க்கெல்லே) என்றும், (நாட்டாரோடியல்வொழிந்து) என்றும், (நாட்டுமானிடத்தோ டெனக்கரிது) என்றுஞ் சொல்லுகிறபடியே - தன்வேறுபாடுதோன்ற இந்நிலத்தில் பொருந்தாமையும் பொருந்தும் நிலத்தில் புகப்பெறாமையும் வடிவிலே தோன்றும்படி, நிர்மலனாய் மோக்ஷப்ரதனான வெம்பெருமானைக் கிட்டிவாழுமளவும் ஜ்ஞாநப்ரதனான வாசார்யன்நிழலிலே யொதுங்கி அவர்ப்ரீதிக்குவர்த்தகனாய் இருந்தவிட மறியாமலிருக்கும். (௩)

ஜ்ஞாநபலமான பகவத்ப்ராப்தி ஸமயத்தில் தான் கீழ்நின்ற நிலைகளையடைய நெகிழ்ந்து ஆசார்யன் கட்டின ஸ்வரூபாநுபந்தியான மங்களஸூத்ரத்தில் அர்த்தாநுஸந்தாநத்துடனே வர்த்தியாநிற்கச்செய்தேயும் * பகவத்ஸ்வரூப திரோதாநகரியாய், விபரீதஜ்ஞாநஜநநியான சரீரஸம்பந்தத்தை ருசிவாஸனைகளோடேவிட்டு, ஆற்றிலே குளித்து கரையேறிப் புக்ககத்தில் உம்மூரலங்கரிக்கப்போய் வகுத்ததேசத்திலே முகம்பழகித்திரளிலேசென்று புகுந்து, தனக்கென்னவொரு ரூபநாமங்களாதல், போஜநசயநாதிகளாதல், ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளாதல், விதிநிஷேதங்களாதல், தேசவாஸமாதல், பந்துக்களாதல், ஐச்வர்யமாதல், ப்ரார்த்தனைகளாதலின்றிக்கே * అహమన్నమ్ என்னுதல் * சூட்டுநன்மாலைகள் தூயனவேந்தி, நிற்றல், (సదాపశ్యన్తి) என்று வைத்தகண்வாங்காதே பார்த்திருத்தல், (ఛాయావాసత్త్వమనుగచ్ఛేత్) என்கிறபடியே சாயாவத்பரதந்த்ரனாய் வர்த்தித்தல் செய்வதெப்போதோவென்றுத்வரைநடந்து செல்லுகை. இவ்வர்த்தம் ஓராசார்ய னங்கீகரித்த முமுக்ஷுவுக்கு நாள்தோறும் ஆராயவேண்டுவதொன்று. எங்ஙனே யென்னில்;- ஒருவன் ஒருகந்யகையை ஒருமந்த்ரஸம்பந்தத்தாலே கைப்பிடித்தால், பூர்வாவஸ்தையின் நிலைகளடைய நெகிழ்ந்து பர்த்தாவினுடைய அபிமாநத்திலே யொதுங்கினாப்போலேயும், அநுபநீதனானவன் ஒரு மந்த்ரஸம்பந்தத்தாலே சிகாயஜ்ஞோபவீதங்களை தரித்தால் த்விஜனென்று பேராகிறாப்போலேயும், யஜ்ஞத்தில் ஒருவன் தீக்ஷித்தால் பூர்வாவஸ்த்தையின்நிலைகளடைய நெகிழ்ந்து அவப்ர்தஸ்நாநத்தளவும் யஜமாநவேஷத்துக்குத் தக்க

அநுஷ்டாநமாகிறுப்போலேயும், ஸந்யாஸிகீழ்நின்றநிலைகளையடை யநெகிழ்ந்து ஆச்ரமத்துக்குஉசிதமான வர்த்தநத்தோடே வர்த்திக் கிறுப்போலேயும், இந்த ஜீவந்முக்தனான முமுக்ஷுவும் கீழ்நின்ற நிலைகளையடைய நெகிழ்ந்து பகவத்கைங்கர்யமொன்றிலுமே நிரதனாய் வர்த்திக்கிறதெப்போதோவென்று தன்னெஞ்சை யுருக்கித் தன்வேறுபாடுதோன்ற வர்த்திக்கையே முமுக்ஷுக்ருத்யமென்று நஞ்சீயரருளிச்செய்தார். ... ... ... (௪)

நானூற்றுநாற்பத்திரண்டாம்வார்த்தை.

முமுக்ஷுவாய் ப்ரபந்நனானவன் தன்னைச் சிறையனாகவும், பெருங்கடல் பட்டானாகவும், அந்தகனாகவும், விஷதஷ்டனாகவும் அநுஸந்திப்பான். அநுஸந்திக்கும்படி யெங்ஙனே யென்னில்;- தேஹம் சிறைக்கூடாரகவும், தேஹாநுபந்திகளான பார்யாபுத்ராதிகள் சிறைக்கூட்டாரகவும், அஹங்காரமமகாராதிகள்வளையலாகவும், * நாசமானபாசம் நாலியாகவும், அவிவேகம் முட்டாணியாகவும், இந்த்ரியங்கள் பிரிவாளராகவும், விஷயங்கள் பிரியலாகவும், மநஸ்ஸு மேல்தண்டலாகவும், தான் சிறையனாகவும், எம்பெருமான் விமோசகனாகவும் அநுஸந்திப்பான்; (க)

ஸம்ஸாரம் ஸமுத்ரமாகவும், ஆசை பெருநீராகவும், மநோவிகாரம் வாயுக்ஷோபமாகவும், அநுராகம் பெருஞ்சுழியாகவும், அஹங்காரமமகாராதிகள் க்ராஹஸங்கங்களாகவும், ஆத்யாத்மிகாதிகள் அலையொழுங்காகவும், உடம்பு ஓழகலோடமாகவும், தத்ரக்ஷணாதிகள் வன்பாரமாகவும், தான் பெருங்கடற்பட்டானாகவும், எம்பெருமான் உத்தாரகனாகவு மநுஸந்திப்பான். (உ)

மநஸ்ஸு கண்ணாகவும், ஜ்ஞாநம் பார்வையாகவும், காமம் காசமாகவும், லோகம் காமியாகவும், உபபோகம்புருஷார்த்தமாகவும், அசர்த்யகரணம் வழியாகவும், அஜ்ஞாநம் கோல்காட்டாகவும், நரகம்படுகுழியாகவும், தான் அந்தகனாகவும், எம்பெருமான் ஊன்றுகோலாகவும் அநுஸந்திப்பான். (௩)

ஸம்ஸாரம் செடியாகவும், உடம்புபுற்றாகவும், இந்த்ரியங்கள் விவரங்களாகவும், விஷயங்கள் பாம்பாகவும், அவற்றின்விஷமாகவும், அவற்றின் ஸந்நிதிதஷ்டமாகவும், அநுபவம் வ்யாப்தியாகவும், மோஹம் மூர்ச்சையாகவும், தான் விஷதஷ்டனாகவும், எம்பெருமான் * தீர்மருந்தாகவும், அநுஸந்திப்பான். (௪)

நானூற்றுநாற்பத்துமூன்றாம்வார்த்தை.

ப்ரபந்நஸ்வரூபமிருக்கும்படி;-நம்மனிச்சர்க்கு த்வயமொழிந்த அநுஸந்தாநமெல்லாம் கடலோசை மாத்ர மென்று நஞ்சீயருளிச்செய்ததாகப் பிள்ளையருளிச்செய்வர்.

நானூற்றுநாற்பத்துநாலாம்வார்த்தை.

எல்லாம் வேண்டுவதும் ப்ரபந்நனுக்கு, ஒன்றும் வேண்டாததும் ப்ரபந்நனுக்கு. படுக்கை சேர்த்திக்கு முன்பு இவையெல்லாம் வேண்டும், படுக்கையிலேறினால் இவையெல்லாம் மிகை. பிணங்கிடக்க மணம் செய்யவொண்ணாதாப்போலேகாண் இவ்வுடம்பு கிடக்க வகுத்த கைங்கர்யம் விளையாதபடி. ஆயிட்டு எம்பெருமானைப் பெறுகைக்கு இவ்வுடம்பேயல்ல விரோதம், தான்செய்யும் நன்மைகளும் விரோதம். எங்ஙனேயென்னில்;-அழுக்கிட்ட சட்டை அணைக்கைக்கு விரோதியாமாப்போலே, முன்புபூஷணத்தை யநுபவிக்கவேணும், ஸம்பந்தம் ஸம்பாத்யமன்று, தடை விடுகை ஸம்பாத்யம். அதாவது - பகவத்ப்ராப்திக்கு விரோதியான இச்சாப்ரவர்த்திகளைச்சொன்னபடி.

நானூற்றுநாற்பத்தஞ்சாம்வார்த்தை.

ஆழ்வான் எம்பெருமானாரை, ப்ரபத்தியென்பட்டிருக்குமென்று கேட்க;-அதுகர்மாதிகளை விட்டல்ல தானிருப்பது. ஒன்றில் ஆயிரமில்லை, ஆயிரத்தில் ஒன்றுண்டு; குளப்படியில் கடலில்லை, கடலிலே குளப்படியுண்டு; ஆகையாலே எல்லாம் ப்ரபத்தியிலேயுண்டென்றருளிச்செய்தார். அதில் இவை கண்டபடி யெங்ஙனேயென்னில்; - ராஜகுமாரன் கர்ப்பூரநிகரத்தை வாயிலேயிட்டு பல்லாலே அசைக்குமாப்போலே, த்வயத்தையுச்சரிக்கை - கர்மம்; அவன் அதின்ரஸத்தைபாநம்பண்ணுமாப்போலேயிடைவிடாதே யநுஸந்திக்கை-ஜ்ஞாநம்; அவன் அந்தரஸத்தாலே தன்னை மறந்திருக்குமாப்போலே இவனும் அதினர்த்தாநுஸந்தாநத்தாலேரஸாதிசயிதனாய்த் தன்னை மறந்திருக்குமது - பக்தி; அத்தாலும்ப்ரபந்நனுடைய அநுஷ்டாநமிருக்கும்படி பிறந்துடையவனுடைய வொப்பனைபோலேயும்,ராஜகுமாரன் கர்ப்பூரநிகரத்தை வாயிலிட்டு நீரை நாக்காலே போக்குமாப்போலேயும், ப்ரபந்நனுக்கு த்வயார்த்தாநுஸந்தாநமொழிய தேஹயாத்ரை செல்லாது.

நானூற்றுநாற்பத்தாறாம்வார்த்தை.

நஞ்சீயர், பட்டரை ப்ரபத்தியாவது-ஜ்ஞாநவிசேஷமோ, க்ரியாவிசேஷமோவென்றுகேட்க; வஸ்து விசேஷமென்றருளிச்செய்தார்.

நானூற்றுநாற்பத்தேழாம்வார்த்தை.

திருமந்த்ரம் விலைப்பால், த்வயம் முலைப்பால்.

நானூற்றுநாற்பத்தெட்டாம்வார்த்தை.

நம்முடையத்வயமிருக்கும்படி;-கரைகட்டினகாவேரியும்கரைகட்டாக் காவேரியுமாய், அப்படி யிறங்குந்துறையுமாயிருக்கும்.

அவையெவையென்னில்;-பரமபதம் கரைகட்டாக் காவேரி; ராம க்ர்ஷ்ணுதிவிபவம் கரைகட்டின காவேரி; அப்படி இருக்குந்துறை திருமந்த்ரமும் த்வயமும்.

இங்ஙனொத்தவனைக் காண்பதெங்ஙனே யென்னில்; – திருவநந்தாழ்வான் திருமடியிலும் பெரியதிருவடிமுதுகிலும் ஸேனைமுதலியார் திருப்பிரம்பின்கீழு மிருப்பவனிறே நமக்குப்ராப்யன்.

நானூற்றுநாற்பத்தொன்பதாம்வார்த்தை.

திருமந்த்ரம் திருமுகப்பாசுரம், அருளிச்செயல்படியெடுப்பு. பகவச்சேஷமாய் வைத்து அகன்றுபோன வாத்மாவை எம்பெருமானோடே சேர்கைக்குப் பற்றாசாகப் பிராட்டியுளளென்று அத்யவஸித்திருக்கை.

நானூற்றைம்பதாம்வார்த்தை.

தொண்டனூர் நம்பி, தம்முடைய அந்திமதசையிலே மருதூர் நம்பிநடக்க; இவ்வாத்மா எம்பெருமானைப்பற்றிக்கரைமரஞ்சேரும்படி யொருவார்த்தை சொல்ல வல்லையேயென்றுகேட்க; எம்பெருமானுக்கில்லாததுமாய் இவ்வாத்மாவுக்குள்ளதொன்றுமாய், எம்பெருமானைப்பெறுகைக்குப் பொருள்விலையுந்தானேயா யிருப்பதொருஅஞ்சலியேகாணென்றருளிச்செய்தார். அதெங்ஙனேயென்னில்;-அடித்துப்பறிக்கும் தசையிலே ஓரறிமுகம் பெற்றாற்போலேயும், கருடமுத்ரைக்கு விஷம் தீருமாப்போலேயும், நமக்குப்புருஷகாரபூதையான பிராட்டியுளளென்றத்யவஸித்திருக்கையே வேண்டுவது. இவ்வதிகாரிக்கு ப்ரக்ர்தியுடனிருக்கும் நாளித்தனையும் நினைத்திருக்கவேண்டும்படி யெங்ஙனேயென்னில்; எம்பெருமானும் நித்யன், ஆத்மாவும்நித்யம். ஆயிருக்க இது இற்றைவரை யிழப்பதே! என்று இழவுபட்டிருக்கையும், நெடுங்கால மிழப்பித்தவுடம்போடே எம்பெருமான் தன்னைரக்ஷகனென்று அநுஸந்திக்க வைப்பதே! என்றிருக்கையும், இற்றைவரை யிழப்பித்தவுடம்பிருந்தது,இன்னமிழக்கிலோ! என்று பயம்பிறந்திருக்கையும், பெறுகைக்கு நாம்பண்ணுவதொருநற்றமுண்டோ இழக்கைக்கும் பயப்பட, இரண்டுமவனேயானபின்பு தன்னை யநுஸந்தித்துத்தளருகையும், அவனையநுஸந்தித்துப் பெறுந்தேற்றமும் இவ்வாகாரத்வயமும் ப்ரக்ர்திஸம்பந்த மறுமளவும் இப்படி யநுஸந்திக்குமவன் அதிகாரியாகிறான். இவ்வதிகாரிக்கு உபாயத்துக்குச்செய்யவேண்டுவதொன்றுமில்லை, த்வயத்தில் பூர்வகண்டத்தை யநுஸந்தித்தால் அரும்புநறுக்கப் ப்ராப்தியில்லை, உத்தரகண்டத்தை யநுஸந்தித்தால் தலைசொறிய வவஸரமில்லை.

## உடையவர் முதலியாண்டானுக்கருளிச்செய்த பத்துவார்த்தை.

உடையவர் பிள்ளை யுறங்கா வில்லிதாஸர்விஷயமாக முதலி யாண்டானுக்குப் பணித்த பத்துவார்த்தை. முதலியாண்டான், உள்ளம் விம்மிப் புறம்பொசிந்து உடையவர் ஸ்ரீபாதத்திலே தண்டனிட்டு, நமக்கும் நம்முதலிகளுக்குமுள்ள தன்னேற்றமரு ளிச்செய்யவேணுமென்ன; உடையவரும், நாமே உமக்குச்சொல்ல வேணுமென்றிருப்பதொரு அர்த்தத்தை நீர்தாமே கேட்டீரே யென்று ப்ரீதராய், ஸகலவேத சாஸ்த்ரங்களிலும் இதிஹாஸபுராண ங்களிலுமுள்ளத்தைப் பெறுக்கிச் சேர்த்து, நம் ஆழ்வார்க ளருளி ச்செயல்களிலும் சொல்லப்பட்ட குஹ்யமாயிருப்பதொரு அர்த்த த்தைஉடையவர்முதலியாண்டானுக்கு இப்பத்துவார்த்தையாலே யருளிச்செய்கிறார்.

இதில் முதல்வார்த்தை. நமக்கும் நம்முதலிகளுக்கு முள்ள தன்னேற்றம். எங்ஙனே யென்னில்;-நாம் நாடுபரிக்ரஹிக்கைக் காகச்செய்வுதோம், அவர்கள் * நாட்டாரோடியல் வொழிந்து நாரணனை நண்ணியிருப்பர்கள். ... ... (க)

இரண்டாம்வார்த்தை. திருப்பதிகளுக்கும் கோயில் திருமலை பெருமாள்கோயிலுக்கு முள்ள தன்னேற்றம். எங்ஙனேயென் னில்;-நாம் தெப்பக்கையைப்போலே இரண்டையும் விடோம், அவர்கள் ஸாரஜ்ஞராய்க்கொண்டு விட்டத்தி லிருப்பாரைப்போ லே முதலடியிலே நிற்பர்கள். ... ... ... (உ)

மூன்றும் வார்த்தை. ஆழ்வார்களுக்கும் பெரியாழ்வார்க்கு முள்ள தன்னேற்றம். எங்ஙனே யென்னில்;-நாம் * கலக்கங்களுந் தேற்றமுமாய்ப் போருவுதோம், அவர்கள் * கலக்கமில்லாநற் றவர்களாய், * பல்லாண்டு கூறியிருப்பர்கள். ... ... (ங)

நாலாம்வார்த்தை. அந்தரத்துக்கும் கடலுக்குமுள்ள தன் னேற்றம். எங்ஙனேயென்னில்;-நாம் ஸம்ஸாரமாகிற கடலிலும் மழையிலும் பெருங்காற்றிலும் அவற்றிலுள்ள லாபச்சேதங்களா லும் சோகஹர்ஷங்களைப் பண்ணுநிற்புதோம்; அவர்கள் இரண்டி லும் (தளர்தலதனருகுஞ்சாரார்) (தருதுயரந்தடாயேல்) என் கிற திருமொழிப்படியே நிற்பர்கள். ... ... (ச)

அஞ்சாம்வார்த்தை. அணுவுக்கும், மஹாமேருவுக்குமுள்ள தன்னேற்றம். எங்ஙனே யென்னில்;-நாம் ஸம்பந்தமும் குடி கோத்ரமும் ஸூத்ரமுமாகப்பண்ணுவுதோம்; அவர்கள் ஸம் பந்தஜ்ஞாநாநுஷ்டாநமே குடிகோத்ரஸூத்ரமென்றிருப்பர்கள்

ஆறாம்வார்த்தை; - கரும்புக்கும் கண்டுக்குமுள்ள தன்னேற்றம் எங்ஙனேயென்னில்; - நாம் வேதமாகிற கரும்பைக்கடித்து பல்லுமுறிவுதோம்; அவர்கள் ஸாரத்வயமாகிற கண்டைக்கடித்து இன்புறுவார்கள். ... ... ... ... ... (சு)

ஏழாம்வார்த்தை; - மண்ணுக்கும் விண்ணுக்கு முள்ளதன்னேற்றம். எங்ஙனே யென்னில்; - நாம் (மண்ணுளென்னைப் பெற்றாலென்செய்யா) என்றும், (அருவித்தின்றிடவஞ்சி நின்னடைந்தேன்)என்றும், (பலநீகாட்டிப்படுப்பாயோ) என்றும்,(திருமாலே யினிச்செய்வதொன்றறியேன்) என்றும், பயப்பட்டுக்கலங்காநிற்புதோம்; அவர்கள் (இங்கேதிரிந்தேற் கிழுக்குற்றென்) என்றும், (வானுயரின்பமெய்திலென்) என்றும், (நம்புவார்பதி வைகுந்தங்காண்மின்) என்றும், (செய்த்தலையெழுநாற்றுப்போல் அவன் செய்வனசெய்துகொள்ள) என்று மிருப்பர்கள் ... ... (எ)

எட்டாம் வார்த்தை. இரவுக்கும் பகலுக்கு முள்ள தன்னேற்றம். எங்ஙனே யென்னில்; - நாம் வேதமாகிற அந்தகாரத்திலே தடுமாறா நிற்புதோம்; அவர்கள் அவன் பேராயிரமுமோதினவிளக்கொளியாலே * மாதவன்தன் துணையாநடந்து * மாயன் அன்று ஐவர் தேரினிற் செப்பிய கீதையின் செம்மைப் பொருள் வழியே நடப்பர்கள். ... ... ... ... (அ)

ஒன்பதாம் வார்த்தை. ரத்நத்துக்கும் பாஷாணத்துக்கு முள்ளதன்னேற்றம். எங்ஙனேயென்னில்; - நாம் (மந்திரத்தை மந்திரத்தால் மறவாதென்றும் வாழுதியேல்வாழலாம்மடநெஞ்சமே) என்று - அந்திதோறும் மந்திரத்தைச்சொல்லாநிற்புதோம்;அவர்கள் (அந்தியாலாம் பயனங்கென்) என்று-மந்த்ரரத்நத்தைச் சிந்திப்பர்கள். ... ... ... ... ... ... (கூ)

பத்தாம் வார்த்தை. பதிவ்ரதைக்கும் பரநாரிக்குமுள்ள தன்னேற்றம். எங்ஙனே யென்னில்; நாம் ஆக்நேயாதிகளுக்கு சேஷமாயிருப்புதோம்; அவர்கள் அவனுக்கே சேஷமென்று அவனையொழிந்தவர்களுக்கு சேஷமன்றென்று அறுதியிட்டிருப்பர்கள். இது இருவர்களுக்கு முள்ள தன்னேற்றம். இந்தத் தன்னேற்றந்தான் பெருமாள்பக்கலிலும், நம்பெருமாள்பக்கலிலும், அப்பன்பக்கலிலும், பெரியநம்பிபக்கலிலும் காணலாம். இதினேற்றந்தான் நமக்கும் உமக்கும் பெரியோர்களுக்கும் நித்யாநுஸந்தாநமென்று உடையவர் முதலியாண்டானுக்கருளிச்செய்தார்; முதலியாண்டானும் அடியேன் இத்தனை காலம் அபசாரம் பண்ணிப்போந்தேன், இனிச்செய்யவடுப்ப தென்னென்று விண்ணப்பஞ்

செய்ய; சரணாகதனான முமுக்ஷுவுக்கு இப்பத்துவார்த்தையும் நெஞ்சிலே பட்டவன்று திருவடிகள் ஸித்திக்குமென்று உடையவர்முதலியாண்டானுக்கு அருளிச்செய்தார். (௧0)

நானூற்றைம்பத்தோராம்வார்த்தை.

முமுக்ஷுவாய்ப்ரபந்நனாயிருக்கு மவனுக்கு இருக்கும் நாளைக்கு காலக்ஷேப ப்ரகாரமிருக்கும்படி யெங்ஙனே யென்று உடையவர் திருவடிகளிலேவிழுந்து முதலியாண்டான் விண்ணப்பஞ்செய்ய; குருபரம்பரா பூர்வகமாக த்வயத்தை யநுஸந்தாநம் பண்ணுவான், உபயவிபூதிநாதனாய் ஸ்ரீயஃபதியான ஸர்வேச்வரனும் நாய்ச்சிமாரும் நித்யஸூரிகளும் கூட வெழுந்தருளி யிருக்கும் பீடக்கட்டாயிருக்கும் த்வயம்; பெரியபெருமாள்திருவடிகளைப் பார்த்தவாறே, (பொது நின்ற பொன்னங்கழல்) என்கிறபடியே ஸர்வாத்ம ஸாதாரணமா யிருக்கும்; பெரிய பெருமாள் அபயஹஸ்தத்தைப் பார்த்தவாறே அநந்யசரணரான ஸ்ரீவைஷ்ணவர்களுக்கே அஸாதாரணமா யிருக்கும்; பெரியபெருமாள்திருமுகமண்டலத்தைப் பார்த்த வாறே நித்யஸூரிகளுக்கே அஸாதாரணமாயிருக்கும்; ப்ராப்யபரமான திருமந்த்ரத்தை பெரியபெருமாள் திருவடிகளிலே யநுஸந்தாநம்பண்ணுவான்; ப்ராபகபரமான சரமச்லோகத்தை பெரியபெருமாள்அபயஹஸ்தத்திலே யநுஸந்தாநம் பண்ணுவான்; இரண்டுங்கூடி போகரூபமான த்வயத்தைபெரிய பெருமாள்திருமுகமண்டலத்திலே அநுஸந்தாநம்பண்ணுவான்.

நானூற்றைம்பத்திரண்டாம்வார்த்தை.

மத்ஸ்யத்தின்வடிவெல்லாம் ஜலமயமா யிருக்குமாப்போலே இவள் அவன்ரூபாதிகளுக்கு நிரூபகபூதையாகையாலே, ஸ்ரீமானவயவமெல்லாம் ஸ்ரீமயமாயிருக்கும். (ஶ்ரீஂ) என்கிறதாத்வர்த்த ப்ரகாசகமாய் புருஷகார ஸ்வரூபமான ஸ்ரீஎன்கிற திருநாமத்தை பெரியபெருமாள்திருநன்மார்பிலே யநுஸந்தாநம் பண்ணுவான்; (மத்) (மந்) என்று-இப்புருஷகாரம் நித்யமென்று அநுஸந்தாநம்பண்ணுவான்; (நாராயண) (நாராயண) என்று-ஆச்ரயணஸௌகர்யா பாதகங்களானவாத்ஸல்யாதி குணங்களையும், ஆச்ரித கார்யாபாதகங்களான ஜ்ஞாநசக்த்யாதி குணங்களையுமுடையவனென்று அநுஸந்தாநம்பண்ணுவான்; (சரணௌ) (சரணௌ) என்று - பெரியபெருமாள்திருவடிகளை யநுஸந்தாநம் பண்ணுவான்; (ஶரணம்) (ஶரணம்) என்று - சரண்யரான பெரியபெருமாள்அபயஹஸ்தத்திலே யநுஸந்தாநம்பண்ணுவான்; (ப்ரபத்யே) (ப்ரபத்யே) என்று-ப்ரபத்தாவான தன்னுடையஸ்வரூபாநுரூப ஸ்வீகாரமென்று அநுஸந்தாநம்பண்ணுவான்;

(శ్రీమతే,నారాయణః) என்கிற பதங்களை-ஸ்வாமிநியாய் அவனுக்கு வல்லபையாய், ப்ராப்யையாய், கைங்கர்யவர்த்தகையாய், பகவந்முகோல்லாஸஜநகையாய், தத்ப்ரீத்யநுபவைக யாத்ரையாயிருக்கிற பெரியபிராட்டியாரோடே சேஷத்வகார்யமான கைங்கர்ய ப்ரதிஸம்பந்தியாயிருக்கிறவனுடைய தாரகத்வ வ்யாபகத்வநியந்த்ர்த்வ ஸ்வரூபமென்ன, ஸ்வரூபகுணங்களான ஜ்ஞாநபலாதிகளென்ன, அதில் நின்றும் இழிந்த வாத்ஸல்யாதிகளென்ன, தத்தத்ஸ்வரூப குண ப்ரகாசகமான பஞ்சோபநிஷண்மய விக்ரஹங்களென்ன, விக்ரஹகுணங்களான ஸௌந்தர்ய ஸௌகுமார்யாதிகளென்ன, ஆச்ரிதவிரோதிவிஷயமான சௌர்யாதிகளென்ன, திவ்யமங்கள விக்ரஹ ப்ரகாசகமான திவ்யாபரணங்களென்ன, ததநுபவ விரோதி நிவர்த்தகமான திவ்யாயுதங்களென்ன, இவற்றுக்கு அநுரூபமான ஸ்ரீவைகுண்ட திவ்யநகரியில் திவ்யமண்டபத்திலே மற்ற திவ்ய மஹிஷிகளோடே திவ்யபரிஜநபரிச்சதங்கள் ஸேவிக்க ஸ்வாமித்வப்ரகாசகமாக வெழுந்தருளி யிருக்கிற விருப்பிலே யநுஸந்தாநம் பண்ணுவான்; (ఆయ) (ஆய) என்று-அவன் * அரசமர்ந்தானுகையாலே சேஷியாகையாலும், இவன் * அடிசூடு மரசாகையாலே சேஷமாகையாலும், ஸர்வவித சேஷவ்ர்த்திகளையும் பண்ணப் பெறுவே னாகவேணுமென்றநுஸந்தாநம் பண்ணுவான்;

(నమః) (நமஃ) என்றும்-(ద్వ్యక్షరస్తుభవేన్మృత్యుః) என்றும், (మమేతిద్వ్యక్షరోమృత్యుః) என்றும், (யானே யென்றனதேயென்றிருந்தேன்) என்றும் சொல்லப்படுகிற, (మః) (மஃ) என்கிற ஷஷ்ட்யந்தபதத்தை, (త్ర్యక్షరంబ్రహ్మణఃపదమ్) என்றும், (నమమేతిచశాశ్వతమ్) என்றும், (யானே நீ என்னுடைமையும் நீயே) என்றுஞ் சொல்லுகிற நகாரார்த்த பலத்தாலே நிஷேதித்து, (தனக்கேயாக) என்கிறபடியே - இத்தலையில் நினைவையழியமாறி அத்தலையில் நினைவே நினைவாம்படி பண்ணி, கீழ்ச்சொன்ன ஸகலசேஷவ்ர்த்திகளையும்கொண்டருளவேணுமென்று பெரியபெருமாள்திருமுகமண்டலத்தைப் பார்த்து அநுஸந்தாநம்பண்ணுவான் என்றருளிச்செய்தார்.

நானூற்றைம்பத்துமூன்றும்வார்த்தை.

முமுக்ஷுவாய்ப்ரபந்நனு யிருக்குமவனுக்கு அறியவேண்டுமர்த்தம்நாலுண்டு; இதில்அத்யவஸாயமாயிருப்பனவும்நாலுண்டு. அவை யெவை யென்னில்; ப்ராப்யமும் ப்ராப்யாத்வ்யவஸாயமும், ப்ராபகமும், ப்ராபகாத்வ்யவஸாயமும், ஆசாரமும், ஆசாராத்வ்யவஸாயமும், போஜநமும் போஜநாத்வ்யவஸாயமும். இதில்ப்ராப்ய மாவது-அவித்யாகர்ம வாஸநாருசிப்ரக்ர்திஸம்பந்த நிவர்த்தி பூர்வகமாக அர்ச்சிராதி மார்க்கத்தாலே - ஒருதேசவிசே

ஷத்திலேபோய் பரிபூர்ணமானபகவதநுபவ ப்ரீதியாலே பிறக்கும்; கைங்கர்யம். இதில் அத்யவஸாயமாவது - கைங்கர்யத்தையொழிந்துள்ள தர்மார்த்தங்களிலும், மோக்ஷத்தில் கைவல்யம் முதலாயுள்ளபுருஷார்த்தங்களிலும் அபோக்யதாபுத்திபூர்வகமாக இக்கைங்கர்யமே பரமப்ராப்யமென்றிருக்கை; இதில்ப்ராபகமாவது - ஸௌலப்யாதிகல்யாணகுணவிசிஷ்டனுமாய் விக்ரஹவிசிஷ்டனுமாயிருந்துள்ள வீச்வரன்; இதில் அத்யவஸாயமாவது - பெரியபிராட்டியார்புருஷகாரத்தாலே அவன்தானே யுபாயமென்று உபாயாந்தரங்களான கர்மஜ்ஞாநபக்திகளில் கால்தாழாதேஇவ்வுபாயமேநிரபேக்ஷோபாயமென்றிருக்கை. ஆசாரமாவது-உபாயஸ்வீகாரம்பண்ணினவன் யாவதாயுஷம் மநோவாக்காயங்களாலும் ஸ்வரூபாநுகூலமாக வர்த்திக்கும் வர்த்தநம். அதாவது-பரவ்யூஹவிபவாதிகளிற் காட்டில் அர்ச்சாவதாரத்தின்நீர்மையிலே அதிப்ரவணரான ஸ்ரீவைஷ்ணவர்கள்பக்கல் அநுகூலவ்ருத்திகளைப் பண்ணுகையும், ப்ரதிகூலங்களைத் தவிர்ந்து வர்த்திக்கையும்; இதில் அத்யவஸாயமாவது-கீழ்ச்சொன்ன அநுகூலவ்ருத்திகளைப் பண்ணுகையும், ப்ரதிகூலங்களைத் தவிருகையும், செய்யுமிடத்து,க்யாதிலாபபூஜைகளைப் பற்றவும், த்ருஷ்டப்ரயோஜநார்த்தமாகவும் பகவத்ப்ராப்திக்குஸாதநமாகவும் ப்ரதிபத்தி பண்ணிச்செய்யாதே இவ்வாசாரமே ஸ்வயம்ப்ரயோஜநமென்றிருக்கை; இதில் போஜநமாவது - ந்யாயார்ஜிதமான த்ரவ்யத்தைக்கொண்டு குக்ஷிபூர்த்தியிலே அந்வயியாதே க்ஷுந்நிவ்ருத்தி மாத்ரமே ப்ரயோஜநமாக ஜீவிக்கும் ஜீவநம்; இதில் அத்யவஸாயமாவது - அநுகூலரை நெருக்கி ஜீவிக்கும் ஜீவநமென்ன, ப்ரதிகூலர்பக்கல் ஸாபேக்ஷனாய் ஜீவிக்கும் ஜீவநமென்ன, அமுதுபடி சாத்துப்படிகளுக்குஅர்ஹமானத்ரவ்யங்களிலே ஸாபேக்ஷனாய்ஜீவிக்கும் ஜீவநமென்ன இவற்றில் கால்தாழாதே, ந்யாயார்ஜிதமான த்ரவ்யத்தைக்கொண்டு தேஹயாத்ராநடத்துகை ப்ரபந்நக்ருத்யம்.

நானூற்றைம்பத்துநாலாம்வார்த்தை.

ஸ்வரூபத்தில் உணர்த்தியும்,ஸ்வரக்ஷணத்தில் அசக்தியும்,ப்ராப்யத்தில் த்வரையும், ப்ராபகத்தில் அத்யவஸாயமும்,விரோதியில் பயமும், உத்தேச்யவிஷயத்தில் கௌரவமும், உபகார விஷயத்தில் க்ருதஜ்ஞதையும்,உத்தாரக விஷயத்தில் ப்ரதிபத்தியும். ஸ்வரூபத்திலுணர்த்தியாவது - (கண்ணபுர மொன்றுடையானுக்கடியேனொருவற்குரியேனோ)என்றிருக்கை.ஸ்வரக்ஷணத்தில் அசக்தியாவது- (என்நான்செய்கேன்யாரேகளைகண் என்னை என்செய்கின்றாய்) என்றிருக்கை; ப்ராப்யத்தில் த்வரையாவது - (மாக வைகுந்தங் காண்பதற்கென் மனமேகமெண்ணும்) என்றிருக்கை; ப்ராபகத்

தில் அத்யவஸாயமாவது - (களைவாய்துன்பங் களையாதொழிவாய் களைகண்மற்றிலேன்) என்றிருக்கை;விரோதியில்பயமாவது-(பாம்போடொருகூறையிலே பயின்றாற்போல்) என்றிருக்கை; உத்தேச்யவிஷயத்தில் கௌரவமாவது - (அவனடியார் சிறுமாமனிசரா யென்னையாண்டாரிங்கேதிரிய)(உறுமோபாவியேனுக்கு)என்றிருக்கை; உபகாரவிஷயத்தில் க்ர்தஜ்ஞதையாவது - (என்னைத் தீமனங்கெடுத்தாய்) (மருவித்தொழும்மனமே தந்தாய்) (உனக்கென்செய்கேன்) என்றிருக்கை; உத்தாரக விஷயத்தில் ப்ரதிபத்தியாவது-(ஆவிக்கோர் பற்றுக்கொம்பு நின்னலாலறிகின்றிலேன்) என்று இருக்கை.

ஸ்ரீயஃபதியான ஸர்வேச்வரனைப்பற்ற ஜீவாத்மாக்களுக்கு அத்யந்த பாரதந்த்ர்யசேஷத்வங்கள் ஸ்வரூபமென்று ஸதாசார்யோபதேச முகத்தாலே ஸகல வேதஸங்க்ரஹமான ஸ்ரீமதஷ்டாக்ஷர மஹாமந்த்ரத்திலே ப்ரதமமத்யம பதங்களாலே தெளியவறிந்து ஸ்வரக்ஷணத்தில் சக்தியும் ப்ராப்தியு மில்லாமையாலே, மந்த்ரரத்நமென்கிற திருநாமத்தையுடைத்தானத்வயத்தின்உத்தரவாக்யத்தால் ப்ரதிபாதிக்கப்பட்ட பரமபுருஷார்த்த ஸித்திக்கு; அதில் பூர்வவாக்யத்தால் ப்ரதி பாதிக்கப்பட்ட ஸித்தோபாயபூதனான ஸ்ரீயஃபதி திருவடிகளையே யுபாயமாக வுடையனான அதிகாரிக்குஸ்வவிசேஷணமான ஸக்ர்த்ப்ரபத்திக்குமேற்படஅபேக்ஷிதமாயிருப்பதொன்றில்லாமையாலேகீதோபநிஷதாசார்யன் த்யாஜ்யதயா அகர்த்தவ்யமாக விதித்த அஷ்டாங்கயோகயுக்தமான கர்மயோகமும், ததுபாயமான ஜ்ஞாநயோகமும், ததுபாயமான பக்தியோகமும், எல்லாவற்றிலும் அங்கத்வேந அநுவர்த்திக்கக் கடவதான வர்ணாச்ரமயோக்யதாபாதக தர்மங்களும்,(ஸர்வதர்மாந்பரித்யஜ்ய) என்று உபாதேயதயாகர்த்தவ்யமாக விதித்த ஷடங்கயோக யுக்தமானந்யாஸவித்யையே அதிகாரமா யிருக்கும்.

நானூற்றைம்பத்தஞ்சாம்வார்த்தை.

ப்ரபந்நனுக்குக் கீழ்ச்சொன்னஉபாயத்தில்ப்ரவர்த்திஸ்வரூபவிரோதி, உபேயத்தில்நிவர்த்திப்ராப்யருசிவிரோதி;இவ்விரண்டர்த்தத்துக்கும் நிதர்சநபூதர், ஸ்வரக்ஷணக்ஷமராயிருக்கச் செய்தேயுந் தன்னுடையஸ்வரூப பாரதந்த்ர்யத்தை முன்னிட்டுக்கொண்டு அசோகவநிகையிலே யெழுந்தருளி யிருந்த பிராட்டியும்,பெருமாள் நில்லென்னச்செய்தேயும்தம்முடைய செல்லாமையைக்காட்டிபின்றொடர்ந்தடிமைசெய்த இளையபெருமாளும். த்வயத்தில்பூர்வகண்டத்தை யநுஸந்தித்தால் -ஸ்வரக்ஷணநிமித்தமாக விலங்கிக்கிடந்த துரும்பு எடுக்கப்ராப்தியில்லை; உத்தரகண்டத்தை யநுஸந்தித்

தால் மடலெடுத்துப் புறப்படா திருக்க ப்ராப்தியில்லை. இவ்விரண்டுகண்டத்திலு முண்டான வர்த்தாநுஸந்தாநத்தாலே - முமுக்ஷுத்வாதிகார விருத்தமான காம்யகர்மங்களும், ஸாமாந்ய சாஸ்த்ரத்தால்ப்ரதிபாதிக்கப்பட்ட †த்வாதசாஷ்டாதி ப்ராயஶ்சித்தாதிகளும், அபசாரத்ரயங்களும், ஏவம்விதமான சாஸ்த்ராநுஷ்டாநங்களடைய லஜ்ஜாபுரஸ்ஸரமாக ஸ்வரூபேணவிட்டு, அநிஷ்டநிவ்ருத்திபூர்வகையான இஷ்டப்ராப்திக்கு ஸித்தோபாயத்தை ஸ்வீகரித்து ததநந்தரம்தன்னைப் பார்த்து நிர்ப்பரனுமாய் ஸித்தோபாயபூதனுமானஸ்ரீயபதியைப்பார்த்து, நிர்ப்பரனுமாய் நிஸ்ஸம்சயனுமாய்க் காலம்போகா நின்றது, கர்மம் க்ஷயியாகின்றது, பரமப்ராப்யம்குறுகாநின்றதென்றுமேலேபெறப்புகுகிறபேற்றைப்பார்த்து ஹ்ருஷ்டமநாவாய்இப்ப்ரதிபந்தகத்தோடே யிருக்கும்நாளும் பகவத்விஷயத்திலும் பாகவதவிஷயத்திலும் ஸ்வரூபாநுகூலமாகஉபாயபுத்தியின்றியிலே அஹங்காரமமகார ரஹிதனாய், ஸ்வயம் ப்ரயோஜநமாக கைங்கர்யங்களைப்பண்ணி யிருக்குமவன் முக்தப்ராயன்.

நானூற்றைம்பத்தாறும்வார்த்தை.

அகிலஜகத்திதாநுசாஸநமான வேதத்திலும் வேதோபப்ர்ம்ஹணங்களாக ப்ரவர்த்தங்களான ஸ்ம்ருதீதிஹாஸ புராணங்களிலும் அவிகிதமாக ப்ரஸித்தமாய், ஸர்வேச்வரனுடைய ஸ்வம்மாய், ஸர்வாத்மாக்களுக்கும் ஆபத்தநமாயிருந்துள்ள வுபாயோபேயங்களை ப்ரதிபாதிக்கையாலே த்வயமென்னும் திருநாமத்தையுடைத்தாயிருந்துள்ள வாக்யத்வயம் பத்தர்த்தத்தை ப்ரதிபாதிக்கிறது.

ஸ்ரீயபதித்வமும், நாராயணத்வமும், நாராயணனுடைய ஸர்வலோகசரண்யமான சரணாரவிந்தயுகளமும், அதினுடைய ப்ராபகத்வமும், தத்கோசரமாய்சேதநகதமாயிருந்துள்ளப்ரார்த்தநாகர்ப்பவிஸ்ரம்பமும், லக்ஷ்மீதத்வல்லபர்களுடைய நிகிலாத்மநித்ய கைங்கர்ய ப்ரதாநார்த்தமான நித்யஸம்பந்தமும், கைங்கர்ய ப்ரதிஸம்பந்தியான வீச்வரனுடைய நிரதிசயபோக்யதையும், ஸர்வஸ்வாமித்வமும், நித்யகைங்கர்யமும், கைங்கர்ய ப்ரதிபந்தக நிச்சேஷ நிபர்ஹணமுமாகிற வர்த்தவிசேஷங்கள்; ஈத்ர்சார்த்த விசேஷப்ரகாசகமான மந்த்ரவிசேஷத்தினுடைய விவரணரூபமாய் அபௌருஷேயமாயிருந்துள்ள திருவாய்மொழியில் பத்துப் பத்தாலும் இப்பத்தர்த்தத்தையும் பூர்வாசார்யர்கள் அடைவே சேர்த்து அநுஸந்தித்துக்கொண்டு போருவர்கள்.

† "த்வாதசவர்ஷாதி" என்றும் பாடம்.

இதில் முதற்பத்தால் - (மலர்மகள்விரும்பும் நமரும்பெறலடிகள்) என்றும், (மலராள்மைந்தன்) என்றும், (திருமகளார் தனிக்கேள்வன்) என்றும்,(திருவின்மணாளனென்னுடைச்சூழலுளான்) என்றும், (பூமகளார் தனிக்கேள்வன்) என்றும், (மைந்தனைமலராள் மணவாளனை)என்றும்-ஸ்ரீயஃபதித்வம் ப்ரதிபாதிதமாய்த்து.

இரண்டாம்பத்தால் - (எம்பெருமான் நாரணற்கு) என்றும், (எம்பிரானெம்மான் நாராயணனாலே) என்றும், (நாரணன் முழுவேழுலகுக்கும் நாதன்) என்றும் - நாராயணத்வம் ப்ரதிபாதிதமாய்த்து.

மூன்றாம்பத்தால் - (நாண்மலராமடித்தாமரை) என்றும், (அங்கதிரடியன்) என்றும்,(அவன் பாதபங்கயம்) என்றும், (அன்றுதேர்கடவிய பெருமான்கனைகழல்) என்றும், (மூவுலகுந்தொழுதேத்துஞ் சீரடியான்) என்றும் - நாராயணனுடைய ஸர்வலோகசரண்யமான சரணாரவிந்தயுகளம் ப்ரதிபாதிதமாய்த்து.

நாலாம்பத்தால்-(இலங்கைநகர்அம்பெரியுய்த்தவர்)என்றும், (வல்வினைதீர்க்குங் கண்ணனை) என்றும், (தொல்வினைதீர) என்றும், (வெய்யநோய்கள் முழுதும்வியன்ஞாலத்துவீய) என்றும், (மேவிநின்றுதொழுவார்வினைபோகமேவும்) என்றும், (பிறந்துஞ் செத்தும் நின்றிடரும்பேதமை தீர்ந்தொழிந்தேன்) என்றும், (நோயேமூப்பிறப்பிறப்புப் பிணியேயென்றிவையொழிய) என்றும், (வேட்கையெல்லாம் விடுத்து - கூட்டரிய திருவடிக்கள் கூட்டினை) என்றும், (அஃதேயுய்யப்புகுமாறு) என்றும், (உய்வுபாயம்மற்றின்மைதேறி)என்றும் - அநிஷ்டநிவ்ர்த்திக்கும் இஷ்டப்ராப்திக்கும்ஹேதுவான ப்ராபகத்வம் ப்ரதிபாதிதமாய்த்து.

அஞ்சாம்பத்தால் - (தமியேனுக்கருளாய்) என்றும், (ஆறெனக்கு நின்பாதமே சரணாகத்தந்தொழிந்தாய்) என்றும், (உன்னாலல்லால் யாவராலு மொன்றுங் குறைவேண்டேன்) என்றும், (அவனை யுயிருண்டான் கழல்களவையே சரணாகக்கொண்ட) என்றும், (நாமங்களாயிரமுடைய நம்பெருமானடிமேல் சேமங்கொள் தென்குருகூர்ச்சடகோபன்) என்றும், (நாகணைமிசை நம்பிரான் சரணே சரண் நமக்கு) என்றும், (நாடொறுமேகசிந்தையனாய்) என்றும் - ப்ரார்த்தநாகர்ப்ப விஸ்ரம்பம் ப்ரதிபாதிதமாய்த்து.

ஆறாம்பத்தால் - (திருமாமகளிருந்தாம்மலிந்திருந்து) என்றும், (அடிமைசெய்வார் திருமாலுக்கே) என்றும், (ஒசிந்த

வொண்மலராள்கொழுநன்)என்றும்,(என்திருமார்பர்க்கு)என்றும், (கோலத்திருமாமகளோடுன்னைக்கூடாதே) என்றும் - கைங்கர்ய ப்ரார்த்தநாகர்ப்பமான நித்யஸம்பந்தம் ப்ரதிபாதிதமாய்த்து.

ஏழாம்பத்தால், (கன்னலேயமுதே) என்றும், (திருமாலின் சீர், இறப்பெதிர்காலம் பருகினுமார்வனே)என்றும்,(ஏழுலகைஇன் பம்பயக்க) என்றும் — கைங்கர்யப்ரதிஸம்பந்தியான ஈச்வரனு டைய நிரதிசயபோக்யதை ப்ரதிபாதிதமாய்த்து.

எட்டாம்பத்தால் - (அடியனேன் பெரியவம்மான்) என்றும், (விண்ணவர்கோன்நங்கள்கோனை) என்றும், (அமர்ந்தநாயகனை) என்றும், (மூவுலகாளி) என்றும், (நேர்பட்ட நிறை மூவுலகுக் கும்நாயகன்) என்றும்-ஸர்வஸ்வாமித்வம் ப்ரதிபாதிதமாய்த்து.

ஒன்பதாம்பத்தால் - (பண்டைநாளாலே நின்திருவருளும் பங்கயத்தாள்திருவருளுங்கொண்டு நின்கோயில் சீய்த்து) என் றும், (நின்தீர்த்தவடிமைக்குற்றேவல்) என்றும், (தொடர்ந்து குற்றேவல்செய்து)என்றும்,(கொடுவினையேனும்பிடிக்க)என்றும், (உறுவதேதுவென் றுனக்காட்பட்டு) என்றும், (ஆட்கொள்வா னொத்து) என்றும், (நானும் மீளாவடிமைப் பணிசெய்யப்புகுந் தேன்) என்றும் - நித்யகைங்கர்யம் ப்ரதிபாதிதமாய்த்து.

பத்தாம்பத்தால் - (துயர்கெடுங்கடிது) என்றும், (கெடுமிட ராயவெல்லாம்) என்றும், (எழுமையுமேதஞ்சாரா) என்றும், (இப்பிறப்பறுக்கும்) என்றும், (உன்றன்திருவுள்ள மிடர்கெடுந் தோறும் நாங்கள் வியக்கவின்புறுது மெம்பெண்மையாற்றோம்) என்றும், (பிணியொன்றுஞ்சாரா) என்றும், (பிறவித்துயர் கடிந் தோம்) என்றும், (விண்டேயொழிந்த வினையாயினவெல்லாம்) என்றும், (அமராவினைகளே) என்றும், (கடுநரகம்புகலொழித்த) என்றும், (தடுமாற்றவினைகள் தவிர்த்தான்) என்றும், (பிறவிகெ டுத்து) என்றும், (அந்திதொழுஞ்சொல்லுப்பெற்றேன்)என்றும், (அவாவற்றுவீடுபெற்ற) என்றும் - கைங்கர்யப்ரதிபந்தக நிச்சேஷ நிபர்ஹணம் ப்ரதிபாதிதமாய்த்து.

இப்படி ஸ்ரீய:பதித்வ ப்ரமுகங்களாய் கைங்கர்யப்ரதிபந்தக நிச்சேஷ நிபர்ஹணபர்யந்தங்களா யிருந்துள்ள உ[illegible]யார்த்தங் களை ப்ரதிபாதிக்கக்கடவதா யிருந்துள்ளவாக்யத்[illegible] மொழியும் பகவச்சரணார்த்திகளாய் ப்ரபத்யுபா[illegible] மதிகாரிகளுக்கு காலக்ஷேபஹேதுவாகவும் ஈச்[illegible] மாகவும் யாவச் சரீரபாதமநுஸந்தேயம்.

### ஆளவந்தார், தம்முடையசரமதசையிலே முதலிகளுக்கு அருளிச்செய்த வார்த்தைகள்.

ஆளவந்தார், திருமேனியிலே நோவுசாத்தி யெழுந்தருளி யிராநிற்கச்செய்தே, திருவரங்கப்பெருமாள் புருஷகாரமாகத்திருக் கோட்டியூர்நம்பியும், பெரியநம்பியும், ஆளவந்தார்திருவடிகளிலே தண்டன்ஸமர்ப்பித்து, "அடியோங்களுக்குத் தஞ்சமாயிருப்ப தொரு அர்த்தம் ப்ரஸாதித்தருளவேணும்" என்ன; ஆளவந்தாரும் முதலிகளிருவரையுந் திருவுள்ளம்பற்றி – உங்களுக்குத் தஞ்சமா யிருப்பதொரு அர்த்தம் இது;-"கோயிலாழ்வாரே உங்களுக் குயிர் நிலை, உங்களுக்குத் தஞ்சமென்று புத்திபண்ணிப் போருங்கோ ளென்றும், பெரியபெருமாள் திருவடிக்கீழே வீணையுங் கையுமாய் ஸேவித்திருக்கிற திருப்பாணாழ்வார்விக்ரஹத்தை பாதாதிகேசாந்த மாக ஸேவித்துக்கொண்டு போருங்கோள்" என்றும் திருவுள்ள மாக; திருவரங்கப்பெருமாள் முதலான விம்முதலிகளும் அப்படி யே திருவுள்ளம்பற்றி யிருக்கிறவளவிலே, ஆளவந்தார், மீளவும் திருவரங்கப்பெருமாளையும்முதலிகளிருவரையும்திருவுள்ளம்பற்றி, இதுக்கு ப்ரமாணமாக திருமலையாழ்வா ருயிர் நிலையறிந்துபோரும் குறும்பறுத்தநம்பியையும், பேரருளாளப்பெருமாளுயிர்நிலையறிந் துபோரும்திருக்கச்சிநம்பியையும், பெருமாளுயிர்நிலையறிந்துபோ ரும் திருப்பாணாழ்வாரையும், திருப்பாணாழ்வார் உயிர்நிலையறிந்து போரும் திருவரங்கப்பெருமாளையும் காட்டியருளி, ஆழ்வார் திருவ ரங்கப்பெருமாளரையரைப்பார்த்து, நீர் பெருமாளுயிர்நிலையறிந்து ஸேவிக்கிற விக்ரஹமே யடியேனுக்குபாயோபேயமென்று புத்தி பண்ணி போருவனென்று அருளிச்செய்ய;

திருவரங்கப்பெருமாள், ஆளவந்தார் ஸ்ரீபாதத்திலேதண்டன் ஸமர்ப்பித்து தேவரீர் நித்யவிபூதியிலே பரமபதநாதனை ஸேவித்து * இமையாதகண்ணராய்க்கொண்டு போரத்திருவுள்ளம்பற்றி யரு ளிற்றோவென்று விண்ணப்பஞ்செய்ய; ஆளவந்தாரும் இவரைக் குறித்து, நீர் பரஸம்ர்த்திக்கு உகந்து அத்யவஸித்திருமென்ன; இவரும் திருவுள்ளம்பற்றியிருக்கிற வளவிலே – ஆளவந்தாரும் முதலிகளிருவரையும் திருவுள்ளம்பற்றி - ஒருவன் ப்ரபந்நனால் பகவததீநமான ஆத்மயாத்ரையிலும் கர்மாதீநமான தேஹயாத் ரையிலும் அந்வயமுண்டென் றிருந்தானாகில் ஆத்மஸமர்ப்பண
நாஸ்திகனாய்விடும்; ஆகையாலே உபய யாத்ரையி
லை.

னுக்கு நைரந்த்ர்யம்வேஷம். நம்பக்கல்பேற்றுக்கு
தவர்களையும், * வானவர்நாட்டையும் நீகண்டு

கொள் என்பதொரு ஔதார்யவிசேஷமுண்டு; நாரங்களுக்கு நைரந்தர்யம்வேஷம். (நாராயணனே நமக்கே பறைதருவான்) என்று - தம்பேற்றுக்குத்வரிக்கையும் ஸ்வரூபஹாநி; எம்பெருமான் ரக்ஷ்யமென்றிருக்கையும் ஸ்வரூபஹாநி; அப்படியிருந்தாலுகில் அநந்யார்ஹசேஷத்வத்துக்கும் ஸ்வஸ்வாமி ஸம்பந்தத்துக்கும் சேராதென்று அருளிச்செய்ய;

இவர்கள் மீளவும் ஸ்ரீபாதத்திலே தண்டன்ஸமர்ப்பித்து அடியோங்களுக்கு பற்றுமுபாயமேதென்று கேட்க; ஆளவந்தாரும், நீங்கள் என்னை புத்திபண்ணி போருகை அடியேனுக்கு ஸ்வரூபஹாநி, * எம்பெருமான்றுள்தொழுவாரொப்பொழுதும் என்மனத்தே யிருக்கின்றார், என்று இதுவே உங்களுக்கு உபாயோபேயமென்று புத்திபண்ணிப்போருங்கோளென்று அருளிச்செய்ய; முதலிகளும் திருவுள்ளத்திலே முசித்திருக்கிறவளவிலே, ஆளவந்தாரும் இவர்களைக்கண்டு நீங்கள் முசிக்கவேண்டா, உங்களுக்குத் திருமந்த்ரார்த்தம் போகமண்டபம்; சரமச்லோகார்த்தம் புஷ்பமண்டபம், த்வயார்த்தம் த்யாகமண்டபம்; இதுக்கு ப்ரமாதாக்கள் திருக்கச்சிநம்பி முதலானுரென்று அருளிச்செய்தார்.

இத்தைத் திருவரங்கப்பெருமாள் திருவுள்ளம்பற்றி, தேவரீர் அவதாரம் தீர்த்தம் ப்ரஸாதித்துப்போமளவில் க்ரிமிகீடாதிகளுக்கோரழிவுவந்தால் சேதமில்லையென்றருளிச்செய்ய; இவ்வார்த்தையை முதலிகள் திருவுள்ளம்பற்றி, ஆளவந்தார் வியோகத்திலே நாம் ஆத்மத்யாகம் பண்ணக்கடவோ மென்று நிஶ்சயித்திருக்கிற வளவிலே பெரியபெருமாள் திருவோலக்கத்திலே இவ்விசேஷம் பிறக்க, பெரியபெருமாள் திருவுள்ளம் பற்றி திருவரங்கப்பெருமாளரையர், திருக்கோட்டியூர் நம்பி, பெரியநம்பி முதலாக வருள்பாடிட்டு, ஆளவந்தார் திருமேனிக்குஒருவாட்டமுண்டாயிற்றதாகில் நீங்கள் வியோகம்பண்ணில் நம்மாணை யென்று ஆஜ்ஞாபித்து திருவரங்கப்பெருமாள்திருக்கையிலே இவர்களைக் காட்டிக்கொடுத்தருள, இவரும் அவர்களைக் கைப்பற்றி ஆளவந்தார்ஸ்ரீபாதத்திலே சென்று இவ்விசேஷத்தை விண்ணப்பஞ்செய்ய, அவரும் இத்தைக்கேட்டு நம்பேற்றுக்கு ஸஹியாதவர்கள், பெரியபெருமாள் இரண்டாற்றுக்கும் நடுவே திருவாராதநங்கொண்டருள ஸஹியாதவர்களென்றருளிச்செய்து, என்னுடைய வியோகத்தில் அவிவேகம் பண்ணினிகோளாகில், உய்யக்கொண்டார், மணக்கால் நம்பி முதலாக பெரியபெருமாள் நாதமுனிகள் சடகோபன் திருவுள்ளத்தை மறுத்தவர்களா வுதிகோளென்று தம்முடைய திவ்யாஜ்ஞையிட்டு இவர்களும் திருவுள்ளம் நேர்

ந்திருக்கிற வளவிலே ஆளவந்தாரும், பகவத்பாகவத விஷயங்க ளில் தரமிடாதே பகவத்விஷயத்திலே நோக்கானவன், குருபரம் பரை முதலாக திருவாராதநம் பண்ணுமாப்போலேபாகவத விஷ யத்திலே தன்ஸத்தைமாண்டு ஆசார்யவிக்ரஹத்தை யநுஸந்தித்து தீர்த்தங்கொண்டுபோருகையும், அவர்களும் தீர்த்தங்கொடுக்குமள வில் அர்த்தகாமபரவசரன்றிக்கே தன்னுசார்யனை நோக்கிகுருபரம் பரா பூர்வமாகத்வயத்தை யநுஸந்தித்துக்கொண்டு கொடுக்கையும் இருவர்க்குமுபாதேயம்;ஜ்ஞாநாதிகவிஷயமுமாய்ஸமூஹமுமாய்ச் சென்றவளவிலே யிருவரும் அர்த்தகாம பரவசராய் ப்ராக்ர்த சரீ ரத்திலே நோக்காய், ஸமூஹத்திலே சென்ற முதலிகளை யிழந்து திருவுள்ளங்கன்றுமாகில் ஆசார்யனேயாகிலும்இவர்களுக்குத்தீர்த் தம் உபாதேய மன்றென்றருளிச்செய்தார்.

இவர்களும் திருவுள்ளம்பற்றியிருக்கிறவளவிலே ஆளவந்தா ரும் முதலிகளைப்பார்த்து, உங்களுக்கு சரமார்த்தம் பெரிய பெரு மாள் திருக்குழற்கற்றையிலே ஒருகருமுகை வெடிக்கையும், ஆசார்யவிஷயத்தில் ப்ரதமதசை மத்யமதசையில் நின்றும் சரம தசையை யநுஸந்தித்துப்போருகையும், உத்தாரகப்ரதிபத்தியென் றருளிச்செய்து, திருவரங்கப்பெருமாள்ஸ்ரீபாதத்திலே தண்டன் ஸமர்ப்பித்து, திருக்கோட்டியூர் நம்பியையும் பெரியநம்பியையும் திருமலை நம்பியையும் அவர்திருக்கையிலே காட்டிக்கொடுத் தருள, அவரும் கைப்பற்றி நீங்கள் அவிவேகம்பண்ணினிகோளா கில் உங்களுக்கு தேசவிசேஷமின்றிக்கே நித்யஸூரிகள் திரளி லும் புகுரப்பெறுதே யிழப்புதிகோளென்று அருளிச்செய்ய; ஆள வந்தாரும் இச்செய்தியைக்கேட்டுத் திருவுள்ளமுகந்து உங்களுக் குத் திருவரங்கப்பெருமாளரையருடைய விக்ரஹமே உபாயோ பேயமென்று புத்திபண்ணியிருங் கோளென்றருளிச்செய்ய;

இவர்களும் அப்படியே புத்திபண்ணினபின்பு திருமேனியி லே நோவுவாடி திருமாளிகையிலே திருவரங்கப்பெருமாள் முத லான முதலிகளுடன் நீராடித்திரளவிருக்க, பெரியபெருமாளுக்கு அமுதுபடி சாத்துப்படி குறைவறுத்து, அங்குள்ள சேனை மறை யோர்புண்டரீகர் முதலான அனைத்துக்கொத்தையும்திரள்விலக்கி, சுற்றுக்கோயில்களுக்கும் அமுதுபடி சாத்துப்படி குறைவறுத்து, பெரியபெருமாளை பெரிய திருமஞ்சநம்பண்ணி சாத்துப்படி சாத்தி, அங்குள்ளமுதலிகள் அனைத்துக்கொத்தும்வந்துஸேவிக்க, பெரிய பெருமாளும் அமுதுசெய்தருளி நினைவறத் திருவோலக் கத்தேற வெழுந்தருளித் திருவரங்கப்பெருமாளரையர்க்கு அருள்

பாடிட அவரும் ஸேவிக்கிற விடமொழிய * சூழ்விசும்பணிமுகில் ஸேவிக்க, திருவோலக்க மடைய இதென்னென்று விஸ்மயப்பட, பெரியபெருமாள் திருநெற்றிட்டலை நழுவிவிழ, நம்பியார் எடுத்து ப்ரஸாதிக்கிறேமென்று இருக்கிறவளவிலேதிருவரங்கப்பெருமாள் சடக்கெனவெடுத்து ஆளவந்தாருக்கு ப்ரஸாதித்தருள, அவரும் திருவுள்ள முகந்து நிற்க, திருவடிக்கீழ் நின்றவரும் உம்முடைய நினைவு ஸித்தித்ததே! என்ன, பெரியபெருமாள் விடைகொடுத் தருள திருமாளிகையிலே சென்று திருவரங்கப்பெருமாளரையர், திருக்கோட்டியூர்நம்பி முதலான முதலிகளைத் தீர்த்தங்கொண்டு அமுதுசெய்யப்பண்ணி தண்டன் ஸமர்ப்பித்து ஸர்வாபசாரங் களையும் பொறுத்தருள வேண்டுமென்று க்ஷாமணம் பண்ணிக் கொண்டு எழுந்திராதிருக்க,திருவரங்கப்பெருமாளரையரும்;உமக் குண்டோ அபசாரம் என்று எடுக்க எழுந்திருந்து பின்பு அமுது செய்து இவர்களுக்கு நல்வார்த்தை யருளிச்செய்ய, இவர்களும் பெருமாள்திருவுள்ளமேதோவென்று தங்களிலேசிந்தித்திருக்கிற வளவிலேபேரருளாளப்பெருமாளுடைய அயன்கண்டவைகாசித்தி ருநாளில் அவப்ர்ததிவஸத்தினன்று ஆளவந்தாரும் நீராடிபெரிய பெருமாளைத்திருவடித்தொழச்சென்று உத்தமஸந்தியுமமுதுசெய் து திருத்திரை நீக்கினவளவிலேதண்டன் ஸமர்ப்பித்துபாதாதி கேசமாகவும் கேசாதிபாதமாகவும் பெரிய பெருமாளைஸேவித்து, திருவடிக்கீழ்த்திருப்பாணாழ்வாரையுமநுபவித்து, அசங்கிதமாகச் சடகோபன் ஸாதிக்கப்பெற்று திருப்பதியார் திருத்தளிகைப்ரஸா தம் ப்ரஸாதித்து விடைகொடுத்தருள, முதலிகளும் திருமாளி கையிலே சென்று மீளவும் முதலிகளை தீர்த்தங்கொண்டு அமுது செய்யப்பண்ணி முஹூர்த்தமிட்டு, வைகாசிமாஸம் ஆறுந்தேதி யிலே ச்ரவணநக்ஷத்ரத்திலே அபிஜிந்முஹூர்த்தத்திலேமுதலிகள் சேஷத்தை அங்கீகரித்து, ஆழ்வார்களை சரணம்புக்கு, ஆசார்யர் ்ள் முதலிகள்ஸ்தாநத்தார்முதலானவர்களை யழைப்பித்துக்ஷமை பண்ணிக்கொண்டருள; அவர்கள் பெரியபெருமாளுக்கு ஒரு அப சாரமுண்டாகிலன்றோ வுமக்கபசாரமுண்டாவதென்ன; திருவரங் கப்பெருமாளரையர் முதலானவர்களை அங்குள்ள முதலிகள் கை யிலே காட்டிக்கொடுத்தருளி ஸ்தாநத்தாரைப் பார்த்து, பெரிய பெருமாள் திருவாராதநம், திருமந்த்ரபுஷ்பம் காலகாலத்திலே நடத்திக்கொண்டு போருங்கோள், ஆசார்யர்கள், முதலிகள், தே சாந்திரிகள் முதலானாரை யணைத்துக்கொண்டு போருங்கோளெ ன்று காட்டிக்கொடுத்தருள; அவர்களும் அப்படியேஆகிறதென்று அங்கீகரித்து, இது புதுமையாயிருந்தது, இதேதோவென்று விடைகொண்டுபோக,

## ஆளவந்தார் திருநாடலங்கரித்ததும் அவருடைய விமலசரம விக்ரஹத்தைத் திருப்பள்ளி படுத்த க்ரமமும்.

பின்பு பத்மாஸநத்திலே யோகமாக வெழுந்தருளியிருந்து,
மணக்கால் நம்பியை த்யாநித்து அவர் திருவடிகளை தம்முடைய
கண்ணிலும் நெஞ்சிலும் திருமுடியிலும் வைத்துக்கொண்டு அவர்
சடகோபனை தம்முடைய முன்னே யெழுந்தருளப்பண்ணி
வைத்துக்கொண்டு ப்ரஹ்மவல்லி, ப்ர்குவல்லி, புருஷஸூக்தம்,
அர்ச்சிராதி, சூழ்விசும் பணிமுகில் முதலாக முதலிகள் ஸேவிக்க,
திருச்சங்குபரிமாற, ஸகல வாத்யங்களும்முழங்க, ப்ரஹ்மரந்த்ரத்
தாலே ஆளவந்தார் திருநாட்டுக்கெழுந்தருள, திருவரங்கப் பெரு
மாளரையர் முதலாக வெல்லாரும் வேரற்ற மரம்போலே கோ
ஷித்துக்கொண்டு விழுந்து சோகிக்க, அங்குள்ளார் இவர்களையாற்
றி நம்பியைப்பார்த்து, முன்நடக்கும் க்ரமத்தைச் செய்தருள
வென்ன; தாஸிகள் திருவாசலிலே திருவலகிட்டு திருநீர்விட்டு
ஸ்தல சுத்தி பண்ணித்திருப்பிண்டியிட்டு திருக்காவணமிட்டுக்
க்கோடித்து, தர்ப்பமாலைகட்டிசெங்கழுநீர்மாலைகட்டி பலபட்டுக்க
ளாலே திருமேல் கட்டுகட்டி திருக்காவணத்தின் நாலுவாசலிலும்
கதளித்தாறுகளுடன் கமுகின்கன்றும்நட்டு, பலபலங்கள் நாற்றி
நாலுவாசலிலும் கொடியாடைகட்டிச்சித்ர பத்ரங்கள் வைத்து,
தெற்குமேற்கு கிழக்கு வடக்கு வாசல்களிலே பலாசாச்வத்த காதி
காதும்பரதோரணம்நாட்டி, ரீஹித்ரோணம் வ்ரீஹியைச்சொரிந்
துபரப்பிநடுவேபூர்ணகும்பம்வைத்து,நாலுகோடியிலும் பூர்ணகு
ம்பங்களைவைத்துத்வாதச கலசங்களை நிறைத்துகேசவாதியாகவை
த்து பூர்ண கும்பத்துக்கு குசதர்ப்பை தூர்வை விஷ்ணுக்ராந்திபு
ஷ்பாதிகளிட்டு,குருபரம்பராபூர்வகமாக த்வயாநுஸந்தாநத்துடன்
கும்பகலசார்ச்சநம் பண்ணி த்வாதச நாமத்தாலே அந்த கலசஸ்
நாநம் பண்ணி வைத்து, பின்பு பஞ்சாம்ர்த ஸ்நாநம் பண்ணி
வைத்து பின்பு ஈசாங்ய மானஸங்கர்ஷண கும்பமொழிந்த நாலு
கும்பங்களைக் கொண்டு ஸ்ரீ புருஷஸூக்தத்தாலே திருமஞ்சநம்
பண்ணிவைத்து முதலிகளைத் தீர்த்தங் கொண்டு சுருளமுது பரி
மாறி வேண்டிக் கொண்டு அவர்களை வலம்வந்து வாசல் முன்னில்
ஹோமகர்த ஸ்தண்டிலத்தின்மேலே த்ரோணம் வ்ரீஹிபரப்பி
உலூகலமுஸலங்களை மந்த்ரஸ்நாநம்பண்ணி வஸ்த்ரவேஷ்டநம்
பண்ணி அந்தவுலூகலத்தை ஸ்தண்டிலோபரிக்ர்த வ்ரீஹியின்
மேலேவைத்து அதிலே ஹரித்ராநிக்ஷேபம்பண்ணி, சுத்தமாலா
லங்க்ர்தையாய் சக்ரமுத்ராமுத்ரிகையாய் வைஷ்ணவியான விஷ்
ணு தாஸிகள் த்ரிவிக்ரமன் திருவீதியைவலம்வந்து திருவாசலில்

ஸ்ரீவைஷ்ணவஸமூஹத்துக்கு தண்டன் ஸமர்ப்பித்து ஸ்ரீவைஷ்ணவர்கள் அநுஜ்ஞையைக்கொண்டு நடுவேவந்து நவவஸ்த்ரவேஷ்டிதமேருதைவத்யமான அந்த முஸலத்தைக்கொண்டு த்வாதசநாமோச்சாரணம்பண்ணி திருசூர்ணமிடிக்க; திருவரங்கப்பெருமாளரையர், நம்பிமுதலானமுதலிகள் ஸ்தண்டிலமத்யஸ்தமாய் நவகண்டையான ப்ர்திவ்யாகாரமாகஉல்லேகநம்பண்ணின அந்தவ்ரீஹ்யுபரிஸ்தாபிதமாய் பூமிதை வத்யமானஉலூகலத்தின் அஷ்டதிக்குக்களிலும், திவ்யசூர்ண திவ்யதைல திவ்யாநுலேபந திவ்யமால்ய திவ்யலாஜ திவ்யதுக்த திவ்யததி திவ்யஜலபூர்ணங்களாய் சுத்ததந்துவேஷ்டிதங்களாய் தர்ப்ப பவித்ராச்வத்த பத்ரபவித்ரங்களான அஷ்டகலசங்களை த்வயாநுஸந்தாநத்துடனே ஸ்தாபித்து, பரமாகாசதைவத்யமான நவசூர்ப்பத்திலே திவ்யநக்ஷத்ரதைவத்யமான நிஸ்துஷநவலாஜத்தை நிறைத்து பூர்வதிக்கிலே வைத்து ஸ்ரீவைஷ்ணவர்களை ஸ்ரீபாததீர்த்தங்கொண்டு அந்த ஸ்ரீபாததீர்த்தம் நிறைந்த கும்பத்தை மேற்கேவைத்து, ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஸமர்ப்பணீயமான த்ரவ்யத்தின் கிழியை வடவருகேவைத்து பெருமாள் சாத்திக்களைந்து வரவிட்டருளின திருமாலை பரிவட்டப்ரஸாதங்களை பொற்றளிகையுடன் தென்னருகேவைத்து.

ஆளவந்தாரைதண்டன்ஸமர்ப்பித்துவிமலசரமவிக்ரஹத்தை நெஞ்சிலும் கண்ணிலும் தேக்கிக்கொண்டு சூழவெழுந்தருளியிருந்து, கண்ணிநுண் சிறுத்தாம்பும் திருப்பல்லாண்டும் சூழ்விசும்பணிமுகிலும் திருவரங்கப் பெருமாளரையர் இசையுடன்பாடபின்பு இயலாகவு மநுஸந்தித்து திவ்ய கீதந்ர்த்தவாத்யத்துடன் திருவீதியிலே இயலாக திருவிருத்த மநுஸந்தித்துக்கொண்டு வலம்வந்து திருமாளிகைவாசலிலே இயல்சாத்தி திவ்ய தைல திவ்யசூரண திவ்யமால்யாதிகளையும் பெருமாள் திருமஞ்சநம்பண்ணி சாத்திக் களைந்து வரவிட்ட பட்டுப்பரிவட்டத்தையும் ஆளவந்தாருக்குச் சாத்தி அலங்கரித்து ஆளவந்தார் திருமேனியிலே சாத்தி தத்ப்ரஸாதமாய் சேஷித்தஎண்ணெய்ஸ்ரீசூர்ணப்ரஸாதங்களெல்லாம் திருவரங்கப்பெருமாளரையர் நம்பிமுதலானார் ப்ரஸாதப்பட்டு அப்போதையிருப்பை அகவாயிலே சுபாச்ரயமாகத் தேக்கிக்கொண்டு ஸ்ரீபாதத்திலேவிழுந்துதிருவடிகளைத் திருக்கண்ணிலும் திருமார்புகளிலும் திருமுடிகளிலும் தரித்துக்கொண்டு அவர் ப்ரபத்தியை யநுஸந்தித்து திருமிடறு தழுதழுப்பத் திருமேனிகள் வாட திருமுத்துவீழ திருமூச்சு வெப்படிக்க ஆசார்ய விச்லேஷாஸஹிஷ்ணுக்களாய் ஆர்த்தராய் பரவசராக; மற்றும் அங்குள்ள முதலிகள்வந்து இவர்கள் திருக்கண்களைத் துடைத்து ஆச்வஸிப்பித்துத்தேற்ற வன்மையிலே மெள்ளப்பாடாறித்தேறிநின்று

பீடயாநத்திலே ஆளவந்தாரை யேறியருளப்பண்ணி அநுஸந்தாநத்துடன் ஸ்ரீபாதந்தாங்கிச்கொண்டு திரிச்சங்குபரிமாற திவ்ய வாத்யங்கள் எங்கும் முழங்க வேதபாராயணம் பண்ண, இயலருளிச்செய்ய நடைபாவாடையிட கரும்பும் குடமுமேந்த பொரியும் புஷ்பமுமெங்குஞ் சிதறி திருப்பதியில் ஸுமங்கலிகள் மங்களதீபமேந்தி முன்னேசெல்ல இருபக்கமும் சாமரமிரட்டிக்க,

வெள்ளைவட்டமிட தர்சநத்தில் ஆளவந்தார் திருநாட்டுக்கெழுந்தருளினாரென்றுஒற்றைத்திருச்சின்னம்பரிமாறதிருவீதிகடோறும்வலம்வந்துதிருக்காம்பன்துறைக்கெழுந்தருளுவித்துக்கொண்டுபோய்ஒழிந்த ஸங்கர்ஷண கும்ப பூர்ண ஜலங்கொண்டு அநுஸந்தாநத்துடன் திவ்யஸ்தலசுத்திபண்ணி யதிஸம்ஸ்காரவித்யுக்தமான படிகளடங்கச்செய்து கநித்துப் பள்ளிப்படுக்கிறவளவிலே, இளையாழ்வார் ஆளவந்தாரை ஸேவிக்கவேணுமென்னும் பேராசையோடே பெருமாள்கோயில்நின்றும் வந்து ஆளவந்தாரை திருமேனியுடன் ஸேவிக்கப்பெற்றிலேனென்று அந்த சரமவிக்ரஹத்தை ஸேவித்து இவ்வளவுதான் பெற்றேனேயென்று அந்த விக்ரஹத்தை த்யாநவிஷயமாக்கிக்கொண்டு ஆளவந்தார்க்கு நான் ஏகலவ்யனென்று (యత్పదాంభోరుహధ్యాన) என்று ஆளவந்தாருடைய சரணகமலத்யாந தத்பராய்க்கொண்டு பெருமாள் கோயிலுக்கு மீண்டெழுந்தருளினாரென்று அருளிச்செய்வர்கள்.

சரமோபதேச, சரமநியமந, சரமததீயாநு வர்த்தந விசேஷ, சரமகாலப்ரபோத, சரமகாலவ்யாவ்ருத்த ஸூசக கமநங்களாகிற சரமதசாஜ்ஞாநாநுஷ்டாநக்ரமசாதுர்யமுள்ளது பரமாசார்யரான விவர்க்கேயிறே.

பின்பழகியபெருமாள்ஜீயர்திருவடிகளேசரணம்.

வார்த்தாமாலை

ஸம்பூர்ணம்.